# சைவ சமய பாடம்



கலைவாணி புத்தக நிலையம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# சைவ சமய பாடம்

## எட்டாம் வகுப்பு

[...ாடத்திட்டத்தின் பிரகாரம் கல்வி அமைச்சு
...ளியிட்ட சைவ... யம் கற்பித்தற்குரிய வழி
காட்டியைத் தழுவி எழுதப்பட்டது.]

(பாடத்திட்டத்தின் விரிவான அம்சங்களுக்கமையச் சாத்திரப்பகுதி,
வரலாற்றுப்பகுதி விளக்கப்பட்டிருத்தலின்-இந்நூலினை (க்)
க. பொ. த சாதாரண வகுப்பு மாணவரும் உபயோகப்படுத்தலாம்)

திருத்தம்

சைவப்புலவர் வீ. எஸ். சுந்தரசிங்கம் அவர்கள்
(தலைமை ஆசிரியர்)



**கலைவாணி புத்தக நிலையம்**

யாழ்ப்பாணம் — கண்டி

பதிப்புரிமை] 1971 விலை: ரூபா 3-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்திய முதலாம் பதிப்பு — மே 1971

இப்புத்தகம் கு. வி. தம்பித்துரை J. P. அவர்களால் யாழ்ப்பாணம், மெயின் வீதி, 10-ம் இலக்கத்திலுள்ள தமது கலைவாணி அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடப்பட்டது. (556—71

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஆனை முகனுறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையு ணடு.

மனிதப் பிறவியின் நோக்கம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதலாகும். இறைவணக்கம் இறையன்பினுல் பெறவேண்டிய ஒன்று என்பது ஆன்றோர் துணிபு. கோயிலுக்குச் சென்று வழிபடல், திருத்தொண்டுகள் செய்தல், காலை - மாலை மற்றுமுள்ள நேரங்களில் கடவுளைத் தியானித்தல் ஆகிய செயல்களால் ஏற்படும் பற்றுக் காரணமாக இறையன்பினைத் தோற்றுவிக்கலாம். பற்றியினைத் தோற்றுவிக்கும் இவ்வொழுக்க நெறிகளை மக்கள் சிறுவயதிலிருந்தே கற்று ஒழுகுதல் வேண்டும்.

கல்விமான்களின் ஆலோசனைகளைப்பெறும் கல்விப் பகுதியாரும் மேற்கூறிய உண்மையினை உணர்ந்தே ஒழுக்க நெறியினைப் போதிக்கும் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தனர். இதனுல் பாடசாலைகளில் சமயக்கல்வி போதிக்க வேண்டுமென வற்புறுத்தி வந்தமையோடு பாடத்திட்டத்தினையும் காலத்துக்குக் காலம் வெளியிட்டு வருகின்றனர்.

மாணவர்க்குப் பன்னெடுங்காலம் கல்விப் பணியாக அரிய நூல்களை வெளியிட்டுவரும் நாம், அண்மையில் கல்வி அமைச்சின் சைவசமயம் கற்பித்தற்குரிய வழிகாட்டியினைத் தழுவித் திருத்திய பதிப்பாக இந்நூலினை வெளியிட்டுள்ளோம். நூல் மாணவர் உளப்பாங்கினுக்கேற்ப, விஞ்ஞான காலத்தும் மெய்ஞ்ஞானம் விளைவிக்கும் வகையில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

ஆசிரிய நண்பர்களுக்கு உதவும் முறையில் பாடங்கள் வழிகாட்டியாய் அமைய எழுதியும் சிரமமின்றிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிக்கும் வகையில் பாடத்திட்டம், பாடங்கள் என்பவற்றினை மூன்று பருவங்களாக வேறு படுத்தியும் அச்சிட்டுள்ளோம். கொழும்பு, விவேகானந்த சபையார் நடாத்தும் பரீட்சைக்கும் மாணவர் தோற்றக் கூடிய தன்மையில் பாடங்களும் பரீட்சை வினைப் பத்திரங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நூலைத் திருத்தி எழுதியுதவிய சைவப்புலவர் வீ. எஸ். சுந்தரசிங்கம் தலைமையாசிரியர் அவர்களுக்கு எமது நன்றி என்றும் உரித்தாகுக.

இந்நூலினை ஆசிரிய நண்பர்கள் ஆதரிப்பதோடு மேலும் நல்ல நூலாக்கத்திற்கு ஆதரவு தந்து சமயப் பணியில் ஈடுபடச் செய்வதுடன் நூலிற் காணப்படும் பிழைகளை அவ்வப் போது சுட்டிக்காட்டிச் சிறந்த பதிப்பிற்குப் பேருக்கம் தருமாறும் அன்புடன் வேண்டுகின்றோம்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

யாழ்ப்பாணம்
22 - 5 - 71

இங்ஙனம்
கலைவாணி பதிப்பகத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்று ரெய்துஞ் சிறப்பு.

—திருக்குறள்.

உலகில் மக்கள் பெறும் இன்பங்களுள் அரியதும் மேலாயதும் பேரின்பமே யாகும். இவ்வின்பத்தினை அன்பு காரணமாகப் பெறுதல் வேண்டும். என்பதே மேற்கூறப்பட்ட குறளின் உட்பொருளாம் என்க.

பேரின்பத்திற்குக் காரணமாய் அன்பின் வழிச் செய்யப்படும். செயல்கள், வேள்வித் தொழில் முதலாய சற்காரியங்களாதலின் இக்காரியங்கட்டு அடிப்படை யாகவமைந்த அன்பினை இறையன்பு என்பர். இறை யன்பு ஏற்பட இறைவன் மாட்டுப் பற்று வைத்தல் வேண்டும். அப்பற்றினைக் காலை - மாலை நேரங்களில் மேற்கொள்ளும் தியானத்தாலும், கோயில் வழிபாட் டினாலும், திருத்தொண்டுகளினாலும் பெறலாம். மேற் காட்டிய இவ்வொழுக்கங்களை மக்கள் இளமையி லிருந்தே பயின்று வருதல் வேண்டும். சிறுவயதில் பழ கிய பழக்கம் சிலையில் எழுத்துப்போற் பதிந்து முது மையினும் பழக்கவாசனையால் நன்மையையே விளை விக்கும். இதனைக் கருத்திற் கொண்டுபோலும் ஔவை மூதாட்டியாரும் "இளமையிற் கல்" என்றார்கள்.

கல்விமான்களைக் கொண்ட கல்விப் பகுதியாரும் இதனை நன்குணர்ந்தே பாடசாலைகளில் சமயக்கல்வி போதிக்க வேண்டுமென வற்புறுத்தி வந்தனர். அத் தோட்மையாது பலதிறப்பட்ட மாணவரிடையே சமய அறிவினை ஒருமுகப்படுத்தும் முறைமையில் காலத்துக் குக்காலம் பாடத்திட்டத்தினை வகுத்தும் வழங்கி வந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையில் இருக்கும் பாடத்திட்டம் குறிப்பிட்ட சில விடயங்களை எல்லா வகுப்புகட்கும் கொண்டிருத்தலின் போதிக்கும் ஆசியர்கள் வகுப்புகளின் நிலைக் கேற்பத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவர்கள் அம்முறையில் முயற்சித்து நிரம்பிய சாத்திர ஞானத்தைப் பெருது ஒழிவரேல் பாடத்திட்டத்தின் நோக்கம் நிறைவேருதென்பது சொல்லாமலே அமையும். விஞ்ஞானம் வளர்ச்சியுற்று வரும் இந்நாளில் மாணவர்க்கு சமய உண்மைகளைப் போதிப்பது இலகுவான காரியம் அன்று. அதினும் இடைநிலை வகுப்பு மாணவர் சமய உண்மைகளைத் திருட்டாந்தமாகக் காட்டினலன்றி ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பதனை எல்லா ஆசிரியர்களும் நன்கு அறிவர். இந்நிலையில் ஆசிரியர்களின் வேலைப் பழுவை ஓரளவு குறைத்தல், பாடத்தின் கடினத்தைப் போக்குதல் ஆகிய கருமங்களைக் கருத்திற் கொண்டு சைவ சமய பாடம் என்னும் நூல்வரிசை தோற்றுவிக்கப்படலாயிற்று. நூல் சந்தேக - விபரீதங்கட்கு இடமளியாவகையில் வாழ்க்கையோடு தொடர்பு படுத்தி மாணவர் உளப்பாங்கினுக் கேற்பத் தூய நடையில் எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் அமைச்சின் வழிகாட்டியினைத் தழுவிப் பாடத்திட்டத்தின் விரிவுக் கேற்ப மேல்வகுப்பு மாணவர்க்கும் உபயோகமாகும் வழியில் அமைந்துள்ளது. ஆசிரியர்களின் சிரமத்தைக் குறைத்தல் வேண்டிப் பாடத்திட்டமும் பாடங்களும் மூன்று பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கொழும்பு, விவேகானந்த சபையாரின் பாடத்திட்டம், பரீட்சைமுறை என்பனவும் இதில் இடம் பெற்றுள்ளமையினைக் காணலாம்.

ஆசிரிய நண்பர்கள் இந்நூலினைக் கற்பிக்கும் முன்னர் பின்வரும் குறிப்புக்களை வாசித்தல் நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i பாடங்களை நூலிலுள்ள ஒழுங்குப் பிரகாரம் கற்பித்தல் வேண்டுமெனக் கருதாது சந்தர்ப்ப — சூழ்நிலைகளுக்கேற்பத் தெரிந்து கற்பித்தல் நன்று.

ii. சமய உண்மைகளை வாழ்க்கையோடு தொடர்பு படுத்திக் காட்டுதல் மூலம் சமயமும் வாழ்க்கையும் ஒன்று என்கின்ற எண்ணத்தை மாணவர் உள்ளத்தில் தோற்றுவித்தல் விரும்பத்தக்கது.

iii. கிரியைகளில் முக்கியமான வற்றிற்குக் காட்டியிருக்கும் தத்துவ விளக்கங்களை அடியொற்றி ஏனைய கிரியைகட்கும் விளக்கங் கொடுத்தல் வேண்டற் பாலதாகும்.

iv. மாணவரிடையே சமய சம்பந்தமான பேச்சு-கட்டுரைப் போட்டிகள், கருத்தரங்கங்கள், சொற்பொழிவுகள், நாடகங்கள் என்பவற்றை நடாத்துதல் மூலம் அவர்களைச் சமயத்துறையில் ஆர்வமும் பற்று முடையராய் மிளிரச் செய்தல் வேண்டும்.

''சேக்கிழார் அகம்''
கோப்பாய் — வி. எஸ். சுந்தரலிங்கம்
22 - 5 - 71

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

### முதலாம் பருவம்


1. சம்பந்தர் தேவாரம் - I ... 1
2. திருக்கோயில் அமைப்பும் இறைவ
   னுடைய மூர்த்தங்களும் ... 8
3. திருக்கோயில் வழிபாடு ... 12
4. சைவ நாற்பாதங்கள் ... 16
5. சைவ சமயப் பிரமாண நூல்கள் ... 20
6. சம்பந்தர் தேவாரம் - II ... 28
7. அருணந்தி சிவாசாரியார் ... 32
8. பாசம் [மலம்] ... 34
9. அப்பர் தேவாரம் - I ... 43
10. சிதம்பரம் கோயில் ... 48
11. அப்பர் தேவாரம் - II ... 55
12. மன்றுதொழு பதஞ்சலி முனிவர் ... 59
13. திருக்குறள் ... 66

மாதிரி வினாப்பத்திரம் ... 79


### இரண்டாம் பருவம்


14. சுந்தரர் தேவாரம் - I ... 83
15. மறைஞான சம்பந்தர் ... 87
16. உமாபதி சிவாசாரியார் ... 90
17. ஆன்மா [உயிர்] ... 94
18. திருக்கோயிற் பூந்தோட்டத் தொண்டு ... 99


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. திருக்கோயிலைச் சுத்தஞ் செய்தல் ... 113
20. திருவிளக்கேற்றல் ... 118
21. சுந்தரர் தேவாரம் - II ... 113
22. நாயுமான சுவாமிகள் ... 118
23. திருவாசகம் ... 126
24. மங்கையர்க்கரசியார் ... 138
25. திருக்குறள் (தொடர்ச்சி) ... 147
மாதிரி வினாப்பத்திரம் ... 158


## மூன்றும் [illegible]வம்

26. பதி [கடவுள்] ... 163
27. கோயிற் கிரியை ... 171
28. மாதவச் சிவஞான சுவாமிகள் ... 180
29. திருவிசைப்பா "கற்றவர் விழுங்கு..." ... 189
30. திருப்பல்லாண்டு ... 193
"தாதையைத் தாளற......"
31. கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் ... 196
32. திருப்புராணம்: கந்தபுராணம்: ... 203
"பரமனை மதித்திடா...";
"அடைந்தவி..." சேக்கிழார் புராணம்;
"பசந்தெழுந்த......"
33. கந்தரலங்காரம்: ... 210
i. "சேந்தனைக் கந்தனை......"
ii. 'விழிக்குத்துணை......"
34. திருப்புகழ்: ... 217
i. "இருந்தவீடு..."
ii. "சரணகமலாலயத்தை..."...
35. திருக்குறள் [தொடர்ச்சி] ... 228
மாதிரி வினாப்பத்திரம் ... 242

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் பருவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருஞானசம்பந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# சைவ சமய பாடம்

## எட்டாம் வகுப்பு

### 1. சம்பந்தர் தேவாரம் - I

(1)

திருத்தோணிபுரம்

(பண்—பழந்தக்கராகம்)

திருச்சிற்றம்பலம்

சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் மெனக்கொருகாற் பேசாயே.

திருச்சிற்றம்பலம்

தலவரலாறு: இத்தலம் பிரமன்பூசித்தமையால் பிரமபுரம் எனவும், அமரர்கள் புகலிடமாகப் புகுந்த காரணத்தாற் புகலி எனவும், பிரளயகாலத்தில் தோணி போல மிதந்த காரணத்தால் தோணிபுரம் எனவும் பெயர் பெறுவதாயிற்று. மேலும் வேணுபுரம், வெங்குருகு, பூந்தாராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் திருப்பெயர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் உடையது. திருஞானசம்பந்தர் திருவவதாரஞ் செய்த சிறப்பினையுடையது. இத்தலமானது சிதம்பரம் புகையிரத நிலையத்திலிருந்து தெற்கே பதினெருகல் தொலைவில் இருக்கின்றது. இங்கு திருஞான சம்பந்தருக்குத் தனி ஆலயம் உண்டு. அவர் ஞானப்பால் உண்டதடாகம் கோயிலுக்குள் இருக்கின்றது. இங்குள்ள இறைவன் திருநாமம்: பிரமபுரீசுரர். இறைவி திருப்பெயர்: திருநிலைநாயகி என்பது. தீர்த்தம்: பிரம தீர்த்தம்.

பொழிப்புரை: அழகு பொருந்திய சிறகுகளை யுடைய கிளியே, இங்கே வருவாயாக. நான் உனக்குத் தேனோடு பாலைக்கலந்து இனிமை பயக்கும் முறையில் உண்ணத் தருவேன்; நீ, எனக்குப் பவளத்தோடு முத்துக்கள் நிறைந்த கடற்றுறையினையுடைய சீகாழிப் பதியில் எழுந்தருளியிருக்கும் ஈசனும், விளங்கும் இளம்பிறைச் சந்திரனைச் சடையிற் சூடியவனுமான சிவபெருமானின் அழகிய பெயரை ஒருமுறை சொல்லு வாயாக. (சொல்லமாட்டாயா எனினுமாம்)

அரும்பத விளக்கம்: சிறை – சிறகுகள்; ஆர்தல் – நிறைதல், அழகுடன் விளங்குதல்; மடம் - இளமை; முறையால் - இனிமைதரும் முறையில்; உண - சாப்பிட; மொய்- நெருங்கிய; தரளம் - முத்து; இளம்பிறை - மூன்றும் பிறை; திருநாமம் - பெயர்; ஒருகால் - ஒருமுறை; பேசாய் - பேசு (சொல்லு); தோணிபுரம் - சீகாழி.

குறிப்புரை: இச்செய்யுளைப்பாடியவர் திருஞானசம்பந்தர். சம்பந்தப் பெருமான் தன்னை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் எண்ணிப் பாடலைப் பாடியுள்ளார். இம் முறைமையில் பாடப்படும் பாடல்களைத் தமிழ் மொழியில் அகத்துறை தழுவிய பாடல்கள் என்பர். இந்தப் பாவனையை நாயகா நாயகிபாவம் என்பர் வடநூலார், அன்பு கலந்த மனத்தினரான கணவனும் மனைவியும் போன்று, சிவனும் அடியார்களும் அன்புகலந்த மனத்தினராய் அமைந்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கொள்ளல்முறை. உலகின்கண் உள்ள ஆன்மாக்கள் எல்லாம் நாயகிகளாகவும், சிவபெருமானை நாயகனாகவும் கொண்டு வழிபடும் முறை மிகச் சிறந்ததாகும்.

இப்பதிகம் முழுவதும் "காமம் மிக்க கழிபடர்கிளவி" என்னுந் துறைபற்றிப் பாடப்பட்டனவாகும். தலைவனைப் பிரிந்த தலைவி மிக்க துயருற்றவளாய்த் தன் துயரத்தைத் தலைவனுக்கு உணர்த்தி, தலைவன் விரைவில் வந்தடையுமாறு வண்டு, குருகு, கோழி, நாரை, புறு, அன்னம், அன்றில், குயில், நாகணவாய்ப்புள் (பூவை) முதலானவற்றைத் தூது சென்று வருமாறு கூறி, இறுதியில் கிளியைக் விளித்து, அதன் வாயினால் தலைவன் பெயரைச் சொல்லக் கேட்டாலும் துயர் தனியும் என்ற நோக்கத்துடன், தலைவன் பெயரைக் கூறினால்தான் அதற்குத் தேனோடு பாலை மிக்க சுவைதரும் முறையிற் கலந்து உண்ணத் தருவதாகத் தலைவி கூறுகிறாள்.

பறவைகளுள் கிளி ஒன்றே சொன்னதைச் சொல்லும் திறம்பெற்றது. வீடுகளிலும் கோயில்களிலும் கிளிகளை வளர்ப்பது இறைவன் திருநாமங்களை அவற்றிற்குச் சொல்லி வைத்து, அவைசொல்லக் கேட்டு மகிழ்வதற்கேயாகும்.

(2)

திருப்புள்ளிருக்கு வேளூர்

(பண்—சீகாமரம்)

திருச்சிற்றம்பலம்

பண்ணொன்ற இசைபாடு மடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி வாணாள துடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலவரலாறு: இத்தலம் சம்பாதி-சடாயு ஆகியோராலும், இருக்கு வேதத்தாலும், கந்தசுவாமியாராலும், சூரியனாலும் வழிபடப்பட்ட தலமாதலின் இப்பெயர் உடையதாயிற்று. புள் + இருக்கு + வேள் + ஊர் = புள்ளிருக்கு வேளூர். புள்-சம்பாதி, சடாயு. இருக்கு-இருக்கு வேதம். வேள்-கந்தசுவாமியார். ஊர்-சூரியன். இத்தலம் வைத்தீசுவரன் கோயில் எனவும் வழங்கும். மேற்குப் பார்த்த சந்நிதியினை உடையது. இறைவி திருநாமம் - தையல்நாயகி அம்மை. தலவிருட்சம்: வேம்பு.

பதிகவரலாறு: திருத்தல யாத்திரை செய்து அவ்வத் தலந்தோறும் எழுந்தருளியிருக்கும் பெருமானைப் பாடி வரும் திருப்பணி பூண்டவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். அவர் ஒருகால் திருப்புள்ளிருக்கு வேளூரையடைந்து அங்கு சடாயு-சம்பாதி என்னும் புள் வேந்தர்கள் பூசித்த செயலினைக் குறிப்பிட்டுப் போற்றி, இறைவனைப் பாடியருளினார்.

பொழிப்புரை: இராகம் (பண்) பொருந்த இசையைப் பாடும் மெய்த் தொண்டர்கள் நிலையாக இருக்க, பூமியில் மட்டுமல்லாமல் தேவலோகத்திலும் எல்லா நலன்களையும் கொடுக்கும் நீலமணி போன்ற கருமையான கழுத்தையுடைய சிவபெருமான் பொருந்தியிருக்கும் தலம், மிக அதிகமான மூன்றுகோடி ஆண்டுகள் வாழ் நாட்களாக வயதினைப் பெற்ற இராவணனைத் தன் உடலில் புண் பொருந்தச் (சீதையைக் கவர்ந்து செல்லுங்கால்) சண்டை செய்து இராவணன் வலிமை கெடும்படி செய்த சடாயு என்பவன் வழிபட்டு மேன்மையடைந்த இடம் திருப்புள்ளிருக்கு வேளூராகும்.

அரும்பத விளக்கம்: பண்-இராகம்; மண் இன்றி-பூமியில் பிறத்தல் இன்றி; விண்-மோட்சம்; மணிகண்டன்-நீலமணி போலும் திருக்கழுத்தையுடைய சிவபெருமான்; மருவும்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தருளியிருக்கும்; எண்-அளவு; வாழ்நாள் - ஆயுள்; புண் ஒன்ற-உடல் வருத்தம் பொருந்த; புள் சடாயு.

குறிப்புரை: திருப்புள்ளிருக்கு வேளூர்த்தலம் சீகாழிக்கும் மாயூரத்திற்கும் இடையில் காவிரியின் வடகரையில் உள்ளது. இத்தலத்தில் முருகன் முத்துக்குமாரசுவாமி என்ற திருநாமத்துடன் சிறந்து விளங்கி அடியார்கட்கு அருள் செய்கின்றார். இங்கு கோயிலுக்குள் இருக்கும் தீர்த்தம் "சித்தாமிர்ததீர்த்தம்" என்பதாகும். இதில் நீராடியவர் நோய் நீங்கப் பெறுவர். செவ்வாய், இராமலக்குமணர், அனுமார் முதலியோரும் இங்கு இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றனர். இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும் நாவுக்கரசர் பதிகம் இரண்டும் உள.

## (3)

## திருக்கேதாரம்

(பண்—செவ்வழி)

திருச்சிற்றம்பலம்

தொண்டரஞ்சு களிறுமடக்கிச் சுரும்பார் மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யுமிட மென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே.

திருச்சிற்றம்பலம்

தலவரலாறு: திருக்கேதாரம் வடநாட்டுத் திருத்தலம். இத்தலத்தில் ஆறுமாதம் தேவர்களாலும், ஆறுமாதம் மனிதர்களாலும் பூசைகள் செய்யப்படுகின்றன. தேவபூசை ஐப்பசிப் பௌர்ணமியிலே தொடங்குகிறது. அப்பொழுது பனிக்காலமாதலால் அங்கு மனிதர்கள் இருக்க முடியாது. அர்ச்சகர் முதலானோர் மலையை விட்டு வந்து பனிக்காலமாய ஆறுமாதம் கழித்துப் பூசைக்குச் செல்வர். உமாதேவியார் இத்தலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைப் பூசித்து இறைவனின் இடப்பாகம் பெற்றூர். உமை, இடப்பாகத்திருக்குங் கோலம் அர்த்தநாரீசுவரம் எனப்படும். இறைவன் திருப்பெயர்: கேதாரேசுவரர். இறைவி திருப்பெயர் கேதாரகௌரியம்மை.

பதிகவரலாறு: திருக்காளத்தி என்னும் திருத்தலத்தைத் தரிசிக்கச் சென்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனூர் அங்கெழுந்தருளியிருக்குங் காலத்தில், வட கயிலையை நினைந்து வணங்கிப் பாடிய பின்னர் இத் தலத்தை நினைந்து "தொண்டரஞ்சுகளிறும்" என்று தொடங்கிப் பாடினூர்.

பொழிப்புரை: அடியார்கள் ஐம்புலன்களாகிய ஆண் யானைகளைத் தாம் செல்லும் வழியிற் செல்லாவாறு தடுத்து, வண்டுகள் மொய்க்கும் மலர்களைப் பறித்து இண்டையென்னும் தலைமாலை கட்டிச் சிவபெருமானுக்குச் சாத்தி வழிபடும் இடம்: வண்டுகள் பாடவும், மயில்கள் தோகையை விரித்து ஆடவும், மான்குட்டிகள் துள்ளிக் குதிக்கவும், சுனைகளில் கெண்டை மீன்கள் பாய்ந்து உகளவும், நீலோற் பல மொட்டுக்கள் மலர்கின்ற திருக்கேதாரம் என்னும் தலம் என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

அரும்பத விளக்கம்: அஞ்சுகளிறு-ஐம்புலன்களாகிய ஆண் யானைகள்; மடக்கி-தடுத்து; சுரும்பு-வண்டு; ஆர்-நிறைந்த; ஆல-ஆட அல்லது அகவ; கெண்டை-கெண்டைமீன்; சுனை-குனம்.

குறிப்புரை: திருக்கேதாரம் தேவாரம் பெற்ற வடநாட்டுத் தலங்களுள் ஒன்று. திருஞானசம்பந்தரும் சுந்தரரும் திருக்காளத்தியில் இருந்தபடியே இத்தலத்தைப் பாடினர்.

அஞ்சு-ஐந்து என்பதின் போலி. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளும் ஐந்து ஆண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைகளாகக் கூறப்பட்டன. மதங்கொண்ட யானைகளைப் பாகன் அங்குசத்தால் அடக்கி நடத்தல்போல ஐம்புலன்களையும் அவற்றின் வழிச் செல்லவிடாது அறிவாகிய பாகன் இறைவன் மீதுவைக்தும் பற்றாகிய அங்குசத்தைக் கொண்டு ஒடுக்கித் திருப்பல் வேண்டும். அங்ஙனஞ் செய்வதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கங்களை ஞானாசாரியர்கள் அமைத்துள்ளனர்.

## பயிற்சி

1. திருத்தோணி புரத்தினைக் குறிக்கும் வேறு நாமங்கள் ஐந்து தருக.
2. இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன், இறைவி திருநாமங்கள் எவை?
3. தோணிபுரச் சிறப்பு யாது?
4. மணிகண்டனது செயலாகக் கூறப்படுவது என்ன?
5. 'எண்ணின்றி முக்கோடி வாணாளதுடையான்' யாவன்?
6. "புள்ளிருக்கு வேளூர்" - பெயர்க் காரணந் தருக.
7. 'தொண்டரஞ்சுகளிறுமடக்கி' என்பதிலுள்ள பொருளை விளக்குக.
8. கேதாரத்தில் தொண்டர் எவ்வாறு வழிபடுகின்றனர்?
9. பின்வருவனவற்றை விளக்குக:

   மணிகண்டன்; இண்டை; இளம்பிறையாளன்; அர்த்தநாரீசுவரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருக்கோயில் அமைப்பும் இறைவனுடைய மூர்த்தங்களும்

சிவபெருமான் ஆன்மாக்கள் செய்யும் வழிபாடு களைக் குரு, இலிங்கம், சங்கமம் என்பவற்றின் வாயி லாக நின்று ஏற்று அருளுகின்றார். குரு என்றால் ஞானு சாரியரையும், இலிங்கம் என்றால் திருக்கோயில் உள்ளி ருக்கும் சிவலிங்கத்தினையும், சங்கமம் என்றால் சிவனடி யார்களையும் குறிப்பதாகும்.

பசுவினிடத்துப் பால் அதன் உடம்பு முழுவதும் செறிந்திருப்பினும் மடியினிடமாகப் பெற்றுக் கொள் ளுதல் போல இறைவன் எங்கும் நிறைந்தவராக இருப் பினும் அவரின் அருளைத் திருக்கோயில் உள்ளிருக்கும் சிவலிங்கத்தினிடமாகவே பெற்றுக் கொள்ளுதல் சாத் தியமாகும்.

> "திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
> சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே"
> —சிவஞானசித்தியார்.

கோயில் = (கோ + இல்) எனப்பிரிந்து இறைவனு டைய வீடு என்று பொருள்படும். கோயிலை 'ஆலயம்' எனவும் கூறுவர். ஆலயம் (ஆ + லயம்) என்றால் ஆன் மாக்கள் ஐம்புலனையடக்கி மனதை ஒருவழிப்படுத்தி இறைவனிடத்தே ஒடுங்குவதற்கு ஏதுவான இடமென்று சொல்லப்படும்.

இறைவன் உருவமற்றவராயினும் ஆன்மாக்கள் தம்மைத் தியானித்துப் பூசித்தற்பொருட்டுத் தமது சத்தியோடுகூடி அருவம், அருவுருவம், உருவம் என் னும் திருமேனிகளை எடுக்கின்றார். அவற்றில் அருவு ருவத் திருமேனியே சிவலிங்கம் ஆகும். இதனைச் சதா சிவமூர்த்தமெனவுங் கூறுவர். சிவலிங்கத்தில் கோமுகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன் கூடிய வட்டவடிவமாகிய பீடம் சத்தியைக் குறிக்கும். அதன் மேலுள்ள இலிங்கம் சிவத்தைக் குறிக்கும். இவையிரண்டும் பொருந்திய வடிவமே உலகம். இதனைச் "சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ் வுலகமெல்லாம்" என்று கூறுகின்றது ஞானசாத்திரம். எனவே, இலிங்கம் (லி + கம்) என்றால் உலகம் ஒடுங்கு வதற்கும் மீளத் தோன்றுதற்கும் காரணமாயுள்ள வடிவம் என்பது பொருளாம் என்க.

## திருக்கோயில் அமைப்பு

சிவபெருமான் உயிருக்கு உயிராய் ஆன்மாக்களுள் ளும் எழுந்தருளியிருப்பர். இதனால் உயிர் குடியிருக் கும் உடலும் அவருக்குக் கோயிலாகும். அவ்வுட லாகிய கோயிலின் புறச் சின்னமாகவே படமாடக் கோயில்கள் அமைந்திருக்கின்றன. பாதம் முதல் சிரம் வரையுள்ள உடலின் பகுதிகளைக் கொண்டனவாகவே கோபுரம் முதல் கருப்பக்கிருகம் வரையுள்ள கோயில் மண்டபங்களும் அங்குள்ள சின்னங்களும் காட்சி யளிக்கின்றன. திருக்கோயிலமைப்பில் யாம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மைகள் மிகப் பல இருப் பினும், அவற்றுள் ஒரு சிலவற்றினை ஈண்டுச் சிந்திப் பாம்.

(இராச) கோபுரம்: கோயிலைச் சமீபித்தவுடன் முதலில் கண்ணுக்குத் தோன்றுவது கோபுரமாகும். இதனைத் தூலலிங்கம் என்பர். இதன் வாயில்கள் மூன்றாக இருப்பின் நனவு, கனவு, சுழுத்தி என்னும் மூன்று அவத்தைகளைக் குறிக்கும். ஐந்தானால் ஐம்பொறிக ளையும் ஏழாக அமையின் ஐம்பொறிகளுடன் மனம், புத்தி என்ற இரண்டையும் குறிக்கும் என்க. வாயில் கள் பல இருப்பினும் தரைமட்டவாயிலாகவே உட்புக முடியும். அதுபோல் கடவுளை மனம் ஒன்றினாலேயே உள்ளபடி தரிசிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலிபீடம்: இதனைப் பத்திரலிங்கம் எனவும் பாசத்தை நீக்கும் சிவசக்தி யெனவுங் கூறுவர். இது நந்திக்குப் பின்னே உள்ளது. இதனை வணங்கும் போது நமது ஆணவத்தைப் பலியிட்டு அருள்வழி நிற்றல் வேண்டும்.

கொடிமரம்: பலிபீடத்தைச் சார்ந்திருப்பது கொடிமரம். கொடிமரம் பதியையும், கொடிச்சீலையோடு அதில் எழுதிய இடபம் பசு (ஆன்மா) வையும், சீலையைப் பற்றி நிற்கும் தருப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கும். கொடியேற்றுவிழா உயிர் பாசப்பற்றை நீக்கி அருள் வழிபட்டு, இறைவனுடைய திருவடிப்பேற்றைப் பெறுதலாகிய ஏற்றத்தை உறுமென்னும் உண்மையினை விளக்கி நிற்றல் காண்க.

நந்தி (இடபதேவர்): இது பக்குவமடைந்த ஆன்மாவைக் குறிக்கும். சிவலிங்கப்பெருமானை இது நோக்கியிருக்கும் நிலை - ஆன்மா தன்னுடன் அநாதியே பொருந்தியுள்ள பாசப்பற்றை நீக்கி அதில் பராமுகமுடையதாய்ச் சிவத்திலே பற்று வைத்து, சரியை முதலிய நாற்பாதங்களில் நின்று சிவத்தோடு அத்துவிதமாய்க் கலந்து பேரின்பப் பேற்றை அடையவேண்டுமென்பதைக் குறிக்கும்.

கருப்பக் கிருகம்: இங்கே சிவலிங்கப்பெருமான் எழுந்தருளியிருப்பார். இது திரையினால் மறைக்கப் பெற்று இருளாயிருக்கும். அருச்சகர் திரையை நீக்கித் தீபாராதனையால் ஒளியுண்டாக்கி, இறைவனைத் தரிசிக்கச் செய்வார். இங்ஙனம் நிகழ்வது அறியாமையாகிய இருளை நீக்கி அவனருளாகிய ஞான ஒளியினால் அவனைத் தரிசிக்கலாம் என்பதை உணர்ந்துகின்றது. இங்கு கருப்பக் கிருகம் மனத்திற்கும், தீபஒளி ஞானத்திற்கும் ஒப்பாதல் காண்க.

மண்டபங்கள்: திருக்கோயில்களில் கருப்பக்கிருகத்தோடு அருத்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் என்னும் மண்டபங்களும் அமைக்கப்பட்டிருக்கும். மேற் கூறிய ஆறுமண்டபங்களும் முறையே எமது உடலிலுள்ள மூலாதாரம் (மூலம்) சுவாதிட்டானம் (தொப்பூழ்), மணிபூரகம் (மேல்வயிறு), அநாகதம் (-நெஞ்சம்), விசுத்தி (-மிடறு), ஆக்ஞை (-புருவநடு) என்னும் ஆறு ஆதாரங்களுக்கும் அமைவாக உள்ளன.

திரு வீதிகள்: இவை இரண்டு முதல் ஐந்து வரை அமைந்திருக்கும். வீதிகள் பஞ்சகோசங்களைக் குறிக்கும். ஐந்தாம் வீதி அன்னமய கோசத்தையும், நான்காம் வீதி பிராணமய கோசத்தையும், மூன்றும் வீதி மனோமய கோசத்தையும், இரண்டாம் வீதி விஞ்ஞானமய கோசத்தையும், முதலாம் வீதி ஆனந்தமய கோசத்தையும் குறிப்பனவாகும்.

## மூர்த்தங்கள்

அரூபியாகிய இறைவன் ஆன்மாக்கள் தம்மைத் தியானித்து முத்தியின்பம் பெறும் பொருட்டு மூர்த்தியாகவும் பல மூர்த்தங்களைக் கொண்டும் திகழ்கின்றார். சிவலிங்கம், சபாபதி, உமாமகேசர் என்பன மூர்த்தி சொரூபங்களாகும். இவை மகேசுர வடிவங்கள் எனப்படும். உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் முதலிய வடிவங்கள் மூர்த்தங்கள் எனப்படும்.

## பயிற்சி

1. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு எவற்றின் இடமாக நின்று அருள் செய்வார்?
2. 'ஆலயம்' என்பதன் பொருள் யாது?
3. சிவபெருமான் எடுக்கும் மூவகைத் திருமேனிகள் எவை?
4. சிறுகுறிப்பெழுதுக:
   சிவலிங்கம்; கருப்பக் கிருகம்; மூர்த்தங்கள்.
5. கொடிமரத்தின் தத்துவத்தினை விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருக்கோயில் வழிபாடு

கடவுள் அங்கிங்கெனுதபடி எங்கும் வியாபகமாய் நிற்பினும், ஆலயத் திருமேனிகளிலும் மெய்யடியார் திருவேடத்திலும் தயிரில் நெய் போல விளங்கி நிற்பர். மற்றைய இடங்களில் பாலில் நெய் போல விளங்காது நிற்பர். எனவே, மக்கள் தயிரில் நெய் போல இறைவனைக் கண்டு வழிபடக்கூடிய இடங்களே ஆலயங்கள் (கோயில்கள்) எனப்படும்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது தமிழ் நாட்டுப் பழமொழிகளில் ஒன்று. இதனுல் மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் கோயில் அவசியகம் அமைக்கப்படல் வேண்டும் என்பது புலனுகின்றது. கோயில் இருந்தால் அங்கு வழிபாடும் இன்றியமையாது வேண்டப்படுவதாகும். மக்கள் தம் வினை நீங்கிப் பிறவாநிலை எய்தத் திருக்கோயில் வழிபாட்டினை மேற்கொள்ளல் நன்று. இதனுலன்றே! "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ருர் ஔவை மூதாட்டியாரும்.

திருக்கோயிலுக்குச் செல்லும் முன் ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த ஆடையினைத் தரித்து விபூதி அணிந்து கொள்ளல் வேண்டும். தீட்சை பெற்றவராயின் சந்தியா வந்தனம் பண்ணுதல் வேண்டும். பின்னர் அருச்சனைப் பொருள்களாய பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், கற்பூரம், மலர் முதலானவற்றில் இயன்றவற்றினை எடுத்துத் தட்டில் வைத்து அரைக்கு மேல் ஏந்தியவண்ணம் கொண்டு செல்லல் வேண்டும். செல்லுங்கால், வீண் வார்த்தை பேசாமல் சிவசிந்தனையோடு செல்லுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலைச் சமீபித்தவுடன் ஆங்குள்ள நீர் நிலையில் கைகால்களைச் சுத்தஞ் செய்து அருச்சனைப் பொருள்களையும் கழுவி எடுத்தல் வேண்டும். பின்னர் தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி, திருநந்தி தேவரிடம் அனுமதி வேண்டி உள்ளே போதல் வேண்டும். ஆங்கு முதலில் பலி பீடத்தையும் துவசத் தம்பத்தை (கொடிமரத்தை) யும் இடபதேவரையும் கும்பிட்டு, பலிபீடத்திற்கு இப்பால் நின்று வணங்கல் வேண்டும். அபிடே[illegible] சமயம், நிவேதன சமயம் அல்லாத சமயத்தில் வீழ்ந்து வணங்கலாம். ஆண்கள் அட்டாங்கமாகவும் பெண்கள் பஞ்சாங்கமாகவும் 3, 5, 7, 9, 12 என்ற முறையில் நமஸ்கரித்தல் வேண்டும். திரயாங்க நமஸ்காரம் இரு பாலருக்கும் உரியதாகும். ஒருமுறை, இருமுறை நமஸ்கரித்தல் பாவம்.

மேற்குறித்த குறைகளை அனுசரித்து நமஸ்காரம் பண்ணிய பின் இரண்டு கைகளையும் மார்பிலாயினும் சிரசின்மேலாயினும் குவித்து ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உச்சரித்துக் கொண்டு அல்லது தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளை நெஞ்சங் கசிந்துருகப் பாடிக்கொண்டு கால்களை மெல்ல மெல்ல வைத்து 3, 5, 7, 9, 15, 21 என்ற முறையில் வீதிவலம் வருதல் வேண்டும். அதன் பின் மீண்டும் சந்நிதானத்தை அடைந்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

## சுவாமி சந்நிதானங்களைத் தரிசிக்கும் முறை

முதலில் துவாரபாலகரை வணங்குதல் வேண்டும். பின்பு திருநந்தி தேவரை வணங்கிப் "பகவானே, உம்முடைய திருவடிகளையடைந்து அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசித்துப் பயன் பெறும் பொருட்டு அநுமதி தந்தருளும்" என்று பிரார்த்தித்துக் கொண்டு உள்ளே போய் முதலில் விக்கினேஸ்வரரைத் தரிசனஞ் செய்தல் வேண்டும். பின் சிவலிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப் பெருமான், உமாதேவியார் சந்நிதிகளையடைந்து அருச்சனை செய்து விபூதி வாங்கித் தரித்துக் கொண்டு அதன் பின் முறையே சபாபதி, தக்ஷிணா மூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணி யர் முதலானோரையும் சமய குரவர் நால்வரையும் தரிசனஞ் செய்தல் வேண்டும். தரிசனத்தின் போது திருமுறைகளை மனங்கசிந்துருக ஓதுதல் வேண்டற் பாலதாகும்.

சுவாமி சந்நிதானங்களைத் தரிசித்த பின் சண் டேசுரர் சந்நிதியையடைந்து கும்பிட்டு, தோத்திரஞ் செய்து மூன்று முறை கைகொட்டிச் சிவதரிசன பலத் தைத் தருமாறு பிரார்த்தித்து வலப்பக்கமாக வந்து சிவசந்நிதியையடைதல் வேண்டும். அவ்விடத்து இடபதேவருடைய கொம்பின் நடுவாகச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்துப் பலிபீடத்திற்கு இப்பால் மும்முறை நமஸ்கரித்தல் வேண்டும். பின்னர் எழுந்து அமைதியான ஓரிடத்திலிருந்து பஞ்சாட்சரத்தை இயன்ற உருச்செபித்து, எழுந்து வீட்டிற்குச் செல் லுதல் வேண்டும்.

திருக் கோயிலுக்கு நித்தியமும் செல்லலாம். அங் ஙனம் செல்ல இயலாதோர் சோமவாரம், மங்கள வாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, திருக்கார்த்திகை, மாசப் பிறப்பு, கிரகணகாலங்கள், சிவராத்திரி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி, விநாயகசஷ்டி, கந்தசஷ்டி முதலிய புண்ணிய காலங்களிலாயினும் சென்று சுவாமி தரி சனஞ் செய்தல் வேண்டும்.

## கோவிலில் செய்யத்தகாத குற்றங்கள்

1. ஆசாரம் இல்லாது போதல்.
2. தோய்த்துலராத வஸ்திரம் தரித்துக் கொண்டு போதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆசௌசத்துடன் போதல்.
4. வேண்டாத நிலையிலும் வாகனம் ஏறிப் போதல்.
5. ஆசனத் திருத்தல்.
6. வீண் வார்த்தை பேசுதல்.
7. கேளிக்கைகளில் ஈடுபடுதல்.
8. விக்கிரகத்தைத் தொடுதல்.
9. நிருமாலியத்தைத் கடத்தல்—மிதித்தல்.
10. தூபி, துவசஸ்தம்பம், பலிபீடம், இடபம், விக்கிரகம் என்னும் இவற்றின் நிழலை மிதித்தல்.
11. சுவாமிக்கும் பலிபீடத்திற்கும் குறுக்கே போதல்—நமஸ்கரித்தல்.
12. ஒருதரம், இருதரம் நமஸ்கரித்தல்.
13. அகாலத்தில் தரிசித்தல்.
14. சுவாமிக்குக் கால் நீட்டி நமஸ்கரித்தல்—அங்கப்பிரதக்ஷணம் பண்ணுதல்.
15. திரை விட்டபின் வணங்குதல்.
16. மருட்பாக்களை ஓதுதல்.

## பயிற்சி

1. இறைவன் எவ்விடங்களில் தயிரில் நெய் போல் தோற்றமளிப்பான்?
2. மக்கள் கோயில் வழிபாட்டினை ஏன் மேற் கொள்ளல் வேண்டும்?
3. திருக் கோயிலுக்கு எப்படிப் போதல் வேண்டும்?
4. சுவாமி சந்நிதானங்களைத் தரிசிக்கும் முறை யாது?
5. சிறு குறிப்பு எழுதுக:
சண்டேசுரர்; ஸ்ரீபஞ்சாட்சரம்; கந்தசஷ்டி; சோமாஸ்கந்தர்.
6. திருக்கோயிலில் செய்யத் தகாத குற்றங்களில் பத்து எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சைவநாற்பாதங்கள்

உலகப் பற்றில் நின்று விடுதலை பெற்றுச் சிவ பெருமானின் திருவடியை அடைதற்குரிய பாதங்கள் நான்காகும். அவற்றைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனச் சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன. இவற்றுள் சரியை வழி நின்று ஒழுகும் நெறியைத் தாசமார்க்கம் (-அடிமைநெறி) என்றும், கிரியை வழி நின்று ஒழுகும் நெறியைச் சற்புத்திரமார்க்கம் (-புதல்வர் நெறி) என்றும், யோகவழி நின்று ஒழுகும் நெறியைச் சகமார்க்கம் (-தோழமைநெறி) என்றும், ஞானவழி நின்று ஒழுகும் நெறியைச் சன்மார்க்கம் (-காதல்நெறி) என்றும் சொல்லுவார்கள் மேலோர்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் இந் நான்கு பாதங்களும் தனித்தனி உபாயநிலை, உண்மை நிலை என இருவகைப்படும். உபாயநிலை உலக இன்பங் களைப் பெறுதற்காகச் செய்யப்ப டுவது எனவும் உண்மைநிலை உலகப்பற்றைத்துறந்து றைவன் திரு வடிப் பேருகிய முத்தியின்பத்தைக் கருத்திற்கொண்டு செய்யப்படுவது எனவும் பொருள் கொள்வர். இதனுல் உபாயச்சரியை முதல் உண்மைஞானம் ஈருகப் புண் ணியங்கள் எட்டாதல் காண்க. இவற்றுள் முதன் நான் கும் பசு புண்ணியங்கள் எனவும், பின்னையவை நான் கும் சிவபுண்ணியங்கள் எனவும் படும். சோபான முறையில் உபாயச் சரியை முதலிய நான்கையும் அனுட்டித்த பின்னரே உண்மைச் சரியை முதலிய நான்கினையும் அனுட்டிப்பார்கள்.

ஒவ்வொரு பாதத்திலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பிரிவுகள் உண்டு. இதனுல் அவை சரி யையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகம், சரியையில் ஞானம் எனவும் இப்படியே கிரியை, யோகம் ஞானபாதங்களிலும் அமைந்து படிகள் பதினாறு ஆகின்றன. இவை பதினாறும் உபாய-உண்மை நிலைகளில் வைத்துக்கணிக்கும் பொழுது சைவசமயப் படிகள் முப்பத்திரண்டாதல் காண்க.

சரியை: சரியை என்பது புறத்தொழிலாலே இறைவனின் உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடாகும். அவ்வழிபாடு சரியையிற் சரியை முதல் சரியையில் ஞானம் ஈறுக நான்கு வகைப்படும். திருக்கோயிலைக் கூட்டுதல், மெழுகுதல், திருவிளக்கேற்றுதல், திருநந்தவனம் அமைத்தல், பத்திரபுஷ்பம் எடுத்துக் கொடுத்தல், திருமாலைகட்டிக் கொடுத்தல், இறைவன் பெருமையைப் புகழ்ந்துரைத்தல் - பாடுதல், சிவனடியார்க்கு ஏவல் செய்தல் என்பன சரியையிற் சரியை எனப்படும். சந்திரசேகரர், உமாமகேசர், விநாயகர், சுப்பிரமணியர் முதலாய உருவத் திருமேனிகளில் ஒன்றைவழிபடுதல் சரியையிற் கிரியை எனப்படும். சரியையில் யோகமாவது: சிவபெருமானுடைய உருவத் திருமேனிகளில் ஒன்றை மனதிலே தியானித்தலாகும். இத்தியானபாவனையின் உறைப்பால் உண்டாவதோர் அனுபவ உணர்வே சரியையில் ஞானம் ஆகும். சரியைவழி நின்றோர் சிவபெருமான் திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கும் உலகத்தில் வீற்றிருந்து அவ்வுலகபோகங்களை அனுபவித்து வாழ்வர். இம் முத்தியினைச் சாலோக முத்தி என்பர்.

கிரியை: கிரியை என்பது புறத்தொழில், அகத்தொழில் என்னும் இரண்டாலும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடாகும். இவ்வழிபாட்டில் புது மலர்கள், தூப-தீபம், திருமஞ்ஞனம், திருவமுது முதலாகப் பூசைக்குரிய உபகரணங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரித்துக் கொள்ளுதல் கிரியையிற் சரியை எனவும், பூத சுத்தி முதலாகப் பஞ்ச சுத்திகளும் செய்து ஆசன மிட்டு மூர்த்தியை எழுந்தருளச் செய்து மெய்யினுல் அருச்சனை புரிந்து தோத்திரம் பாடிவணங்குதல் கிரியையிற் கிரியை எனவும், மானத பூசை எனப்படும் அந்தர்யாக பூசை கிரியையில் யோகம் எனவும், மானத பூசையின் அனுபவத்தால் நிகழும் உணர்வே கிரியை யில் ஞானம் எனவும் நான்கு படித்தரங்கள் இருத் தல் காண்க. இக்கிரியை வழி நின்று ஒழுகிஞேர்கள் புதல்வர்களுக்குரிய உரிமைபோலச் சிவபெருமானுக்கு அண்மையில் வீற்றிருந்து போகங்களை நுகர்ந்து வாழ் தலாகிய சாமீப முத்தியினைப் பெறுவர்.

யோகம்: யோகமென்பது மனதை விடயங்களின் வழியே போகாவண்ணம் நிறுத்தி அருவத் திருமேனி யாகிய சிவத்தைத் தியானித்து, பின்பு தியானிப் போனுகியதானும் தியானமுந் தோன்ருது தியானப் பொருளாகிய சிவம் ஒன்றுமே விளங்கப் பெற்றுச் சமாதிநிலை அடைதலாகும். இவ்வழிபாடும் யோகத் திற் சரியை முதல் யோகத்தில் ஞானமீருக நான்கு வகைப்படும். யோகத்திற் சரியையாவது: இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம் என்னும் யோகம் நான்கின்வழி நின்று ஒழுகுதலாகும். யோகத்திற் கிரியை: பிரத்தியாகாரம், தாரணை என்பவற்றின் வழி ஒழுகுதல் எனப்படும். யோகத்தில் யோகம் என்பது தியானமாகும். அடுத்து மூர்த்தியாகிய தோற்றமும் சிந்தித்தலாகிய செயலும் சிந்திக்கும் தானுமென்ற வேறுபாடின்றி மூர்த்தியும் தானும் கலந்து நிற்றல் யோகத்தில் ஞானமெனப்படும். இங்ஙனம் யோகவழி யில் நின்று ஒழுகுவோர் தோழர்க்குரிய உரிமை யோடு சிவபெருமான் கொண்டருளும் திருமேனியைப் பெற்று வாழ்தலாகிய சாரூப முத்தியினைப் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம்: இது புறத்தொழில், அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத் தொழிலால் மூவகைத் திருமேனிகளுக்கும் மேலாய், சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவபெருமானிடத்துச் செய்யும் வழிபாடாகும். இவ்வழிபாட்டில் ஞானசாத்திரங்களை ஆசிரியரிடங் கேட்டல் ஞானத்தில் சரியை எனவும், ஆசிரியரிடங் கேட்ட ஞானத்தை ஆராய்ந்து சிந்தித்தல் ஞானத்தில் கிரியை எனவும், ஆராய்ந்து சிந்தித்தவற்றைத் தெளிதல் ஞானத்தில் யோகமெனவும், நிட்டை கூடல் ஞானத்தில் ஞானம் எனவும் படும். இங்ஙனம் ஞானவழியில் நிற்போர் சிவபெருமானுடைய திருவடியில் இரண்டறக்கலந்து நித்தியானந்தத்தை அனுபவித்து வாழ்தலாகிய சாயுச்சியம் என்னும் பரமுத்தியினை எய்துவார்கள் என்க.

"விரும்பும் சரியை முதன் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்பு மலர் காய் கனி போலன்றோ பராபரமே".

—தாயுமானவர்

## பயிற்சி

1. சைவம் கூறும் நான்கு மார்க்கங்கள் எவை?
2. உண்மை நிலை யென்றால் என்ன?
3. சைவ சமயப் படிகள் முப்பத்திரண்டாதலை விளக்குக.
4. சரியையிற் சரியை யாவது யாது?
5. சாமீப முத்தி யென்றால் என்ன?
6. யோகமாவது யாது?
7. விளக்கக் குறிப்பு எழுதுக.

பசு புண்ணியம்; பஞ்ச சுத்தி; மூவகைத் திருமேனிகள்; பரமுத்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. சைவசமயப் பிரமாண நூல்கள்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் சைவசமயம் எனப்படும். சைவசமயத்தின் பிராமண நூல்கள் வேதம், சிவாகமம், மெய்கண்டசாத்திரங்கள், திருமுறைகள், புராணங்கள், இதிகாசங்கள் என்பனவாம். இவற்றுள் வேதம், சிவாகமம் இறைவனுலும் ஏனையவை இறையருள் வழிப்பட்ட சான்றோராலும் அருளப்பட்டனவாம் என்க.

வேதம், இறைவனுல் அருளப்பட்ட நிலையில் அநாதியான தென்றும் உலகத்தவர் பொருட்டு எழுந்ததாதலின் பொது நூல் என்றும் சொல்லப்படுகின்றது. ஒரு காலத்தில் சிவபெருமான் கல்லால விருட்சத்தின் கீழ் தென் முகக் கடவுளாய் இருந்து பரந்துபட்ட வேதத்தினை இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் என நான்காக வகுத்துச் சனகர், சனுதனர், சனற்குமரர், சனந்தரர் என்ற முனிவர்க்கு உபதேசித்தாரென ஆராய்ச்சியாளர் பகர்வர் "அன்றுலின் நீழற்கீழ் அருமறைகள் தாமருளி" என்ற திருவாசக அடிகள் இதனை மெய்ப்பித்தல்காண்க. இன்று வழக்கிலுள்ள நான்கு வேதங்களையும் வியாசர் என்ற முனிவர் வகுத்தளித்தார். இதனுல் அவர் வேதவியாசர் எனப்பட்டார்.

வேதங்களில் இருக்கு-மந்திரம் எனவும், யசுர் கட்டளை எனவும். சாமம் துதி எனவும், அதர்வனம் இவை மூன்றும் உடையது எனவும் நூலோர் பகர்வர். இராவணன் 'சாமம்' வல்லவன்; இதனுல் தசகிரீடனுய அவன் இராவணன் என அழைக்கப்பட்டான். இறைவன் அருளுக்கு இலகுவில் பாத்திரராதற்கு ஏற்ற வேதமும் இதுவேயாகும். இறைவன் சாமவேதப் பிரியன் என்று அழைக்கப்படுவது இதனுற் போலும் என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்களைத் தனித்தனி இரண்டு பிரிவாகப் பிரித்துள்ளார்கள். அவை கர்மகாண்டம், ஞான காண்டம் எனப்படும். கர்காண்டம் கர்மங்களைப்பற்றிக் கூறுவது. ஞானகாண்டம் வீட்டுநெறியாகிய ஞானபாதத்தைக் கூறுவது. ஞானகாண்டம் பிரமம் எனப்படும் பரம்பொருளை ஆராய்வதால் அது பிரமகாண்டம் எனவும் பெயர் பெறும்.

ஆகமம்: "மன்னுமாமலை மகேந்திர மதனிற்சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்தார். இதனுல் சிவபெருமானே ஆன்மாக்களின் பொருட்டு ஆகமங்களை அருளிச் செய்தார் என்பது புலனுதல் காண்க. வேதத்தினைச் சைவம், வைணவம், சாக்தம், காணுபத்தியம் முதலாய வைதீக சமயங்கள் ஆதாரமாகக் கொள்கின்றன. ஆயின் ஆகமங்களை அவை அவ்வாறு கொள்வதில்லை. இதனுல் வேதம் பொது நூல் எனவும், ஆகமம் சிறப்பு நூலெனவும் படும். வைணவ ஆகமங்கள் சங்கிதைகள் என்றும் சாக்த ஆகமங்கள் தந்திரங்கள் எனவும் பெயர் பெறுவதால் ஆகமம் என்பது சைவாகமங்களையே கருதுகின்றது. ஆகமங்கள் சிவபெருமானையும் அவர் எடுத்த மூர்த்தங்களாகிய விநாயகர், சுப்பிரமணியர் முதலாய கடவுளரையும் வழிபடும் முறைமையையும் மாத்திரம் கூறுவதால் ஆகமங்களைச் சைவ சமயத்தின் சிறப்பு நூல்கள் என்னலாம்.

சைவாகமங்கள் சிவபெருமானுடைய ஈசான முகத்திலிருந்து பிறந்தன என்பது ஓர் ஐதீகம். இவ்வாறு பிறந்த ஆகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈருக இருபத்தெட்டாகும். இவை மூல ஆகமங்கள் எனப்படும். இவற்றுள் காமிகம், காரணம், சகஸ்ரம், சுப்பிரபேதம், ஆக்நேயம், சொரவம், வாதுளம் என்பன சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. ஆகமங்கள் ஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் எனத் தனித்தனி நான்கு பாதங்களை உடையன.

மூல ஆகமங்களை விட உபாகமங்கள் என்றும் ஒரு பிரிவு உண்டு. இதில் நாரசிங்கம் எனப்படும் மிருகேந்திரம் முதலாக விசுவான் மகம் இறுதியாக 207 உண்டு என்பர்.

மெய்கண்டசாத்திரம்: மெய்கண்ட சாத்திரங்கள் சைவ சித்தாந்த சமய நூல்களில் ஒரு பகுதியாகும். சைவ சித்தாந்தசந்தான பரம்பரைகள் உலகம் தோன்றிய காலந்தொட்டு பல்வேறுகாலங்களில் ஆங்காங்கு மலர்ந்து சைவசித்தாந்த ஒளியைப் பரப்பி வந்தன. என்றாலும், அதன் ஒளி பலகாரணங்களால் சில நூற்றுண்டுகளுக்குமுன்னே நமது நாட்டில் (தமிழகத்தில்) குறைவதாயிற்று. சங்கரர், இராமானுசர் முதலிய வட மொழி ஆசிரியர்களின் பாடியங்கள் சிறந்து விளங்கிய காலத்தில் சைவ சித்தாந்த ஞானவளம் சுருங்கிய தென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். இங்ஙனம் குன்றிய சைவசித்தாந்த ஞானவளத்தை மேம் படுத்தும் வண்ணம் கி. பி. 13 ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் மெய்கண்டதேவர் தோன்றியருளினுர். இவர் ஆக்கித் தந்த சிவஞானபோதம் என்னும் சைவ சித்தாந்தத் தலைமணிநூலின் எழுச்சியால் மீண்டும் சைவசித்தாந்த பரம்பரை புத்துயிரும் புதுவாழ்வும் பெற்றுப் பொலிவுற்றது. இங்ஙனம் மெய்கண்டதேவர் பரம்பரையினுல் புத்தெழுச்சிபெற்ற சைவசித்தாந்த நூல்களை மெய்கண்டசாத்திரங்களெனக் கூறுதல் மரபாயிற்று.

## சாத்திரங்களும் அவற்றை ஆக்கிய ஆசிரியர்களும்

1. திருவுந்தியார் — திருவியலூர்உய்யவந்ததேவநாயனுர்
2. திருக்களிற்றுப்படியார் — திருக்கடவூர்உய்யவந்ததேவ நாயனுர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சிவஞானபோதம் — மெய்கண்டதேவர்
4. சிவஞானசித்தியார் — அருணந்தி சிவாசாரியார்
5. இருபா இருபஃது — ,, ,,
6. உண்மை விளக்கம் — மனவாசகங்கடந்ததேவர்
7. சிவப்பிரகாசம் — உமாபதிசிவாச்சாரியார்
8. திருவருட்பயன் — ,,
9. வினாவெண்பா — ,,
10. போற்றிப்பஃறொடை — ,,
11. கொடிக்கவி — ,,
12. நெஞ்சுவிடுதூது — ,,
13 உண்மை நெறிவிளக்கம் — ,,
14. சங்கற்பநிராகரணம் — ,,

திருவுந்தியார் மெய்கண்டசாஸ்திரங்களுள் காலத்தால் முந்தியது. இதன் ஆசிரியரை ஆளவந்த தேவர் எனவும் அழைப்பர். இவரின் மாணவரின் மாணவராகிய திருக்கடவூர் உய்யவந்ததேவர் திருவுந்தியாருக்கு வழிநூலாகத்திருக் களிற்றுப்படியாரை இயற்றினர். இந்நூல் 100 வெண்பாக்களைக் கொண்டது. அடுத்துச் சித்தாந்த நூல்கள் பதினான்கினும் தலை சிறந்தது சிவஞானபோதமாகும். இந்நூல் மெய்கண்டதேவரால் அருளிச் செய்யப்பட்டது. பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டது. உரைநடைப் பகுதியும் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றது. நூலுக்கு மாதவச் சிவஞானமுனிவர் மாபாடியம் எழுதியுள்ளார்.

மெய்கண்ட தேவரின் மாணவராய அருணந்தி சிவாசாரியரால் எழுதப்பட்ட சிவஞானசித்தியார் என்ற நூல் சிவஞான போதத்திற்கு வழி நூலாகும். நூல் சுபக்கம், பரபக்கம் என இரு பெரும் பிரிவுகளையுடையதாய் விருத்தப்பாவால் ஆக்கப்பட்டுள்ளது. இருபா இருபஃது என்ற நூல் மெய்கண்டாரைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பிப்பதாக அமைந்துள்ளது. மெய்கண்டாரின் மற்ருெருமாணவரான மனவாசகங் கடந்தார் எழுதிய உண்மை விளக்கம் என்னும் நூல் 53 வெண்பாக்களை உடையதாய் 36 தத்துவங்களையும், முப்பொருள்களின் இயல்பையும் ஐந்தெழுத்தின் உண்மையையும் கூறுகின்றது.

சித்தாந்த சாத்திரங்களில் சிவப்பிரகாசம் முதல் சங்கற்ப நிராகரணம் வரையுள்ள எட்டு நூல்களையும் ஆக்கிய உமாபதி சிவாசாரியர் சைவத்திறன் தெரிக்க லுற்ருர் என்ருல் அஃது மிகையாது. சிவப்பிரகாசம் 100 விருத்தப்பாக்களைத் கொண்டது. திருவருட் பயன் 100 குறட் பாக்களை உடையது. ஆசிரியரின் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் திறன் போற்றப்படுதற் குரியது. இவரியற்றிய சாத்திர நூல்கள் எட்டும் சித்தாந்த அட்டகம் எனப்படும்.

திருமுறை: சிவபெருமானின் புகழைச் சொல்லும் அருட்பனுவல்களின் தொகுப்பே திருமுறைகளாகும். முறை என்பதற்குக் கற்று வல்லார் பல பொருளினைக் கொள்வார்கள். ஈண்டு நூல் என்னும் பொதுப் பொருளில் வைத்துத் திரு என்னும் அடையையும் கொடுத்துக் கூறும்பொழுது தெய்வத் தன்மையுடைய நூல் எனப் பொருள் கொள்ளலாம். எனவே, சைவத் திருமுறைகள் பன்னிரண்டிலும் அடங்கிய நூல்கள் எல்லாம் தெய்வத்தன்மை வாய்ந்த சிறப்பினை உடையனவாகும்.

பன்னிரு திருமுறைகளில், பதினெரு திருமுறைகளையும் சைவ உலகிற்கு அருளிய பெரியார் நம்பியாண்டார் நம்பிகள் ஆவர். இவர் பொள்ளாப் பிள்ளையாரின் திருவருளினல் மூவர் தேவாரங்கள் பற்றிய உண்மைகளையும் திருத்தொண்டர் வரலாற்று உண்மைகளையும் அறிந்து இராச இராச சோழனுக்குத் தெருட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டினர். பின்னர் அவன் வேண்டுகோட்படி தில்லைஅம்பலவாணர் அருள் பெற்றுத் தேவாரப்பதிகங்களை எடுத்து முறை செய்யத் தலைப்பட்டார்.

1 ஆம் திருமுறை
2 ஆம் திருமுறை } :திருஞான சம்பந்தர் தேவாரங்கள்
3 ஆம் திருமுறை

4 ஆம் திருமுறை
5 ஆம் திருமுறை } :திருநாவுக்கரசர் தேவாரங்கள்
6 ஆம் திருமுறை

7 ஆம் திருமுறை: சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரங்கள்

8 ஆம் திருமுறை: திருவாசகம், திருக்கோவையார்

9 ஆம் திருமுறை: திருவிசைப்பா, திருபல்லாண்டு

10 ஆம் திருமுறை: திருமந்திரம்

11 ஆம் திருமுறை: மூத்த திருப்பதிகம், அற்புதத்திருவந்தாதி முதலாக 41 பிரபந்தங்கள்.

12 ஆம் திருமுறை: பெரியபுராணம்

பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளும் மூவர் தேவாரங்கள் ஆகும். இவர்கள் பாடிய தேவாரங்கள் தனித்தனி பல்லாயிரங்களாக இருப்பினும் காலத்துக்கு ஒவ்வாதன போக இன்று சம்பந்தர் தேவாரம் 384 பதிகங்களும், அப்பர் தேவாரம் 312 பதிகங்களும், சுந்தரர் தேவாரம் 100 பதிகங்களுமே வழக்கில் இருக்கின்றன. எட்டாம் திருமுறையாகிய திருவாசகமும் திருக்கோவையாரும் மாணிக்கவாசகர் சொல்லச் சிவபெருமானே தம் கைப்பட எழுதியருளினார்கள். ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பா திருமாளிகைத் தேவர் முதல் சேதிராயர் ஈருக ஒன்பது மெய்யடியார்களினாலும் திருப்பல்லாண்டு சேந்தனாராலும் பாடப்பட்டனவாகும். பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம்—திருமூலர் என்ற யோகியாரால் அருளிச் செய்யப்பட்டதாகும். இதில் மூவாயிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்கள் உள. பதினேராம் திருமுறையாகிய 41 பிரபந்தங்களும் காரைக்காலம்மையார், சேரமான்பெருமாள், நக்கீரர், கபிலர், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி உட்படப் பன்னிரு அடியார்களால் பாடப்பட்டனவாகும். நம்பியாண்டார் நம்பி பதினொரு திருமுறைகளையும் வகுத்தருளிய பின்னர் அநபாய சோழன் காலத்தில் அவனது முதன் மந்திரியாராக இருந்த சேக்கிழாரால் பாடப்பட்ட பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

**புராணம்:** வேதத்திற்கு உப அங்கமான நூல்கள் மீமாஞ்சை, நியாயம், தர்மசாத்திரம், புராணம் என நான்காகும். இவையாவும் வேத உண்மைகளை விளக்குவனவாயினும் புராணங்கள் வேதங்களின் உண்மைகளை விரிவாக விளக்கிப் பெரிய கதைகளாகச் சொல்லுகின்றன. உண்மை இதுவாதல் கொண்டே புராணம் என்பதற்குப் பழமையானது எனப் பொருள் கூறிப் போந்தனர் சான்றோர். புராணங்கள் உருவ வழிபாடு, பக்திமார்க்கம், கன்மம், மறுபிறப்பு, ஞானம், மோட்சம், உபநிடதக் கொள்கைகள் என்பவற்றை வலியுறுத்திக் கூறுகின்றன. புராணங்களின் உண்மைகளை உலகத்தவருக்கு உதவியவர் சூதபுராணிகர் என்பது கொண்டு புராணங்களைச் சொல்லுகிறவர்களுக்குச் சூதர் என்ற பெயர் வழங்கிவருகின்றது. புராணங்களைச் செய்தவர் வேதவியாசர் ஆவர். சிவபுராணம் முதல் பிரமகைவர்த்த புராணம் ஈருகப் புராணங்கள் பதினெட்டாகும். அவை பின்வருமாறு:

சிவபுராணம், பவிடியபுராணம், மார்க்கண்டேயபுராணம், இலிங்க புராணம், கந்த புராணம், வராக புராணம், வாமன புராணம், மற்ச புராணம், கூர்ம புராணம், பிரமாண்ட புராணம், கருட புராணம், நாரதீய புராணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைணவ புராணம், பாகவத புராணம், பிரம புராணம், பத்ம புராணம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம்.

இதிகாசங்கள்: வேதத்தொகுதியில் புராணத்துடன் சேர்த்தே இதிகாசம் சொல்லப்பட்டுள்ளது. ஆகவேதான் இதிகாசங்களைப் புராணங்களுடன் அடக்கி புராணேதிகாசங்கள் என்று வழங்குவர். இதிகாசம் என்றால் இப்படி முன் இருந்தது என்று பொருளாகும். இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம் இதிகாசங்களாகும். இதிகாசக் கதைகளால் வேதப்பொருளை நன்கு அறியலாம். இதிகாசங்களை ஓதுபவர் சூதர், மாகதர் என அழைக்கப்படுவர். முற்காலத்தில் அரச சபைகளில், யாகசாலைகளில், விழாக்களில் இக்கதைகள் ஓதப்பட்டு வந்தன. பிற்காலத்தில் துயரம் வந்தபோது மனஆறுதலுக்காக இதிகாசக் கதைகளைப் படிப்பது வழக்கமாகி இன்றும் இருந்து வருகிறது.

## பயிற்சி

1. சைவ சமயப் பிரமாண நூல்கள் எவை?
2. 'வேதம்' என்னும் சொல்லுக்குப் பொருள் யாது?
3. வேதங்களில் ஞானகாண்டப்பகுதி எதனைக் கூறுகின்றது?
4. சிவாகமங்கள் எத்தனை? அவற்றில் ஐந்தின் பெயர் தருக.
5. திருக்களிற்றுப்படியார், உண்மை விளக்கம் இந்நூல்களின் ஆசிரியர்கள் யாவர்?
6. அருணந்திசிவாசாரியர் இயற்றிய நூல்கள் எவை?
7. சித்தாந்த அட்டகம் எவை?
8. திருமுறைகளை வகுத்தவர் யார்?
9. ஒன்பதாம் திருமுறையில் வரும் நூல்கள் எவை?
10. புராணங்கள் ஐந்தின் பெயர் தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. சம்பந்தர் தேவாரம் — II

### (1)

திருச்சிராப்பள்ளி

(பண்—குறிஞ்சி)

திருச்சிற்றம்பலம்

நன்றுடையானைத் தீயதி லானை நரைவெள்ளே (று)
ஒன்றுடையானை யுமையொரு பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென் னுள்ளங் குளிரும்மே.

திருச்சிற்றம்பலம்

பதிகவரலாறு: திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் முத்தீச்சரத்தைத் தொழுதபின் திருச்சிராப்பள்ளித் திருத்தலத்தை அடைந்து இறைவனை வணங்கி, மனங் குளிர்ந்து நன்றுடையானை என்றெடுத்து இத்திருப் பதிகத்தினைப் பாடியருளினுர்.

பொழிப்புரை: நன்மைகளைச் செய்யும் இயல்புடைய வனை, தீயஇயல்பு இல்லாதவனை, மிக்க வெண்மையான இடபவாகனத்தை உடையவனை, பார்வதியை இடப் பாகத்தில் கொண்டிருப்பவனை, வினையால் வந்தடை யாத இயற்கையான திருவினைப் பெற்றவனை, சிராப் பள்ளி என்னும் குன்றின் மீது கோயில் கொண்டிருக் கும் சிவபெருமானைப் பாடிப்பரவ, என் மனம் இன்பத் தில் திளைத்து அமைதியடைகின்றது.

குறிப்புரை: திருச்சிராப்பள்ளி என்னும் தலம் காவிரி யின் தென்கரையிலுள்ள தலமாகும். வடகரையில் திரு வானைக்காவும், சீரங்கமும் உள்ளன. இதற்குச் செவ்வந்திமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர் என்ற பெயருமுண்டு. இது மலைக்கோயில் மலையின் மேல் எழுந்தருளியுள்ள சிவபிரானுக்குத் "தாயுமானார்" என்பது திருநாமம். அம்பிகையின் பெயர்: "மட்டுவார் குழலி" தீர்த்தங்கள்: நன்றுடையான், தீயதிலான்.

திரிசிரன் என்ற அரக்கன் பூசித்துப் பேறுபெற்ற தலமாதலின் 'திரிசிரபுரம்' என்ற பெயர் வந்தது என்பர். காளத்தி, திரிகோணமலை, சிராப்பள்ளி என்னும் இம்மூன்றும் தக்கிண கைலாசம் என்று கூறப்படும்.

## (2)

### கோயில்--(சிதம்பரம்)

(பண்—குறிஞ்சி)

திருச்சிற்றம்பலம்

கோணா கலையானுங் குளிர்தா மரையானுங்
காணார் கழலேத்தக் கனலாய் ஓங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே.

திருச்சிற்றம்பலம்

பதிகவரலாறு: திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அடியார்களும் சிவபாதவிருதயரும் உடன்வரச் சென்று தில்லையின் தெற்கு வீதியை அணுகினார். தில்லைவாழ் அந்தணர் அவரை வரவேற்றுத் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். நாயனார் திருவீதியையும் எழுநிலைக்கோபுரத்தையும் தொழுது, திருமுன்றில் திருமாளிகையை வலம்வந்து வணங்கி உட்புகுந்து திருவணுக்கன் திருவாயிலையடைந்தார். கோயிலின் உட்புகுந்து சிந்தையிலே ஆர்வம் பெருக, கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிய, செங்கை சிரமேல் ஏறிக்குவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யக் கூத்தப் பெருமானைத் தரிசித்து வணங்கினர். அப்பெருமானுக்கு உரிமையான சிறப்பினையுடைய தில்லைவாழ் அந்தணரைச் சிறப்பிக்கும் முகமாக அவரை முன்வைத்து "கற்றாங் கெரியோம்பி" என்று தொடங்கித் திருப்பதிகம் பாடியருளினர். இத்தேவாரம் இப்பதிகத்தில் உள்ளதாகும்.

பொழிப்புரை: வளைந்த நாகத்தைப் படுக்கையாகக் கொண்ட விஷ்ணுவும் குளிர்ந்த தாமரை மலரிலே வீற்றிருப்பவராகிய பிரமாவும் முறையே, அடியையும் முடியையும் தேடி அவற்றைக் காணாதவராகித் தம்முடைய திருவடிகளைப் பூசித்து வணங்கும்படி, சோதிப் பிழம்பாய் உயர்ந்தெழுந்த சிவபெருமான் எழுந்தருளியிருக்கப் பெற்றதும் தேவர்கள் வாழும் தில்லையின் கண் உள்ளதுமாகிய திருச்சிற்றம்பலத்தைப் புகழ்ந்து துதிக்க, மாட்சிமைதராத நோயெல்லாம் பயனின்றி அழியும்.

அரும்பத விளக்கம்: கோண் - வளைந்த; நாகஅணையான் - நாகத்தைப் படுக்கையாகக் கொண்ட விஷ்ணு; தாமரையான்-பிரமன்; கனல்-சோதி; சேணர்-தேவர்; மாண்-மாட்சிமை; வாளா-பயனின்றி.

குறிப்புரை: இது பூலோக கயிலாயம் எனப்படும் புண்ணிய பூமி. தரிசிக்க முத்தியளிக்கும் தலம். கோயில் நாற்புறமும் கோபுரங்களைக் கொண்டது. கோயிலுக்குள் சிவகங்கைத் தீர்த்தம் இருக்கின்றது. இத்தலத்தினைக் குறித்து-கோயிற்புராணம், சிதம்பரபுராணம், சிதம்பரநாதர்புராணம் என்னும் தலபுராணங்கள் உள.

"மாணாநோய்" என்றார் ஆன்மாவுக்கு முத்தியடைதலாகிய மாட்சிமையைத் தராது தடுக்கும் இயல்பினதாகிய ஆணவப் பற்றுக்கோடாகவரும் நோய்களைக் குறித்து. சிற்றம்பலம் ஏத்த அந்நோயெல்லாம் துன்பமாகிய பயனைச் செய்தலின்றி அழியும் ஆதலால் 'வாளாமாயும்' என்றார் என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி

1. குன்றுடையான் நாமம் யாது?
2. நன்றுடையான்-தீயதிலான் என்பன எவற்றைக் குறிக்கின்றன?
3. "சென்றடையாத திருவுடையான்" இதன் நயத்தினை விளக்குக.
4. "குளிர்தாமரையான்" இது யாரைக் குறிக்கின்றது?
5. 'சேனர் வாழ்தில்லை' இதற்கு விளக்கந் தருக.
6. இறைவன் எப்பொழுது கனலாய் ஓங்கினன்?
7. பாடல்களின் கருத்தை உமது நடையில் எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. அருணந்தி சிவாசாரியார்

திருமுனைப்பாடி நாட்டிலே திருத்துறை ஊரிலே சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நன்மாமனுராகிய சடங்கவி சிவாசாரியர் திருமரபிலே சதாசிவம் என்றொரு பெரியார் இருந்தார். இப்பெரியார் முறைப்படி சகலகலைகளையும் கற்று உரியகாலத்தில் உபநயனம் முதலாய வைதீக சடங்குகளை நிறைவேற்றிய பின்னர் சமயம், விசேடம், நிர்வாணம் என்னும் தீட்சைகளைப் பெற்றூர். அதன்மேல் ஆசாரியாபிடேகமும் பெற்றுச் சதாசிவ சிவாசாரியர் என எல்லோராலும் போற்றப் பெற்றுக் குலகுருவாக விளங்கினுர்.

சகலகலைகளையும் வேதம், ஆகமம், திருமுறைகள், புராணேதிகாசங்கள் என்பவற்றையும் முறையாகக் கற்றுத் தெளிந்து கற்பித்து வந்தாராகையால் இவரைச் சகலாகமபண்டிதர் எனவே எல்லோரும் அழைத்து வந்தனர். அச்சுதகளப்பாளருக்குத் தேவாரத்தில் கயிறு சாத்தி "பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினேடுள்ள நினைவு" எனத்தொடங்கும் தேவாரத்தில் நம்பிக்கை வைத்து இறைவனைப் பூசித்து அருள்பெறச் செய்தவரும் இவரே.

இங்ஙனம் சகலாகம பண்டித ரென்றும், குலகுருவென்றும், சதாசிவசிவாசாரியர் என்றும் எல்லோரும் போற்றி வழிபடச் சித்தாந்தச் செல்வராய் விளங்கிய இப்பெரியார், தாம் போகும் இடங்களிலெல்லாம் தம் மாணவர்களுக்குச் சமயநூல் உண்மைகளை விளக்குதற்காகவும், சைவ சித்தாந்தச் செந்நெறியை நிலைநாட்டுதற்காகவும் சிவாகமங்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு செல்வார். இதனுல் இவர்காலத்தில் சைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்தம் தமிழ்நாட்டில் விளக்கமுற்றிருந்ததென அவரின் புராணம் கூறுகின்றது.

சகலாகமபண்டிதர் சரியை, கிரியை, யோகங்களில் சிறந்து விளங்கிய காலத்தில் திருப்பெண்ணுகடம் அச்சுதகளப்பாளரின் மகன் மெய்கண்டார் கலைஞானங்களை ஓதாது உணர்ந்திருந்தார். அவர் குழந்தைப் பருவத்தினராய் இருந்தும் ஞானசாத்திரங்களை மாணவருக்குப் போதிக்கும் பணியில் ஈடுபடலானுர். இந்நிலை...ல் அந்நாரின் புகழ் எங்கும் பரவலாயிற்று. இதனைக் கேள்வியுற்ற சகலாகமபண்டிதர் அவரைக்காணும் பெருவிருப்பினராய் அவர் தங்கியிருந்த திருவெண்ணெய் நல்லூருக்குப் பரிவாரங்களோடும் விருதுகளோடும் எழுந்தருளினுர். குலகுருவின் வருகையைக் கேள்வியுற்ற சைவவேளாளர் யாவரும் வீதிகளை வாழை, கமுகு என்பவற்ருல் அழகுபடுத்தி வீடுகள் தோறும் நிறைகுடம் வைத்து வரவேற்று வணங்கினர். மெய்கண்டதேவர் மாத்திரம் சகலாகமபண்டிதரை எதிர் கொள்ளாது தமது இருக்கையில் வீற்றிருந்தார். அதைக்கண்ட சகலாகம பண்டிதர் மெய்கண்டார் இருக்கும் இடத்திற்குச் சென்ருர். அதுபொழுது மெய்கண்ட தேவர் தமது மாணவருக்கு ஆணவமலத்தின் இயல்பை விளக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஞானுசாரியர்பால் முறைப்படி திருவருள் நோக்கப் பெருமை காரணமாக ஆணவமலம் மிக்கிருந்த சகலாகமபண்டிதர் மெய்கண்ட தேவரைப்பார்த்து, செருக்கும் சீற்றமுஞ் சேர்ந்த சிந்தையுடன் "ஆணவ சொரூபமாவது என்னை" என்று அதிர்ச்சியுடன் கேட்டார். மெய்கண்டார் இன்முகத்தோடு சகலாகமபண்டிதரை நோக்கி, தமது விரலால் அவரைச் சுட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி அவர் நின்ற நிலையில் ஆணவ வடிவத்தை விளக்கினர் என்பதைக் குறிப்பித்தருளினர். சகலாகம பண்டிதர் மெய்கண்டாரின் திருவருள் நோக்கினல் மலவிருள் அகலப் பெற்றவராய்த் தமக்கு ஞானோபதேசம் நல்க வேண்டுமென்று இரந்து கேட்டார். மெய்கண்டார் அவருக்குத் திருநீறு அளித்துத் தீட்சை செய்து, தமது ஞானபரம்பரையின் முதற் பெருங் குருநாதனை நந்தியெம் பெருமானின் திருநாமத்தையே சகலாகமபண்டிதருக்குத்தீட்சாநாமமாக அருணந்தி சிவாசாரியர் என இட்டருளினர். அது காறும் மனவாசகங்கடந்த தேவர் முதலாக 48 மாணவர் மெய்கண்டாரிடம் ஒழுகிவந்தனர். அருணந்தி சிவாசாரியர், தாமும் அத்திருக்கூட்டத்திற் சேர்ந்து பிரதம சீடராய் ஒழுகிவந்தார்.

மெய்கண்டதேவர் தாம் அருளிச் செய்த சிவஞான போதத்தை அருணந்தி சிவாசாரியர் முதலாய 49 மாணவர்களுக்கு உபதேசித்தமையோடு அதனை விரித்து உலகத்தவர் விளங்கிக் கொள்ளும் வண்ணம் விரிவுள்ள நூல் செய்யுமாறு அருணந்தி சிவாசாரியருக்கு அருள் ஆணையும் தந்தார். இதனைக் கருத்திற் கொண்டு போலும் "எம் குருநாதன் கொண்டு தீதகல எமக்களித்த ஞானநூலைத் தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி என்றே" எனவும் "மெய்கண்டான் நூல் சென்னியிற் கொண்டு சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்றும்" என்றும் தமது நூலில் அருணந்தி சிவாசாரியர் அருளியுள்ளார்.

அருணந்தி சிவாசாரியர் சிவஞான சித்தியார், இருபா இருபஃது என்னும் இரு நூல்களையும் அருளிச் செய்தார். பின்னர் பரமசிவானந்தம் என்னும் அந்தணர் ஒருவருக்கு அருள்செய்து அவருக்கு 'மறைஞான சம்பந்தர்' என்ற தீட்சாநாமமும் வழங்கினர், அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் தமது ஊராகிய திருத்துறையூருக்கு மீண்டு ஒரு புரட்டாதி மாதத்துப் பூரநாளில் முத்தியடைந்தார். இவர் வாழ்ந்த காலம் இவரது ஆசிரியராகிய மெய் கண்டதேவரின் காலமாகிய கி. பி. 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பதே ஆராய்ச்சியாளர் கொள்கை யாகும்.

## பயிற்சி

1. அருணந்தி சிவாசாரியரின் இயற்பெயர் யாது?
2. இவருக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் யாவை?
3. அருணந்தி சிவாசாரியர் மெய்கண்டாரிடம் உபதேசம் பெற்றமுறையை விளக்கிக் கூறுக.
4. "சிவஞான சித்தியார்-சிவஞான போதத்தின் வழிநூலாகும்" இக்கூற்றின் உண்மையை ஆராய்க.
5. அருணந்தி சிவாசாரியரின் குரு பூசைத்தினம் யாது?
6. ஞானசாத்திரங்களைச் சகலாகம பண்டிதர் ஐயந்திரிபறக்கற்றிருந்தும் உண்மை ஞானம் புலப்படாமைக்குக் காரணம் யாது?
7. சிறுகுறிப்பு எழுதுக:
   ஆணவம்; ஞானாசாரியார்; சிவஞானசித்தி; மறைஞான சம்பந்தர்; திருத்துறையூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. பாசம் [மலம்]

சைவசித்தாந்தம் நுதலும் பொருள்கள் பதி, பசு, பாசம் எனப்படும். அவற்றுள் பதியைச் சத்துப் பொருள் எனவும் பசுவைச் சதசத்துப் பொருள் எனவும் பாசத்தை அசத்துப் பொருள் எனவும் அஃது பகரும். பாசத்திற்கு தளை, மலம், கட்டு, பந்தம் என்ற வேறு பெயர்களும் உண்டு.

பாசம் இயல்பாகவே பதி (இறை)யைப் பற்றுது, பசு (ஆன்மா)க்களைப் பற்றுகின்றது. இதனால் பசுக்கள் தம் அறிவு, இச்சை, செயல்கள் இன்றிப் பாசத்தால் பிறவியில் வீழ்கின்றன. இவ்வாறு ஆன்மாக்களைப் பிறவியில் வீழ்த்தும் பாசம் - ஆணவம், கன்மம், மாயை என மூன்று வகைப்படும்.

ஆணவம்: ஆணவமலம் உயிருடன் செம்பிற் களிம்பு போல் அநாதியேயுள்ள ஒரு பொருளாகும். இம்மலம் உயிர்களை அவற்றின் வியாபகத்தன்மை விளங்கவொட்டாது மறைத்து ஒடுக்கி அணுத்தன்மைப் படுத்துவதினால் ஆணவம் எனப்பெயர் பூண்டது. உயிர்க்கு ஆணவம் ஒரு குற்றமாகக் கிடத்தலால் மலம் எனப்பட்டது. பளிங்கு தூயதன்மையாகவே அகப்படுகிறது. ஆனால் செம்பு களிம்புள்ளதாகவே கிடைக்கிறது. இவ்வாறே பதியின் நிலையும் பசுவின் நிலையும் உள்ளன.

உலக இருள் உயிர்களின் கண்ணொளியை விளங்காமல் மறைக்கிறது. ஆணவமோ உயிர்களின் ஞானக் கண்ணை மறைக்கிறது. இங்ஙனம் ஆணவம் உயிர்களின் ஞானக்கண்ணை மறைப்பதால் இருண்மலம் எனவும் சொல்லப்படும். இந்த இருண்மலம் உயிரின் குணமன்று. இம்மலத்தினின்று நீங்குவதே உயிரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாகும். உயிருடன் ஒருங்கு இயைந்துள்ள ஆணவ மலத்தின் ஆற்றலைக் கெடுத்தற்காகவே இறைவன் படைத்தல் என்னும் தொழிலை இயற்றுகின்றான், படைப்பின் நிறைவினால்தான் உயிர்களின் அன்பு, அறிவு, செயல்கள் விளங்குகின்றன.

இத்தகைய ஆணவமானது நல்லறிவை மயக்குவதாகிய மோகத்தையும், உலக இன்பங்களையே மேலாக மதிக்கச் செய்யும் மதத்தையும், உலக இன்ப நுகர்வுகளில் மிகுந்த ஆசையைத் தோற்றுவிப்பதாகிய இராகத்தையும், அனுபவித்த இன்பங்கள் பின்பும் கிடையாதபோது வருந்துவதாகிய விசாகத்தையும், பற்றுள்ளவர்களிலிருந்து நீங்கவேண்டிய பொழுது வருந்தி உடலை வாடச் செய்வதாகிய சோஷத்தையும் தன்னுடைய குற்றங்களைக் கடவுளின்மேல் ஏற்றித் தன்னுடைய பெருமைகளை வியந்து பாராட்டி ஆச்சரியப்படச் செய்வதாகிய வைசித்திரியத்தையும், உலக இன்பங்களை அனுபவிக்கும்போது தமக்கொரு குறையுமில்லையென நினைக்கச் செய்வதாகிய அரிசத்தையும் தன் குணங்களாகக் கொண்டுள்ளது. இக்குணங்களுள் இராகமாகிய அவா உயிர்களை மிகவும் அலைத்து இன்னற் படுத்துவதாகும். "அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்—தவாப் பிறப்பீனும் வித்து" என வள்ளுவர் கூறும் வாசகம் இங்கு நோக்கற் பாலதாகும். நெல்லுக்கு உமி போன்றதாய் உயிரைப்பற்றி நிற்கும் ஆணவத்தினை நீக்குதலே முத்தி நெறியாம்.

ஆன்மாக்களாகிய நமக்குக் கேவலநிலை, சகலநிலை, சுத்தநிலை என்ற மூன்று நிலைகள் உள்ளன. இவற்றுள் சுத்தநிலை முத்திப்பேற்று நிலையெனப்படும். கேவல நிலையென்பது: ஆன்மா ஆணவத்தால் முற்றுங் கட்டுண்டு அறிவு செயலற்றுக் கிடக்கும் நிலையாகும். சகலநிலை என்பது: சிவத்தின் அருள் தன்மையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்போடு கூடிநின்று அறிவு, இச்சை, செயல் என்னும் மூன்றும் சேரப்பெற்று, மனம் முதலிய கருவிகளின் கூட்டுறவு உடையதாக விளங்குவதாம். ஆணவ மலம் ஆன்மாவின் கேவலநிலை, சகலநிலையில் நீங்காது சுத்தநிலையாய முத்தி நிலையில் ஆன்மாவை விட்டு நீங்கும்.

கன்மம்: கன்மம் என்பது வினை. இது உயிரின் சிற்றறிவினால் தோன்றும் விருப்பு, வெறுப்புக்களை ஏதுவாகக் கொண்டு நிகழ்வதாகும். இக்கன்மம் மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களினாலும் செய்யப்படுவது. இது சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என மூவகைப்படும். வினை பக்குவப்படுமளவும் சூக்குமமாய்ப் புத்தி தத்துவத்தைப் பற்றி மாயையிலே கிடக்கும் நிலை சஞ்சிதம் எனப்படும். இதனை இன்னோர் விதமாகப் பகரின், ஆகாமிய முயற்சி பலனுக்கு வருமளவும் கட்டுப்பட்டு அறம், பாவமாய்க் கிடப்பது என்னலாம். ஆகவே சஞ்சிதத்தைக் களஞ்சியம் போல்வது என்பர். பிராரத்தம் என்பது: ஒரு பிறப்பிலேயே ஆன்மா அனுபவித்தற்கென முகந்து கொள்ளப்பட்டதாய் சாதி, பிறப்பு முதலியனவாகப் பலதிறப்பட்டு அதிசூக்குமமாய் நிற்கும் கன்மமாகும். இப்பிராரத்த வினையின்படியே கல்வி, செல்வம், மேன்மை முதலிய இன்பங்களையும் வறுமை, அறியாமை, இழிவு, வருத்தம் முதலிய துன்பங்களையும் அனுபவிக்க வேண்டி ஆன்மாக்கள் அவ்வப் பலன்களைத் தரக்கூடிய குடும்பங்களிலும் இடங்களிலும் தாம் செய்த பாவ-புண்ணியப் பேறுகளின் படியே தோன்றுகின்றன. எனவே, சஞ்சித வினைப்பலன் உதவ வரும்பொழுது இன்ப-துன்பமாய் பிராரத்தம் எனப்படுகின்றது என்க.

பிராரத்தம் மூன்று விதமாகப் பலன் கொடுக்கும் என்பர். அவை ஆதிதெய்வீகம், ஆத்தியான்மீகம், ஆதி பௌதிகம் எனப்படும். அவற்றுள் ஆதி தெய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீகம் தெய்வத்தையே காரணமாகக் கொண்டுவரும் துன்பங்களாகும். அவை தாய் வயிற்றில் கருவாய்க் கிடந்து வருந்துதல், உடம்பு திரைத்தல், நரகத்துன்பம் முதலியனவாகும். ஆத்தியான் மீகமாவது: நோய், பகைவர், கள்வர், விலங்கு என்பவற்றால் வரும் உடல் வேதனை: அழுக்காறு, பொறாமை, துக்கம் முதலிய ஏதுக்களால் வரும் மனவருத்தங்களுமாம். ஆதிபௌதிகம் என்பது: சூடு, குளிர், காற்று, இடி, மின்னல் முதலியனவற்றால் ஏற்படும் துன்பங்களாகும். இப்பிராரத்த வினைகளை ஞானிகளும் அனுபவித்தே தீர்தல் வேண்டும். "விஞ்சிய பிராரத்தத்தின் வினை அனுபவித்தே தீரும்" என்கிறது ஞானசாத்திரம்.

ஆகாமியம் என்பது செய்யப்படும் வினையாகும். வினையானது செய்யப்படும் போது அது ஆகாமியம் எனப் பெயர் பெறுகின்றது என்பதாம். இதனால் மூன்று வினைகளும் ஆற்றொழுக்குப் போல் தொன்று தொட்டுவருவன என்பதை நாம் உணர்கின்றோம். மேற்கூறிய வாற்றால் வினையானது செய்யப்படும் பொழுது ஆகாமியம் என்றும், பலன்தரும் வரை சூக்குமமாய்ப் புத்திதத்துவத்தைச் சார்ந்து நிற்கும் பொழுது சஞ்சிதம் என்றும், பயன்படும்போது பிராரத்தம் என்றும் பெயர் பெறும் என்பதை அறிகின்றோம். இவற்றினை வேறோர் முறைமையில் நல்வினை-தீவினை என்றும், புண்ணிய- பாவம் என்றும், இன்ப-துன்பமென்றுங் கூறலாம்.

மூவகையாய் நிகழும் வினைகளைப் பசுவினை, சிவ வினை என இரண்டாகவும் பிரிப்பார்கள். பசுவினையாவது: உயிர்களுக்குச் செய்யப்படும் வினையாகும். உயிர்களுக்கு நன்மை செய்தலைப் பசுநல்வினையென்றும் உயிர்களுக்குத் தீமை செய்தலைப் பசுத் தீவினை என்றும் சொல்வார்கள். ஈதல், வேட்டல்,ர்வாய்மை, இரக்கம், பொறை, பெரியோரைப் பேணல் முதலியன பசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வினைகள் ஆகும். கொலை, புலாலுண்ணல், களவு, நன்றி மறத்தல், வஞ்சனை, பொறாமை, சிவனடியார்களை இகழ்தல் முதலியன பசுத்தீவினைகளாகும். சிவனடியார்களைப் போற்றுதல், சிவபெருமானது கோயில் தலத்தை அலகிடல், பூமாலை கட்டுதல், புகழ்ந்து பாடல், திருவிளக்கிடல் முதலியனவாகவரும் சரியை, கிரியை, யோகம் முதலிய மூன்று மார்க்கங்களிலும் விதித்தவற்றைச் செய்தல் சிவநல்வினைகள் என்றும் அந்த மார்க்கங்களில் நின்று அவைகளைச் செய்யாது விடுதல் சிவத்தீவினைகள் என்றும் சொல்லப்படும்.

மாயை: உயிர்களைப் பற்றி நிற்கும் ஆணவ மலத்தை நீக்குதற் பொருட்டு இறைவனால் மாயை, கன்மம் என்ற இருமலங்கள் தரப்படுகின்றன. இம் மலங்கள் துணியில் அழுக்கைப் போக்க அவ்வியல்புடைய உவர்மண், சாணம் என்பன பயன்படுதல் போல உயிரைப் பற்றியுள்ள ஆணவத்தை நீக்கக் கன்மமும் மாயையும் பயன்படுகின்றன என்பதாம். எனவே, ஆணவமலம் அறிவை மறைக்கிறது என்பதையும் மாயை அறிவை விளக்குகிறது என்பதையும் கன்மம் அறிவை மாயை விளக்குதற்குத் துணை செய்கின்றது என்பதையும் அறிகின்றோம். இதனால் மாயையும் கன்மமும் ஆன்மாவை இடையிற் சேர்ந்த மலங்கள் என்பதும் இவை இறைவனால் ஆன்மாக்களுக்குப் பொருத்தப்படுவன என்பதும் ஆணவம் மூலமலமாய் உயிர்களோடு அநாதியாய் உள்ளது என்பதும் தெளிவாகிறது. இம்மாயை இறைவனுக்கு வைப்புச்சத்தியாகும். உயிர்களைத் தன்வசமாக்கி மயக்குவதால் மாயையெனக் காரணப் பெயர் பெற்றது. மாயை (மா + யா) மா — ஒடுங்குதல். யா - தோன்றுதல். எனவே மாயை என்பதற்கு உலகம் தன்னில் ஒடுங்குதற்கும் தோன்றுதற்கும் இடமாய் நிற்பது என்பது பொருளாகும். இம்மாயை சுத்தமாயை, அசுத்தமாயை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகிருதி மாயையென மூவகைப்படும். மாயையின் காரியங்கள் தனு, கரண, புவன, போகங்களாகும். மாயையும் கன்மம் போலவே ஆன்மாவுக்கு உணர்வு உண்டாதற்குப் பயன் படுகின்றது. அறிவை விளக்குந் தன்மை மாயையில் உள்ளபடியால் இம்மலம் ஆணவ மலத்திற்கு எதிரிடையான இயல்புடையதாகும். விடியும்வரை இருளைப் போக்கவல்லது விளக்கு. அது போல ஆன்மா சிவஞானமாகிய பேரொளியைப் பெறும் முத்திநிலையை அடையும்வரை ஆணவ இருளை ஒருவாறு நீக்கத்தக்க அறிவைக் கொடுக்கும் கருவியாக மாயை விளங்குகின்றது என்க.

விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து

—திருவருட்பயன்.

**கன்மமும் மறுபிறப்பும்**

உயிர்கள் முற்பிறப்பிற் செய்த இருவினையின் பயனை மறுபிறப்பில் இன்ப — துன்பங்களைத் துய்த்தல் உண்டாகும். அங்ஙனம் உயிர்கள் இன்ப துன்பத்தைத் துய்க்கும் போதே மேலும் வினைகளைச் செய்து பாவ - புண்ணியங்களை ஈட்டிக்கொள்கின்றன. இதனால் மீளவும் பிறத்தலும், இறத்தலும், சுவர்க்க நரகங்களிற் சென்று மீளுதலும் உயிர்களுக்கு உண்டாகின்றன. உடம்பும் வினைப்பயனும் சடப்பொருள்கள். இதனால் இரண்டும்ஒன்றையொன்று தாமாகவேஅணையமாட்டா. ஆகையால் உடம்பையும் வினைப்பயனையும் முதல்வனே தமது சத்தியால் உயிர்களுக்கு ஊட்டுகின்றான் என்பது சைவசித்தாந்தக் கொள்கையாகும். வினையால் உடலும் உடலால் வினையும் வித்தும் மரமும் போல் உண்டாகின்றன. வினை - செயல் வகையால் அனுபவமாகிறது. கருத்துவகையால் மேல்வினைக்கு வித்தாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி இப்பிறப்பில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கொண்டே உயிர்களுக்கு முற்பிறப்பும் பிற்பிறப்பும் உண்டென்பது துணியப்படும். யாம் இப்பிறப்பில் இன்ப - துன்பங்களை நுகரும் பொழுது இப்பயன் களைத் தந்த நல்வினை தீவினைகள் முற்பிறப்பில் அமைந்துகிடந்தன என்பதை மறந்து விடுகின்ருேம். காலம் நீளநீள மறதியும் நீளுகின்றது. இதனை நாம் அனுபவத்தில்காண்கின்ருேம். இவ்வுண்மையை உணரா நிலையினைக் கொண்டசமயா[illegible]கள் தமது பாச-பசு ஞானங்களால் மறுபிறப்பு இன்று எனப்பகர்கின்றன. முற்பிறப்பில் செய்த தீவினைகளால் இப்பிறப்பில் நாம் அடையும் துன்பங்களை அறிவொழுக்கத்தாலும் அன்பொழுக்கத்தாலும் மாற்றுதல் முடிந்தகாரியம் என்பதற்கு ஞானிகள் வாழ்க்கை நமக்கு எடுத்துக் காட்டாகின்றன. ஆகவே நாம் இப்பிறப்பில் நல்வினைகளைச் செய்வோமாகில் வருபிறப்பில் இன்பத்தை அடைவோம். வினைகள் அளவிறந்தனவாக இருப்பின் அவற்றின்பயனை அனுபவித்தற்கு மேலும் மேலும் பிறவிகள் இடையருது தோன்றும். பதிஞானத்தால் வினைகளைக் குறைப்போமாயின் எமக்குப் பிறவியிலிருந்து விடுதலை கிடைத்தல் கையுறு நெல்லிக்கனியாம் என்க.

## பயிற்சி

1. பாசத்தைக் குறிக்கும் வேறுபெயர்கள் சில கூறுக.
2. ஆணவம் என்ருல் என்ன?
3. ஆணவத்தின் குணங்கள் ஐந்து தருக:
4. (அ) கன்மங்கள் மூன்றும் எவை?
   (ஆ) சஞ்சித கன்மங்கள் எவை?
5. மாயையினைப் பற்றி ஐந்து வரிக்குக் குறையாது எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. அப்பர் தேவாரம் — I

## (1)

## திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

திருச்சிற்றம்பலம்

பொழிப்புரை: தலைவி முதலில் தலைவனுடைய பெயரைக்கேள்வியுற்றாள். அவனது இயல்பையும் அறிந்தாள். பின்னர் அவனது ஊரைக் கேட்டு அறிந்தாள். பின்னும் அவனிடத்தே மயக்கங் கொண்டாள். தாய் தந்தையரை அன்றே கைவிட்டாள். பூமியிலுள்ளார் கொள்ளும் நாணுடைமை முதலிய ஆசாரங்களை யெல்லாம் விட்டாள். தன்னையே மறந்தாள். தனது பெயரையும் இழந்தாள். தலைவனைத் தலைப்பட்டு அவன் பாதங்களை அடைந்தாள்.

அரும்பதவிளக்கம்: முன்னம்-முதன்முதலாக; நாமம் பெயர், புகழ்; மூர்த்தி—தலைவன்; வண்ணம் - இயல்பு, அழகு; கேட்டாள்-கேட்டறிந்தாள்; பிச்சி -மயக்கம்; அத்தன்—தந்தை; நீத்தாள்-துறந்தாள்; அகலிடம்-பூமி; ஆசாரம்- ஒழுக்கம், கட்டுப்பாடு; தன்நாமம் கெட்டாள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்பெயர் இன்றித் தலைவன் பெயரே தன்பெயருமானாள்; தலைப்பட்டாள்-சென்று கூடினாள்; நங்கை - பெண்ணிற் சிறந்தவள்.

குறிப்புரை: தலைவன் தலைவி என்னும் முறையில் இறைவனையும் ஆன்மாவையும் அமைத்து அகப்பொருள் பற்றி வந்தது இப்பாசுரம். இதனை வடமொழியாளர் நாயகா நாயகி பாவம் என்பர்.

தமிழர், வாழ்வினை அகம் - புறம் என வகுத்துள்ளனர். அதில் அகவாழ்வு களவு, கற்பு என இருவகைப்படும். களவு என்பது: தலைவனும் தலைவியும் பால்வினைத் தெய்வம் கூட்டக் கூடி ஒழுகுதல். பின் தாய் தந்தையர்களால் மணம் செய்விக்கப் பெற்று இல்லறம் நடத்தல் கற்பொழுக்கமாகும்.

இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் எய்திய ஓர் உயிர் - இறைவனது மெய்ம்மையை உணர்ந்து அகப்பற்று, புறப்பற்றுக்களை நீக்கித் தானெனும் முனைப்பு இன்றித் தன் அறிவு, செயல் முதலியன கெட்டொழிய, இறைவனுடன் இரண்டறக்கலக்கும் பேரின்பமுத்தி நிலையினைத் தலைவன் தலைவி என்னும் உருவகமுறையில் வைத்துக் கூறப்பட்டுள்ளமை காண்க.

(2)

## திருப்பாதிரிப்புலியூர் — திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிகவரலாறு: திருநாவுக்கரசு நாயனர் கல்லே தெப்பமாக மிதந்து இத்தலத்திற் கரையேறியபோது இத்தலத்துப் பெருமான் மீது "ஈன்ருளுமாய் எனக்கெந்தையுமாய்'' என்றெடுத்துத் திருப்பதிகம் பாடியருளினர். இத்தேவாரம் இப்பதிகத்துள் வருவதாகும்.

பொழிப்புரை: திருப்பாதிரிப் புலியூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே; தாய்வயிற்றில் கருவாய்க் கிடக்கும் பொழுதே உன்வீரக்கழலணிந்த பாதங்களை நினைத்துக் கொண்டிருந்தேன். பூமியின்கண் மானிடவடிவத்தோடு பிறந்த பின்பு உன்பெயரையே சொல்லிக் கொண்டிருந்தேன். உன்திருவருட் செல்வத்தோடு விளங்கியதற்காகச் 'சிவாயநம'' என்று கூறித் திருநீறு அணிந்தேன். ஆதலால் சிவகதியான மோட்சத்தை நீ எனக்குத் தருவாயாக.

குறிப்புரை: திருப்பாதிரிப்புலியூர் என்னும் தலம் தொண்டை நாட்டில் உள்ளது. நாவுக்கரசர் கரையேறிய தலமும் இதுவேயாகும். தலத்தில் உள்ள இறைவன் திருநாமம்: தோன்ருத்துணையீசர். தேவிபெயர்: தோகைநாயகி.

இறைவனிடத்துக் குறையா அன்பு இருப்பதற்கு முன்வினைப்பயன் இருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் கருவிலிருக்கும் பொழுதே ஆன்மா இறைவனையே நாடித்துதித்து நிற்கும். அவரே கருவிற்றிருவுடையார் ஆவர். உருவாய்த் தெரிந்தபின் நாமம் சொல்லும். வளர்ந்தபின் நீறும் அக்கமணியும் பஞ்சாக் கரமும் கொண்டு திகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3)

## திருவானைக்கா

திருச்சிற்றம்பலம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லைச்
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே.

திருச்சிற்றம்பலம்

பொழிப்புரை: எந்தத்தாயார்? எந்தத் தந்தையார்? எந்த உறவினர்? எந்தச் செல்வம் நல்லசெல்வம்? யார் தான் நல்லவர்? இறந்து விட்டால் வந்து உதவுபவர்கள் ஒருவருமில்லை. சிறுவிறகுகளைக் கொண்டு தீமூட்டி எரித்துவிட்டுச் செல்வார்கள். சித்தர் வேடத்தவனே, நீண்டகாவேரிக் கரையில் அமைந்த திருவானைக் காவிலுள்ள செல்வனே, தலைவனே. உன் அழகிய பாதத்தை அடையப்பெற்றால் துன்பத்துக்கு இடமான இந்த உடலினால் என்ன பயனை அடைவேன்? (ஒன்றுமில்லை).

அரும்பதவிளக்கம்: எம்மாடு-எச்செல்வம்; சும்மாடு-நல்ல செல்வம்; செல்லா நிற்பர்-செல்வர்; சித்து-அறிவு பொன்னி - காவேரி; அத்தன்-தந்தை; அல்லகண்டம் துன்பம். இங்கு துன்பத்திற்கு நிலைக்களனான உடலை உணர்த்திற்று.

குறிப்புரை: காவிரி, கொள்ளிடம் என்னும் இரு ஆறுகளும் திருவானைக்காவின் தெற்கிலும் வடக்கிலும் ஓடுகின்றன. கொள்ளிடம் காவிரியின் கிளைநதி. இக்கோயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லின் மூலத்தானம் தரைமட்டத்தின் கீழ் இருப்பதால் எப்பொழுதும் தண்ணீர்க் கசிவாகவே இருக்கும். இதனுல் இது அப்புதலம் எனப்படும். அப்பு-நீர். ஆனையும் சிலந்தியும் வழிபட்டு முத்தியடைந்த இடம் இதுவே, இதனுல் 'ஆனைக்கா' எனப்பெயர் பெற்றது.

கணநாதர் இருவர் ஒருவரை ஒருவர் சபித்து யானையும் சிலந்தியுமாயினர். அவையிரண்டும் ஆனைக்காவிலுள்ள இறைவனை வ[illegible]ங்கின. சிலந்திவாய்நூலாற் பந்தர் செய்தது. அதனை யானை தன் துதிக்கையால் நீக்கியது. இதனுல் சிலந்தி யானையின் துதிக்கையினுள்ளே செல்ல, யானை துதிக்கையை மரத்தில் அறைந்தது. அந்நிலையில் சிலந்தியுடன் யானையும் இறக்கத் திருவானைக்காவிலுள்ள இறைவனருளாற் பழைய உருவம் பெற்று மோட்சமடைந்தனர்.

## பயிற்சி

1. தலைவியாகிய ஆன்மா இறைவனுகிய நாயகனிடம் தலைப்பட்ட தன்மையை எவ்வாறு ஆசிரியர் விளக்குகிருர்?
2. இறைவனிடம் ஒன்றுபட்டவர் இயல்பு இச்செய்யுளில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
3. ஆசிரியர் சிவபெருமானை எக்காரணங்களைக் கூறிச் சிவகதி தருமாறு கேட்கிருர்?
4. உலகில் உறவின் முறையினர் இயல்பு எத்தகையது?
5. "சித்தாய வேடத்தாய்" - என்பதை விளக்குக.
6. "பொன்னி" - எதற்குப்பெயர்?
7. அல்லகண்டங் கொண்டு - பொருள் எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. சிதம்பரம் கோயில்


சிவபெருமான் எழுந்தருளி ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் திருத்தலங்கள் பலப்பல. எங்கும் நிறைந்த இறைவனுக்கு அத்தலங்களில் விசேட சானித்தியமுண்டு. அருளே உருக்கொண்டுள்ள எம் பெருமான் ஆங்காங்கு இடைவிடாது அன்பின் வலி மையால் செயற்கருஞ் செயல்களைச் செய்து என்புருக நின்ற அடியார்களுக்கு அருள் பாலித்த இடங்களைத் திருத்தலங்கள் என்று விழைந்து கூறி, மக்கள் அத் தலங்களுக்குச் சென்று தாமும் இறைவனை வழிபட்டு அவனருளைப் பெற விழைந்து நிற்பர். தேவாரப் புல வர்களால் பாடல் பெற்றனவெனில் அத்தலங்கள் பின் னும் விசேடம் மிக்கதாம்.

'அண்டத்திற்குள் பிண்டம்; பிண்டத்திற்குள் அண் டம்' என்பது ஆன்றோர் வாக்கு. 'உலகமே உடல்; உடலே உலகம்,' உண்மையை அறிதலே ஞானம். உடலின்கண் ஆறு ஆதாரங்கள் உள்ளன. மூலா தாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், ஆக்ஞை விசுத்தி, பிரமரந்திரம் என்பன உடலில் அமைந்தன. திருவாரூர் மூலாதாரம், திருவானைக்கா, சுவாதிட்டா னம், திருவண்ணாமலை, மணிபூரகம், ஆக்ஞை, சிதம் பரம், விசுத்தி, காளத்தி, காசி பிரமரந்திரம் என்பர்.

மனிதன் உயிர் வாழ்வது இருதயத் துடிப்பால். இருதயம் துடித்தலை நிறுத்தினால் அவனை உயிரிழந்த வன் என்கிறோம். அவனுடைய ஐம்புலச் செயல் களும் ஒடுங்கி விடுகின்றன. மனிதனின் ஐம்புலச் செயல்களும் இருதயத் துடிப்பில் நடைபெறுகின்றன. உலகிற்கு இருதயமாக விளங்குவது சிதம்பரம் என்னும் தலம். அத்தலத்தில் நடராசப் பெருமான் ஓயாநட்டம் பயில்கின்றார். அதனால் உலகம் நடைபெறுகின்றது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் நட்டம் பயிலுதலை ஒழித்தாராயின் உலகமும் ஒடுங்கிவிடும். படைத்தல், காத்தல், அழித்தல்,



சிதம்பரம் கோயில்

மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் மேற்கொண்டு விளங்குவது எம்பெருமானின் நடனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.''

(உண்மை விளக்கம் 36)

என்னும் அருமைப் பாடல் நடராசப் பெருமானிடம் ஐந்தொழிலும் அமைந்த நெறியை விளக்குவதாகும்.

சைவர்கள் இத்தலத்தைக் ''கோயில்'' என்று சிறப் பித்துக் கூறுவர். சிதம்பர [illegible]த்திற்குப் பல பெயர் களுள்ளன. சிதம்பரம், கோயில், பெரும்பற்றப்புலியூர், தில்லை என்பன வழக்கிலுள்ளன வாகும்.

பஞ்சபூதத் தலங்களாவன:— பிருதுவித்தலம்-காஞ்சிபுரம், திருவாரூருமாம்; அப்புத்தலம் - திருவானைக்காடு; வாயுத்தலம்-காளத்தி; தேயுத்தலம்-திருவண்ணமலை; ஆகாயத்தலம்—சிதம்பரம்.

இத்தலத்தில் பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் இறைவனின் ஆனந்த நடனத்தைக் காணப்பெற்று அடைதற்கரிய அருட்பேறு பெற்றனர். 'மன்றுதொழுத பதஞ்சலி' என்று திருமூலராற் குறிப்பிடப்பட்டவர் திருமூலர் காலத்தவர். திருமூலர் கி. மு. ஆரும் நூற்றுண்டினர் என்பர். திருக்கூத்து, திருவம்பலம், சிதம்பரம் முதலியன திருமூலராற் குறிப்பிக்கப்பட்டிருத்தலின் கி. மு. ஆரும் நூற்றுண்டிற்கு முன்னரே சிதம்பரம் விளக்கமுற்றிருந்தது என்பது புலனுகும்.

சிதம்பரம் தகராகாசம் என்றும், சித்தாகாசம் என்றும் கூறப்படும். இங்கு ஆகாசம் என்றதும் பிரமமாகிய சிவத்தைக் குறிக்கும். சிதம்பரம் கோயில் ஏறக்குறைய நாற்பது ஏக்கர் நிலத்தில் அமைந்ததாகும். நான்கு திசைகளிலும் நான்கு பெரிய கோபுரங்கள் அழகுற ஓங்கி உயர்ந்து விளங்குகின்றன. சத்புத்திர மார்க்கத்தவரான திருஞானசம்பந்தர் தெற்குக் கோபுர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில் வழியாகவும், தாசமார்க்கத்தவரான திருநாவுக்கரசர் மேற்குக் கோபுர வாயில் வழியாகவும் சகமார்க்கத்தவரான சுந்தரர் வடக்குக் கோபுர வாயில் வழியாகவும், சன்மார்க்கத்தவரான மாணிக்கவாசகர் கிழக்குக் கோபுர வாயில் வழியாகவும் ஆலயத்திற்குட் சென்று சிதாகாசப் பெருவெளியான பொன்னம்பலத்தில் நடம் புரியும் இறைவனைத் தரிசித்தனர் என்பர்.

தில்லைப் பெருமான் கோயிலுக்குள் முக்குறிணி விநாயகர் ஆலயம், [illegible]னுச்சிசுந்தரேசுவரர் ஆலயம், பராசக்தி ஆலயம், கற்பக விநாயகர் ஆலயம், சண்முகர் கோயில், துர்க்கை கோயில், பாண்டிய நாயகர் கோயில், நவலிங்கம் கோயில் என்பன உள்ளன.

ஒற்றைக்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், பஞ்சமூர்த்தி தீர்த்த மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் என்பனவாகிய மண்டபங்கள் உள்ளன. இக்கோயிலிலுள்ள சபைகள் ஐந்து. அவையாவன:—

1. சிற்சபை :— நடராசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் இடம். இது பரஞான சொரூபமான பராசக்தி வடிவம்; இதனைச் சிற்றம்பலம் என்றும் கூறுவர். சிவாயநம என்று எழுதப்பட்ட பொன்னோடு கொண்டு இச்சபையின் கூரை வேயப்பட்டுள்ளது.

நடராசப் பெருமானின் வலப் புறத்தில் சிதம்பர இரகசியம் இருக்கிறது. மந்திர சொரூபமான திருவம்பலச் சக்கரம் அங்கு அமைக்கப்பட்டுள்ளது. அதன் மீது தங்க வில்வ மாலை சாத்தப்பட்டுள்ளது. ஆண்டுக்கொருமுறை திருவம்பலச் சக்கரத்துக்குப் புனுகுச் சட்டம் சாத்தப்படும். இது ஒரு திரையால் மூடப்பட்டுள்ளது. அத்திரையின் உட்புறம் சிவப்பாகவும் வெளிப்புறம் கறுப்பாகவும் இருக்கும். கருமையான மலம் நீங்கின் செம்மையாகிய சிவம் காணப்படும். என்பது போன்றிருக்கிறது. மறைப்புச் சத்தியே அருட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியாக மாறி உபகரிக்கும் என்பதை விளக்குதல் அறியலாம்.

2. கனகசபை :— நடராசப் பெருமான் திருமஞ்சனம் கொண்டருளுமிடம். இச்சபையை மணவிற் கூத்தன் காலிங்கன் என்பான் பொன் வேய்ந்தான்.

3. தேவசபை: — உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் இடம். இதனைப் பேரம்பலம் என்றும் கூறுவர்.

அநபாயனின் முன்னோர் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்தார்கள். ஆதலான் அநபாயன் பேரம்பலத்திற்குப் பொன் வேய்ந்தான்.

4. நிருத்தசபை:— நடராசப் பெருமான் திருமுன்னர்க் கொடிமரத்தின் தென்பாலுள்ளது. இங்கு ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியைக் காணலாம்.

5. இராச சபை :— இது ஆயிரங்கால் மண்டபம். இங்கு அறியத்தக்க மற்றோர் செய்தியும் உண்டு. தமிழகத்தில் ஐந்து இடங்களில் ஐந்து சபைகளில் நடராசப் பெருமானது நடனங்கள் காணத்தக்கன. அவை:—

1. சிதம்பரம் — கனகசபை — (பொன்னம்பலம்)
2. திருவாலங்காடு — இரத்தினசபை
3. மதுரை — இரஜதசபை — (வெள்ளியம்பலம்)
4. திருநெல்வேலி — தாமிரசபை
5. திருக்குற்றாலம் — சித்ரசபை

நடராஜப் பெருமான் பெற்றான் சாம்பானுக்கு முத்தி கொடுக்குமாறு கொற்றங்குடி உமாபதிசிவாசாரியருக்குச் சீட்டுக்கவி எழுதினார். நடராசப் பெருமான் தானே மறையவராக வந்து மாணிக்கவாசகர் கூறிய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் தம் கையால் எழுதிக் கையெழுத்திட்டுச் சிற்சபையில் சேர்ப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர், பதஞ்சலி, வியாக்கிரபாதர், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், கல்லாடர், திருமாளிகைத் தேவர், சேந்தனுர், கண்டராதித்தர், கருவூர்த் தேவர், சேரமான் பெருமாள், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், அருணகிரியார், உமாபதி சிவம் முதலானோர் இத்தலத்தையடைந்து நடராசப் பெருமானை வணங்கிப் பாடிப் பரவியுள்ளனர்.

மறைஞானசம்பந்தர், திருநாளைப்போவார், திருநீலகண்டர், கூற்றுவநாயனுர், கணம்புல்லர், கோச்செங்கணன், பெற்ருன் சாம்பான், குடவுழுந்தர், ஆனந்த நமசிவாயப் பண்டாரம் முதலானோர் இங்கு நடராசப் பெருமானிடம் பேரன்புபூண்டொழுகிப் பேறு பெற்றனர்.

தேவாரம், திருவாசகம் என்பன இத்தலத்தின் பெருமையை நன்கு விளக்குவன. இத்தலத்தைக் குறித்துப் பல நூல்கள் வடமொழியிலுள்ளன. உமாபதி சிவம் இயற்றிய கோயிற் புராணமும், புராணத் திருமலை நாதர் இயற்றிய சிதம்பரபுராணம், சபாபதி நாவலர் இயற்றிய சபாநாதர் புராணமும், யாழ்ப்பாணத்துச் சிவானந்தையர் இயற்றிய புலியூர்ப் புராணமும் இத்தலத்தின் சிறப்பை விளக்குவனவாகும்.

திருக்களிற்றுப்படியார், கொடிக்கவி என்பன தில்லையில் முறையே உய்ய வந்த தேவநாயனுராலும் உமாபதி சிவாசாரியராலும் இயற்றப்பட்டனவாகும். தில்லைக் கலம்பகம், தில்லையுலா, தில்லையமகவந்தாதி, சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பர செய்யுட் கோவை, சிதம்பரநாதர் பதிகம், நடராசசதகம், புலியூர்வெண்பா, சிதம்பர வெண்பா என்பனவும் இத்தலத்தின் சிறப்புக்களையே எடுத்துக் கூறுவனவாகும்.

தில்லைக் கோயிலில் கோபுரங்களிலும் பிறவிடங்களிலும் காணப்படும் சிற்பங்கள், கலைகள் சிலவற்றைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிப்பனவாகும். சேக்கிழார் பெருமானுக்கு "உலகெலாம்" என்றடியெடுத்துக் கொடுக்க, அவர் இத் தலத்திலிருந்தே பெரிய புராணத்தைப் பாடி முடித்தார். மாணிக்கவாசகர் 'தில்லையில் பாதி திருவாசகத்தில்' என்றபடி பாதிக்குமேல் சிதம்பரத்தைப்பற்றியே பாடித் திருவாசகத்திற்குப் பொருள் அவனே' என்று கூறித் தில்லைப் பொதுவில் மறைந்தருளிய தலமும் இதுவே தில்லை மூவாயிரவரும் சிவபெருமானுடைய கணநாதர்களாய்த் திருஞான சம்பந்தருக்குக் காட்டியருளிய தலமும் இதுவே. தேவாரத் திருமுறைகளைச் சேமித்து வைத்து, அவை உலகத்தாருக்கு உபயோகமாகுமாறு கிடைக்கப்பெற்ற தலமும் இதுவே. 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கு மடியேன்' என்று அடியார்கள் தொகையைக் கூறவந்த சுந்தரர் முதலில் கூறும் தில்லைவாழ் அந்தணர்கள் வாழும் பதியும் இத்திருத்தில்லையே ஆகும்.

## பயிற்சி

1. உடலிலுள்ள ஆறு ஆதாரங்கள் யாவை?
2. ஆறு ஆதாரத் தலங்கள் என்பன எவை?
3. சிதம்பரத்திற்குள்ள வேறு பெயர்கள் யாவை?
4. சிதம்பரத்தினையடைந்து நடராசப் பெருமானை வணங்கிப் பாடினோர் பெயர்கள் சில கூறுக.
5. ஐந்து சபைகளும் அவையுள்ள தலங்களும்யாவை?
6. சிற்றம்பலம், சிதம்பர சகசியம், தகராகாசம்— விளக்குக.
7. சிதம்பரத்தைப்பற்றிக் கூறும் நூல்கள் எவை?
8. சிதம்பரத்தில் நடராசப் பெருமானை வணங்கிப் பேறு பெற்றோர் யாவர்?
9. பஞ்ச பூதத் தலங்கள் யாவை?
10. சிதம்பரத்தின் சிறப்புக்களில் யாதேனும் மூன்றைக் கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. அப்பர் தேவாரம் — II

## (4)

## திருவதிகை வீரட்டானம்

பண் -காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணென் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.

திருச்சிற்றம்பலம்

பதிகவரலாறு: சமணரது ஏவலின்படி மகேந்திரவர்ம பல்லவன், சமண சமயத்திலிருந்து சைவசமயத்துக்கு மாறிய நாவுக்கரசரை (தருமசேனரை) நீற்றறையி லிட்டும், யானையை ஏவியும், கல்லுடன் கட்டிக் கடலில் விட்டும், துன்புறுத்த அவர் ஒவ்வொரு சமயத்தும் ஒவ் வொரு பதிகம் பாடி அவ்வவ் விடர்களில் நின்றும் நீங்கி மீண்டார்.

சமணர்கள் மதயானையை நாவுக்கரசர் முன் ஏவிய போது அஃது அஞ்சிப் பணியுமாறு இப்பாடலைக் கொண்ட திருப்பதிகம் பாடியருளப்பட்டது.

பொழிப்புரை: பொடியாகிய வெண்மையான திரு நீறும், சந்தனக்குழம்பும், ஒளிவீசும் சந்திரனாகிய சூடா மணியும், அழகிய புலித்தோலாடையும், செந்நிறம் வளரும் பவளத்தை ஒத்தநிறமும், தலைவனாய், பகைவ ரான மூவர் புரங்களையும் எரித்தற்கு முன்னேறிய மார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைச் சுற்றிய பாம்பும், உறுதியான கெடில நதியின் நீரும் உடையவரான ஒப்பற்ற சிவபெருமானுடைய சுற்றத்தவர் நாம் ஆதலால் நாம் அஞ்சக் கூடியதாக யாதொரு பொருளுமில்லை; நாம் அஞ்சும்படியாக இனி வரக் கூடிய பொருளும் இல்லை. 'திண்ணன்'- என்ற பாடமும் உண்டு.

அரும்பதவிளக்கம்: சுண்ணம் - பொடி; வெண்சாந்து-வெண் திருநீறு; சூளாமணி-தலையணி; வண்ணம்-அழகு உரிவை-புலி; அண்ணல் - தலைவன்; முரண்-மாறுபாடு; அரண்-முப்புரம்; அகலம்-மார்பு; வளாய-பொருந்திய; தமர்-சுற்றம்.

குறிப்புரை: திருவதிகை என்னும் தலம் கெடிலநதிக் கரையில் உள்ளது. இறைவனிடத்து ஊன்றிய அன்பும் உறுதியும் நம்பிக்கையுமுடையார் எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை. எதுவும் அவரை அச்சுறுத்த முடியாது என்பதை இப்பதிகம் தெளிவுற விளக்குகின்றது.

சிவன் எனும் செம்மேனி எம்மான் ஆதலின் வளரும் பவள நிறமும் என்றார். எதற்கும் அஞ்சுவதில்லை ஏனெனின்: உடையார் ஒருவர் தமர்நாம் என்பதால். கரி, புலியை உரித்து அணிந்தவரும் முப்புரங்களையும் அழித்தவருமாகிய ஒருவரைச் சார்ந்தால் அஞ்சவேண்டுவதில்லை என்ற காரணத்தோடு விளக்கினர். தொண்டரின் துன்பங்களைத் தன் துன்பமாகக் கொண்டு காப்பான் சிவன் என்பதை உணர வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (5)

## பொது - தனித்திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவா ரவர் செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவு ளாரே.

திருச்சிற்றம்பலம்

பொழிப்புரை: சங்கம் பதுமம் என்ற இரு அளவுடைய இருசெல்வத்தையும் கொடுத்துப் பூமியோடு தேவலோகத்தையும் ஆளத் தருவாராயினும் தேவதேவனான சிவபெருமானுக்கு அன்புடைய தொண்டரல்லாமற் போனால், அழியப்போகின்றவரான அவருடைய செல்வத்தை நாம் மதிக்கமாட்டோம். உடலுறுப்புக்களெல்லாம் குறைதலும், அழுகுதலும் பொருந்திய கருங்குட்டம் முதலிய தீராநோயுடையவராயினும், பசுவினை யுரித்து அதன் ஊனைத் தின்று வருந்தும் வாழ்க்கையுடைய மிக்க கீழான அற்பராயினும் கங்கையைச் சடையில் மறைத்துக் கொண்ட சிவபெருமானுக்கு அன்பரானல் அவரே நாம் வணங்குந் தெய்வத் திருப்பெற்றவர் ஆவர்.

அரும்பதவிளக்கம்: சங்கநிதி-சங்குருவாய்க்கிடக்கும் பொன்; பதுமநிதி- தாமரையுருவாய்க்கிடக்கும் பொன்; தரணி-பூமி; வான்-தேவலோகம்; மாதேவர் - சிவபெருமான்; ஏகாந்தம்-தனித்திருத்தல்; மங்குவார்-அழிபவர்; தொழுநோய்-குட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புரை: சங்கநிதி, பதுமநிதி இரண்டும் குபேர நிதிகள் எனப்படும். செல்வம், பதவி என்பன முன் வினைப்பயனளவால் உண்டாவன. நல்வினை ஒழியின் அவையும் அகலும். "யான்போய் இந்திரலோகமாளும் அச்சுவைபெறினும் வேண்டேன்" என்றார் தொண்டரடிப்பொடியாழ்வார். மாணிக்கவாசகரோ:

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரோ டல்லால்..."

என்று கூறுகின்றார். மெய்யுணர்வுடையார் யாவரும் தொண்டரொடுவாழ்வதற்கு விரும்புவார்களே அன்றிச் செல்வத்தையோ பதவியையோ விரும்பார். "தொண்டரொடு கூட்டு கண்டாய்" என்றார் தாயுமானவர்.

## பயிற்சி

1. திருவதிகை வீரட்டானத்திறைவனை எவற்றையுடையார் என்று விளக்கிக்காட்டுகிறார்?
2. "அஞ்சுவது யாதொன்று மில்லை; அஞ்சவருவது மில்லை" என்று கூறக்காரணம் என்ன?
3. எத்தகையாரை எதனால் மதிப்பதில்லை என்று ஆசிரியர் கூறுகிறார்? ஏன்?
4. எத்தகையாரைக் கடவுளாக வணங்குவதாகக் கூறுகிறார்?
5. சுண்ணவெண் சந்தனச்சாந்தும் என்ற பாடலின் பதிக வரலாற்றினைத் தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. மன்று தொழு பதஞ்சலி முனிவர்

நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடி
னந்திக ளால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிர
ரென்றிவ ரென்னோ டெண்மரு மாமே.

உலகத்தையும் அதன்கண் உள்ள பொருள்களையும் உற்று நோக்குங்கால் வியப்பும் திகைப்பும் உண்டாகும். இவற்றை யெல்லாம் படைத்தளித்தழித்து மறைத்து அருளும் ஐந்தொழில் வன்மை வாய்ந்த ஒரு பரம் பொருளின், ஒப்பற்ற இறைவனின் திருவருட்டிறன் இனிது விளங்கும். உலகில் சிற்றுயிர்களுக்கு இறைவன் அருள் பாலிக்கும் முறையும் திறனும் பலவாக உள்ளன. அந்த இறைவன் பற்பல சமயத்தார்களாலும் பற்பல வாருகப் போற்றப் பெறுகின்ருன். அவனையடையும் நெறிகளும் பற்பலவாகவுள்ளன. அவற்றைப் போதிப் பனவே மதங்கள் அல்லது சமயங்கள் என்று கூறப் படுகின்றன. மதங்கள் பலவே ஆயினும் கூறப்படும் ஆண்டவன் ஒருவனே என்பது உணரற்பாலது. "பற் பல மதமு மீற்றிலொருவழிப் பட்டபோலும்" என்ருர் கம்பர்.

கடவுள், உயிர், உலகம் என்ற மூன்றையும் உணர்ந்து ஒழுகவேண்டுமெனின் அவற்றின்தொடர்பை யுணர்தல் இன்றியமையாதது அன்ருே! இறைவன் உண்மை ஞானத்தைத் தவத்தினர்க்கு உணர்த்தி அவர்கள் வழியாக மக்களுணருமாறு கருணை செய் துள்ளார். அந்நிலைதான் இறைவன் கல்லாலின் கீழ் நால்வர்க்கு அறமுணர்த்தியது. அவ்வாறு தோன்றிய பரம்பரை இரண்டாகும். ஒரு பரம்பரையில் சனகர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனற்குமாரர், சனந்தனர், சனாதனர் என்பார் குறிப்பிடப்படுவர். மற்றோர் பரம்பரை சிவயோக முனி, பதஞ்சலி, வியாக்கிரபாதர், திருமூலர் என்னும் நால்வரைக் குறிக்கும்.



பதஞ்சலி முனிவர்



வியாக்கிரபாதர்

இரண்டாவதாகக் குறித்த பதஞ்சலி முனிவர் பரம்பரையில் நிறைந்த நாயனார் சந்தானத்தில் வந்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானாமிர்தம் என்ற நூலை இயற்றியருளியவரான வாகீச முனிவர்.

ஒருநாள் திருமால் ஆதிசேடனுகிய பள்ளியினில் செய்யும் நித்திரையினின்றும் நீங்கிக் கைகளைத் தலைமேற் குவித்துக்கொண்டு, கண்களில் ஆனந்தக் கண்ணீர் அருவிபோற் சொரிய, மெய்மறந்து சிவானந்தத் தேனைப் பருகியவராய்ச் சிங்காசனத்தில் வீற்றிருந்தார். அப்பொழுது ஆதிசேடர் திருமாலை வணங்கி, "ஐயனே" நீர் என்மீது துயில்கொள்ளாது இவ்வாறு எழுந்தருளியிருப்பதின் காரணம் என்னையோ?" என்று வினவினன்.

திருமால் ஆதிசேடனை நோக்கி, "ஆதிசேடனே" நேற்றுச் சிவபெருமான் பிச்சாடனராக வடிவங் கொண்டார். என்னை மோகினி அவதாரம் கொள்ளச் செய்தார். அவர் என்னோடு தேவதாரு வனத்திற்குச் சென்று பிச்சை ஏற்றார். அக்காலை அவ்வனத்தில் வாழ்ந்த நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்கள் என்னை மோகித்தனர். அவர்களது கன்னியர்களோ சிவபெருமானைக் கண்டு மோகங் கொண்டனர். அதனையுணர்ந்த முனிவர்கள் பல சாபங்கள் இட்டனர். அவர்களிட்ட சாபங்கள் பயனிலவாயின. அதனால், அவரால் சினம் மிக்கவராய் அபிசார வேள்வி செய்து புலி, யானை, பாம்பு, பூதங்கள், குறள்வடிவினனான முயலகன், அக்கினி என்பவைகளை ஏவினர். சிவன் புலியைக் கொன்று, அதன் தோலை ஆடையாக உடுத்திக் கொண்டார்; யானையைக் கொன்று அதன் தோலையுரித்துப் போர்த்துக் கொண்டார். பூதங்களை அடிமைகளாக்கிக் கொண்டார். பாம்புகளை ஆபரணமாக அணிந்து கொண்டார். முயலகனை அவன் முதுகு நெரியும்படி வலப்பாதத்தின்கீழ் அமைத்து அழுத்தினார். அக்கினியை வலக்கரத்தில் ஏந்திக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் கருணையே வடிவானவர். தேவதாரு வனத்து முனிவர்கள் இழைத்த குற்றத்தைப் பொறுத்து அவர்களுக்கு அருள் புரியத் தம் இயல்பான கருணையால் எண்ணினர். பார்வதி தேவியாரோடு எருதேறி வந்து வானில் அவர்கள் கண்டு களிக்கக் காட்சி தந்தார். அந்நிலையில் யான் மோகினிவடிவம் நீங்கி அவரை வணங்கி நின்றேன். இந்நிலையில் பிரமன், இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் வணங்கி நின்றனர். சிவபெருமான் ஆனந்தத் தாண்டவம் புரிந்தார். எல்லோரும் ஆனந்தக் கடலில் மூழ்கித் திளைத்தனர். அப்பொழுது சிவபெருமான் எல்லோரையும் கருணையோடு நோக்கி, "நீங்கள் எம் நடனத்தைச் சிவலிங்கத்தில் தியானித்து வழிபடுங்கள்," என்று கூறியருளி மறைந்தார். அந்நிலையில்தான் நித்திரையினின்றும் நான் எழுந்தேன்." என்று கூறினர்.

ஆதிசேடனுக்குச் சிவபெருமானின் நடனத்தைக் காணவேண்டும் என்னும் ஆவல் பொங்கிற்று. ஆதிசேடன் திருமாலிடம் விடைபெற்றுக் கொண்டு கைலைமலைப் பக்கத்திற்குச் சென்று சிவபெருமானைக் குறித்து நெடுங்காலம் தவமியற்றினர். சிவபெருமான் ஆதிசேடனின் தவத்திற்கு மகிழ்ந்து, காட்சியளித்துத் தழுவிக்கொண்டு அவர் தலைமேல் கையை வைத்து, "படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் எம்முடைய ஐந்தொழிலுமே எமக்கு நிருத்தமாகும். அன்று தேவதாரு வனமே எம் நடனத்தைப் பொறுக்கமாட்டாது அசைந்தது. அதனல் எம் நிருத்தத்தை விரைவில் முடித்துக்கொண்டோம். இன்று உமக்கு இவ்வனமும் எம் நிருத்தங்காண விழைந்தால் நாம் நிருத்தஞ் செய்யத்தக்க இடம் தில்லைவனமே ஆகும். அங்கு மூலலிங்கமும் அதற்குத் தெற்கே ஒரு சபையுமுண்டு. அங்கு நாம் எக்காலத்தும் நிருத்தஞ் செய்து கொண்டிருக்கிறோம். நீ அங்கு செல்வாயாக."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நீண்ட காலத்திற்கு முன்பு அத்திரி முனிவரும் அவர் பத்தினியாகிய அனசூயையும் உன்னைப் பிள்ளையாகப் பெற விரும்பி, திருமாலைக் குறித்துத் தவஞ்செய்தனர். ஒரு சமயம் அனசூயை நீராடிக் கரையேறினாள். நீ அவள் கையிலே ஐந்து தலைகளையுடைய சிறு பாம்பாய் அமைந்தாய். அவள் பயத்தினால் கையை விட்டாள். நீ கீழேவிழுந்து பதஞ்சலி என்ற பெயரைப் பெற்றாய். இப்பொழுது நீ உன் ஆயிரம் பணாமுடிகளோடு செல்லாது பதஞ்சலியாக வடிவும் பெயருங் கொண்டு தில்லைவனத்திற்குச் செல். முதலில் நாகலோகத்திற்குச் செல். அங்கு ஒரு மலையும் அதன் அருகில் ஒரு பிலத்துவாரமும் (குகை வாயிலும்) தோன்றும். அக்குகையின் முடிவே தில்லைவனம். ஆதலின் நீ அக்குகை வழியாகத் தில்லைவனத்தை அடைக. அங்கு ஓராலமர நிழலில் அந்த மலையின் சிகரம் சிவலிங்கமாக இருக்கும். அங்கு வியாக்கிரபாத முனிவன் நமது நிருத்தத்தைக் காண விரும்பி, அந்த இலிங்கத்தைப் பூசித்துக்கொண்டிருக்கிறான். நீயும் அவனை அடைந்து அங்கு இரு. நாம் உங்கள் இருவருக்கும் நம் நிருத்தத்தைக் காண்பித்தருள்வோம்.'' என்று கூறியருளி மறைந்தார்.

ஆதிசேடன் சிவபெருமான் கூறியபடியே வடிவம் மாறி நாகலோகஞ் சென்று, மலையைக் கண்டு வணங்கிப் பிலத்துவாரத்தின் வழியாகத் தில்லைவனத்தையடைந்தார். இந்நிலையில் பதஞ்சலியாகிய ஆதிசேடன் அங்கு வியாக்கிரபாதரைக் கண்டு, வணங்கித் தம் வரலாற்றைக் கூறினார். பின் பதஞ்சலி சிவகங்கையில் நீராடித் திருமூலட்டான முடையாரையும், திருப்புலீச்சுரமுடையாரையும் வழிபட்டு வந்தார். அந்நாளில் அவர் தில்லைவனத்தின் மேற்குப் புறத்தில் ஒரு குளத்தைக் கண்டு, அதன் கீழ்க்கரையில் சிவலிங்கம் தாபித்து, குளத்தின் வட பக்கத்தில் தமக்கு ஒரு குடில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்துக்கொண்டு, மூவிடத்தும் பூசை புரிந்து வழி பட்டுவந்தார். சிவபெருமான் தாம் வாக்களித்தபடியே வியாக்கிரபாதர், பதஞ்சலி, தில்லைவாழ் அந்தணர் முதலியோர்க்குக் குறித்த நாளில் நிருத்த தரிசனம் தந்தருளினுர்.

சிவபெருமானின் நிருத்தத்தைக் கண்டு பரவசப் பட்டு ஆனந்தத்தில் அழுந்திய பதஞ்சலி முனிவர் இறைவனை வணங்கி, "ஐயனே, இந்த ஞானசபையில் உமாதேவியோடும் எக்காலத்தும் ஆன்மாக்களுக்கு ஆனந்தத் தாண்டவத்தைக் காட்டியருள வேண்டும்," என்று வணங்கிக் கேட்டுக்கொண்டார். அந்த இடத்தில் தேவர்கள் பொன்னினுலான ஒரு மகாசபையை பொற்சபையை- உண்டாக்கினுர்கள். சிவபெருமான் உமாதேவியாகிய சிவகாமியம்மையோடு அந்தக் கனக சபையில் - பொன்னம்பலத்தில் தேவர்களும், வியாக்கிர பாத முனிவரும், பதஞ்சலி முனிவரும், பிற முனிவர்களும், மற்றையோரும் வணங்கித் துதிக்க எக்காலமும் நடனம் புரிந்து காட்சியளித்துக் கொண்டிருக்கிறுர். பதஞ்சலி முனிவர் இறைவன் நடனத்தைப் பார்த்துத் துதித்த வண்ணமாய் ஆனந்தம் மேலிட்டவராய் இன்புற்றிருக்கிறுர். பதஞ்சலி என்னும் பெயரினைக் கொண்டார் மூவராவர். அவர்தம்முன் மகாபாடியம் இயற்றிய பதஞ்சலி முனிவர் கி. மு. 150 – ல் வாழ்ந்தவர். யோக சூத்திரம் எழுதிய பதஞ்சலி கி. பி. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். இவ்வாறு கணக்கிட்டுத் தக்க ஆதாரங்களுடன் டாக்டர் கீத் என்பவர் எழுதியுள்ளார். 'மன்று தொழு பதஞ்சலி' என்பவர் மேற்கூறிய இருவரினும் வேறுனவர். திருமூலர் தம் திருமந்திரத்தில் குறிக்கப்படுகிற இப்பதஞ்சலி சைவசமய ஆசாரிய பரம்பரையைச் சார்ந்தவர்; ஆனந்தக் கூத்தரின் தொண்டர்; திருமூலர் காலத்தவர். திருமூலரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்று தொழு பதஞ்சலியும் திருக்கயிலையிலிருந்து வந்தோராவர்.

## பயிற்சி

1. இறைவனது ஐந்தொழில்கள் யாவை?
2. இருவகை ஞானபரம்பரையினர் யாவர்?
3. வாகீச முனிவர் இயற்றிய நூல் யாது?
4. திருமால் துயிலுணர்ந்து ஆதிசேடனுக்குக் கூறியவை? யாவை?
5. ஆதிசேடன் இறைவன் திருநடனங்காணத் தில்லைக்கு வந்த வரலாற்றை விளக்கி எழுதுக.
6. பதஞ்சலி என்ற பெயருடையார் எத்தனை பேர்? மன்று தொழு பதஞ்சலியைப் பற்றி அறிவன யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. திருக்குறள்

தமிழ் மொழியில் உள்ள நூல்கள் பலப் பல. அவை இலக்கணம், இலக்கியம், நீதி, சாத்திரம் எனப் பலவகைப்படுவன. அவற்றுள், நீதி நூல்களில் தலை சிறந்தது திருக்குறள். திருக்குறள் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. இதனோடு ஒப்பவைத்து எண்ணக்கூடிய நூல் நாலடியார்.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத் துப்பால் என்னும் மூன்று பால்களையுடையது. ஒவ் வொரு பாலிலும் இயல், அதிகாரங்கள் உண்டு. திருக் குறள் 133 அதிகாரங்களையும், அதிகாரம் ஒன்றிற்குப் பத்துப் பத்துக் குறள் வீதம் 1330 குறட் பாக்களையுங் கொண்டது. திருக்குறளின் சிறப்பைக் கூறும் நூல் 'திருவள்ளுவமாலை'. திருக்குறளுக்கு உரை எழுதியோர் பதின்மர். மணக்குடவர், பரிதி, நச்சர், காளிங்கர், பரிமேலழகர் என்பார் உரைகள் வெளிவந்துள்ளன. பதின்மர் உரைகளிலும் சிறந்தது பரிமேலழகர் உரையே.

"நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி"
"பழகு தமிழ்ச் சொல்லருமை நாலி ரண்டில்"

என்பன பழமொழிகள்.

திருக்குறளை, மணிமேகலையாசிரியர் முதல் பலர் எடுத்தாண்டுள்ளனர். "ஒருவர் செய்திகொன்றோர்க்கு உய்தியில் என்று அறம்பாடிற்றே ஆயிழை கணவ" என்று புறநானூற்றில் காணப்படும் அடி,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் குறட்கருத்தைக் கொண்டுள்ளது. திருக்குறள் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றப்பட்ட நூலாகும். இந்நூல் காலம், நாடு, சமயம், சாதி என்பனவற்றைக் கடந்த நூலாகும். மக்கட் சமுதாயத்திற்கு அமைந்த பொதுநூல் ஆகும். இது தமிழ் மொழிக்கு வேதம் போன்று விளங்குவது. திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இப்பெயர் காரணப்பெயராகக் கருதப்படுகிறது. இவர் தொண்டை நாட்டிற் பிறந்து மதுரையில் மயிலாப்பூரிலும் வாழ்ந்தவராவர். இவர் நெசவுத் தொழிலை மேற்கொண்டிருந்தார். இவர் மனைவியார் வாசுகி தேவியார். இவர் சீடர் ஏலேல சிங்கர் என்பவராவர். இவர் வைதீக மதத்தினர். இவருக்குத் திருவள்ளுவர், நாயனார், தேவர், முதற் பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர், பொய்யில் புலவர் என்னும் காரணம் பற்றிய சிறப்புப் பெயர்கள் உண்டு. இவர் இயற்றிய நூலான திருக்குறளுக்குத் திருக்குறள், முப்பானூல், உத்தர வேதம், தெய்வநூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை, திருவள்ளுவப்பயன் என்னும் பெயர்களுண்டு.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று தேசீயப் புலவர் சுப்பிரமணிய பாரதியார் போற்றுகிறார்.

## கடவுள் வாழ்த்து

கடவுளை வாழ்த்துதல் கடவுள் வாழ்த்து. எடுத்துக் கொண்ட காரியம் இனிது முடியும் பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுதல் மரபு.

1. அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
   பகவன் முதற்றே யுலகு.

(பதவுரை) எழுத்தெல்லாம்-எழுத்துக்கள் எல்லாம்; அகரம் முதல - 'அ' கரத்தை முதலாக உடையன;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அதுபோல); உலகு - உலகமானது; ஆதிபகவனை - ஆதிபகவனாகிய முதலையுடையது.

பொழிப்புரை: எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன. உலகு ஆதிபகவனாகிய முதலையுடையது.

விளக்கம்: அகரம் எல்லா எழுத்துக்களுக்கும் முதல் எழுத்தாகும். தமிழ் மொழிக்கே அன்றி வடமொழிக்கும் முதல் எழுத்தாகும். அகரம் இன்றேல் மற்றைய அக்கரங்கள் இல்லையாகும் என்பதை "அக்கரங்கள் இன்ரும் அகரவுயிர் இன்றேல்" என்று கூறப்படுதலாலும் அறிக. அகரமே இறைவன். திருமந்திரத்தில் 'ஆரும் அறியார் அகரம் அவன்' என்று கூறப்படுதல் காண்க. 'அகர முதலின் எழுத்தாகி நின்ருய்' என்று சுந்தரரும், 'அகர முதலானை அணி ஆப்பனூரானை' என்று சம்பந்தப் பெருமானும் கூறுதல் அறிதற்பாலன. கண்ணன் கீதையில் "எழுத்துக்களில் அகரமாகின்றேன் யான்" என்று கூறுதல் உணரத்தக்கது. "அகரம் எழுத்துக்களுக்கு மூலமாதலும், பிரமம் எல்லாப் பொருள்களுக்கும் மூலமாதலும், 'அ' என்று பரப்பிரம்மத்துக்குப் பெயர்" என்று வாமந புராணம் கூறுதலும் அறியத்தக்கன.

காணப்பட்டது உலகு; அதனைக்கொண்டு காணப்படாத இறைவன் உண்டு என்ற கொள்கையை விளக்குகிருர். அதனால் உலகிற்கு முதல்வன் ஆதிபகவன் என்பது கருத்து.

போல என்று உவமைஉருபு இல்லாமையால் இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமை யணி.

2. கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்ரு டொழாஅ ரெனின்.

பதவுரை: வால்அறிவன் - மெய்யுணர்வினை உடையவனது; நல்தாள்-நல்ல திருவடிகளை; தொழாஅர் எனின் - வணங்காராயின்; கற்றதனால் ஆய - எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அக்கல்வி யறிவினாலாகிய: பயன் என் - பயன் யாது? (ஒன்றும் இல்லை) (கொல் - அசை.)

பொழிப்புரை: மெய்யுணர்வினை யுடையவனது நல்ல திருவடிகளை வணங்காராயின் எல்லா நூல்களையும் கற்றதனால் உண்டாகிய அக்கல்வியறிவின் பயன் யாது? (ஒன்றும் இல்லை).

விளக்கம்: இறைவன் தாள் பிறவிப் பிணிக்கு மருந்து. ஆதலால் அதனை நற்றாள் என்றார். மனிதப் பிறவியும் கல்வியும் பெற்றதன் பயன் இறைவன் தாளை வணங்கிப் பிறவியை நீக்கிக் கொள்ளுதலாகும். அதனைச் செய்யாராயின் கல்வியினாலாகிய பயன் ஒன்றும் இல்லையாகும். என்ன என்ற வினாவிடைச் சொல் என்றாகிப் பயனில்லாமையைக் குறித்தது. கல்வியின் பயன் இறைவன் தாள்களைத் தொழுதல் என்பது கருத்து.

3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

பதவுரை: மலர்மிசை - அன்பருடைய மனமாகிய மலரின்மீது; ஏகினான் - விரைந்து சென்றவனது; மாண் அடி - மாட்சிமைப்பட்ட பாதங்களை; சேர்ந்தார் - இடைவிடாது நினைப்பவராய்ச் சேர்ந்திருப்போர்; நிலமிசை - வீட்டுலகத்தில்; நீடு வாழ்வார்-அழிவின்றி வாழ்வார்.

பொழிப்புரை: அன்பர்களின் மனமாகிய மலரின் கண் விரைந்து சென்றவனது மாட்சிமைப்பட்ட திருவடிகளை இடைவிடாது நினைத்துச் சேர்ந்திருப்பவர் வீட்டுலகத்தில் அழிவில்லாமல் வாழ்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்: மலர் - அன்பரது மனமாகிய (தாமரை) மலர். அன்பால் நினைப்பவர்களுடைய மனமாகிய தாமரை மலரினிடத்தில் அவர்கள் நினைத்த வடிவோடு விரைந்து சேர்தலால் 'ஏகினன்' என்று இறந்த காலத்தாற் கூறினர். இறைவன் திருவடியை நினைப்பவர் மனத்தில் இறைவன் திண்ணமாய் எழுந்தருளுகிருன் என்பதை இக்குறள் வற்புறுத்துகிறது. சேர்தல்-இடைவிடாது நினைத்தல்.

4. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

பதவுரை: வேண்டுதல் - ஒரு பொருளை அடைய ஆசைப்படுதலும்; வேண்டாமை-வெறுத்தலும்; இலான் அடி-இல்லாதவனை இறைவன் திருவடிகளை; சேர்ந்தார்க்கு - இடைவிடாது நினைத்துச் சேர்பவர்களுக்கு; யாண்டும் - எக்காலத்தும்; இடும்பை இல - பிறவித் துன்பங்கள் உண்டாவதில்லை.

பொழிப்புரை: விருப்பு, வெறுப்பு அற்றவனை இறைவனது பாதங்களை இடைவிடாமல் நினைத்துச் சேர்பவர்கட்குப் பிறவித் துன்பங்கள் உண்டாவதில்லை.

விளக்கம்: இறைவன் விருப்பு வெறுப்பு அற்றவன். அவன் திருவடியை நினைக்கின்ற அன்பர்களும் விருப்பு வெறுப்பு அற்றவர்களாதல் வேண்டும். அவ்வாருயின் அவர்களுக்குப் பிறவியும் அதனுல் ஏற்படும் துன்பங்களும் உண்டாகா. விருப்பும் வெறுப்புமே பிறவிக்கும் அதனுல் ஏற்படும் துன்பங்களுக்குங் காரணம் ஆகும். தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தை (வினையை)ப்பற்றி வருவனவும் என்று மூவகையால் வரும் துன்பங்கள் பிறவித் துன்பங்கள். 'வேண்டாமை வேண்டுவது இல்லான் றன்னை' என்று அப்பர் திருவாவடுதுறை பதிகத்தில் கூறுதல் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

பதவுரை: இருள்சேர் - மயக்கத்தைப் பற்றிவரும்; இருவினையும் - நல்வினை, தீவினை என்னும் இரண்டு வினைகளும்; இறைவன் - இறைவனது; பொருள்சேர்- மெய்ம்மை சேர்ந்த; புகழ் புரிந்தார்மாட்டு - புகழை விரும்பினவரிடத்து; சேரா - உளவாகா.

பொழிப்புரை: இறைவனுடைய மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பினவர்களிடத்து மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை, தீவினை என்னும் இரண்டு வினைகளும் உளவாகா.

விளக்கம்: அவிச்சை (விபரீதஞானம்)யை இன்ன தன்மையது என்று கூறவியலாது. ஆகையால் அதனை இருள் என்றார். நல்வினை, தீவினை என்னும் இரண்டு வினைகளும் பொன் விலங்கும், இரும்பு விலங்கும் போன்றன. நல்வினை அறிவினாலும் தீவினை அறியாமை யாலும் உண்டாவன. நல்வினையும் பிறத்தற்குக் காரண மாயிருத்தலால் அதனையும் அகற்றவேண்டும். நல்வினை வீட்டுநெறிக்குத் தடைசெய்து போகத்தில் அழுத்தும். இருவினைப் பந்தமும் கழிந்தால்தான் இறைவன் கழ லடியில் நிலைபெற்றிருத்தல் கூடும். இறைவன் அடி யைச் சேரவொட்டாது தடுப்பன வேண்டுதல், வேண் டாமை. அதாவது விருப்பு வெறுப்பு. அவற்றை நீக்கி னால் நட்பு, பகை என்னும் வேற்றுமை மறையும். அந் நிலையில்தான் எல்லா உயிர்களிடத்தும் ஒத்த அன்பு தோன்றும். ஒத்த அன்பு உடையவரும், விருப்பு வெறுப்பு அற்றவருமாயவர்க்கு இவ்வுலக வாழ்க்கை யிலும் மேலுலக வாழ்க்கையிலும் துன்பங்கள் இல்லை. ஏனெனில் இருவினைகளும் இல்லை. இறைவனது அற மாகிய விருப்பு - வெறுப்பு அற்ற தன்மையைப் பெற் றால் இருள்புரிவினைகள் சேரா. புரிதல் - எப்பொழுதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுதல். இக்குறளால் இறைவன் புகழை எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருத்தலால் உண்டாகும் பயன் கூறப்பட்டது.

6. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

பதவுரை: பொறிவாயில் ஐந்து– (மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளினிடமாக உணரும் (ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும்) ஐந்து புலன்களையும்; அவித்தான் - அறுத்தவனது; பொய்தீர் - பொய்ம்மை நீங்கிய (மெய்ம்மையான); ஒழுக்க நெறி நின்றார் - ஒழுக்க நெறியினின்றும் வழுவாது நிற்பவர்; நீடுவாழ்வார் - பிறப்பில்லாமல் எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வர்.

பொழிப்புரை: ஐந்து புலன்களினிடமாகத் தோன்றும் ஐந்து பொறிகளையும் அறுத்தோர்களின் மெய்ம்மையான ஒழுக்க நெறியில் நின்றவர்கள் பிறப்பில்லாமல் எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வார்கள்.

விளக்கம்: ஐம்பொறிகள்:மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. ஐம்புலன்கள்: ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பன. ஐம்புலன்களின் செயலால்தான் மக்கள் பிறப்பு - இறப்பு என்னும் பெருஞ்சுழியிற்பட்டு அல்லல் உறுகின்றனர். ஐம்புலப் பகையை வென்றால் அன்றிப் பிறப்பிறப்பாகிய அல்லல் நீங்காது. ஆன்றோர் அனைவரும் ஐம்புலன்கள் வரை வெல்லும் திறனைப் பற்றியே பேசியுள்ளார். ஐம்புலன்களை வென்றோர்க்கே இறைவன் வெளிப்பாடும் அருளும் கிட்டும். எனவே நினைத்தல், வாழ்த்தல், நெறிநிற்றல் என்பவற்றை முறையே செய்வாரே வீடு பெறுவர். ஐந்து-தொகைக் குறிப்புச் சொல். 'பொறிவாயில் ஐந்தினையும் அவியப் பொருது' என்றார் சுந்தரரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

பதவுரை: தனக்கு உவமை இல்லாதான்-தனக்கு ஒருவகையாலும் ஒப்பில்லாத (இறை) வனது; தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - பாதங்களை (இடைவிடாது துதித்து) அடைந்தவர்களுக்கு அல்லாமல்; மனக் கவலை - மனத்தில் உண்டாகும் துன்பத்தை; மாற்றல் அரிது - நீக்குதல் உண்டாகாது.

பொழிப்புரை: தனக்கு ஒருவகையாலும் ஒப்பில் லாத இறைவனது பாதங்களை அடைந்த (இடைவிடாது நினைந்த) வர்களுக்கு அல்லாமல் மனதில் உண்டா கும் துன்பங்களை நீக்குதல் உண்டாகாது.

விளக்கம்: சேர்ந்தார் – இடைவிடாது நினைப்பவர். இறைவன் உவமையில்லாதவன். 'ஒப்புடையன் அல்லன் ... ஒருவமன் இல்லி'' என்றார் அப்பரும். 'ஒப்புனக்கில்லா ஒருவன்', 'தன்னை ஒப்பார் ஒன்று மில்லாத் தலைமகன்'. 'தன்னை ஒப்பாரை இல்லாத் தனியை' என்பன திருவாசகத்திலுள்ள அருமை வாசகங்கள். மனக்கவலையை நீக்கும் மருந்து இறை வன் தாளை இடைவிடாது நினைத்தல். காமம், வெகுளி, மயக்கங்களால் மனக்கவலை உண்டாகின்றது. கவலை— யாது செய்வது என வருந்தல். அரிது என்பது இல்லை என்னும் பொருளது.

8. அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது.

பதவுரை: அற ஆழி - அறக்கடலாகிய; அந்தணன் அந்தணனாகிய இறைவனது; தாள் சேர்ந்தார்க்கு அல் லால்-பாதங்களை அடைந்த (இடைவிடாது நினைத்த)வர் களுக்கு அல்லாமல்; பிறஆழி - பொருள் இன்பங்களா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய கடல்களை; நீந்தல் அரிது - நீந்தி (த் தாண்டி)ச் செல்லல் இல்லை.

பொழிப்புரை: அறக் கடலாகிய அந்தணனாகிய இறைவனது திருவடிகளை அடைந்த (இடைவிடாது நினைத்த) வர்களுக்கு அல்லாமல் மற்றக் கடல்களாகிய பொருள் இன்பங்களை நீந்திச் செல்லல் இல்லையாகும்.

விளக்கம்: அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் இறைவனை அறவாழி என்றார்; தரும சொரூபி ஆதலின். பிறவாழி என்றது மற்றப் பொருள் இன்பங்களைக்குறிக்கும். பிறவு ஆழி எனப் பிரித்துப் பிறப்பாகிய கடல் என்றும் பொருள் கொள்ளலாம். "பிறவாழி கரை கண்டாரே" என்றார் வில்லிபுத்தூராழ்வார். அறத்தையே தனக்கு வடிவமாக உடையவனும், அழகிய குளிர்ச்சியான கருணையையுடையவனும் ஆதலில் இறைவனை 'அற அந்தணன்' என்றார். பிறவாழிகளைக் கடக்க இறைவனது தாளாகியபுணையை அடையவேண்டும். இல்லையேல் அக்கடலில் அழுந்துவர். பொருள் இன்பங்களைக் கடலாகக் கூறியவர் இறைவன் தாளைப் புணையாகக் கூறாமையால் ஏகதேச உருவக அணி.

9. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

பதவுரை: கோள் இல் -தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்ளுதல் இல்லாத; பொறியில் -பொறிகளைப்போல்; எண்குணத்தான் - எட்டு வான் குணத்து இறைவனுடைய; தாளை - திருவடிகளை; வணங்காத் தலை- வணங்காத தலைகள்; குணம் இல - பயன்படுதல் உடையனவல்ல. (ஏ - அசை)

பொழிப்புரை: மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசை என்பனவற்றை முறையே கொள்ளாதாயின் இப் பொறிகளிருந்தும் பயன்படுதல் இல்லை. அதுபோலவே இறைவனுடையபாதங்களை வணங்காத தலைகள் பயனுடையனவல்ல.

தலையைப் பெற்றதன் பயன் இறைவனுடைய தாளைவணங்க வேண்டும் என்பது கருத்து.

விளக்கம்: கொள் - கோள் - முதல் நிலை திரிந்த தொழிற்பெயர். இல்பொறி - [illegible]ண்புத்தொகை. பொறியில் - இல், ஐந்தாம் வேற்றுமை உருபு, ஒப்புக் பொருளது. குணம் - பயன். எண்குணத்தான்;— (1) தன் வயத்தன் ஆதல், (2) தூய வுடம்பினன் ஆதல், (3) இயற்கை யுணர்வினன் ஆதல், (4) முற்றுமுணர்தல், (5) இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், (6) பேரருளுடைமை, (7) முடிவிலாற்ற லுடைமை. (8) வரம்பிலின்ப முடைமை.

காணாத கண் பயனிலவாதல்போல வணங்காத தலையும் பயனில்லை என்று தலைமேல் வைத்துக் கூறினார். இனம்பற்றி வாழ்த்தாத நாவும் பயனில்லை என்றவாறாயிற்று.

இறைவனை நினைத்தல், வாழ்த்தல், வணங்கல் என்பன செய்யாவிடின் மானிடப் பிறவியின் பயனைப் பெற்றவர் ஆகார்; குற்றம் செய்தவர் ஆவர். தாழ்த்தச் சென்னியும்" என்று அப்பரும், 'வணங்கத் தலை வைத்து' என்று மாணிக்கவாசகரும் கூறுதலறிக.

10. பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.

பதவுரை: இறைவன் அடி - இறைவனுடைய பாதங்களாகிய புணையை; சேர்ந்தார் - அடைந்த (இடைவிடாது நினைத்த)வர்; பிறவிப் பெருங்கடல் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பாகிய பெரிய கடலை; நீந்துவர் - கடந்து செல்வார்கள்; இறைவன் அடி - இறைவனுடைய பாதங்களாகிய புணையை; சேராதார் - அடையாத (இடைவிடாது நினையாத)வர்; பிறவிப் பெருங்கடல் - பிறப்பாகிய பெரிய கடல்; நீந்தார் - கடந்துசெல்ல மாட்டார்கள்.

பொழிப்புரை: இறைவன் திருவடிகளைச் சேர்ந்த (இடைவிடாது நினைத்த)வர் பிறவிப் பெருங்கடலை நீந்துவர்; இறைவன் திருவடிகளைச் சேராத (இடைவிடாது நினையாத)வர் பிறவிப் பெருங்கடலை நீந்தார்.

விளக்கம்: வினையினுல் பிறவி, பிறவியால் வினை எனக்காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையில்லாமல் வருதலாற் பிறவியைப் பெருங்கடல் என்ருர். அது கரைகாணுக் கடல். சேர்ந்தார் என்பது சொல்லெச்சம். உலக - இயல்பை நினைக்காமல் இறைவன் அடியையே நினைப்பவர்க்குப் பிறவியறுதலும், இறைவனடியை நினையாமல் உலக இயல்பையே நினைப்பவர்க்குப் பிறவி அருமையும் உணர்த்தப்பட்டன. பிறவியைக் கடல் என்றவர் இறைவன் அடியைப் புணை என்று கூறுமையால் ஏகதேச உருவக அணி.

''நவைசெய் பிறவிக் கடலத்துள், பாதகமலந் தொழுவேங்கள் பசையாப் பவிழப் பணியாயே'' (சீவகசிந்-1242) என்ருர் திருத்தக்கதேவர். ''அடியிணையாகிய பிறவி என்னும் பெருங்கடல் விடூஉம்'' என்பது மணிமேகலை. ''பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்கலாகுமோ'' என்ருர் கம்பரும். ''இணையில் பவங்கிளர் கடல்கள் இகந்திட இருதாளின் புணையருள்'' என்ருர் சம்பந்தரும். ''பாதமலர் ஏழுபிறவிக் கடல் நீந்தும் புணை'' என்ருர் பரஞ்சோதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி

1. (அ) திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

   (ஆ) திருவள்ளுவரைக் குறிக்கும் நாமங்கள் ஐந்திற்குக் குறையாது தருக.

2. உலகம் யாரை முதலாக உடையது?

3. கல்வியின் பயன் யாது?

4. இருவினை வாதனை யாருக்கு இல்லை?

5. (அ) ஐம்பொறிகள் எவை?

   (ஆ) ஐம்புலன்கள் யாவை?

6. இறைவனின் எண் குணங்கள் எவை?

7. பிறவிப் பெருங்கடலை யார் நீந்துவர்?

8. பின்வரும் சொற்றொடர்களை விளக்குக:
   மலர்மிசை யேகினான்; பொருள் சேர்புகழ்; கோளில் பொறியில்; இருள்சேர் இருவினை; வாலறிவன்.

9. பொருள் கூறுக:

   (அ) "பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார்"

   (ஆ) "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தாரிறைவ னடிசேரா தார்"

10. கடவுளைப் பற்றித் திருவள்ளுவர் கூறியுள்ள கருத்தினை உமது நடையில் இயன்றவரை எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிரி வினாப்பத்திரம்

நேரம்: 1 மணி 30 நிமி. புள்ளிகள்: 100

குறிப்பு: எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1. சீகாழிக்குரிய வேறு நாமங்கள் ஐந்து தருக.
2. சிவஞானபோதம், திருப்பல்லாண்டு - இந்நூல்களின் ஆசிரியர்கள் யாவர்?
3. "லிங்கம்" என்பதன் பொருள் யாது?
4. "சகலாகம பண்டிதர்" என்ற பெயர் யாரைக் குறிக்கின்றது?
5. ஆனையும் சிலந்தியும் வழிபட்டு முத்திபெற்ற தலம் யாது?
6. தேவாரம் பாடிய மூவர் பெயர் தருக.
7. வடநாட்டுத் திருதலங்களுள் இரண்டு எழுதுக.
8. எட்டாம் திருமுறையில் அடங்கும் நூல்கள் எவை?
9. "அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவது மில்லை" என அப்பர் கூறக்காரணம் என்ன?
10. கல்வியின் பயன் யாது?
11. சிவசின்னங்கள் எவை?
12. சரியை வழிபாட்டினால் முத்தியடைந்த இரண்டு நாயன்மார்கள் பெயர் தருக.
13. கன்மங்கள் மூன்றும் எவை?
14. 'கோயில்' என்னும் சிறப்புப் பெயருடைய திருத்தலத்தின் வேறு பெயர்கள் இரண்டு எழுதுக.
15. இருவகை நிதிகளும் எவை?
16. இருபாலாரும் வழிபடக்கூடிய நமஸ்காரம் யாது?
17. புள்ளிருக்கும் வேளூர் எது?
18. திருக்கோயில் வழிபாட்டில் கடைசியாக யாரை வழிபடல் வேண்டும்?
19. அருணந்தி சிவாசாரியர் அருளிய நூல்கள் எவை?
20. இதிகாசங்கள் மூன்றின் பெயர் தருக.

($20 \times 1\frac{1}{2} = 30$ புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி II

21. பின்வரும் நூல்களின் ஆசிரியர்கள் யாவர்?
(அ) கொடிக்கவி (ஆ) நான்காம் திருமுறை
(இ) கோயிற் புராணம் (ஈ) சிவாகமம்
22. அட்டாங்க நமஸ்காரமாவது யாது?
23. நால்வகை முத்திகள் எவை?
24. அருச்சனைப் பொருள்கள் ஐந்தின் பெயர் தருக.
25. கடவுள் வாழ்த்தில் திருவள்ளுவர் கூறுவன யாவை?
26. சிதம்பரத்திலுள்ள ஐந்து சபைகளும் எவை?
27. சுவாமி சந்நிதானங்களை எந்த முறையில் வணங்கல் வேண்டும்?
28. பின்வரும் சொற்றொடர்களை விளக்குக.
(அ) இளம்பிறையாளன்
(ஆ) முக்கோடிவாணாளதுடையான்
(இ) சென்றடையாத திருவுடையான்
(ஈ) தன் நாமங் கெட்டாள்

[8×5=40 புள்ளிகள்]

## பகுதி III

29. பின்வரும் தொடக்கத்தினையுடைய பாடல்களுள் எவையேனும் மூன்றினைப் பிழையின்றி அடிதவறாது எழுதுக.
(i) நன்றுடையானை ...........
(ii) எத்தாயர் எத்தந்தை ..............
(iii) கோணைகணையானும் ............
(iv) சங்கநிதி பதுமநிதி ...........

[3×5=15 புள்ளிகள்]

30. பின்வருவனவற்றுள் ஒன்றைப் பற்றி - பத்து வரிக்குக் குறையாத கட்டுரை வரைக
(அ) திருக்கோயில் வழிபாடு
(ஆ) அருணந்தி சிவாசாரியர்
(இ) கன்மங்கள்

(15 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் பருவம்

556—7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. சுந்தரர் தேவாரம் — I

திருக்கடவூர் வீரட்டம் பண்: நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பொடியார் மேனியனே புரி நூலொரு பாற்பொருந்த
வடியார் மூவிலைவேல் வளர் கங்கையின் மங்கையொடுங்
கடியார் கொன்றையனே கட வூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகே ளென்னமுதே யெனக் கார்துணை நீயலதே.

திருச்சிற்றம்பலம்

தலவரலாறு: இத்தலம் அட்ட வீரட்டானங்களுள் ஒன்று. (வீரட்டம்—வீரச்செயல்கள் புரிந்ததலம்) இத்தலத்திலே இயமனை உதைத்தருளிய காலசம்கார மூர்த்தியின் சந்நிதி உண்டு. அபிராமிபட்டர் அபிராமி அந்தாதி பாடி அபிராமி அம்மையின் அருளால் அமாவாசையிலன்று பூரண சந்திரனை ஆகாயத்திற் காட்டிய அற்புதம் நிகழ்ந்ததலம். இத்தல இறைவர் திருப்பெயர்: அமிர்தகடேசுவரர். இறைவி திருப்பெயர்: அபிராமி.

பதிகவரலாறு: தலயாத்திரை செய்து இறைவரை வழிபடும் பணி பூண்ட சுந்தரமூர்த்தி நாயனுர், திருநள்ளாற்றைத் தரிசித்துத் திருக்கடவூரையடைந்து வணங்கினுர். அதுகாலை காலனைக் காய்ந்து பாலனைக் காத்த இப்பெருமானையன்றி நமக்குத் துணையாவார் யாவர் என்றெழுந்த உணர்வினுல் "பொடியார்......" என்றுதொடங்கி இப்பதிகத்தைப் பாடியருளினுர்.

பொழிப்புரை: திருநீறு பூசப்பட்ட உடலையுடையவனே; பூணுலோடு பொருந்த வடிக்கப்பட்ட கூர்மையான மூவிலைகளையுடைய வேல் போன்ற சூலாயுதமும் முடியினிடத்தில் கங்கையும் மணம் நிறைந்த கொன்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்களையும் அணிந்தவனே; கடவூரினில் வீரட்டம் பொருந்திய கோயிலில் எழுந்தருளியிருக்கும் அடிகளே; எனக்கு அமுதம் போன்றவனே; நீ அல்லாது வேறு யார் துணையாகவுள்ளார்கள்? (ஒருவருமில்லை).

அரும்பதவிளக்கம்: பொடி-(திரு) நீறு; ஆர்-நிறைந்த; புரிநூல்-முப்புரிநூல்; வடி - கூர்; மூவிலைவேல்-சூலம்; வளர் - பெருகுகின்ற; கடி-வாசனை; அடிகேள் - அடியவர்க்குத் தலைவரே.

குறிப்புரை: வீரட்டத் தலங்கள் எட்டு. அவையாவன:-

1. திருவதிகை — திரிபுரத்தை எரித்தது.
2. திருக்குறுக்கை — மன்மதனை நீருக்கியது.
3. திருப்பறியலூர் — தட்சனை அழித்தது.
4. திருக்கண்டியூர் — பிரமன்சிரம் கொய்யப்பட்டது.
5. திருவிற்குடி — சலந்தராசுரனைத் தடிந்தது.
6. திருவழுவூர் — யானையை உரித்தது.
7. திருக்கோவலூர் — அந்தகாசுரனை அழித்தது.
8. திருக்கடவூர் — இயமனை உதைத்தது.

இவை யெட்டும் சிவன் செய்தருளிய வீரட்டகாசச் செயல்களாகும்.

(2)

திருக்கச்சியேகம்பம் பண்: தக்கேசி.

திருச்சிற்றம்பலம்

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதி யையம ரர்தொழு தேத்துஞ்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலவரலாறு: இத்தலம் காஞ்சி புரத்தில் உள்ளது. இங்கு மணலே இலிங்கமாய் அமைந்துள்ளது. அதனால் இது பஞ்ச பூதங்களுள் ஒன்றான பிருதிவித்தலம் எனப் படும். இறைவன் திருப்பெயர்: ஏகாம்பரேசுவரர். (ஏகாம் பரன்—ஒரு மாவின் கீழ் இருப்பவன்) இறைவி திருப் பெயர்: காமாட்சியம்மை (ஏலவார் குழலி) தீர்த்தம்: கம். பாநதி. தலவிருக்ஷம்: மா.

பதிகவரலாறு: சுந்தரமூர்த்தி நாயனார் திருவொற்றி யூரிலே சங்கிலியார் பொருட்டுச் செய்த சபதமொழி பிழைத்துத் திருவாரூருக்குப் புறப்பட்டார். திருவொற் றியூர் எல்லையைக் கடந்தபோது சபதமொழி பிழைத் தமை காரணமாக அவரது கண்கள் மறைந்தன. அக் கண்களைப் பெறவேண்டிப் பலதலங்களையும் தரிசித்து வணங்கிப் பாடித் திருக்கச்சி யேகம்பத்தை அடைந் தார். அங்கெழுந்தருளிய பெருமானைத் தொழுது "கச்சியேகம்பனே கடையானேன் பிழை பொறுத்துக் கண்ணளித்தருளாய்" என்று வேண்டி நின்றார். இந் நிலையில் பெருமான் இடக்கண் கொடுத்தருளுதலும் மகிழ்ந்து "ஆலந்தானுகந் தமுது செய்தானை......" என்று தொடங்கித் திருப்பதிகம் பாடினர்.

பொழிப்புரை: திருப்பாற் கடலில் தோன்றிய ஆலால விடத்தைத் (தேவர்களை உய்விக்கக் கருதித்) தானே உண்டருளியவனை, ஆதிப் பொருளாக விளங்குபவனை, தேவர்கள் வணங்கித் துதிக்கும் ஒழுக்கத்தைப் பெரி தும் சிறப்பாகவுடையவனை, தன்னை நினைப்பவர்களு டைய மனத்தில் இருப்பவனை, மணம் பொருந்திய நீண்ட கூந்தலையுடைய உமாபிராட்டி எக்காலத்திலும் துதித்துப் பூசை செய்து வழிபடுகின்ற இயமனுக்கு இயமனாக இருப்பவனை, ஏகம்பன் என்ற திருநாமத்தை யுடையவனை, என்னைப் போன்ற அடியார்களுக்குத் தலைவனாய் உள்ளவனைப் பார்க்கும்படி அடியேன் கண் களைப் பெற்ற (பாக்கியமிருந்த) வாறுதான் என்ன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பதவிளக்கம்: ஆலம்-விடம்; அமரர்-தேவர்; சீலம்-ஒழுக்கம்; சிந்தையுள்ளான் - மனத்திலுள்ளவன்; ஏலவார்குழல் - மணம் பொருந்திய நீண்ட கூந்தல்; காலகாலன்-யமனுக்கு யமன்; கம்பன்-ஏகம்பன் என்னும் நாமம் உடையவன்.

குறிப்புரை: திருக்கச்சியேகம்பம் பிருதிவித்தலம். திருவாரூர் பிருதிவித்தலம் எனலுமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| பிருதிவி | — மண் | — கச்சியேகம்பம் | இவை பஞ்சபூதத் தலங்கள். |
| அப்பு | — நீர் | — திருவானைக்கா | |
| தேயு | — தீ | — திருவண்ணுமலை | |
| வாயு | — காற்று | — காளத்தி | |
| ஆகாசம் | — வெளி | — சிதம்பரம் | |

உமாதேவியார் சிவபெருமானைப் பூசித்து முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்த தலம். முத்தி நகரங்களான காசி, காஞ்சி, மதுரா, மாயை, அவந்தி, அயோத்தி, துவாரகை என்று சிறப்பித்துக் கூறப்படும் முத்தி நகரங்கள் ஏழில் ஒன்ருகும். "பாட்டினிலடங்காக் காஞ்சியின் பெருமை பகர்ந்திடத் தமியனுக்கெளிதோ" என்பர் கச்சியப்ப சிவாசாரியர்.

## பயிற்சி

1. வீரட்டம் என்பதன் பொருள் யாது?
2. கடவூரில் எழுந்தருளியுள்ள இறைவனைச் சுந்தரர் எவ்வாறு விளக்குகிருர்?
3. வீரட்டத் தலங்களையும் அங்கு நிகழ்ந்த வீரச் செயல்களையும் அட்டவணைப் படுத்துக.
4. 'கம்பன்' எத்தகைய சிறப்பினை உடையவன்?
5. "ஏலவார் குழல் உமை" யாது செய்தாள்?
6. 'சிந்திப்பவர் சிந்தையுளான்' என்பதால் அறிவதென்ன?
7. பின்வருவனவற்றை விளக்குக:

   காலகாலன்; ஏகம்பன்; ஆதி; பொடியார் மேனியன்; என் அமுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. மறைஞானசம்பந்தர்

திருமுனைப்பாடி நாட்டிலே மருதூரிலே மறையவர் மரபிலே பரமசிவானந்தம் என்ற பெயருள்ள பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். இவர் இளமையிலேயே அடக்கம், ஒழுக்கம், விவேகமாகிய குணங்கள் வாய்க்கப்பெற்றவராய் விளங்கினார். கல்வியறிவிலும் மிக்கவராய் ஒழுகி, ஞான சாத்திரங்களைக் கேட்டு நிட்டைகூடி இன்பமடைய விரும்பினார். அதனால் நல்ல குருநாதனை நாடித் திருப்பெண்ணாகடம் சென்று உறைவாராயினர்.

திருத்தூங்கானை மாடச் சிவக்கொழுந்தினை வழிபடச் சென்ற அருணந்தி சிவாசாரிய சுவாமிகளைப் பரமசிவானந்தர் கண்டார். தம்மை அறியாது அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, தம்மை ஆட்கொண்டருளும்படி இரந்தார். அவருடைய பரிபக்குவத்தைக் கண்ட அருணந்தி சிவாசாரியர் அவருக்குத் தீட்சை செய்தருளி மறைஞான சம்பந்தர் என்ற தீட்சா நாமத்தினை வழங்கியமையோடு, சித்தாந்த ஞானசாத்திரங்களையும் உபதேசித்தருளினார்.

இங்ஙனம் அருணந்தி சிவாசாரியரிடம் ஆசாரியா அபிடேகம் பெற்று ஞானசாத்திரத்தை உபதேசித்தற்கு அதிகாரமும் பெற்ற மறைஞான சம்பந்தசிவாசாரியர் திருக்களாஞ் சேரியில் பிரமபுரேசர் சந்நிதியில் தங்கியிருந்தார். அங்கிருக்குங் காலத்தில் மாணவர்களுக்கு ஞானசாத்திரங்களை முறையாக உபதேசித்து வந்தார்.

இவர் இவ்வாறு இருக்கும் நாளில் தில்லைவாழ் அந்தணரில் ஒருவரும், பலநூல்களை அருளிச்செய்தவரும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ அரசனுல் பல்லக்கு, தீவர்த்தி, குடை ஆதிய விருதுகள் கொண்டு கௌரவிக்கப் பெற்றவருமான உமாபதிசிவம் என்ற பெரியார், தம் நித்தியபூசையினை முடித்தபின் ஒரு வைகாசி மாதத்துப் பகற்பொழுதில் தம் பல்லக்கில் ஏறி விருதுகளோடு திருக்களாஞ்சேரி வழியாகச் சென்று கொண்டிருந்தார்.

மறைஞானசம்பந்த சுவாமிகளின் மாணவருள் ஒருவர், உமாபதியார் பல்லக்கிற் சென்ற கோலாகல வைபவத்தைத் திரும்பிப் பார்த்தார். அதனைக் கவனித்த சுவாமிகள், உமாபதிசிவாசாரியருக்கு ஞானசாரியர் வாய்க்கப் பெறும் நற்காலம் வந்தமையாற் போலும், "பட்டகட்டையிற் பகற்குருடு போவதைப் பாரீர்" என்று குறிப்பிட்டார். சுவாமிகள் கூறிய வார்த்தை உமாபதியார் செவியிற் படுதலும், அவர் உடனே பல்லக்கினின்றும் குதித்துச் சுவாமிகள் திருவடியில் வீழ்ந்து வணங்கித் தம்மைச் சீடராக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினர். சுவாமிகள் உமாபதியாரின் பரிபக்குவத்தைப் பரீட்சிப்பதற்காகவும் உலகத்தவருக்குக் குருசீட பாவனையைக் காண்பித்தற்காகவும் வீதிவழியே விரைந்து சென்ருர். உமாபதியார் அவரைத் தொடரும் நிழல்போல அவர் பின்னே சென்ருர். முன்சென்ற சுவாமிகள் களைத்தார்போல அயலில் நெசவு செய்வாரிடம் தம் இருகை நீட்டி நின்ருர். நெசவு செய்வார் நூலுக்கிடும் மாக்கூழை அவருக்கு வார்த்தனர். அவர் அதனை விருப்புடன் பருகினர். அதுபொழுது முழங்கைவழியே ஒழுகிய சேடத்தை உமாபதியார் உவந்தேற்றுப் பருகுவாராயினர்.

அவ்வளவில் குரு - சீட பரிபக்குவப் பரீட்சை உமாபதியாருக்கு அருள் செய்ய வாய்ப்பாக நிறைந்தது. மறைஞான சம்பந்த சுவாமிகள் உமாபதியாருக்கு முறைப்படி தீட்சை செய்து 'உமாபதி சிவாசாரியர்" எனத் தீட்சா நாமமும் அருளினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்மேல் ஆசாரியா அபிடேகஞ் செய்து சாத்திரங்களைப் போதிக்கும் அதிகாரத்தினையும் வழங்கியருளினார்கள்.

இதன் பின்னர், சுவாமிகள் சிதம்பரத்திற்குஅண்மையில் சில ஆண்டுகள் மௌன விரதம் பூண்டிருந்து, ஓர் ஆவணி மாதத்தில் உத்தரத் திருநாளன்று சிவ சாயுச்சியம் அடைந்தார்கள். இவர்கள் வாழ்ந்த காலம் கி. பி. 13-ம் நூற்றுண்டி[illegible] பிற்பகுதியாகும்.

சுவாமிகள் மௌன சமாதிகளை மேற்கொண்டிருந்தமையாற் போலும் நூலொன்றும் அருளிச் செய்திலர். இவர்களது சமாதியினை இன்றும் திருக்களாஞ் சேரியில் காணலாம்.

"சீர் நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை
திருவளரு மலரடிகள் சென்னி வைப்பாம்"

— உமாபதி சிவாசாரியர்

## பயிற்சி

1. மறைஞான சம்பந்தரிடத்து விளங்கிய சிறந்த பண்புகள் யாவை?
2. பரமசிவானந்தம் எவ்வாறு மறைஞான சம்பந்தர் ஆனார்?
3. மறைஞான சம்பந்தர் திருக்களாஞ்சேரியில் இருந்த காலை நடந்த சம்பவத்தினைச் சுருக்கமாகத் தருக.
4. இவரின் குருபூசைத் தினம் யாது?
5. குரு சீடன் பரிபக்குவமறிந்தே ஞானேபதேசஞ் செய்வார். இவ்வுண்மையினை மறைஞானசம்பந்தர் வரலாற்றிலிருந்து ஆதாரங்காட்டி விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. உமாபதி சிவாசாரியார்

திருவருட்பயன் என்னும் சித்தாந்த ஞான நூலை அருளிச் செய்தவர் உமாபதி சிவாசாரியர். இவர் சந்தானசாரியர் மரபில் வந்தவர். சந்தானபரம்பரை திருக்கைலாயத்தே உலகம் உய்ய ஆரம்பித்தது என்பர். கல்லாலமர நீழலிலே நட்சஞ மூர்த்தியாய் எழுந்தருளிய தென்முகக் கடவுளிடமிருந்து உதஞ் செய்த இப்பரம்பரை இருவகையாக அழைக்கப்படும். ஒன்று அகச்சந்தான பரம்பரை; மற்றையது புறச் சந்தான பரம்பரையாகும். புறச்சந்தான பரம்பரையில் மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியர் என்போர் அடங்குவர். உமாபதி சிவாசாரியர் ஞானபரம்பரையில் வந்தவர்களே இன்றைய சைவமடாலய ஆதீனகர்த்தர்கள் என்க.

உமாபதி சிவாசாரியர் சிதம்பரத்துத் தில்லைவாழ் அந்தணர் மரபிலே வந்த பெரியார் ஆவர். இவர் கோயிற் புராணம், திருமுறை கண்டபுராணம், திருத்தொண்டர் புராணவரலாறு, திருத் தொண்டர்புராண சாரம், சேக்கிழார் புராணம், திருப்பதிகக் கோவை முதலாய பலநூல்களை ஆக்கியமையால் சோழவரசனுல் சிறப்பிக்கப்பட்டார். அரசன் முத்துச்சிவிகை, தீவர்த்தி, குடை, மேளவாத்தியம் முதலிய விருதுகளை அளித்துக் கௌரவித்தான்.

இவர் பல்வகைச் சிறப்புக்களோடு அரசறிய வாழ்ந்து வந்த போதிலும், நல்லாசிரியன் ஒருவனை நாடி முத்திசாதனம் பெறவேண்டுமென்று தினமும் சிவபெருமானை வழிபட்டு வந்தார். இவ்வாறு ஒழுகி வரும் நாளில், ஒருநாள் தமது நித்திய பூசைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்து விருதுகளோடு சிவிகையில் ஏறித் திருக் களாஞ்சேரி வழியாகச் சென்றுர். அவ்வமையம் மறைஞான சம்பந்த சுவாமிகள் அவ்வீதியிலுள்ள திண்ணை யொன்றில் தமது மாணவர்களுக்கு உபதே சித்தலை மேற்கொண்டிருந்தார்.

உமாபதி சிவாசாரியர் ஆடம்பரமாகச் சென்ற காட்சியினைச் சுவாமிகளின் மாணவருள் ஒருவர் திரும்பிப்பார்த்தார். இச்செயலினைக் கண்ணுற்ற மறை ஞானசம்பந்தர் "பட்ட கட்டையிற் பகற்குருடு போகு தல் பாரீர்" எனக் கூறிஞர். அவ்வார்த்தையினைச் செவிமடுத்த உமாபதியார் உண்மையை உணர்ந்து உடனே சிவிகையினின்றும் குதித்து மறைஞானசம் பந்த சுவாமிகளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிஞர். அத்தோடமையாது, அன்று முதல் கோலாகல வாழ்க் கையை விடுத்துத் தாமும் ஒரு மாணவராகிச் சுவாமி களிடம் மெய்யன்போடு ஒழுகிவந்தார். அவரிடம் தமக்கு வேண்டிய தீட்சைகள், உபதேசங்களை முறை யாகப் பெற்றுர்.

சுவாமிகள் ஒருமுறை நெசவுசெய்வார் வீதியிற் சென்று நாலுக்கிடும் கூழினை வாங்கியுண்டார். அது பொழுது அவரைப் பின் தொடர்ந்த உமாபதி சிவா சாரியர் சுவாமிகளின் முழங்கை வழியாக ஒழுகிய சேடத்தை ஏந்திக் குடித்தார். இதனைக் கண்ணுற்ற தில்லைவாழ் அந்தணர் அவரைக் குலமுறை இழந்தவ ராகக் கொண்டு நடேசப் பெருமானுக்குப் பூசை செய்யும் உரிமையிலிருந்தும் நீக்கிவிட்டனர். இதனுல் உமாபதியார் சிதம்பரத்தின் கீழ்த்திசையிலுள்ள கொற் றவன்குடி என்னும் ஊரில் மடமொன்று தாபித்து மாணவருக்கு உபதேசஞ் செய்து வந்தமையோடு சிவபெருமானை விதிப்படி வழிபாடு செய்து கொண்டும் இருந்தார். கொற்றவன் குடியில் வதிந்தமையால் 'கொற்றங்குடியடிகள்' எனவும் அழைக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொற்றவன் குடியில் இருந்த சுவாமிகள் அங்கு வாழ்ந்த காலத்தில் பல அற்புதங்களைச் செய்தருளினார். சிதம்பரம் கொடியேற்றத் திருவிழாவிலே ஏருது நின்ற கொடிச்சீலையைக் கொடிக்கவி என்னும் மெய்கண்ட சாத்திரத்தைப் பாடியருளி அதனை ஏறச்செய்தார். அடுத்துப் பெற்றான் சாம்பான் என்னும் சிவபக்தனுக்கு முத்தி கொடுக்கும் வண்ணம் சிவபிரான் எழுதியருளிய:-

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டு — படியின் மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து
முத்தி கொடுக்க முறை.

என்ற திருப்பாசுரச் சீட்டைப் பெற்றமையோடு சாம்பானுக்குச் சத்தியோ நிருவான தீட்சை செய்து முத்திகொடுத்தருளினார். அதனைத் தொடர்ந்து சாம்பானுக்கு முத்திகொடுத் தருளியமையை உணராத உலகத்தவர் உணர்தற் பொருட்டு அரசன் முன்னிலையில் முள்ளிச் செடிக்கு முத்தி கொடுத்து அதனை மெய்ப்பித்தார். மேலும், தம்முடைய மாணவர் ஒருவரை முனிவராக்கி அவருக்கு முத்தி கொடுத்தமையோடு கருடப்பறவை யொன்றை முனிவராக்கி அதற்கு முத்தி கொடுத்தும் சிவானுபவம் உற்றிருந்தார்.

இந்நிலையில் தம்முடைய மாணவருள் ஒருவராகிய அருள் நமசிவாய தேசிகருக்கு மூவகைத் தீட்சைகளை முறையாக அளித்தமையோடு, தமக்குப் பின்னர் அருளுபதேசம் செய்தற்குரிய அதிகாரத்தையும் அவருக்கே வழங்கிச் சந்தான பரம்பரையினை நிலைநாட்டினார். ஈற்றில் நால்வகை முத்திகளிலும் மேலாய சாயுச்சிய முத்தியினை ஒரு சித்திரைமாத அத்த நாளில் அடைந்தார். இவரால் இயற்றப்பட்ட சிவப்பிரகாசம், திருவருட் பயன் முதலாய சித்தாந்த சாத்திரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டும் "சித்தாந்த அட்டகம்" எனப்படும், மேலும் வடமொழியில் பௌட்கர ஆகமத்திற்கு வியாக்கியான மும் செய்துள்ளார். இவரது காலம் கி. பி. 14 ம் நூற்றுண்டின் முற்பகுதியாகும்.

## பயிற்சி

1. புறச்சந்தான பரம்பரையிலுள்ளோர் பெயர்களைத் தருக.
2. உமாபதியார் மறைஞான சம்பந்தரின் சீடரான முறைமையினைக் கூறுக.
3. உமாபதியார் செய்த அற்புதங்களில் நான்கினைக் குறிப்பிடுக.
4. உமாபதியார் இயற்றிய நூல்கள் எவை?
5. பின்வருவனவற்றை விளக்குக:
   கொற்றங்குடியடிகள்; பகற்குருடு; சாயுச்சியம்; நமசிவாய தேசிகர்; சித்தாந்த அட்டகம்.
6. உமாபதியார் வரலாற்றிலிருந்து பெறப்படும் சமய உண்மைகள் சில கூறுக.
7. உமாபதியார் வரலாற்றினைப் பத்து வரிக்கு மேல் பதினைந்து வரிக்குள் சுருக்கி எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. ஆன்மா (உயிர்)

பசு, சீவன், ஆன்மா, புருடன், தேகி, சதசத்து எனப் பல பெயர்களை உடையது உயிர். அனேகமாகிய உயிருக்குப் பல தன்னியல்புக் குணங்கள் இருப்பினும் அவற்றில் இரண்டே விதந்தெடுத்துக் கூறக் கூடியனவாகும். ஒன்று அறிவித்தால் அறிகின்ற குணம்; மற்றையது பிறருக்கு அறிவிக்க மாட்டாத குணமாகும். இதனை "அறிவித்தா லன்றி அறியா வுளங்கள் - அறிந்திடும் அறிவனன்ரும்" எனச் சிவஞான சித்தியார் என்ற ஞானசாத்திரம் இயம்புகின்றது.

பதியாகிய இறைவன் பசுக்களாகிய ஆன்மாக்களுக்குத் தலைவன். ஆகவே, ஆன்மா பதியைப் போலவே அநாதியானது. ஆயினும் அஃது பதியின் மேலான பொருள் அன்று. அன்றி உபகரித்தலைச் செய்யும் மாயையும் அன்று; இயக்கமுடைய பிராண வாயுவும் அன்று என்பது சைவசித்தாந்தக் கொள்கையாகும்.

உயிர், பசு, ஆன்மா முதலாய பெயர்கள் ஒரே பொருளைக் குறிப்பன வாயினும் அவை வெவ்வேறு நிலைகளில் பெறப்பட்ட பெயர்களாகும். உயிர் பாச (மல) சம்பந்தம் உடைய நிலையில் பசு எனப் பெயர் பெறும். பாசங்கள் அறவே நீங்கி முத்தி நிலையடையும் போது அதனை ஆன்மா என்பர். ஆன்மாவிலே தீய குணங்களை உண்டாகச் செய்வது செம்பிற்களிம்பு போல் அதனுடனிருக்கும் ஆணவம் என்னும் மலமேயாகும். அவ்வாணவ மலத்தின் வீரியத்தைக் கெடுத்து அதனல் உண்டாகும் மயக்கத்தைத் தீர்ப்பதற்காகவே கடவுள் ஆன்மாவுக்குச் சரீரத்தைக் கொடுத்தருளுகின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்களுக்குச் சரீரங்கள் அவை புரிந்த வினைகளுக் கீடாகவே கொடுக்கப்படுகின்றன. இதனால் அவைகள் நால்வகைத் தோற்றத்தையும் எழுவகைப் பிறப்பையும் எண்பத்து நான்கு நூறுயிரம் யோனி பேதத்தையும் கொண்டு பிறந்து, இறந்து உழல்கின்றன. நால்வகைத் தோற்றங்களாவன: அண்டசம்(முட்டையில் தோன்றுவது); சுவேதசம் (வேர்வையில் தோன்றுவது); உற்பிச்சம்(வித்து, வேர், கிழங்கு என்பவற்றில் தோன்றுவது); சராயுசம் (கருப்பையில் தோன்றுவது) என்பனவாம். எழுவகைப் பிறப்புக்கள்: தேவர், மக்கள், விலங்கு, புள் (பறவை), ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் எனப்படும். யோனி பேதங்களைக் கூறின், தேவர் பதினுன்கு நூறுயிரமும் மக்கள் எண்பது நூறுயிரமும் விலங்கு, பறவை, நீர்வாழ் செந்துக்கள் என்பன தனித் தனி பத்து நூறுயிரமும் ஊர்வனபதினொரு நூறுயிரமும் தாவரம் இருபது நூறுயிரமும் எனக் கணக்கிட்டுள்ளனர்.

ஆன்மா, கலையாதி தத்துவங்களோடு தொடர்பு பற்றிய பெத்த நிலையில் விஞ்ஞானகலர், பிரளயாகலர் சகலர் என மூவகைப்படும். "உரை தரும் இப்பசு வர்க்கம் உணரில் மூன்றும்" என்று சாற்றுகின்றது ஞானசாத்திரம்.

விஞ்ஞானகலர்: கலையாதி தத்துவங்கள் அற்றவராய், மாயை முதலியவற்றால் தாக்குண்ணுதவராய், ஆணவம் என்னும் ஒருமலமுடையராய் இருப்பர். விஞ்ஞானத்தாலே கலாபந்தம் நீங்கினவராதலின் விஞ்ஞானகலர் எனப்பட்டார். (வி + ஞானம், வி—விசேடம்: ஞானம்-அறிவு. விஞ்ஞானகலர்-மேலான அறிவினாலே கலாபந்தம் நீங்கினவர்). இவர்க்கு ஆகாமிய கன்மமும் முக்குணமயக்கம், சுக-துக்க-மோகம் என்னும் பிரகிருதிமாயாகாரியங்களும் இல்லை. இவர்களுக்கு இறைவன் அறிவுக்கறிவாய் உள்நின்று உணர்த்தி அருளுவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரளயாகலர்: புவனங்களில் பிணிப்புகள் உடையவராய், ஆணவம் கன்மமாகிய இருமலங்களையும் கொண்டு இருப்பர். பிரளயகாலத்தில் கலை முதலிய தத்துவங்கள் நீங்கப் பெற்றவராதலால் இவர் இப்பெயர் பெற்றனர். (பிரளயம்-ஒடுக்கம், அகலர்—கலை நீங்கியவர்) இவர்களின் உடல் சுத்தமாயை, அசுத்தமாயையென இருவகை மாயாகாரியங்களினால் உண்டானது. அசுத்தமாயாகாரியக் கலப்பினால் விருப்பு—வெறுப்பு உண்டு. ஆயின் முக்குணமயக்கமும், சுகதுக்கமோகங்களும் இல்லை. இவர்களுக்கு மெய்யுணர்வு பாலில் வெண்ணெய் போல் இருப்பதாகும். இதனால் இறைவன் பிரளயத்தில் தடத்தத் திருமேனியாக மான், மழு, சதுர்ப்புசம், காளகண்டம், முக்கண் முதலியவடிவங்களோடு தோன்றி அருள் செய்வார்.

சகலர்: ஆணவம், கன்மம், மாயையென்னும் மும்மலங்களோடு கூடியிருப்பர். இவர்கள் கலை முதலிய தத்துவங்களோடு கூடியவர்கள் ஆதலால் சகலர் எனப்பட்டனர். (ஸ-கூட, கலை-கலையுடையவர்) இச்சகலர் தேவர் முதல் ஏழுவகைப் பிறப்பிலும் உளர். இவர்களுக்கு இறைவன் மானிடக் கோலத்தில் குருவடிவாகத் தோன்றி நின்று அருள் செய்வான்.

''பார்வையென மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணார் புவி.

—திருவருட்பயன்.

## ஆன்மா சதசத்து

சத்து என்பது நிலைபெற்ற ஞானமாகிய பதியை (சிவத்தை)க்குறிக்கும். அசத்து என்பது அறிவில்லாத சடப்பொருளாகிய பாசத்தைக் குறிக்கும். பதியாகிய சிவம் அறிவில்லாததாகிய பாசத்தைச் சுட்டியறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய அவசியம் இன்று. பாசம் அறிவற்ற தன்மையில் பதியை அறியமாட்டாது. எனவே, இவையிரண்டும் ஒன்றினை யொன்று எக்காலமும் அறியமாட்டா. ஆகவே பதி, பசு, பாசம் ஆகிய மூன்றனுள் எஞ்சி நிற்கும் பசு (ஆன்மா)வே இரண்டினையும் அறியுந் தன்மை உடையது. இங்ஙனம் சத்து-அசத்து என்னும் இரண்டினையும் (சத்து-அறிவுப்பொருள். அசத்து அறிவு இல்லாத பொருள்) அறியும் உரிமை ஆன்மாவுக்கு இருப்பது குறித்தே ஆன்மாவைச் சதசத்துப் பொருள் என்று கூறுவர்கள். ஆன்மா என்னும் உயிருக்குத் தனித்த இலக்கணம் சார்ந்ததன் வண்ணமாய் நிற்றலேயாம். ஆன்மா சாரவேண்டிய பொருள்கள் சத்தும் அசத்துமாய் இருத்தலின் ஆன்மாவைச் சதசத்து என்று சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

ஆன்மா பாசத்தாற் கட்டுப்பட்ட நிலை பெத்தநிலை எனப்படும். இந்நிலையில் ஆன்மா கருவி கரணங்களின் துணையால் அவற்றை அறிவிக்க அறியுந் தன்மையில் சிவத்தைக் காணமாட்டாதாகின்றது. இதனை ஓர் உதாரண முகத்தால் விளக்குவாம். ஆன்மாவைக் கூகையாகவும் திருவருளைச் சூரிய ஒளியாகவும் சிவத்தைச் சூரியனாகவும் கொள்ளுமிடத்து, பகற்குருடாகிய கூகைக்கு அதனுடைய கண்ணொளி சூரிய ஒளியைச் சார்ந்து அறியமாட்டாதாகின்றது. இருட்சார்புடைய தன்மையில் பகலில் சூரிய ஒளிகொண்டு பொருள்களையும் சூரியனையும் காணமாட்டாத தன்மையில் சூரிய ஒளியும் சூரியனும் கூகைக்கு இருளான பண்டங்களாம். அதுபோல் பெத்தநிலையில் ஆணவமாகிய இருட்சார்பு பற்றி நிற்கும் ஆன்மா திருவருளாகிய ஒளிச்சார்பு பற்றி அறிய வேண்டிய சிவத்தை அறியமாட்டாதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா முத்தி நிலையில் ஞானத் தெளிவினாலே சத்தாகிய சிவத்தைச் சேர்ந்த விடத்து அந்தச் சத்தின் வண்ணமாய் நின்று திருவருளின் துணையால் அதனை அறிவிக்க அறியும். இது எதுபோல் என்னின்: கண் சூரியனுடைய ஒளியினாலே தானும் ஒளிபெற்று அச் சூரிய ஒளியைக் கண்டு அதன் மூலம் சூரியனையும் காணமுடிவது போலாம். இதில் கண் ஆன்மாவுக்கும் சூரிய ஒளி திருவருளுக்கும் சூரியன் சிவத்துக்கும் உவமை ஆயினமை காண்க.

## பயிற்சி

1. உயிரைக் குறிக்கும் பெயர்கள் சில கூறுக.
2. உயிருக்கு இயல்பாயுள்ள இரு குணங்கள் எவை?
3. கடவுள் ஆன்மாக்களுக்குச் சரீரத்தை ஏன் அளிக்கின்றார்?
4. (அ) மும்மலங்கள் எவை?
   (ஆ) இருமலமுடைய ஆன்மாக்கள் எவ்வாறு அழைக்கப் படுவர்?
   (இ) விஞ்ஞானகலர் எனப்படுவோர் யார்?
5. சகலவர்க்க ஆன்மாக்களுக்கு இறைவன் எவ்வாறு நின்று அருள் செய்வான்?
6. ஆன்மாவுக்குச் சதசத்து என்னும் பெயர் எவ்வாறு பொருந்தும்?
7. பின்வருவனவற்றை விளக்குக:
   (i) பசு (ii) உற்பிச்சர் (iii) பெத்தநிலை
   (iv) சகலர் (v) சதசத்து (iv) பிரளயாகலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் ஒரு குரங்கு. அதனை அடக்குதல் முடியாது. ஆயின் அஃது அடங்கியே ஆதல் வேண்டும். இந்நிலையில் யாது செய்யலாம். "மனத்தை நீ அடக்காதே அது தானே அடங்கும்; ஆயின் உன் கடமைகளைச் செய்" என்கின்றார் ஒரு ஞானி.

இந்த உண்மையை உணர்ந்து போலும் நம் சைவச் சான்றோர் மனம் படிப்படியாகப் பக்குவமுறுதற்கு நான்கு படிகளை அமைத்தனர். அவை: சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும். இவற்றுள் சரியை பெரும்பாலும் புறத்தொழிலை வேண்டி நிற்கும். இந்நெறியிற் செல்வோர் சிவாலயத் திருத்தொண்டுகளில் ஈடுபடுவர். அத்தொண்டுகளில் திருநந்தவனம் வைத்தல், பத்திர புஷ்பம் எடுத்தல், திருமாலை கட்டுதல் என்பனவும் அடங்கும்.

## திருநந்தவனம் வைத்தல்

திருநந்தவனம் அமைப்பதற்கு முன்னர் நிலத்தினைத் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். சண்டாளர் (கொடியவர்கள்) வதியும் இடத்துக்கும் சுடுகாட்டுக்கும் மல-சலமோசன பூமிக்கும் சமீபத்தில் இல்லாததாய், நீர் வசதி கொண்ட வெளியான இடமே இதற்கு ஏற்றதாகும். பெரும்பாலும் திருக்கோயில்களுக்கு அண்மையில் அமைதலே விரும்பத்தக்கது. நிலம் தெரிவு செய்த பின்னர் முதலில் சுவரினாலேனும் சிறு மரங்களை நாட்டியேனும் நான்கு புறமும் வேலி அமைத்தல் வேண்டும். அதன் பின்னர் நிலத்தை ஆழமாகக் கொத்தி நிலத்தின்கீழ் உள்ள கற்கள், எலும்புகள் முதலாய பொருள்களைப் பரிசோதித்து அகற்றல் வேண்டும். இடச் சுத்தியின் பொருட்டு அக்கினியினாலும் பசுநிரை கட்டப் பெற்றுக் கோமய - கோசலத்தினாலும் புனிதமடையச் செய்தல் வேண்டும்.

அதன்மேல் நிலத்தைப் பண்படுத்திப் பல பகுதிகளாகப் பிரித்து - கோட்டுப்பூ, நிலப்பூ, கொடிப்பூ,

Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

நீர்ப்பூ என்பவற்றினை வேறுவேருக நாட்டுதல் வேண்டும். தோட்டத்தின் மத்தியில் நீர்வசதியை உண்டு பண்ணுவதோடு தோட்டத்தின் எப்பகுதிக்கும் போய் வருதற்கேற்ற முறையில் நடைபாதைகளும் அமைத்தல் வேண்டும். தோட்டத்தினுள் வசதியான இடங்களிலெல்லாம் நீர் நிலைகள் அமைத்து அவற்றுள் செவ்வாம்பல், வெள்ளாம்பல், குவளை, செங்கழுநீர், தாமரை, நீலோர்ப்பலம் என்பவற்றை வைத்து வளர்த்தல் வேண்டும். இவை நீர்ப்பூக்கள் எனப்படும்.

கோட்டுப் பூக்களாக வில்வம், பாதிரி, கோங்கு, பன்னீர், கொன்றை, பொன்னுவிரை, மந்தாரை, சண்பகம், குருந்து, புன்னை, வெட்சி, கடம்பு, ஆத்தி, மல்லிகை, நெல்லி முதலானவற்றை வைத்து வளர்த்தல் வேண்டும். அலரி, நந்தியாவர்த்தம், வெள்ளெருக்கு, செம்பரத்தை, மந்தாரை, துளசி, செவ்வந்தி, தும்பை, மருக்கொழுந்து, விஷ்ணுகிராந்தி, அறுகு போன்றன நிலப் பூக்கள் எனப்படும். இவைகள் பெரும்பாலும் செடிகளாகவே காணப்படும். கொடிப் பூக்களாவன: மல்லிகை, முல்லை, இருவாட்சி, பிச்சி, கொன்றை, வெற்றிலை என்பனவாம்.

திருநந்தவனத்தைப் பாதுகாத்தலில் காலை-மாலை தவருது நீர் ஊற்றுதல் வேண்டும். உச்சிப் பொழுதில் நீர் ஊற்றுதல் ஆகாது. புல் பூண்டுகள் இருப்பின் அவற்றைக் களைந்து உக்கிய உரம், இலைப்பசளை என்பவற்றை வேண்டிய வேண்டிய காலங்களில் இட்டுச் சிறிய முள் கொண்டு காற்றேட்டம் ஏற்படக் கூடியதாகக் கிளறுதல் வேண்டும். காலத்துக்குக் காலம் குறைக்கப்பட வேண்டிய கொம்பர்களைக் குறைத்துப் புதிய கிளைகள் தோன்ற வழிசெய்தல் வேண்டும். இதனுல் கூடிய பூக்களைப் பெறலாம். இறைவ பூசனைக் கென்றே அமைக்கப்பட்ட தோட்டமாதலின் ஆசௌசம் உடையோர் உட்புகாமலும் எச்சில், மூக்குநீர், மலசலம் இவற்றுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுத்தப்படுத்தாமலும் பத்திர - புஷ்பங்களைக் கடவுட் பூசைக்கன்றிப் பிறகாரியங்கட்கு உபயோகப்படுத்தாமலும் செடி, கொடிகளில் சலம் தெறிக்கும்படி வஸ்திரங்களைத் தோயாமலும் அவற்றில் துணி - மணிகளைப் போடாமலும் பாதுகாத்தல் வேண்டும்.

## பத்திர புஷ்பம் எடுத்தல்

நான்கு வருணத்திற்கு உட்பட்டவராய், சிவதீட்சை பெற்றவராய், நியம ஆசாரமுடையவராய் உள்ளோர் பத்திர - புஷ்பம் எடுத்தற்குத் தகுதி உடையராவர். இவர்கள் சூரியோதயத்திற்கு முன்னே ஸ்நானஞ் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்துச் சந்தியாவந்தனமும் முடித்த பின்னர், திருப் பூங்கூடையினை எடுத்து ஒரு தண்டு நுனியில் மாட்டி உயரப் பிடித்துக் கொண்டாயினும், அரைக்குமேல் கையில் தாங்கிக் கொண்டாயினும், திருக்கோயிற் பூந்தோட்டத்திற்குப் போதல் வேண்டும். அங்கு சிவபெருமானை மறவாத சிந்தையராய்ச் சிவநாமத்தைச் சூக்குமமாக உச்சரித்த நிலையில் பத்திர-புஷ்பங்களைப் பறித்துக் கூடையில் இட்டு இலை, தழைகளால் மூடிக்கொண்டு வருதல் வேண்டும். அவ்வாறு கொணர்ந்த திருப்பூங் கூடையை நிலத்தில் வைத்தலை விடுத்துத் தூக்கி விடுதல் வேண்டும். தீட்சை பெருதோர், ஆசௌசம் உடையோர், நித்திய கருமம் விடுத்தவர், ஸ்நானஞ்செய்யாதவர் முதலானோர் மறந்தும் பத்திர புஷ்பம் எடுத்தற்குத் தகுதியுடையோர் ஆகார். பத்திர புஷ்பம் எடுக்கும் பொழுது பேசுதல், சிரித்தல், மனதைப் பிறவிடயங்களில் செல்லவிடுதல், கொம்பர் கிளைகளை முரித்தல் என்பன எக்காலத்தும் செய்யத்தகாத குற்றங்களாம்.

## திருமாலை கட்டுதல்

திருமாலை கட்டுதற் கென்று அமைக்கப்பட்ட மேடையினைத் தூய நீரால் சுத்தஞ் செய்து, திருப் பூங்கூடையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுள்ள பத்திர புஷ்பங்களை அதில் வைத்தல் வேண்டும் பின்னர் தமக்கென இடப்பட்ட ஆசனத்தில் மௌனியாய் இருந்து பழுதுள்ள பத்திர-புஷ்பங்களைச் சாவதானமாகத் தெரிந்து அகற்றியும் தண்டுகள் நீக்கியும் எடுத்து இண்டை, தொடை, கண்ணி, பந்து, தண்டு முதலிய பலவகைப்பட்ட திருமாலைகளைத் தூய நார் கொண்டு கட்டுதல் வேண்டும். மாலை கட்டும்பொழுது கடவுளர்க்கு ஆகாத பத்திர புஷ்பங்களை விலக்கி விடுதல் வேண்டும். எடுத்துக் காட்டாக விநாயகருக்குத் துளசியும் சிவபெருமானுக்குத் தாளம்பூவும் உமாதேவியாருக்கு அறுகு, நெல்லியும் வைரவருக்கு நந்தியாவர்த்தமும் விஷ்ணுவுக்கு அக்ஷதையும் ஆகாதனவாம்.

திருக்கோயிற் பூந்தோட்டத் தொண்டினை மேற்கொண்டு உய்திபெற்ற மெய்யடியார்களுள் சிவகோசாரியார், சங்கிலி நாச்சியார் இருவரும் போற்றப்படுதற்குரியர். எனவே நாமும் அந்நாரைப் பின்பற்றி அவர் நெறிநின்று உய்திபெற முயல்வோமாக.

### பயிற்சி

1. சிவாலயத் திருத்தொண்டுகள் சில கூறுக.
2. திருநந்தவனம் அமைத்தற்கு ஏற்ற இடம் யாது?
3. திருநந்தவனம் அமைக்கும் முறையினைச் சுருக்கமாகத் தருக.
4. (அ) நீர்ப்பூக்கள் நான்கின் பெயர் தருக.
   (ஆ) வில்வம், கொன்றை, கடம்பு எவ்வினப் பூ மரங்களாகும்?
   (இ) செடிகளாக வளரும் பூ மரங்கள் ஐந்து எழுதுக.
5. திருநந்தவனத்தைப் பாதுகாத்தல் பற்றி உமக்குத் தெரிந்த வரை எழுதுக.
6. பத்திர - புஷ்பம் எடுத்தற்குத் தகுதியுடையோர் யாவர்?
7. பத்திர-புஷ்பம் எடுக்கும்பொழுது செய்யத்தகாத குற்றங்கள் யாவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. திருக்கோயிலைச் சுத்தஞ் செய்தல்

மனிதன் இன்பத்தையே விழைகின்றான். அதனால் அவன் வினைகளை வேண்டிச் செய்கின்றான். வினைகளால் பெறப்படும் பயன்கள் இன்பதுன்பங்களாகப் பர்ண மிக்கின்றன. அவற்றுள் இன்பம் சிற்றின்பம், பேரின் பம் என இருவகைப்படும். சிற்றின்பம் பயன்கருதிச் செய்யப்படும் வினைகளால் ஆவது. இதனாலேயே அவ் வின்பம் தொடங்குங்கால் இன்பாகிப் பின்னர் துன்பம் பயக்கின்றது. பேரின்பம் அப்படியன்று. அஃது மேலும் மேலும் இன்பத்தையே விளைவிப்பது. காரணம் வினைகள் பயன்கருதாது செய்யப்படுதலினால் என்க.

பயன்கருதாது செய்யப்படும் வினைகள் சிவபுண்ணி யங்கள் எனப்படும். சிவபுண்ணியச் செயல்களைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளில் நின்று செய்யலாம். இவற்றுள் சரியை வழிச்செய்யும் வினைகள் பெரும்பாலும் புறத் தொழி லாக அமைவதால் திருக்கோயிலைச் சுத்தஞ் செய்தல், திருநந்தவனம் வைத்தல், திருமாலைகட்டிக் கொடுத்தல், திருவிளக்கிடுதல், சுகந்த தூபமிடுதல், தோத்திரம் பாடுதல், பூசைத்திரவியங்கள் கொடுத்தல், சிவனடி யார்களுக்குத் தொண்டு செய்தல் முதலாயின சரியை வழிச் செய்யும் சிவபுண்ணியங்கள் எனப்படும். இப் புண்ணியச் செயல்களில் ஈடுபடுவோர் சிவலோகத்தில் இன்புற்று வாழ்தலாகிய சாலோக முத்தியினைப் பெறு வர்.

திருக்கோயிலைச் சுத்தஞ் செய்யும் தொண்டில் திருவலகிடுதல், திருமெழுக்குச் சாத்துதல், திருவீதிகள் -திருமதில்களிலுள்ள புல்பூண்டுகளை அகற்றுதல், திருக் கிணறு-திருக்குளம் என்பவற்றை இறைத்தல் ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்கள் இடம் பெறும். இச்செயல்களை எவ்வாறு மேற்கொள்ளுதல் வேண்டும் என்பது குறித்துச் சிந்திப்பாம்.

திருவலகிடுதல்: சூரியன் உதிக்குமுன் ஸ்நானஞ் செய்து சந்தியா வந்தனம் முடித்துக் கொண்டு சிவ சிந்தனையோடு திருக்கோயிலுக்குப் போதல் வேண்டும். அங்கு மெல்லிய துடைப்பத்தினால் கிருமிகள் சாகாமல் மேற்பட அலகிட்டு (கூட்டி)க் குப்பையை வாரித் திருக் கோயிலுக்குத் தூரமாயுள்ள தனி இடத்தே குழியிற் கொட்டிவிடல் வேண்டும். இங்ஙனம் திருவலகிடுதலில் அமைந்துள்ள தத்துவத்தினை நாவலர் பெருமான் பின் வருமாறு விளக்கியுள்ளார்.

"தேவாலயத்தின் (நமது உடம்பின்) இடமாகப் பொருந்தி அழிவில்லாமற் கிடக்கும் காமம், வெகுளி, பொய் என்னும் குப்பைகளையும் தொண்ணூற்றாறு தத்து வங்கள் என்னும் குப்பைகளையும் களைந்து நீக்கிப் பரி சுத்தமாய் விளங்கலே திருவலகிடல் எனக் கொள்ள லாம்" என்பதாம்.

திருமெழுக்குச் சாத்துதல்: ஈன்றணிமையதும் நோயு டையதும் அல்லாத பசுவினது சாணியைப் பூமியில் விழுமுன் இலையில் ஏந்தி, ஏந்தல் கூடாதபோது சுத்த நிலத்தில் வீழ்ந்திருப்பின் மேல்கீழ் தள்ளி நடுப்பட எடுத்துக் கொள்ளல் வேண்டும். அதனை வாவி, நதி முதலியவற்றில் வடித்தெடுத்துவந்த சுத்தசலத்துடனே கூட்டி வந்தகரைசலால் செங்கற் படுத்த நிலத்தையும் சுண்ணும்பு படுத்த நிலத்தையும் மண்படுத்த நிலத்தை யும் மெழுகல் வேண்டும். மெழுகும் பொழுது முன் தீண் டிய இடத்தைப் பின் தீண்டாமலும் மறு ஏற்படாமலும் இடையிற் கை எடாமலும் கூடியவரை கவனித்துக் கொள்ளல் வேண்டும். கருங்கற் படுத்த நிலத்தையும் சிமெந்து இடப்பட்ட நிலத்தையும் சுத்த சலத்தினாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவிடல் வேண்டும். இந்நிலங்களில் சாணம் படல் ஆகாது. இங்ஙனம் திருமெழுக்கிடுதலில் அமைந்துள்ள உண்மை குறித்தும் நாவலர் பெருமான் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"கோபம் முதலிய செத்தைகளை ஒருங்கே நீக்கி வினைகடந்த தத்துவ ஞானம் என்னும் நறுஞ்சாணத்தைக் கொண்டு அன்பென்னும் சலத்தோடு மெழுகினுற்றுன் மனுலயத்திற் சிவலிங்கம் தோற்றம் பெற்று முத்தியடைவார்கள்" என்பதாம்.

திருவீதிகள்-திருமதில்களிலுள்ள புல்பூண்டுகளை அகற்றுதல்: திருக்கோயில் திருவீதியிலும், பிரகாரங்களிலும் உள்ள புல்பூண்டுகளை உழவாரம் முதலியன கொண்டு செதுக்கி அவற்றினைத் தூரத்தே கொண்டு போய்க் குழியில் கொட்டி விடுதல் வேண்டும். தினமும் வீதியில் நடந்து கண்ணுக்குப் புலப்படும் புல்பூண்டுகளை அவ்வப்போது அகற்றுதல் மிகவும் நன்று. திருமதில்களிலும் கோயிற் கோபுரங்களிலும் பறவை முதலியன எச்சமிடுதலினுலும் காற்று என்பவற்றுலும் வித்துக்கள் வந்து சேர்கின்றன. அவைஅங்கு தங்கி இயற்கையின் சாதனங்களால் முளைகொள்ளும். அம்முளைகளைக்கவனித்து அகற்றுது விடின் அவை விடும் வேர்கள் "நெட்டிருப்புப்பாரைக்கு நெக்கு விடாப்பாறை - பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்." என்பதற் கேற்ப மதில்களிலும் கோபுரங்களிலும் பிளவுகளை ஏற்படுத்தும். அதனுல் காலகதியில் மதில்கள் சிதைவடைய நேரிடும். ஆலயங்களும் தம் பொலிவு இழந்து போகும். எனவே, இந்நிலை ஏற்படாதவாறு மதில்கள், தூபிகள் முதலாய வற்றில் தோன்றும் செடி, கொடி, புல், பூண்டுகளை அவ்வப்போது அகற்றிப் பாதுகாத்தல் வேண்டும். இத்தொண்டினைச் செய்வோர் கோயில் கட்டிக் கும்பாபிடேகஞ் செய்வோர் பெறும் கதியினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவார்களென்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் கூறிப்போந்துள்ளார்கள். திருவீதியிலுள்ள புல்பூண்டுகளை அகற்றுவதோடு வீதிக்கு வெண்மணல் தூவல், சாணநீர் தெளித்தல் என்பவற்றினையும் மேற்கொள்ளல் சிறந்த திருத்தொண்டாகும்.

**திருக்கிணறு - திருக்குளம்** என்பவற்றை இறைத்தல்: ஆலய நிர்மான அமைப்பில் கிணறு, குளம் இரண்டும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. "புறந்தூய்மை நீரான் அமையும்" என்பதற்கிணங்கப் புனிதமான இடத்தில் புனிதத்தை உண்டு பண்ணுவன இவையாம். இவற்றில் கிணற்றினை வாரம் ஒருமுறை யேனும் அல்லது குறைந்தது மாதம் இருமுறையேனும் இறைத்தும் பாசி முதலிய அழுக்கு களை அகற்றித் துப்புரவு செய்தல் வேண்டும். அத்தோடு வெளியிலிருந்து அழுக்குகள் கிணற்றினுட் செல்லாத வாறும் கிணற்று நீரை மொள்ளுதற்குப் பிரத்தியேகமான வாளி முதலிய வற்றை உபயோகித்தும் கூடிய கெதியில் அழுக்குகள் சுற்றுப் புறங்களில் சேராதவாறும் பாதுகாத்தல் வேண்டும். திருக்குளத்தில் ஆடை தோய்த்தல், மந்தைகள் குளிப்பாட்டுதல், கால்கழுவுதல், எச்சில் உமிழ்தல், பாகத்தே இலையுதிர் மரங்களை நிற்க விடுதல் அல்லது வைத்து உண்டாக்குதல் ஆகிய செயல் களைக்களைந்து பாதுகாத்தல் வேண்டும். திருக்குளத்தினை மாதம் ஒரு முறை யேனும் அல்லது வருடத்தில் மூன்று முறையேனும் இறைத்துச் சேறு முதலிய வற்றினை அகற்றிச் சுத்தப் படுத்தல் வேண்டும். திருக்குளம் தோண்டு வதினும் இருக்கும் குளத்தைப் பாதுகாத்தல் மிகச் சிறந்த புண்ணியமாகும்.

திருக்கோயிலைச் சுத்தஞ் செய்யும் தொண்டில் ஈடுபட்டுப் பெரும்பயனடைந்த மெய்யடியார்களின் வரலாற்றினைப் பெரிய புராணம் என்னும் நூல் விரித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரைக்கின்றது. அதில் திலகவதியார், திருநாவுக்கரசர் என்போர் போற்றப் படுதற்குரியராம் என்க. நாமும் அவர்களைப் பின்பற்றித் திருக்கோயிலைச் சுத்தஞ் செய்யும் தொண்டில் ஈடுபட்டு இறைவன் அருளுக்குப் பாத்திரராக முயலல் வேண்டும்.

## பயிற்சி

1. (அ) சிவபுண்ணியங்கள் என்றால் என்ன?
   (ஆ) சிவபுண்ணியச் செயல்கள் புரிதற்குரிய நான்கு வழிகள் எவை?
2. சரியை வழிச் செய்யப்படும் சிவபுண்ணியச் செயல்கள் ஐந்தினுக்குக் குறையாது தருக.
3. திருக்கோயிலைச் சுத்தஞ் செய்தலில் மேற்கொள்ள வேண்டிய கருமங்கள் யாவை?
4. திருமெழுக்கு எப்படிச் சாத்துதல் வேண்டும்?
5. திருவீதி சுத்தப் படுத்தல் பற்றி ஐந்து வரிக்குக் குறையாது எழுதுக.
6. கோயிலில் இருக்கும் நீர் நிலைகள் அசுத்தமடையும் வழிகளை அட்டவணைப் படுத்துக.
7. திலகவதியார் அல்லது திருநாவுக்கரசர் தொண்டு குறித்து அறிந்தவரை எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. திருவிளக்கேற்றுதல்

திருக்கோயிலிலுள்ள விடிவிளக்கு, சட்டவிளக்கு, நெய்ப்பந்தம் முதலியவற்றை உரிய காலங்களில் ஏற்றுதல் திருவிளக்கிடுதல் எனப்படும். திருவிளக் கிடுதற்குப் பசுவின்நெய் உத்தமமாகும். கபில நிறமுடைய பசுவிலிருந்து தயாரிக்கப்பட்ட நெய்யில் ஏற்றும் விளக்கினை உத்தமத்தில் உத்தமம் என்பர். ஆட்டுநெய், எருமைநெய் என்பவற்றால் ஏற்றும் விளக்கு உத்தமத்தில் அதமம் எனவும், வெள்ளெள்ளின் நெய்யில் ஏற்றுவது மத்திமத்தில் உத்தமம் எனவும், எள்ளின் நெய் மத்திமத்தின் மத்திமம் எனவும், மரவித்துக்களின் நெய் அதமத்தின் அதமம் எனவும் ஆன்றோர் பகர்வர்.

திருவிளக் கிடுதற்குரிய திரிகளைத் தாமரை நூல், வெள்ளெருக்கு நூல், பருத்தி நூல் என்பவற்றால் ஆக்கிக் கொள்ளல் வேண்டும். இவற்றை இருபத்தொரு இழையாலேனும், பதினாறு இழையாலேனும், பதினான்கு அல்லது ஏழு இழைகளினாலேனும் எடுத்துக் கற்பூரப் பொடிகூட்டித் திரிபண்ணுதல் வேண்டும். உடுத்த துணிகள் வெண்மையாக இருந்தாலும் திரிபண்ணுதல் ஆகாவாம்.

திருவிளக்கில் மாவிளக்கு என்றும் ஒருவிளக்கு உண்டு. இவ்விளக்கினை ஏற்றுவோர் பகலிலே போசனஞ் செய்யாது சனிப் பிரதோஷத்திலும் சிவராத்திரியிலும் செஞ்சம்பாவரிசி மாவினாலே அகல் பண்ணி, கபிலை நெய் மூன்று நாழியேனும் ஒன்றரை நாழியேனும் முக்கால் நாழியேனும் வார்த்து, கைப்பெருவிரற் பருமனுடைய வெண்டாமரை நூல் திரியிட்டு மாவிளக்கு என்னும் பெயரில் தம் தொண்டினைச் செய்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளக்கிடுதலாகிய தொண்டினை மேற்கொண்டு சிவகதி அடைந்தவர்களில் நமிநந்தியடிகள், கணம் புல்லநாயனார், கலியனார் என்போர் போற்றப்படுதற்கு உரியராவர். இவர்கள் வரலாற்றினைப் பெரிய புராணம் என்னும் நூல் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

நமிநந்தியடிகள்: சோழ நாட்டிலுள்ள ஏமப்பேறூர் என்னும் நகரில் அவதரித்தவர் நமிநந்தியடிகள். இவர் திருவெண்ணீற்றினை உண்மைச் செல்வமென்று உணர்ந்தாராதலின், திருவாரூர் சென்று புற்றிடங்கொண்டபெருமானை வழிபடும் பணியில் ஈடுபட்டார்.

திருவாரூர்க் கோயிலுக்கு அருகிலேயுள்ளது அரண் நெறி என்னும் ஆலயம். அடிகளார் அவ்வாலயத்தில் ஒருநாள் திருப்பணிகள் பல செய்தார். மாலைநேரம் வந்ததும் விளக்கேற்றி வணங்கல் வேண்டும் என்னுங் காதல் மீதூர, அருகிலுள்ள மனையொன்றிலே சென்று விளக்கினுக்கு நெய் தரும்படி வேண்டினர். அம்மனையிலுள்ளார் சமணர்களாதலின் "கையிலே கனல் உடையவர்க்கு விளக்கு வேண்டியதில்லையே! இங்கே நெய்கிடையாது; வேண்டுமானல் நீரைமுகந்து விளக்கேற்றும்" என்றனர்.

அடிகள் மனங்கலங்கித் திருக்கோயிலின் முன் வந்து வணங்கினர். அப்பொழுது, "கலங்காதே! அருகிலுள்ள குளத்து நீரை முகந்து வந்து விளக்கேற்றுக" என ஒரொலி எழுந்தது. அடிகள் திகைத்தார்; திருவருளை வியந்தார். ஐந்தெழுத்தினை ஓதியவாறே பொய்கை நீரை முகந்துவந்து அகலிலே வார்த்து விளக்கேற்றினர். என்ன ஆச்சரியம்! நெய்விளக்குப் போல அது எரியலாயிற்று. உடனே அடிகளார் திருவருளைத் தொழுதவண்ணம் கோயிலிலுள்ள விளக்குகளையெல்லாம் நீர் ஊற்றி ஏற்றினர். அவை யாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்விட்டு எரியலாயின. இம்முறையில் தினமும் விளக்கேற்றக்கண்டு சமணரும் வியந்தனர்.

சமணசமயத்தவனுகிய சோழவரசனும் சைவனுக மாறிக் கோயில் வழிபாட்டுக்குரிய நிபந்தங்களை ஆக்கி அடிகளாரையே தலைவராக்கினன். அடிகளாரும் வீதிவிடங்கப் பெருமானுருக்குத் திருவிளையாட்டுத் திருவிழாவும் பங்குனி உத்தரவிழாவும் ஒழுங்காக நடாத்தி இறைவர் திருவடியை எய்தினர்.

கணம்புல்லநாயனர்: இருக்குவேளூர் என்னும் நகரத்திலே அளவிறந்த செல்வ முடையார் ஒருவர் சிவனர் திருவடியே சிந்திக்கும் உளத்தராய் விளங்கினர். அவர் அரனர் திருக்கோயிலில் விளக்கிடும் தொண்டினை மேற்கொண்டிருக்கும் நாளில் வறுமையுற்றுத் தில்லையை அடைந்தார். அங்கு திருப்புலீச்சரத்துப் பெருமானர் திருக்கோயிலில் இல்லிலுள்ளவற்றை மாறித் திருவிளக்கிட்டு வணங்கி வந்தார். பின்னர், கணம்புல்லை அரிந்து விற்று நெய்வாங்கி விளக்கிட்டார். அதனல் கணம்புல்லர் என்று பெயரும் பெற்ருர்.

ஒருநாள் புல்லும் விலைபோகாத நிலையில் புல்லைக் கொண்டு வந்து விளக்காக எரித்தார். அப்புல்லும் முதல் யாமம் வரையில் எரிக்கப் போதவில்லை. என் செய்வதென்று கலங்கித் தம்திருமுடியை விளக்காக எரிக்கத் தொடங்கினர். அவர் தொண்டினை மெச்சிய கங்கைச் சடையார் அவரைத் தம் கழலிணையிற் சேர்த்தருளினர்.

கலியனர்: தொண்டை நாட்டிலுள்ள திருவொற்றியூரில் செக்கார் குலத்தில் கலியனர் என்பவர் அவதரித்தார். அவர் செல்வத்திற் சிறந்து விளங்கிய போதினும் திருவொற்றியூர் தியாகப் பெருமானர் திருக்கோயிலில் திருவிளக்கிடும் பணியிலே ஈடுபட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டினைப் பல நாட்கள் மேற்கொண்டு வந்தமையால் செல்வம் மாறியது. ஆயின் தொண்டினிடத்துக் கொண்ட சிந்தை மாருத நிலையில் எண்ணெய் எடுத்து விற்றுக் கிடைக்கும் கூலிகொண்டு சிவனுர்க்கு விளக்கிட்டார். அதற்கு முட்டு நேர்தலும் செக்காரத் தொழிலை மேற்கொண்டு கூலி பெற்றுத் தொண்டினைக் குறைவறச் செய்து வந்தார். அத்தொழிற்கும் முட்டுநேரவே மனையைப் பிரித்து விற்றுத் தொண்டு செய்தார். அதுவும் ஒழிந்துபோக மனைவியாரை விற்கப் புறப்பட்டார். ஒருவரும் வாங்காத நிலையில் திருக்கோயிலுக்குச் சென்று அகல் பரப்பினுர். எண்ணெய்க்கு ஈடாக "என் உடம்பின் குருதியை விட்டெரிப்பேன்" என வாளை எடுத்துக் கழுத்தை அரியத் தொடங்கினுர். இந்நிலையில் இறைவர் கை அச்செயலைத் தடுக்க விரைந்து பற்றியது. அதன்மேல் இறைவர் மழவிடைமேற் காட்சிகொடுத்தலும், கலியனுர் கழுத்தின் வலியும் கலியும் தீரப் பெற்றுச் சிவபுரியினைச் சென்றடைந்தார்.

திருவிளக் கேற்றலாகிய திருத்தொண்டில் அமைந்துள்ள உண்மையை நாவலர் ஐயா அவர்கள் பின் வருமாறு விளக்கியுள்ளார்கள்.

"தேவாலயத்திலே (உடம்பாகிய கோயிலிலே) மனம் என்னும் தகழியில் அறிவாகிய நெய்யை நிறைத்து, உயிரென்னுந் திரியாலே பிராணன் என்னும் காற்றை நிறுத்தி ஆணவத் துன்பம் என்னும் இருள் நீங்கச் சிவஞானம் என்னும் தூண்டா விளக்கை ஏற்றுதல்" என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர் சுவாமிகளும் தாம் பாடிய தேவாரத்துள் அகவிளக்கு ஏற்றி இறையன்புக்கு ஆளாகுந்திறனைப் பின்வரும் பாடலால் விளக்கியுள்ளார்கள்.

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி உயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்துநோக்கிற்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே.

— அப்பர் தேவாரம்

## பயிற்சி

1. திருவிளக்கிடுதல் என்றால் என்ன?
2. திருவிளக் கிடுதற்குச் சிறந்த நெய்கள் எவை? மிகச் சிறந்த நெய் யாது?
3. திருவிளக்கிடுதற் குரிய திரிகளை எவ்வாறு தயாரித்தல் வேண்டும்?
4. மாவிளக்கிடும் முறையினை விபரிக்குக.
5. நமிநந்தியடிகள் அல்லது கலியனார் வரலாற்றினை - பத்து வரிகளுக்கு மேற்படாது எழுதுக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. சுந்தரர் தேவாரம் —II

திருவலிவலம் | பண்: தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பாடுமா பாடிப் பணியுமா றறியேன்
பனுவுமா பனுவிப் பரவுமா றறியேன்
தேடுமா தேடித் திருத்துமா றறியேன்
செல்லுமா செல்லச் செலுத்துமா றறியேன்
கூடுமா றெங்ஙன மோவென்று கூறக்
குறித்துக் காட்டிக் கொணர்ந்தெனை யாண்டு
வாடிநீ வாளா வருந்தலென் பானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே.

திருச்சிற்றம்பலம்

பதிகவரலாறு: தல யாத்திரை செய்து இறைவனைப் பாடும் பணிபூண்ட சுந்தரமூர்த்திநாயனார் பல தலங்களையும் தரிசித்துப் பாடிக் கொண்டு திருவலிவலத்தை யடைந்து அங்கெழுந்தருளி யிருக்கும் பெருமானை "ஊனங்கத் துயிர்ப்பால்........" என்று தொடங்கிப் பாடியருளினார். இப்பாடல் அப்பதிகத்தில் ஆறுவது பாடலாகும்.

பொழிப்புரை: பாடல்களைப் பாடவேண்டிய முறைப்படி பாடி வணங்கும் முறையை அறியமாட்டேன்; செய்யுள்களை இயற்றிப் பாடி அவற்றால் துதிக்கவும் அறியேன்; இறைவனைத் தேடும் முறையாகத் தேடி நல்வழிப்படும் முறையையும் அறியேன்; ஐம்புலன்களையும் நல்வழியிலே செல்லுமாறு செலுத்தும் முறையையும் அறியேன்; இப்படிப்பட்ட யான் இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனைச் சென்று சேருதல் எங்ஙனம் ஆகும் என்று வேண்டுதலும், நான் செல்லவேண்டிய நெறியைக் குறித்துக்காட்டி என்னை அந்நெறியிற் கொண்டு சென்று புகுத்தி, தன் அடியாருள் ஒருவனுக ஆண்டு கொண்டு, "நீ வாடி வீணே வருந்தாதே" என்று தேற்றுதல் கூறிய சிவபெருமானைத் திருவலிவலம் என்ற தலத்தினில் வந்து அறிந்து கொண்டேன்.

அரும்பதவிளக்கம்: பனுவுதல்-பாடல்களை இயற்றுதல்; பரவுதல் - துதித்தல்; திருத்துதல் - நல்வழிப்படுத்தல்; ஆண்டு - அடிமைகொண்டு; வாளா - வீணே.

குறிப்புரை: இறைவனைப்படுதல் என்பது ஓர் அரிய தொண்டு. மனம் பக்குவப்பட்டுக் கரைந்து அன்பு பெருகப் பாட்டுத் தானுக எழும். இறைவனுடைய அதி அற்புத குணுதிசயங்களையும் எளிமையையும் எண்ணி எண்ணி உள்ளம் உருகுங்கால் பாட்டு எழும். பக்தி பெருகுதலைக் கொண்டு தன்னை மறந்து அவன் குணு திசயங்களில் மூழ்கித் திளைத்தின்புறுங் 'காலத்துப் பாட்டு எழும். அவன் தனக்கு அருளிய நலன்களை நினைக்குங்கால் அவனைக் காணவேண்டும் எனும் அன்பு மீதூர, உள்ளம் நைந்து நைந்துருகப் பாட்டு எழும். அந்நிலையில் அடியான் தன்நிலை இழந்து கண்கள் நீரைப் பெருக்க, வாய் குழற, ஆனந்தத்தாலும் அவா வாலும் உந்தப்பட்டுப் பாட்டுக்கள் பாடி ஆடிக் குதிப்பான். அந்நிலையைக் காண்பார் "இவன் என்ன பித்தனே, உன்மத்தனே" என்று ஐயுறுவர்.

திருவருளால் தூண்டப் பெற்று இயற்றப்படும் செய்யுள் அருட்கவியாகும். இலக்கண அமைதிகளை மனத்திற் கொண்டு முயற்சியால் இயற்றும் செய்யுள் செயற்கைக் கவி எனப்படும்.

இறைவனை எய்தவேண்டுமென்று உண்மையில் அன்பும் அவாவும் உடையவனை இறைவன் தன்னுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற் பெருங்கருணையால் கரையேற்ற எண்ணித்தானே குருவாக வந்து நெறியைக் குறித்துக்காட்டி அவனைப் பக்குவப்படுத்தி, 'வாடி நீ வருந்தாதே' என்று கூறி யருளுவான். அந்நிலை எய்த அன்பும் அவாவும் தேவை. அயரா அன்பு கொண்டு இறைவனை நாடில் செந்நெறியை அவனே புலப்படுத்துவான்.

திருக்கச்சூர் ஆலக்கோயில் — பண்: கொல்லிக்கௌவானம்

திருச்சிற்றம்பலம்

முதுவா யோரி கதற முதுகாட்
டெரிகொண் டாடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடும்
மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக்
கண்டா லடியார் கவலாரே
அதுவே யாமா றிதுவோ கச்சூ
ராலக் கோயி லம்மானே.

திருச்சிற்றம்பலம்

பதிகவரலாறு: சுந்தரமூர்த்திநாயனார் திருக்கச்சூர் ஆலக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவரை வணங்கிப் புறத்தே வந்து அமுது செய்யும் வேளையாதலின் பசிவருத்த மதிலின் புறத்தே தங்கினார். அவரது பசியைத் தீர்க்க விரும்பிய பெருமான் அந்தணர் வடிவங்கொண்டு திருவோட்டைத் திருக்கையிலே தாங்கியவராய் வந்து "பசியால் வருந்தியிருக்கின்றீர்; நும்பசி தீரச்சோறு இரந்து கொணர்கின்றேன்; அப்புறம் அகலாது இங்கேயிரும்" எனத்திருவாய் மலர்ந்து, கடும் பகற்பொழுதிலே மனைதோறும் போய்ப் பலியேற்று வந்து "உம்மை வருத்தும் பசி தீர உண்ணும்" என்று கூறிக்கொடுத்தருளினார். நாயனார் அதனை உவந்தேற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைத்தொண்டர்களுடன் உண்டார். அந்தணராய் வந்தருளியபெருமான் அருகில் நிற்பவர் போல அவர் அறியாமல் மறைந்தருளினர். அதுகண்ட நாயனர் பெருமானே மறையவராய் வந்து தமக்கு உதவினரென உணர்ந்து, மனமுருகக் கண்ணீர்ததும்ப அவரருளைப் புகழ்ந்து "முதுவாயோரிகதற ..." என்றெடுத்துப் பதிகம் பாடியருளினர். (ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம் 174—182.)

பொழிப்புரை:- பெரியவாயையுடைய நரி சத்தமிட, சுடலையில் அக்கினியைக் கையில் ஏந்தி நடனஞ் செய்பவரே, தேன் பொருந்திய கொன்றையினது புதிய பூவைச் சூடுகின்ற இமயமலையரசன் புத்திரிக்கு மணவாளனே, மூளியாக உடைந்த தலையோட்டிலே, நீ பிச்சையேற்பதை உனது அடியார் காண நேரிட்டால் மனம் வருந்த மாட்டாரா? கச்சூர் ஆலக்கோயிலிற் கோயில் கொண்ட தலைவனே, அடியார்கள் வருந்த நீ இவ்வாறு பிச்சை எடுக்கலாமா?

அரும்பதவிளக்கம்:- முதுவாய் ஓரி - பெரிய வாயையுடைய நரி; முதுகாடு - சுடுகாடு; ஆடல் - நடனம்; மது - தேன்; ஆர் - நிறைந்த; வீ - மலர்; மலையான் மகள் - பார்வதி; கதுவாய் - மூளியான; பலி - பிச்சை; அம்மான் - தலைவன்.

குறிப்புரை:- திருக்கச்சூர் தொண்டை நாட்டுத் திருத்தலங்களுள் ஒன்று. சிவதலங்களில் தலத்திற்கு வேறு பெயரும் கோயிலுக்கு வேறுபெயருமுண்டு. மதுரையிலுள்ள கோயில் 'ஆலவாய்' எனப்படும். திருவெண்ணெய் நல்லூரில் உள்ள கோயில் "அருட்டுறை" எனப்படும். திருவாரூரில் உள்ள கோயில் 'பூங்கோயில்' எனப்படும். அவை போலக் கச்சூரில் உள்ள கோயில் 'ஆலக்கோயில்' எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி

1. எவற்றைத் தாம் அறியாதவராகச் சுந்தரர் கூறிக் கொள்கிறார்?
2. இறைவன் தமக்குச் செய்த அருள்யாதெனச் சுந்தரர் இயம்புகின்றார்?
3. இறைவன் எத்தகைய இடத்தில் ஆடல் புரிபவன்?
4. எதற்கு அடியார் கவல்வர்?
5. திருக்கச்சூரில் உள்ள கோயிலுக்குப் பெயர் என்ன?
6. முதுவாய் ஓரிகதற - என்ற பாடலின் பதிக வரலாற்றினைத் தருக.
7. பொருள் எழுதுக:
   மலையான் மகள்; குறித்துக்காட்டி; எரிகொண்டாடல்; கதுவாய்த்தலை.
8. பின்வருவனவற்றிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.
   குறித்துக் காட்டி; மலையான் மகள்; தலையிற் பலிகொள்ளல்; கச்சூர் ஆலக்கோயில்; அம்மான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. தாயுமான சுவாமிகள்

'தாயுமானவர்' என்ற பெயரையும் அவருடைய பாடல்களில் சிலவற்றையேனும் அறியாத தமிழ் மக்கள் ஒருவருமே இரார். யாவரும் விரும்பிப் படிக்குமாறு இனிமை, எளிமை, செய்யுள் நலம், பரம்பொருளை விளக்கும் முறை, இறைவனை அடைதற்குரிய நெறி, சமரச சன்மார்க்க நெறி என்பவற்றைக் கொண்டு திகழ்வது தாயுமானவர் பாடல். அவர் பாடல்கள் பக்திச் சுவையை ஊட்டுவன. தாயுமானவர் பாடல்களை ஊன்றிப்படித்தவர் அந்நூல் 'தமிழ்உபநிடதம்' என்று கூறுவர்.

சோழவள நாட்டிலே சிறப்புற்று விளங்கும் சிவத் தலங்கள் பலவற்றுள் முதன்மை பெற்று விளங்குவது திருமறைக்காடு எனும் வேதாரணியம் ஆகும். வேதங்களால் மூடப்பட்ட கதவினைத் தேவாரப் பதிகங்கள் திறக்கவும் மூடவும் செய்யும் ஆற்றலுடையன என்பதை விளக்கிய திருத்தலம். அங்ஙனம் செய்தது தமிழ் மொழிக்கும் ஏற்றத்தை அளித்தது. ஆதலின் பரஞ்சோதி முனிவர், "மறைக் கதவினைத் திறந்ததும், தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்" என்று வீறுகொண்டு பேசுகிறார். வேதாரணியத்தில் சைவ வேளாளர் மரபில் கேடிலியப்ப பிள்ளை என்று ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் கசவல்லியம்மை என்னும் பெயருடையவர். அவர்களுக்குச் சிவசிதம்பரம் என்ற மகன் ஒருவன் இருந்தான். கேடிலியப்ப பிள்ளை சைவ சமய ஒழுக்க நெறிதவருது இல்லறத்தைச் செவ்வனே நடாத்தி வந்தார். அவர் குரு - லிங்க-சங்கம பக்தியிற் சிறந்தவராகவும் விளங்கினர். கேடிலியப்ப பிள்ளையின் வினையாள் திறனை அறிந்து மக்கள் திருமறைக்காட்டுத் திருக்கோயில் இறைபணியாளராக அவரை நியமித்தனர். அவர், தம் பணியை மிகத் திறமையோடு ஆற்றி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடிலியப்ப பிள்ளைக்குத் தமையனார் ஒருவர் உண்டு. அவர் வேதாரணிய பிள்ளை என்னும் பெயரினர். அவருக்கு நெடுங்காலமாகப் புத்திரப் பேறு இல்லை. அதனால் அவர் மனம் மிக வருந்தினார். அதனை அறிந்த கேடிலியப்ப பிள்ளை தம் அண்ணனின் மனவருத்தத்தை அகற்ற எண்ணித் தமக்கு ஒரு மைந்தனாகவுள்ள சிவசிதம்பரத்தைத் தத்துக் கொடுத்தார்.

அக்காலத்தில் திருச்சிராப்பள்ளியை நாயக்க வமிசத்து அரசரான முத்துக்கிருட்டின நாயக்கர் (1602—1608) என்பவர் ஆண்டு வந்தார். அம்மன்னர் கடலாடும் பொருட்டு வேதாரணியத்திற்கு வந்தார். அப்பொழுது கேடிலியப்ப பிள்ளை அரசரை மிக்க சிறப்புடன் வரவேற்றுக் கடல் நீராடுவதற்கும் சிவ தரிசனம் செய்வதற்கும் வேண்டிய வசதிகளைச் செய்து வைத்தார். நாயக்க மன்னர் கேடிலியப்ப பிள்ளையின் நற்குண நற்செயல்களையும், அறிவின் ஆழத்தையும், கணக்குப் பார்க்கும். திறனையும், நேர்மையையுங் கண்டுணர்ந்து மகிழ்ந்தார். அவரைத் திருச்சிராப்பள்ளிக்கு அழைத்துச் சென்று (பெருங் கணக்காளராக) பெரிய சம்பிரதிப் பதவியை அளித்தார். அதனால் கேடிலியப்ப பிள்ளை தம் மனைவியோடு திருச்சிராப்பள்ளிக்குச் சென்று வசித்து வந்தார்

அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்றாலும் கேடிலியப்ப பிள்ளை தம் ஒழுக்க நெறியிற் சிறிதும் வழுவாதவராய் அரன் கோயிற்குச் செல்லுதல், சிவபூசை புரிதல், அடியார்களைப் பேணல் முதலான கடமைகளில் ஒரு சிறிதும் தவறாது வாழ்ந்து வந்தார்; அரசாங்க அலுவலையும் மிக்க திறமையுடன் நடாத்தி வந்தார். அவர் நாள் தோறும் மலையெழுகொழுந்தாயுள்ள தாயுமானேசுவரரைத் தரிசிப்பதில் தவறியதே இல்லை. அவர் தாயுமானேசுவரரை அன்புடன் வழிபட்டுத் தமக்குப் புத்திரப் பேறு அருளுமாறு வேண்டிவந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துக்கிருட்டின நாயக்கருக்குப் பின் முத்துவீரப்ப நாயக்கர் அரசரானுர். அவரும் கேடிலியப்ப பிள்ளையின் திறமையையும் ஒழுக்கத்தையும் நன்குணர்ந்து போற்றினுர். எவ்வகையாலும் பேரும்புகழும் செல்வமும் படைத்துப் பெருமையுடன் வாழ்ந்துவந்த கேடிலியப்பபிள்ளைக்குப் புத்திரனில்லாக் குறையொன்றுதான் இருந்தது. அடியார்கள் விரும்புவதை அளித்தருளும் இயல்புடையவர் சிவபெருமான். "வேண்டுவார் வேண்டியதை ஈவான் கண்டாய்" என்று ஆன்ருேர் கூறியுள்ளாரன்ருே! தாயுமானேசுவரரின் தண்ணருளால் கேடிலியப்ப பிள்ளையின் மனைவியாரான கசவல்லியம்மையார் கருவுற்றுப் பத்துத் திங்களும் நிரம்பப் பெற்று ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். தாயுமானேசு வரரின் அருளாற் பிறந்த குழந்தைக்குத் திருச்சிராப்பள்ளிக் குன்றுடையான் திருநாமமான 'தாயுமானவர்' என்ற பெயரையே பெற்ருேர்கள் வைத்து அழைத்தனர். இவ்வாறு அழைத்தல் பரிசித்நிகரம் என்ற காரணத்தாலாகும்.

கேடிலியப்ப பிள்ளையும் அவர் மனைவியும் தாயுமானவரை அன்போடு போற்றி வளர்த்து வந்தனர். அந்தந்தக் காலங்களில் செய்ய வேண்டிய சடங்குகளைக் குழந்தைக்குப் பெற்ருேர்கள் செய்தனர். தாயுமானவர் கல்வி கற்கும் பருவத்தை எய்தியதும் தக்க தமிழாசிரியரைக் கொண்டும், வடமொழியாசிரியரைக் கொண்டும் இருமொழிக் கல்வியுங் கற்பித்தனர். தாயுமானவர் தமிழ், வடமொழி என்னும் இரு மொழிகளிலும் இலக்கணம், இலக்கியம், தருக்கம், சமய நூல்கள், சித்தர் நூல்களைக் கசடக் கற்றதனேடு பிற சமய நூல்கள் முதலியவற்றையும் கற்றுத் தேர்ச்சி பெற்றதோடல்லாமல் பேசுந் திறனும் கவி சமைக்கும் ஆற்றலும் பெற்று விளங்கினுர். அவர் நற்குண நற்செயல்களிலும், நல்லொழுக்கத்திலும், கடவுள் பக்தி அடியார் பக்தியிலுஞ் சிறந்து விளங்கினுர். அவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய காலத்தில் சைவசமய ஆசிரியரிடம் சமய விசேட தீட்சைகளும் செய்விக்கப் பெற்றன. தாயுமானவர், தேவார திருவாசகம் முதலான சைவத் திருமுறைகள் பன்னிரண்டினையும் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்த ரனுபூதி, பட்டினத்தார் பாடல் முதலானவற்றையுங் கற்றுத் தெளிந்தார். அவர் நாட்கடன், பஞ்சாக்கர செபம், சிவபூசை, சிவாலய தரிசனம் முதலிய சைவ நெறியைக் கடைப்பிடித்து வழுவாதொழுகி வந்தார்.

அக்காலத்தில் முத்து வீரப்ப நாயக்கரும் அவருக்குப் பின் அவருடைய அரசியும், அவளுக்குப்பின் விசயரங்க சொக்கநாத நாயக்கரும் அரசாண்டனர்.

இந்நிலையில் கேடிலியப்ப பிள்ளை இறைவன் திருவடியை எய்தினர். விசயரங்க சொக்கநாத நாயக்கர் தாயுமானவரின் கல்வி, அறிவு, ஒழுக்கம் என்பவற்றை நன்கறிந்து அவருக்கு அவர் தந்தையின் பதவியாகிய பெரிய சம்பிரதி உத்தியோகத்தை அளித்தார். தாயுமானவர் அப்பதவியை ஏற்றுத் திறம்பட ஆற்றி வந்தார். தாயுமானவர் அரசாங்க அலுவலில் ஈடுபட்டிருப்பினும், "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே" என்று ஆன்றோர் கூறியவாறு, அவருள்ளம் இறைவன் அருளைப் பெறும் நெறியையே நாடிநின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றையும் முறைப்படி சென்று வழிபட்ட அவர், "நாதனாகிய நின்னையும் என்னையும் நல்கும், போதனாகிய குருபரன் வருவது எப்பொழுதால்" என்றே ஞானகுரு வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்.

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை வாயிலின் முன்பு சாரமாமுனிவர் மடம் என்று ஒன்று இருந்தது. அதுவே இக்காலத்தில் மௌனகுரு மடம் என்னும் பெயருடன் விளங்குவது. சாரமாமுனிவர் மடத்தில் சாரமாமுனிவருக்குப் பின் 17ஆம் பட்டத்தில் (கி. பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1594—1658) ஸ்ரீ மௌனகுரு என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருமூலர் மரபில் வந்தவர். அவருடைய இயற்பெயர் ஸ்ரீ சிதம்பரநாதத் தம்பிரான் சுவாமிகள் என்பது. அவர் உலக மக்களோடு உரையாடாமல் ஞானநிலையில் மௌனமாக இருந்தமையால் அவரைச் ஸ்ரீ மௌனத் தம்பிரான் சுவாமிகள் என்றும் அழைப்பர். இப்பொழுது சுப்பிரமணியர் கோயிலிருக்கும் இடமே முன்பு சாரமாமுனிவர் நிட்டைகூடிப் பரிபூரணம் அடைந்த இடமாகும். தாயுமானவர் வழக்கப்படி குன்றின்மீதுள்ள தாயுமானேசுவரரை நாடோறும் வழிபட்டு வருங்கால் மௌன மடத்தின் முன்னுள்ள முருகப் பெருமானையும் வணங்கிவிட்டு வருவார். ஒரு நாள் அவ்வாறு தாயுமானவர் வணங்கிவிட்டுத் திரும்பி வரும்பொழுது ஸ்ரீ மௌனகுருவினைக் கண்டார். உடனே உடல் சிலிர்த்தது; கண்களில் நீர் பெருகிற்று; உள்ளங் குழைந்தது; கைகள் தாமே உச்சி மேல் சென்று குவிந்தன; அன்பெனுமாறு கரைபுரண்டோடியது; ஊசியைக் காந்தம் இழுப்பதுபோல் ஞான குருவின் தோற்றம் தாயுமானவரை இழுத்தது. தாயுமானவர் அனலிடைப்பட்ட மெழுகென உள்ளம் உருகி, விரைந்து சென்று ஞானசாரியாரின் பாதங்களின் கீழ் அடியற்ற மரம்போல் நெடிது வீழ்ந்து பணிந்தார். ஸ்ரீ மௌனகுரு தாயுமானவரின் பரிபக்குவ நிலையை நன்குணர்ந்து ஞானயோக முறைகளை விளக்கி "அன்ப, இனியும் சில காலம் உலக வாழ்க்கையில் ஈடுபட்டிரு. மணம் புரிந்து இல்லறத்தைப் பேணிப் புத்திரனைப் பெற்றுப் பின் இங்கு வருக. அக்காலை யாம் ஞானோபதேசம் செய்வோம்," என்று ஆணை தந்தருளினர்.

தாயுமானவர் குருவின் ஆணையைத் தலைமேற் கொண்டு, தட்சணாமூர்த்தியின் திருமுன்னர் நிட்டைகூடிப் பயிற்சி செய்து வந்தார். ஞானயோக நிலையை எய்திய தாயுமானவரிடம் பற்பல புதுமைகளை அரசன் கண்டான். அவன் தாயுமானவரை வணங்கி, "அடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேன் தங்கள் பெருமையை அறியாது பணிகொண்டேன். தங்களுக்கு வேண்டுவனவற்றைச் செய்கின்றேன். தங்கள் நிட்டைக் கிடையூறின்றி இருந்தருளுக'' என்று வேண்டிக்கொண்டனன். தாயுமானவர் அரசாங்க வேலைகளையும் கவனித்துக் கொண்டு ஞானயோக நெறியிலும் நின்ருெழுகி வந்தார். அக்காலத்தில் அரசன் இறக்க அரசி ஆட்சி புரியலாளுள். அரசியாரிடம் பணிசெய்ய மனமில்லாதவராய்த் தாயுமானவர் தம் சிறிய தாயின் புதல்வனுன அருளைய பிள்ளை என்பவரோடு திருச்சிராப்பள்ளியை விட்டகன்ருர்.

இருவரும் விராலி மலையை அடைந்தனர். அங்குச் சைவ வேளாளர் ஒருவர் அவ்விருவரையும் ஆதரித்தார். தாயுமானவர் விராலிமலையில் தங்கியிருந்த காலத்தில் அவருக்குச் சித்தர்களுடைய கூட்டுறவு ஏற்பட்டது. பின்னர் திருக்கோகர்ணம் என்னும் கபிலை நகரை அடைந்தனர். அங்கு நின்றும் இராமேசுவரம் சென்று சிலகாலம் தங்கியிருந்தார். அங்கு மக்கள் மழையின்றி வருந்துவது கண்டு மனமிரங்கி இறைவனைத் தியானித்துப் பாடி மழை பொழியும்படி செய்தார்.

திருச்சிராப்பள்ளியைவிட்டு அருளையரும் தாயுமானவரும் இராமேசுரம் சென்றடைந்தனர் என்று அண்ணனுன சிவசிதம்பரம்பிள்ளைக்குச் செய்தி கிடைத்தது. சிவசிதம்பரம்பிள்ளை உடனே புறப்பட்டு இராமேசுவரத்தை யடைந்து தாயுமானவரையும் அருளையரையும் சந்தித்து அழைத்துக் கொண்டு வந்தார். வரும்வழியில் திருச்சிராப்பள்ளியிலிருந்த பொருள்களை எடுத்துக் கொண்டு, தாயையும் அழைத்துக் கொண்டு எல்லோரும் திருமறைக்காட்டை அடைந்தனர்.

திருமறைக்காட்டில் தாயுமானவர் தாயுடனும் தமையனுன சிவசிதம்பரம்பிள்ளையுடனும் இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது அவர்கள் அவரை மணம் புரிந்து கொள் ளுப்படி கூறினுர்கள். ஞானகுரு உரைத்த மொழிக ளும் நினைவிற்கு வரத் தாயுமானவர் தாய், தமையன் விருப்பத்திற்கிசைந்து மட்டுவார்குழலி என்னும் பெண்ணை மணந்து கொண்டு இல்லறத்தை வழுவாது நடத்தி வந்தார். தாயுமானவருக்கு ஓராண் குழந்தை பிறந்தது. அதற்குக் கனகசபாபதி என்னும் பெயரை வைத்து வளர்த்து வந்தார். சில காலத்திற்குப் பின் தாயாரும் மனைவியாரும் இறைவனடியை எய்தினர். தாயுமானவர் தம் செல்வத்தையும் மகனையும் தமைய னுன சிவசிதம்பரம்பிள்ளையிடம் ஒப்படைத்துத் துறவு பூண்டு வீட்டைவிட்டு வெளியேறினுர். கடுந்துறவு பூண்டு செல்லும் தாயுமானவரைப் பின் தொடர்ந்து சென்ற அருளையர் அவருக்குத் தொண்டு பூண் டொழுகி வந்தார்.

தாயுமானவர், தம் ஞானகுரு முன்பு கூறிய மொழிகளை நினைவில் கொண்டு, திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மௌன மடத்தை யடைந்தார்: தம் குருநாதரைக் கண்டு வணங்கினுர்; அவர்பால் ஞானுேபதேசம் பெற்ருர்; சில காலம் அம்மடத்தி லேயே தங்கியிருந்து குரு வழிபாடாற்றி வந்தார். பின்னர் குருவின் அனுமதி பெற்று அருளையரோடு இராமநாதபுரத்தையடைந்தார். இராமநாதபுரத்திற் குக் கிழக்கே காட்டூரணி என்னும் இடத்தில் ஒரு புளிய மரத்தடியில் அமர்ந்தார். அப்போது தாயு மானவர்க்கு - அருளையர், கோடிக்கரை ஞானியார் என்று இருமாணவர்கள் இருந்தனர். அவர்களுக் குத் தாயுமானவர் உபதேசஞ் செய்துவிட்டு நிட்டை கூடியிருந்தார்.

அங்கு வாழ்ந்த ஓரம்மையார், தனியிடத்தில் நிட்டை கூடியிருக்கும் தாயுமானவர்க்குப் பல வசதி களையும் செய்து கொடுக்க முன் வந்தார். அந்த அம்மையார் நீர்நிலை ஒன்று உண்டாக்கியும், பூங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று வளர்த்தும், தாயுமானவரை அங்கிருக்கும்படி வேண்டிக் கொண்டார். தாயுமானவர் அவ்வாறே அப்பூங்காவில் தங்கி ஞான நிட்டையில் அமர்ந்திருந்தார். தாயுமானவர் நிட்டை கூடி இருந்த அவ்விடமே பின்னர் இலக்குமிபுரம் என்னும் பெயர் பெற்றது. தாயுமானவர் இலக்குமிபுரத்தில் நிட்டை கூடியிருந்து கி. பி. 1661 ஆம் ஆண்டு தை மாதம், திங்கட் கிழமை, விசாக நட்சத்திரத்தன்று மாலை இறைவன் திருவுருவிற் கலந்து அத்துவிதமுத்தி பெற்றார்.

தாயுமானவர் நல்லூர், விராலிமலை, இராமேசுவரம், திருச்சிராப்பள்ளி, கபிலைநகர் என்னும் இடங்களில் தங்கியபொழுது பாடிய பாடல்களின் தொகுதியே 'தாயுமானவர் பாடல்' என்பது. அவர் 1453 பாடல்கள் பாடியுள்ளார். வேதாந்தமும் சைவ சித்தாந்தமும் இரண்டும் ஒன்றிக் கலந்த சமரச சன்மார்க்க நிலையை உலகத்தவர்க்கு ஊட்டுவன தாயுமானவரின் அருட்பாடல்கள். அவர் பாடல்கள் படிப்பதற்கு எளியன; இன்பம் அளிப்பன; பரம்பொருளின் இயல்பினை நன்கு விளக்குவன; உள்ளத்திற்குத் தெளிவை அளிப்பன; வாழ்வில் ஒளியைத் தருவன; உண்மையில் நிலைபெறுமாறு செய்வன. ஆதலின் யாவரும் அவர் பாடல்களைக் கற்றுணர்ந்து மெய்யறிவுற்று நன்னெறி பற்றி ஒழுகி நலம் பல எய்துவார்களாக.

## பயிற்சி

1. எதனைத் 'தமிழ் உபநிடதம்' என்று கூறுவர்?
2. தாயுமானவர் என்று பெயர் வரக் காரணம் என்ன?
3. தாயுமானவரின் தந்தை, தாய், தமையன், மனைவி, மகன், குரு, மாணவர் என்போர் பெயர்களை எழுதுக.
4. தாயுமானவர் முத்திபெற்ற இடம் காலம் என்பவற்றைக் கூறுக.
5. தாயுமானவர் வரலாற்றிலிருந்து நீர் கற்றுக்கொள்ளும் கற்பனைகள் யாவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. திருவாசகம்

## சிவபுராணம்

[சிவனது அநாதி முறைமையான பழமை]

தோற்றுவாய்: பரமாசாரியராகிய சிவபெருமானிடம் ஞானோபதேசம் பெற்ற மாணிக்கவாசக சுவாமிகள் திருப்பெருந்துறைக் குருந்த மரநீழலில் பரமாசாரியாரின் திருவடித்தாமரைகளை அமைத்துக் குருபாத பூசை செய்து வருவாராயினர். இவ்வாறு ஒழுகி வரும் நாளில் ஒருநாள் "இறைவன் அடியடைந்தார் அன்பிலாதாராய் இருப்பினும் பாடிப்பரவுவார்க்கு இரங்கி அருள் புரிவன்" என்ற எண்ணம் திருவருளால் உதயமாயிற்று உடனே சுவாமிகள் மங்கலச்சொல் யாவற்றுக்குந் தலையாயதும் தான் மங்கலமாதலே யன்றித் தன்னைச் செபிப்பார்க்கும் தியானிப் பார்க்கும் பெரும் மங்கலத்தைத் தரவல்லதும் வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவதுமான திருவைந் தெழுத்தை முதலாக வைத்து, "நமச்சிவாய வாழ்க" எனத் தொடங்கி இச்சிவபுராணத்தை அருளிச் செய்தார்கள்.

### திருப்பெருந்துறையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான்றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்
வார்தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச்சுடரொளியாய்ச்சொல்லாதநுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

—மாணிக்கவாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொழிப்புரை

### கடவுள் வாழ்த்தும் வணக்கமும்

#### வாழ்க

(1—5 வரிகள்) நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்து வாழ்க. தலைவன் திருவடியாகிய திருவருட்சக்தி வாழ்க. கண்ணிமை கொட்டும் நேரமளவேயாயினும் என் மனத்தினிடத்திலிருந்து நீங்காதவன் திருப்பாதங்கள் வாழ்க. திருவாவடுதுறையில் எனக்கு உபதேசஞ் செய்த குருமணியின் திருவடிகள் வாழ்க. ஆகமம் எனப்படும் மெய்நூலாகி நின்று இனிமை தருபவனுடைய திருவடிகள் வாழ்க. ஒருவன், பலர் என்னும் தலைவனின் திருவடிகள் வாழ்க.

#### வெல்க

(6—10 வரிகள்) என் வேகத்தைத் தடுத்துக் கெடுத்து என்னை அடியவனாக ஆட்கொண்டருளிய மன்னன் திருவடிகள் வெற்றி பெறுக. தலைக்கோலம் உடையவனாகிய சிவபெருமானது, பிறப்பினைக் கருவேர் அறுக்கும் திருவருள் செய்த வீரக்கழல் அணிந்த பாதங்கள் வெற்றி பெறுக. சைவத்தினின்றும் நீங்கி நின்ற புறத்தார்க்குத் தூரத்திலுள்ளவனாகிய சிவனது அழகிய பாதங்கள் வெற்றி பெறுக. கைகளைக் கூப்பித் தொழுபவருடைய மனம் மகிழ்தற்குக் காரணமாகிய இறைவனது திருப்பாதங்கள் வெற்றி பெறுக. தலை வணங்கித் தாழ்வாரை மேலோங்கச் செய்யும் சிறப்புடையவனது திருப்பாதங்கள் வெற்றி பெறுக.

#### போற்றி

(11—16 வரிகள்) ஈசன் திருவடிகள் நம்மைப் பேணிக் காக்க. (வணக்கம்). என் அப்பனுடைய திருவடிகள் நம்மைப் பேணிக்காக்க. (வணக்கம்). எல்லாத் தேசங்களிலும் எழுந்தருளியிருப்பவன் நம்மைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிக்காக்க. (வணக்கம்). சிவனுடைய செம்மையான பாதங்கள் நம்மைப் பேணிக்காக்க. (வணக்கம்). அன்பிலே நிலைத்து நின்ற குற்றமற்றவனுடைய திருவடிகள் நம்மைப் பேணிக்காக்க. (வணக்கம்). மாயா மலத்தினுல் உண்டாகும் பிறப்பினைக் கருவேரறுக்கும் மன்னனது திருவடிகள் நம்மைப் பேணிக்காக்க. (வணக்கம்). சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள தேவனுன சிவனது திருவடிகள் நம்மைப் பேணிக்காக்க. (வணக்கம்). நுகர நுகரக் குறைவுபடாத பேரின்பமான முத்தியைக் கொடுத்தருளுகின்ற மலை போன்றவனுன சிவனது திருவடிகள் நம்மைப் பேணிக்காக்க. (வணக்கம்).

## செயப்படுபொருள்

(17—20 வரிகள்) சிவனுகிய அப்பெருமான் என் மனத்தை இடமாகக் கொண்டு நிலைபெற்றிருத்தலினுல், அவனுடைய திருவருளினுலே அவனுடைய திருப்பாதங்களை வணங்கி, மனம் மகிழ்ச்சி கொள்ளவும் முன்பு செய்த ஊழ்வினை முழுவதும் தேய்ந்தழியவும் (சிவனது பழைய வரலாற்றினை) சிவபுராணம் எனும் இப்பகுதியை யான் சொல்(லத்தொடங்கு)கிறேன்.

## அவையடக்கம்

(21—25 வரிகள்) நெற்றியில் (அக்கினி) கண்ணையுடைய சிவபெருமான் தன்னுடைய இயல்பிலான கருணையான கண்களில் (அருள் நோக்கோடு) பார்த்து (சுட்டி)க் காண்பித்த, திருவருளால் அறிய வந்தடைய, நினைவுக்கு எட்டாத அவனுடைய அழகு மிக்க திருப்பாதங்களை வணங்கித் துதித்து, வான் உலகம் முழுவதும் நிறைந்து, மண்ணுலகம் முழுவதும் நிறைந்து அவற்றிற்கு அப்பாலும் மிக்கதான, விளங்குகின்ற ஒளியை உடையவனே! எண்ணும் அளவைக் கடந்து, எல்லையைக் கடந்து விரிந்திருப்பவனே! உன்னுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை பொருந்திய சிறப்புக்களையெல்லாம் கொடிய தீவினையையுடைய நான் புகழ்ந்து கூறும் முறை ஒன்றினையும் அறியாதவன்.

### தியானம்—அடைக்கலம் புகல்

(26—32 வரிகள்) எம்பெருமானே! புல்லாயும், பூடாயும், புழுவாயும், மரமாயும், பல்வேறு வகையான விலங்குகளாயும், பறவைகளாயும், பாம்புகளாயும், கற்களாயும், மனிதராயும், பேயாயும், கணங்களாயும், வலிய அசுரர்களாயும், முனிவராயும், தேவராயும் படைப்புக்களுள் இயங்குதிணை (சரம்) நிலைத்திணைப் (அசரம்) பொருள்களுள் எல்லாப் பிறப்புக்களிலும் பிறந்து இளைத்துப் போனேன். இன்று இப்பிறவியில் மெய்ம்மையாக உன்னுடைய திருவடிகளைக் கண்டு விடுதலை (வீடு) பெற்றேன்.

(33—35 வரிகள்) யான் பிழைத்துப் போகும் வண்ணம் என் மனத்தின்கண் 'ஓம்' என்ற வடிவுடன் அமைந்து நின்ற உம்மைப் பொருளே! குற்றமற்றவனே! காளையை வாகனமாக உடையவனே! வேதங்கள் நான்கும் 'ஐயனே' என்று ஓலமிட மேலோங்கியும் ஆழ்ந்தும் விரிந்தும் விளங்கும் நுட்பமானவனே!

(36—38 வரிகள்) அன்பரல்லார்க்கு வெப்பமானவனே! அன்பரானவர்க்குக் குளிர்ச்சியானவனே! உயிருக்குள் அத்துவிதக் கலப்பால் உயிரானவனே! மாசற்றவனே! பொய்ப்பொருள்கள் யாவும் விட்டு நீங்க எழுந்தருளிவந்து மெய்ஞ்ஞானமாய் விளங்குகின்ற சத்திய ஒளியை வீசுகின்றவனே!

(39—40 வரிகள்) எத்தகைய அறிவும் இல்லாத எனக்கும் இன்பம் அளிக்கின்ற பெருமானே! அஞ்ஞானத்தை அறவே ஒழித்துவிடும் நல்ல அறிவானவனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(41—43 வரிகள்) படைக்கப்படுதலும் கால அளவும் முடிவும் இல்லாதவனே, எல்லா உலகங்களையும் படைப்பவனே, காப்பவனே, அழிப்பவனே. அருளை அளிப்பவனே, மறைப்பவனே, என்னை உனக்குத் தொண்டு செய்யப் புகும்படி செய்பவனே.

(44—48 வரிகள்) புலப்படும் பொருளான பூவின் கண் புலனாகப் பொருளாகாப் பொருளான மணம்போல (மறைந்து பிரிக்க முடியாது) இயல்பாக விளங்கும் தன்மையுடையவனே, தூரத்திலிருப்பவனே, அருகிலிருப்பவனே, சொல்லையும் மனத்தையுங் கடந்து நின்ற வேதப் பொருளானவனே, கறந்த பசுவின் பாலொடு சர்க்கரையும் நெய்யும் கலந்தாற்போல மேலான அடியார்களின் எண்ணத்திலே இன்பம் ஊறும்படி நின்று, எடுத்த பிறவித் தளையை அறுக்கும் எங்களுடைய தலைவனாயுள்ளவனே.

(49—61 வரிகள்) பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைமை என்ற ஐந்து நிறங்களையும் முறையே கொண்ட நிலம், நீர், தீ, காற்று, விண் என்னும் ஐந்து பூதங்களைத் திருமேனியாக வுடையவனே, தேவர்கள் துதிக்க அவர்கள் காணாதவாறு மறைந்திருப்பவனே, எங்கள் பெருமானே, கொடிய வினையுடையேனாகிய என்னையும், அறிவு மறைந்திடும்படி மூடிய மயக்குந் தன்மை வாய்ந்த ஆணவ இருளையும் புண்ணியம் (நல்வினை) பாவம் (தீவினை) என்னும் அறுத்தற்கு அரிய கயிற்றினாற் கட்டி வெளிப்புறத்தில் தோலால் போர்வையிட்டு உட்புறத்தில் எங்கும் புழுக்களும் மாசும் இருக்க மூடி, அழுக்குகளைச் சொரியும் ஒன்பது வாசல்களை உடைய குடிசையாகிய உடலை மயக்கும்படி மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புலன்களும் வஞ்சகச் செயல்களைச் செய்ய, மாறுபட்ட மனத்தினால் குற்றமற்றவனே, உன்னிடம் கலக்கும் விருப்பத்தோடு கலந்த அன்புடையவனாகிக் கரைந்து உள்ளம் உருகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்குணச்செயல் இல்லாதவனான சிறியவனாகிய எனக்கு, உன் இயற்கையான அருளை அளித்து, பூமியின் மேல் குருவாக வந்தருளி நீண்டபுகழ் கொண்ட பாதங்களைக் காண்பித்து, நாயினும் கீழ்ப்பட்டவனாய்க்கிடந்த அடியவனான எனக்குப் பெற்ற தாயினுஞ் சிறந்த கருணையை உடையவனாகிய மெய்ம்மையானவனே.

(62—69 வரிகள்) குற்றமற்ற ஒளி வீசி, மலர்ந்த மலரைப் போன்ற ஒளியை உடையவனே, பல தலங்களிலும் எழுந்தருளியிருப்பவனே, பிறவிப் பிணிக்கு இனிமை நிறைந்த மருந்தானவனே, சிவபுரத்தில் எழுந்தருளி யிருப்பவனே, பாசமாகிய புல்லுருவியின் பற்றினை வேரோடு அறுத்து உயிரான பயன் தரும் மரத்தை வளர்க்கும் மேலோனே, அன்பினால் அருளைச் செய்து மனத்திலுள்ள வஞ்சகத் தன்மைகள் கெட்டொழியும்படி வற்றாது ஓடிக்கொண்டிருக்கும் பெருமையான கருணையாகிய பெரிய ஆறு போன்றவனே, தெவிட்டாத அமுதம் போன்றவனே, எல்லையில்லாத பெருமையை யுடையவனே, ஆராய்ந்து காணாதார் மனத்தின் கண் ஒளித்துக்கொண்டிருக்கும் ஒளியை உடையவனே, (கல்போன்ற மனத்தையுடைய) என்னையும் தண்ணீர்போலக் கரையும்படி உருக்கி என் உயிருக்கு உயிராய் நின்றவனே.

(70—74 வரிகள்) இன்ப துன்பங்கள் இல்லாதவனே, அவற்றை உடையவனே; அன்பர்களுக்கு அன்பனாக இருப்பவனே; எல்லாப் பொருள்களும் ஆகி, அவை அல்லாதன வாகியுமுள்ள ஒளி வடிவினனே; நெருங்கிச் செறிந்த இருள் வடிவினனே; எளிதிற் காணப்படாத பெருமையுடையவனே; மூலகாரணமாயிருப்பவனே; நடுவும் இறுதியுமாகி இருப்பவனே; ஆதி நடு அந்தம் என்பன இல்லாதவனே; என்னை வலிய வந்து இழுத்து ஆட்கொண்ட என் தந்தையாகிய பெருமானே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(75—83 வரிகள்) கூர்மையான உண்மை ஞானத்தினால் ஆராய்ச்சியை மேற்கொண்டு ஆராய்ந்து அறிந்து உணர்கின்றவர்களின் கருத்தினில் உள்ள, பிறரால் மதித்துணர முடியாத கருத்துப் பொருளே; நுணுகி நுணுகிக் காண்பவர்க்கும் காண்பதற்கரிய மிகமிக நுட்பமான உணர்ச்சிப் பொருளாயுள்ளவனே; போதலும், வருதலும், சேர்தலும் இல்லாத மேலோனே; எங்களைக் காப்பவனே; கண்களாற் காணமுடியாத, பெரிய ஒளியுருவினனே; இன்பமாகிய ஆற்று வெள்ளமே; அப்பனே; எஞ்சியதாய் நின்ற தோற்றத்தில் சுடரின் ஒளிபோகி; எவரும் உணர்ந்து சொல்ல முடியாத நுட்பமான உணர்ச்சியாய், மாறுபடுதலைக் கொண்ட இவ்வுலகத்தில் வெவ்வேருக வந்த அறிவு மயமாய் விளங்கும் அறிவுடையவனே; அறிவினைத் தெளிவுபடுத்தும் தெளிவான பொருளே; என் மனத்தினுள் ஊற்றுப்போல் பெருகும் உண்ணத் தெவிட்டாத அமுதமே; என்னை அடிமையாகவுடையவனே.

(84—93 வரிகள்) வேறுபட்ட மாறுபாட்டினைக் கொண்ட ஊன் முதலாகிய கட்டுக்களையுடைய (இந்தச் சிறிய வீடாகிய) உடம்பினுள் அடைபட்டுக் கிடக்க நான் பொறுக்கமாட்டேன், "எம் ஐயனே, சிவனே, ஓ," என்று என்று துதித்துப் புகழ்ந்து உன்முன் இருந்த பொய்மையை ஒளித்து மெய்மையான உன்னைப் பற்றி நின்றவர்களான அடியவர்கள் திரும்பவும் இந்த உலகில் வந்து வினையினுல் எடுக்கும் பிறவியை அடையாதவாறு வஞ்சகத் தன்மை வாய்ந்த ஐம்புலன்களுக்கும் இடமான உடற்கட்டினை அகற்றி அவர்களை விடுவிக்க வல்லவனே; நள்ளிரவுப் பொழுதில் நடனத்தைப் பயின்று ஆடுகின்ற தலைவனே; தில்லை என்னும் சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலத்தில் கூத்தாடுபவனே; தென்திசையிலுள்ள பாண்டி நாட்டையுடையவனே; துன்பத்தைத் தரும் பிறவிக் கட்டினை அறுப்பவனே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓ' என்று கூறி, உணர்வதற்கு அரியவனைப் புகழ்ந்து சொல்லி;

பயன்

(94—95 வரிகள்) அவனுடைய திருவடிகளின் கீழிருந்து சொல்லிய பாட்டாகிய இச்சிவபுராணத்தின் பொருளை அறிந்து சொல்லுவோர்: (பிறர் பொருளை உணருமாறு சொல்வோர்) உலகிற் பலரும் புகழ்ந்து கூறவும் வணங்கவும் சிவபுரத்தின்கண் செல்பவராயும் சிவபெருமானுடைய திருவடிக் கீழ் அமைந்து தங்கியுள்ளவராகவுஞ் செல்வார்கள்.

விளக்கம்: சிவனது பழைய வரலாறு என்பது பொருள்படச் சிவபுராணம் என்றார். நமச்சிவாய என்பது தூல பஞ்சாக்கரம். நாதன்-ஆன்மநாதன். திருப்பெருந் துறையிலுள்ள சிவன் திருநாமம். கோகழி திருவாவடுதுறையின் மறுபெயர். திருவாதவூரருக்குச் சிவபெருமான் திரு உத்தரகோச மங்கை, திருப்பெருந்துறை, கோகழி என்ற மூன்றிடங்களிலும் உபதேசித்தருளினார். மக்கள் இறைவன் பாதங்களை வணங்குதற்கும் அவர்களுக்கு அவன் அருள் வேண்டும் என்றார். அவனே ஆட்டுவிப்பவன்; அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதை விளக்க.

சிவபுராணத்தைக் கூறுவதால் முன்பு செய்த தீவினை அகலும். ஓர் உயிர் பல்வேறு பிறவிகளை செய்த வினைக்கேற்ப எடுக்கிறது; ஒவ்வொரு பிறவியிலும் அல்லற் படுகிறது; உயர்ந்து உயர்ந்து மனிதப் பிறவி எய்துகின்றது. மனிதப் பிறவியிற்றான் உண்மைப் பொருளான இறைவனை அறிந்து வழிபட்டுப் பிறவித் தளையைக் களையமுடியும். தேவரேயாயினும் செய்த புண்ணியம் குறைந்தால் மனிதப்பிறவியெடுத்து இறைவன் திருவடியை எய்த வேண்டும். இறைவன் இன்பம், அறிவு, ஆனந்தம் என்னும் வடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினன். ஆக்கல், அழித்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்பன இறைவனின் ஐந்து தொழில்கள்.

இறைவன் மெய்யடியார் மனத்துள் தங்கி இன்பம் பெருக்கிப் பிறவியை அழிப்பான். நிறங்கள் ஐந்து அவை பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைமை. இவை அவற்றுடைப் பூதங்களைக் குறித்தன.

பொன்மை - நிலம்; வெண்மை - நீர்; செம்மை - தீ; கருமை - காற்று; புகைமை - விண்.

தாயிற் சிறந்த தத்துவம் என்ருர். தாய் ஓர் எல்லேக்கே உதவுபவள்; இறைவன் எங்கும் எப்பொழுதும் உதவுபவன் என்பது விளங்க.

'நள்ளிருளில் நட்டம் பயின்ருடும் நாதனே' என்ருர் அவன் நடனம் ஓய்ந்தால் உலகம் யாவும் ஓய்ந்து விடும் என்பது குறிக்க. இறைவன் திருவடிக்கீழ் இறுமாந்திருக்கும் நிலேயே முத்தி. அதனேயே பெறுதற்கரியமானிடப் பிறவி பெற்ருர் எய்தல் வேண்டும்.

வினைப்பிறவி வினையினுல் எய்தும் பிறவி - வினை செய்யக் காரணமாய பிறவி. 'சொல்லற்கரியான்' என்று இறைவன் இயல்பு கூறப்பட்டுள்ளது.

## பயிற்சி

1. உயிர்கள் எத்தகைய பிறவிகளை அடைகின்றன?
2. இறைவன் இயல்பாகக் கூறப்படுவன யாவை?
3. எதற்கு ஆற்றேன் - என்று ஆசிரியர் கூறுகிருர்?
4. இறைவன் எதனைச் செய்ய வல்லவன்?
5. எவர் சிவனடிக் கீழ்ச் செல்வர்?
6. இறைவன் எவர்க்கு ஒளிப்பவன்? எவை இல்லாதவன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. மங்கையர்க்கரசியார்

தண்டமிழ்ப் பாண்டிய நாட்டினை நெடுமாறன் என்ற பாண்டியன் அரசாண்டு வந்தான். அவனை "நின்ற சீர் நெடுமாறன்" என்றும், கூன்பாண்டியன் என்றும் கூறுவர். அவனுக்கு முதுகில் கூன் இருந்தமையால் கூன் பாண்டியன் என்ற பெயரேற்பட்டது. அவன் காலம் கி. பி. 640 முதல் கி. பி. 670 வரை என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. நெடுமாறன் கன்னிப் போரில் சோழனை வென்று. அவன் மகளான மங்கை யர்க்கரசியாரை மணந்தான். அவன் புதுக்கோட்டைச் சீமையைச் சேர்ந்த நெல்வேலி என்னும் இடத்தில் வில்வேலி என்ற சாளுக்கிய மன்னனை வென்றவன் என்றும் தெரிகின்றது. வில்வேலிக்குச் சாளுக்கிய விக்கிரமாதித்தன் என்றும் பெயருண்டு. "வில்வேலிக் கடற்றானையை நெல்வேலிச் செருவென்றும்" என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுதலால் அறியலாம்.

மங்கையர்க்கரசியார் மணிமுடிச் சோழன் என்பா னின் மகள் ஆவர். மணிமுடிச் சோழன் பழையாற் றைத் தலை நகராகக் கொண்டு சோழ நாட்டினை ஆண்டவன் என்று தெரிகிறது. இம்மன்னன் பழை யாறை வடதளியில் திருநாவுக்கரசர் காலத்தில் சிவ லிங்கத்தை வெளிப்படுத்தியவன். மற்றும், திருப்பனந் தாளில் சாய்ந்திருந்த இலிங்கத்தை நிமிர்த்த முயன்ற வனும் இவனே என்பர். மங்கையர்க்கரசியார், மானி என்னும் மறுபெயரும் உடையவர். 'வரிவளைக் கைம் மடமானி' என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார். இவ்வம்மையார் உருவிலும் அறிவிலும் திருமகளையும் கலைமகளையும் ஒத்தவர். சிவபக்தி அடியார் பக்தி யிலும் மிகச் சிறந்து விளங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுமாறன் போர்த்திறன் மிகப் படைத்தவன். அவனுக்கு நிகராவார் அக்காலத்தில் வேறு எவருமிலர். அவன் சேர, சோழர்களையும் வென்றவன் என்று கூறப் படுகிறுன். அவனுக்குக் குலச்சிறையார் என்னும் பெய ருடைய அமைச்சர் ஒருவர் இருந்தார். அவர் மண மேற்குடி என்ற ஊரில் பிறந்தவர். குலச்சிறையார் என்ருல் குலங்காப்பவர் என்று பொருள். அவர் கரு ணீகர் குலத்தவர் என்று கருணீகர் புராணம் கூறும். அவருக்குப் பெருநம்பி என்ற பட்டமும் உண்டு. 'பெரு நம்பி குலோத்பவரான குலச்சிறை யாண்டாரும்' என் பது தக்கயாகப் பரணியுரை. அதனுல் சுந்தரர் திருத் தொண்டத் தொகையில் "பெருநம்பி குலச்சிறை தன் அடியார்க்கு மடியேன்" என்று கூறுகிருர். குலச்சிறை யார் சிவபக்தியிலும் அடியார் பக்தியிலும் மிகச் சிறந்தவர். இவர் விபூதி, உருத்திராக்கம் அணிந்து திருவைந்தெழுத்தோதி அடியார்களைப் போற்றி ஆத ரித்து வந்தமையோடு அரச கருமங்களையும் செவ்வனே நடாத்தி வந்தார்.

அந்த நாளில் பாண்டிய நாட்டில் சமண சமயம் மிக்கு விளங்கிற்று. ஆனைமலை முதலான எட்டுக் குன்றுகள் அமைந்த இடங்களில் வாழ்ந்த சமணத் துறவிகள் பல்லோர் பாண்டிய நாட்டிற் புகுந்து மதப் பிரசாரஞ் செய்தனர். சமணர்கள் கல்வி, கேள்விகளிலும் மருத்துவத்திலும் சிறந்தவர்கள். அவர்கள் தம் சொல் வன்மையினுல் பல்லோரைச் சமண சமயத்திற் புகு மாறு செய்தனர். பாண்டியன் நெடுமாறனும் தான் முன் செய்த தீவினைப் பயனுல் மனம் மாறிச் சமண சம யத்தில் புகுந்தான். 'அரசன் எவ்வழி அவ்வழிக் குடி கள்' என்றபடி குடிமக்களும் சமண சமயத்திற் புகுத லில் தீவிரங் காட்டினர். அதனுல் சைவசமய ஒழுக்கம் நாட்டிற் குறையலாயிற்று. பாண்டிய நாடெங்கும் சமணப் பாழிகளும் பள்ளிகளும் மிகலாயின. சமணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் மயிற் பீலிகளுடனும் கமண்டலங்களுடனும் எங்குந் திரிந்தனர்.

இந்நிலையைப் பாண்டிமாதேவியான மங்கையர்க்கரசியார் உணர்ந்தார்; மந்திரி குலச்சிறையாரும் அறிந்தார். அவர்கள் உள்ளம் கொதித்தது. சமண நெறி தழைத்தோங்குதலையும் சைவ நெறி தாழ்வுற்றுக் குன்றுதலையுங் காண, அவர்கள் மனம் பொறுக்க முடியாத துன்பத்தையடைந்தது. அரசனுக்கு அவ்விருவரும் எவ்வளவு எடுத்துக்கூறியும் பயன் ஒன்றும் உண்டாகவில்லை. அந்நிலையில் புகலிப்பிள்ளையரான திருஞான சம்பந்தர் சைவசமயமாகிய செந்நெறி பரவச் செய்து வரும் அருந் தொண்டினையும், திருமறைக்காட்டில் அவர் எழுந்தருளியிருபதையும் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் அறிந்தனர். அவர்கள் தம் பரிசனங்களைக் கூவி, அவர்களைத் திருமறைக்காட்டிற்குச் சென்று திருஞான சம்பந்தரைக் கண்டு, பாண்டிய நாட்டின் நிலையை எடுத்துக்கூறி மதுரைக்கு அழைத்து வருமாறு வேண்டிக் கொண்டனர்.

பாண்டிய நாட்டிலிருந்து அரசியாரும் அமைச்சரும் அனுப்பிய பரிசனங்கள் மகிழ்வோடு புறப்பட்டுச் சென்று திருமறைக்காட்டையடைந்தனர். அங்கு ஞான சம்பந்தர் எழுந்தருளியிருந்த மடத்தை அடைந்து தங்கள் வருகையைத் தெரிவித்தனர். ஞானசம்பந்தர் அவர்களை அழைத்து, வந்த காரியத்தைக் கூறுமாறு கேட்டார். அவர்கள் ஞானசம்பந்தரை வணங்கி நின்று, பாண்டிய நாட்டில் சமண சமயம் தழைத்தோங்கும் நிலையை எடுத்துக்கூறி, பாண்டிய நாட்டிற்கு எழுந்தருளிச் சைவ சமயச் செந்நெறியைத் தழைத்தோங்கச் செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். திருஞானசம்பந்தர் அவர்கள் கூறியது கேட்டுத் தாம் மதுரைக்கு வருவதாக வாக்குறுதியளித்தார். அவர்கள் விடை பெற்றுச் சென்றனர். பின்னர் சம்பந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமறைக்காட்டில் திருக்கோயிலிற்குச் சென்று அங்கு நாவுக்கரசரைச் சந்தித்து, மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் வேண்டிக்கொண்ட செய்தியைக் கூறியமையோடு தாம் பாண்டிய நாட்டு மதுரைக்குச் செல்வதையும் இயம்பினார். அம்மொழிகளைக் கேட்ட திருநாவுக்கரசர், "சமணர்கள் வஞ்சகச் செயல்கள் செய்வதற்கு அஞ்சாதவர்கள். நான் அவர்களை நன்கு அறிவேன். மற்றும், நாளும் — கோளும் நன்றாகவுமில்லை. ஆதலால் இச்சமயம் செல்லத் தக்கதன்று." என்று கூறினார். அதனைக் கேட்ட சம்பந்தர் வேயுறு தோளிபங்கன்' என்று பதிகமெடுத்துப் பாடி, அதில் சிவனடியார்களுக்கு நாளும் கோளும் தீமை செய்யா அவை நல்ல நல்ல என்று கூறிப் பின் பாண்டிய நாட்டிற்குப் புறப்பட்டார்.

திருஞான சம்பந்தர் தம் தொண்டர் குழாத்தோடும் புறப்பட்டு இடையில் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு மதுரையை அடைந்தார். சமணர்கள் பல தீக்கனவுகளைக் கண்டு அச்சமுற்றிருந்தனர். அவர்களுக்குப் பல தீய நிமித்தங்கள் தோன்றின. மங்கையர்க்கரசியாருக்கும் குலச்சிறையாருக்கும் பல நன்னிமித்தங்கள் தோன்றின. ஞானசம்பந்தர் மதுரையை யடைந்தார் என்பதைக் கேள்விப்பட்டதும் மங்கையர்க்கரசியார் உள்ளத்தில் இன்பமும் அன்பும் பொங்கியெழக் குலச்சிறையாரை அழைத்து ஞானசம்பந்தரை வரவேற்குமாறு பணித்தார். மங்கையர்க்கரசியாரும் வரவேற்கச் சென்றார்.

திருஞானசம்பந்தர் முத்துச் சிவிகைமீது, முழுமதி ஒளிவீசித் திகழ்வதுபோல் முத்துக்குடை விளங்கத் திருநீற்றுத்தொண்டர் குழாம் புடைசூழ்ந்துவர வந்தடைந்தார். அந்தணர் வேதவொலியும் பல்வகை வாத்தியங்களின் ஒலியும் கடலொலியினும் பேரொலியாகப் "பரசமய கோளரி வந்தார்" என்று கூறி மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்தனர். மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் சம்பந்தர் பாதங்களில் பணிந்தெழுந்து நின்றனர். ஞானசம்பந்தர் அவர்களுக்கு ஏற்றவாறு மன முவக்க ஆசி கூறியருளினர். பின் ஞானசம்பந்தர் மதுரையிலுள்ள ஆலவாய் கோயிலை நோக்கிக் கைகுவித்து, 'மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை' என்று எடுத்து, "ஆலவாய் ஆவது மிதுவே" என்று இறுதியில் அமைத்துப் பதிகம் பாடியருளினர். இப்பதிகத்தில் மங்கையர்க்கரசியாரின் அரும் பணியையும் (1,3, 5, 7, 9) குலச்சிறையாரின் அரும் பணியையும்(2, 4, 6. 8, 10) அமைத்திருப்பதோடு பதினோராம் பாட்டில் இருவர் பணிகளையும் பாராட்டியுள்ளார். பின் சம்பந்தர் மிக்க மகிழ்ச்சியுடன் குலச்சிறையார் அழைத்துச் செல்லத் தம் குழாத்தொடு கோயிலிற்குள் சென்று 'நீலமாமிடற் றாலவாயிலான்' என்று பதிகம் எடுத்துப் பாடிச் சோமசுந்தரக் கடவுளையும் அங்கயற்கண்ணியம்மையையும் வணங்கினர். அங்கு மங்கையர்க்கரசியார் வணங்கி எழ ஞானசம்பந்தர் ஆசிகூறி, குலச்சிறையாரால் தங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த திருமடத்தை அடைந்து அங்குத் தங்கினர்.

திருஞானசம்பந்தர் மதுரையில் வந்து தங்கியிருத்தலை அறிந்த சமணர்கள், கலக்கமடைந்து இரவில் ஓரிடத்தில் கூடிக் கலந்து சூழ்ச்சி ஒன்று ஆலோசித்துக் கொண்டு, அரசனிடஞ் சென்று திருஞானசம்பந்தரின் அடியார்களைக் கண்டு, "கண்டு முட்டு" ஆயினேம் என்று கூற, பாண்டியன் "யான் கேட்டு முட்டு" ஆயினேன் என்று கூறினன், பின்னர் சமணர்கள் திறம்படப் பேசித் தம் விஞ்சை மந்திரத்தால் மடத்தில் தீப்பிடித்தெரியச் செய்தால் சம்பந்தர் குழாத்தோடும் நகரைவிட்டு ஓடிவிடுவார் என்றனர். அரசனும் 'அதுவே செய்யத்தக்கதாயின் செய்க' என்றனன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிலையில், அரசன் அரண்மனையிற் கவலையோடிருந்தான். பாண்டிமாதேவியார் வந்து காரணம் கேட்ட பொழுது அரசன், "சைவ வேதியர்களைக் கண்டதால் அடிகண்மார்கள் கண்டுமுட்டு; அதனைக் கேட்டநான் கேட்டுமுட்டு" என்று கூறினன். அரசியார் தம் மாளிகைக்குச் சென்றார். அங்குக் குலச்சிறையார் வந்து 'சமணர் வஞ்சகச் செயல்களைச் செய்வார்போலும்' என்றார். "ஞானசம்பந்தருக்குத் தீங்கு நேருமாயின் நாமும் உயிர் துறப்போம்" என்று மங்கையர்க்கரசியார் உறுதியுடன் கூறினார்.

சமணர்கள், ஞானசம்பந்தர் தம் குழாத்துடன் தங்கியிருந்த மடத்தில் தீயைக் கொளுவினர். தீ, மடத்தின் சுற்றுப் புறத்தில் காணப்பட்டது. சமணர் செயலாகுமென எண்ணிய அடியார்கள் ஞானசம்பந்தரிடஞ் சொல்ல, ஞானசம்பந்தர் ஆலவாய் அவிர் சடைக் கடவுளை மனத்தில் தியானித்து, "செய்யனே" என்று தொடங்கி, "அமணர் கொளுவுஞ் சுடர்...... பாண்டியற் காகவே" என்று பாடல் தோறும் அமைத்துப் பதிகம் பாடியருளினார். ஆயினும், மங்கையர்க்கரசியாரின் மங்களவாழ்வு, குலச்சிறையாரின் அன்பு, அரசனைச் செந்நெறிப்படுத்தும் கருணையுள்ளம், அரசன் உடலைத் தீண்டித் தம் கரத்தால் நீறுபூசும் அருட் செயல் இவை யாவற்றையுங் கருதி, அத்தீ பையச் சென்று பாண்டியனைப் பற்றுமாறு பாடியருளினார். வெப்பு நோய் பாண்டியனைப் பற்றியது.

அரசனுற்ற துன்பத்தை யறிந்த மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் விரைந்து பாண்டியனை யடைந்தனர். வெப்பு நோயோ பாண்டியனை வருத்தத் தொடங்கியது. சமண முனிவர் செய்தி கேட்டுப் பீலியுடன் அரண்மனைக்கு வந்து தம் மணி மந்திர ஔடதங்களால் அரசனுடைய வெப்ப நோயை நீக்க முயன்று பயன்படவில்லை. அதற்கு மாருக நோய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருந்தது, அரசன் சினந்து சமண முனிவர்களை விரட்டினன். அந்நிலையில் மாதேவியாரும் குலச்சிறை யாரும் அரசனை அடைந்து, சமணர் செயலை எடுத்துக்கூறி அத்தீப்பிணி சம்பந்தர் ஒருவரால்தான் நீக்க முடியும் என்றனர். அருகர்கள் செய்த தீய அநுசிதம் அதனால் வந்து பெருகியது; இதற்குத் தீர்வு பிள்ளையார் அருளே. வளர் வெண் திங்கள் வேணியார்பால் ஞானம் பெற்றவர் விரும்பி நோக்கில் தீய இப்பிணியே அன்றிப் பிறவி(ப் பிணி)யும் தீரும்' என்று அரசன் மனத்தில் நன்கு பதியுமாறு எடுத்துக் கூறினர்.

நோய் தீர்தலையே விரும்பிய மன்னன், "சம்பந்தரால் இந்நோய் நீங்குமாயின் அவர் பக்கம் சேர்வேன்; அவரை அழையுங்கள்" என்ருன். உடனே மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் சம்பந்தரிடம் சென்று அரண்மனைக்கு வந்து அரசன் நோயை அகற்றுமாறு வேண்டினர். சம்பந்தர், தம் குழாத்துடன் புறப்பட்டுச் சோமசுந்தரர் ஆலயத்துக்குச் சென்று இறைவனைப் பணிந்து 'காட்டுமாவது நீ, என்று தொடங்கும் பதிகத்தையும் 'வேத வேள்வியை' என்று தொடங்கும்பதிகத்தையும்பாடியருளிய, அரண்மனைக்கு எழுந்தருளினர். அரசன் கட்டளைப்படி குலச்சிறையார் சம்பந்தரை எதிர்கொண்டழைத்துச் சென்ருர். அச்செயல் கேட்ட சமணர் வந்து, தாமும் தீர்ப்பதாகக் கூறினர். அரசன், "இருதிறத்தீரும் நோயைத் தனித்தனியே நீக்குங்கள். நான் நடுநிலை தவருது யாரால் நீங்கப் பெற்றது என்று கூறுவேன்" என்று கூறினன்.

சம்பந்தர் அரசன் மாளிகைக்குச் சென்று அரசனைக் கண்டார். சம்பந்தரைக் கண்ட சமணர்கள் உள்ளங் கலங்கித் தம் மதக் கொள்கைகளை இடிபோல் முழக்கி வாதம் செய்யத் தொடங்கினர். அப்பொழுது தேவியார் கேட்டுக்கொண்டபடி அரசன் "நீங்களும் சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தரும் தத்தம் தெய்வத்தன்மையால் என் வெப்பு நீக்கித் தெளியச் செய்யுங்கள்,'' என்று சமணர்களை நோக்கிக் கூறினன். இளமையையுடைய சம்பந்தப் பெருமானுக்கு இரங்கி அஞ்சுவது போன்று காணப் பட்ட மங்கயர்க்கரசியாரை ஞானசம்பந்தர் பார்த்து, "மானினேர் விழி மாதராய், வழுதிக்கு மாபெருந்தேவி கேள்; பால் நல்வாய் ஒரு பாலன் ஈங்கு இவன் என்று நீ பரிவு எய்திடேல், ஆனை மாமலை ஆதியாய இடங்களில் (வாழும்) பல அல்லல் சேர் ஈனர்கட்கு ஆலவாய் அரன் துணைநிற்க (யான்) எளியேன் அலேன்." என்றமைந்து தொடங்கும் பதிகத்தைப் பாடித் தேற்றினர்.

சமணர் முதலில் அரசனது இடப்பாகத்திலுள்ள வெப்பு நோயை நீக்க முயன்றனர். ஆனல் அது நீங்காமல் மிகுந்தது. பின் சம்பந்தர் வலப்பக்கத்து நோயை நீக்கத் திருக்கையில் திருநீற்றினை எடுத்துக் கொண்டு, ஆலவாயில் எழுந்தருளியுள்ள இறைவனது திருநீறே மந்திரமும் மருந்துமாகி நோயைப் போக்கும் என்று, "மந்திரமாவது நீறு" எனத் தொடங்கித் திரு நீற்றுப் பதிகத்தைப் பாடிப் பூசுதலும் வெப்ப நோய் அக்கணமே அகன்றொழிந்தது. மன்னன் மறுபக்கத்து நோயையும் நீக்கியருளுமாறு வேண்ட, ஞானசம்பந் தர் அவ்வாறே செய்தருளினர். பாண்டியன் நோய் நீங்கியெழுந்தான். அவன் கூனும் நீங்கியது. நெடு மாறன் சம்பந்தர் பாதங்களில் வீழ்ந்து பணிந்தான்.

உள்ளங் குலைந்து, உடல் நடுங்கி அஞ்சி அகன்று நின்றுகொண்டிருந்த சமணர்—சம்பந்தரை அனல் வாதம், புனல் வாதம் என்னும் இருவாதங்களுக் கழைத்தனர். அவ்விரு வாதங்களிலும் சிவன் அருளால் சம்பந்தரேவெற்றி பெற்றார். நெடுமாறன் சைவனானன். ஞானசம்பந்தர் திருநீறளிக்க நெடுமாறன் உடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறையத் திருநீறு பூசிக்கொண்டான். மதுரை நகர மக்கள் அனைவரும் திருநீறு பூசிச் சைவநெறியில் புகுந்தனர். பாண்டிய நாட்டில் சைவம் தழைத்தது. மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் அளவிலா மகிழ்ச்சி அடைந்தனர்.

ஞானசம்பந்தப் பெருமான் தம் தந்தையார் வந்தடைந்ததும் பாண்டிய நாட்டில் சைவநெறி தழைத்தோங்கச் செய்து சோமசுந்தரப் பெருமான் ஆலயத்திற்குச் சென்று, "வீடலாலவாயிலாய்" என்று பதிகம் பாடிப் பரவி மன்னனிடமும் மங்கையர்க்கரசியாரிடமும், குலச்சிறையாரிடமும் விடை பெற்றுப் பாண்டி நாட்டுப் பல தலங்களையும் தரிசிக்கச் சென்றனர். நெடுமாறனும், மங்கையர்க்கரசியும், குலச்சிறையாரும் சம்பந்தருக்கு வேண்டுமுதவிகளைப் புரிந்து வந்தனர். அரசனும் அரசியும் அமைச்சரும் சைவநெறி நின்றொழுகிப் பேரின்பப் பேறு எய்தினர். அவர்கள் மூவரும் அறுபத்து மூன்று நாயன்மார்கள் தொகைக்குள் அடங்கியவராய்ச் சம்பந்தர், சுந்தரர், சேக்கிழார் என்போரால் பாடப்பெறும் பெரும் பேறு எய்தி என்றும் அழியா இசை கொண்டனர்.

## பயிற்சி

1. கூன் பாண்டியன் என்று யாருக்குப் பெயர்?
2. அவன் மனைவி அமைச்சர் பெயர்களைத் தருக.
3. அரசியும் அமைச்சரும் சமண சமயம் நாட்டில் தழைத்தலைக் கண்டு யாது செய்தனர்?
4. ஞானசம்பந்தர் மதுரைக்குப் புறப்படும் பொழுது திருநாவுக்கரசர் யாது கூறித் தடுத்தார்? அதற்குச் சம்பந்தர் கூறிய பதில் யாது?
5. 'கண்டு முட்டு' 'கேட்டு முட்டு'—விளக்குக.
6. அனல் வாதம், புனல் வாதம் விளக்கம் தருக.
7. சமணர்கள் தோற்ற முறையை விளக்குக?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. திருக்குறள்

(தொடர்ச்சி)

### அதிகாரம் 22 ஒப்புரவறிதல்

ஒப்பு + உரவு; ஒப்புரவு + அறிதல்; உலக நடையினையறிந்து செய்தல். வேத நடை அறநூல்களுள் கூறப்படுகின்றது. ஒப்புரவு தாமே அறிந்து செய்யும் தன்மையது. செய்தல்—உபகாரம் செய்தல். ஒப்புரவு-உபகாரம்.

11. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.

பதவுரை: புத்தேள் உலகத்தும் – தேவர் உலகத்தும்; ஈண்டும் - இவ்வுலகத்தும்; ஒப்புரவின் - ஒப்புரவினைப்போல; நல்ல - நல்லனவாய; பிற - பிற செயல்களை; பெறல் அரிது - பெறுதல் அரிது.

பொழிப்புரை: தேவர் உலகத்திலும் இந்த உலகத்திலும் ஒப்புரவினைப்போல நல்லனவாய பிறசெயல்களைப் பெறுவது அரிது.

விளக்கம்: இந்த உலகத்திலும் தேவர் உலகத்திலும் ஒப்புரவினைப்போல நல்ல பிற செயல் இல்லை என்பது கருத்தாகும். தேவர் உலகத்தில் ஈவாரும் இல்லை; ஏற்பாரும் இல்லை. எல்லோரும் ஒரே தன்மையர். "ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்து, வாழ்வாரே வன்கண்ணவர்" என்றதும் அறியத்தக்கது. ஆதலின் தேவருலகத்தில் ஒப்புரவு செய்தற்கு இடம் இல்லை. யாவரும் ஒப்பது ஆகிய ஒப்புரவுபோல் பிறிதொரு செயல் இல்லை. ஆதலால் இவ்வுலகிற்போல் ஒப்புரவு அறிந்து செய்தல் அரிதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் 23 ஈகை

வறியாராய் ஏற்றவர்க்கு மறுக்காமல் கொடுத்தல். 'இல்லையென் றிரப்போர்க்கு இல்லை' என்று உரையாமல் கொடுத்தல்.

12. நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

பதவுரை: கொளல் -பிறர் கொடுக்கக் கொள்ளுதல். (ஏற்றல்); நல் ஆறு எனினும் - வீட்டுலகிற்கு நல்ல வழி என்று கூறுவாராயினும்; தீது - அதுதீதாகும்; மேலுலகம் இல் எனினும் - கொடுப்போர்க்கு வீட்டுலகம் எய்துதல் இல்லை என்று கூறுவாராயினும்; ஈதலே நன்று-கொடுத்தலே நல்லது.

பொழிப்புரை: ஏற்பது வீட்டுலகினையடைதற்கு நல்ல நெறி என்பார் உளராயினும் அது தீதாகும். ஈபவர்க்கு வீட்டுலகம் இல்லை என்று கூறுவார் உளராயினும் கொடுத்தலே நல்லது.

விளக்கம்: வீட்டுலகிற்கு வழியாயினும் ஏற்றல் தீது என்றார். வீட்டுலகம் இல்லை என்றாலும் கொடுத்தல் நன்று என்றார். இந்த இருவகையாகக் கூறுவார் இல்லை என்பதை நன்கு விளக்கவே இவ்வாறு இக்குறளை யமைத்தார். 'ஈதலே' என்பதிலுள்ள பிரிநிலை ஏகாரத்தால் மற்ற அறங்களிலும் ஈதலே சிறந்தது என்பதைச் சுட்டினார். ஈதல் நல்லது என்று நல்லதைக் கூறவந்த வள்ளுவர் ஏற்றல் தீது என்று தீயதையும் உடன் கூறினார்.

"இன்னுயிரேனும் கொள்வது தீது கொடுப்பது நன்றால்" என்றார் கம்பர். பரஞ்சோதி முனிவர் "ஈவதே பெருமையன்றி யிரக்கின்றது இழிவே அன்றே" என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் 24 புகழ்

புகழ் என்பது கீர்த்தி. இல்லறத்தின் நெறிகளினின்றும் தவருது ஒழுகி வாழ்வார்க்கு (இல்வாழ்க்கை முதல் ஈகைவரை சொல்லப்பட்ட நெறியில் நின்று ஒழுகுவார்க்கு) இம்மைப்பயனுகி இந்த உலகின்கண் தோன்றி இறவாது நிற்பது கீர்த்தி. இக்கீர்த்தி அல்லது புகழ் பெரும்பாலும் ஈதல்பற்றி உண்டாவது. ஆதலின் 'ஈகை'யின் பின் 'புகழ்' வைத்தார்.

13. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
 தூதிய மில்லை யுயிர்க்கு.

பதவுரை: ஈதல்-(வறியவர்களுக்குக்) கொடுத்தல்; இசைபட வாழ்தல் - அதனுல் புகழ் உண்டாகும்படி வாழ்தல்; அது அல்லது - அந்தப் புகழ் அல்லாமல்; உயிர்க்கு - மக்களுக்கு; ஊதியம் இல்லை - இம்மனிதப் பிறவியால் அடையக்கூடிய பயன் பிறிதொன்று இல்லை.

பொழிப்புரை: வறியவர்களுக்கு ஈக; அதனுல் புகழ் உண்டாக வாழ்க; அதுவல்லாமல் மக்களுக்குப் பயன் பிறிதொன்று இல்லை.

விளக்கம்: மனிதப்பிறவிக்குப் பயன் ஈந்து புகழ் அடைதலே. ஈதல் 'வறியார்க்கொன்று ஈவதே ஈகை' என்று முற்கூறினர். ஆதலின், வறியவர்க்கே அளித்தல் வேண்டும். கல்வி, ஆண்மை முதலான பிற காரணங்களால் புகழ் பெறலாமே என்றுலும் உலகில் உயிர் வாழ்க்கைக்கு முதற் காரணம் உண்டியே. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பர். உயிர்க்கு என்று கூறினுரேனும் ஈதலும் புகழ் கோடலும் விலங்குயிர்கட்கு ஏலாமையின் மக்களைக் குறித்து நின்றது.

## அதிகாரம் 25. அருளுடைமை

அருளுடைமை துறவறத்திற்கு இன்றியமையாதது. அருளுடைமையாவது: தொடர்பு பற்ருது இயல்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா உயிர்கண் மேலும் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமை சிறந்ததுபோலத் துறவறத்திற்கு அருளுடைமை மிகச் சிறந்த தாகும். பிற உயிர்க்குற்ற இடரைத் தம் உயிர்க்குற்றதுபோல் எண்ணி வருந்தும் ஈரமுடைமையே அருளுடைமையாகும். அருளுடைமையே துறவறத்தார்க்குச் செல்வம். அருளுடையாரிடத்துத்தான் அறமும் உண்டு. உள்ள நெகிழ்ச்சிக்குக் காரணமாகியது அருள்; அதனால் ஆற்றப்படுவது அறம்.

14. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

பதவுரை: இருள் சேர்ந்த-இருள் நிறைந்த; இன்னா உலகம் புகல்-துன்பத்தைத் தரும் (நரக) உலகத்துட் சென்று புகுதல்; அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு-அருள் நின்ற மனத்தையுடையவர்கட்கு; இல்லை-இல்லையாகும்.

பொழிப்புரை: இருள் செறிந்துள்ளதும் துன்பமே தருவதுமான நரகலோகம் புகுதல் அருள் நிறைந்த மனத்தைப் படைத்தவர்க்கு இல்லை.

விளக்கம்: அருளுடையவர்க்கு இன்னா வுலகமான நரகம் இல்லை. அருளிலார்க்கு இருள் நிறைந்த இன்னா வுலகம் புகுதல் உண்டு. எனவே, நரகத்தையடைய விரும்பாது வீட்டுலகைஅடைய விரும்புவோர் நிறைந்த உயிர்களிடத்து அருளுடையவராதல் வேண்டும். 'அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை' என்று இந்நூலாசிரியரே கூறியுள்ளார்.

## அதிகாரம் 26 புலான் மறுத்தல்

புலால் - ஊன்; மறுத்தல் - ஊனுண்ணுதலை யொழித்தல். ஊன் உண்ணுதல் அருளுடைமைக்கு முற்றிலும் விரோதமானது. ஊன் உண்ணுதல் கொலை பிறத்தலுக்கும் தூயது அல்லாமைக்கும் காரணமாதல் ஆதலின் ஊன் உண்ணுதலை ஒழித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்.

பதவுரை: கொல்லான் - ஓர் உயிரையும் கொல்லாதவனாய்; புலாலை மறுத்தான் — புலாலை உண்ணாதவனாய் உள்ள ஒருவனை; எல்லா உயிரும் - இவ்வுலகிலுள்ள உயிர்கள் எல்லாம்; கைகூப்பித் தொழும் - கைகுவித்து வணங்கும்.

பொழிப்புரை: ஓர் உயிரையும் கொல்லாதவனாய் மாமிசம் உண்ணாதவனாய் உள்ள ஒருவனை இவ்வுலகிலுள்ள உயிர்கள் எல்லாம் கைகுவித்து வணங்கும்.

விளக்கம்: கைகுவித்து வணங்குதல் மக்களுக்கு அன்றிப் பிற உயிர்களுக்கு அமையா. ஆதலின் கைகூப்பித் தொழும் என்பது வணங்கும் என்னும் பொருளது. தானே கொன்று தானே தின்னல், பிறன் கொல்லத் தான் தின்னல், தான் கொன்று பிறன் தின்ன அளித்தல் என்னும் மூன்றும் குற்றமாகும். ஆதலின் தின்னாமை, கொல்லாமை என்னும் இரண்டையும் கூறினார். இவற்றுள் ஒன்றேயுடையராயினும் பயனில்லை என்பதை விளக்கினார். கொல்லாமை, புலாலுண்ணாமை என்னும் இரண்டையுமுடையான் பேரருளுடையவன் ஆதலின் அவன் தேவரும் தொழத்தக்கவனாய்த் தேவரினும் மிக்கான் ஆவன் என்று கூறி, அவன் பெருமையை விளக்கினார். இவ்விரண்டும் பெருங்குற்றமான செயல்கள் என்பதும் அவற்றை நீக்கவேண்டும் என்பதும் கருதியே புலான் மறுத்தல், கொல்லாமை என்னும் இரண்டு அதிகாரங்களாகத் தனித்தனியே இவ்வாசிரியர் கூறியுள்ளார்.

## அதிகாரம் 27 தவம்

தவம் என்பது: மனத்தை ஐம்பொறி வழிகளிலே செல்ல விடாமல் தடுத்தற்பொருட்டு, உண்டி சுருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல், கோடைக்கண் வெயிலில் நிற்றல், மாரியினும் பனியினும் நீர் நிலையில் நிற்றல் முதலாய செயல்களைச் செய்து அவற்றால் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு பிற உயிர்களை ஓம்புதல், தெய்வ வழிபாடு முதலியனவாகும். புலால் மறுத்தவனுக்கே அருள் மிகுதியும் முதிரும். அருள் முதிரத் தவநெறி நிற்றல் இயலும்.

16. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.

பதவுரை: தவத்திற்கு உரு - தவத்தின் வடிவு; உற்ற நோய் - உண்டிசுருக்கல் முதலானவற்றால் தன்னுயிர்க்கு உண்டாகிய துன்பங்களை; நோன்றல் - பொறுத்துக்கொள்ளுதல்; உயிருக்கு உறுகண் செய்யாமை -பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தல்; அற்றே - அவ்வளவினதே.

பொழிப்புரை: தவத்திற்கு வடிவமாவது உண்டி சுருக்குதல் முதலியவற்றால் தன்னுயிர்க்கு உண்டாகும் துன்பங்களைப் பொறுத்தல், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தல் எனும் அவ்வளவினதே.

விளக்கம்: தன் உயிர்க்கு உண்டாகும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதற்குப் பொறுமை மிகவும் வேண்டும்; புலனடக்கமும் வேண்டும். பிற உயிர்களுக்குத்துன்பம்செய்யாதிருக்க அருளுடைமை வேண்டும். எனவே பொறுமையும் அருளுடைமையுமே தவத்திற்கு உரு என்று குறிப்பாக விளக்கினார். இவை இரண்டும் உடையார்கண் மற்றயாவும் அடங்கும். ஆதலில் 'அற்றே' எனத் தேற்றேகாரம் கொடுத்தார். தவத்திற்கு இலக்கணம் கூறவந்த ஆசிரியர் பொறுமை, அருளுடைமை உடையராதல் வேண்டும் என்பர். தனக்குறு துன்பம் பொறுத்தல் பிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்க்குத் துன்பம் செய்யாமை என்று செயல் மேலேற்றிக் கூறினர். உறுகண் - இடுக்கண்; நோன்றல் - பொறுத்தல்.

## அதிகாரம் 28 கூடாவொழுக்கம்

தவத்தோடு பொருந்தாதாய தீய ஒழுக்கம்.

17. மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

பதவுரை: உலகம் - உலகத்திலுள்ள உயர்ந்தோர்கள்; பழித்தது - தவத்திற்குத் தகாது என்று குற்றம் கூறிய ஒழுக்கத்தை; ஒழித்துவிடின் - கடிந்து நீக்கிவிட்டால்; மழித்தலும் - தவம் செய்வார்க்குத் தலைமயிரை மொட்டை யடித்தலும்; நீட்டலும் - சடையாகத் திரித்து நீட்டி வளர்த்தலும், வேண்டா - வேண்டுவதில்லை.

பொழிப்புரை: உலகத்திலுள்ள உயர்ந்தோர்கள் தவத்திற்குக் குற்றமாம் என்று கடிந்தவற்றைக் தாமும் கடிந்து நீக்கிவிட்டால் தவம் செய்வார்க்குத் தம் தலைமயிரை மொட்டை யடித்தலும்; சடையாகத் திரித்து நீட்டி வளர்த்தலும் வேண்டுவதில்லை.

விளக்கம்: உயர்ந்தோர்களால் தவத்திற்குக் குற்றமென்று நீக்கியவற்றைத் தவம் செய்வோர் தாமும் கடிந்து நீக்கவேண்டும். தலைமயிரைப் பறித்தல், மொட்டையடித்தல், சடை வளர்த்தல், துவராடை யுடுத்தல், தண்டு தரித்தல் முதலான புறக்கோலங்கள் வேண்டுவதில்லை. துறவு என்பது உள்ளத்துறவு. அத்துறவறத்தில் ஆற்றும் அருஞ் செயல் தவம். அத்தவம் உள்ளத் தூய்மையாற் செய்யப்படல் வேண்டும். உலகத்தில் உயர்ந்தோர்கள் உணர்ந்து கூறுவனவும் தாம் கற்றுணர்ந்த நூலினுல் உணர்ந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனவும் ஆகிய இவை தகா என்று அறியப்பட்டவற்றைத் தாம் அகற்றுதல் வேண்டும். எனவே, தவத்திற்கு முக்கியம் நல்லொழுக்கமே அன்றி வேடம் அன்று என்று குறித்தார். மழித்தல் - தலையை வழவழ என்று மொட்டையடித்தல். இதனை முண்டிதம் என்பர். மழித்தல் என்ற சொல்லாலே மயிரைக் குறித்தலால் பறித்தலும் கொள்ளப்பட்டது. சமணர் தம் தலைமயிரைப் பறிப்பர். "இல்லாத் தெய்வம் பொத்தித் தம் மயிர்பறிக்கும் சமணர்" என்று அப்பர் கூறுவது அறிக. அவர்கள் தலைமயிரை ஒவ்வொன்ருய்ப் பிடுங்குங்கால் உண்டாகும் இசிவு நோயைப் பொறுத்துப் பொருட்படுத்தாமல் 'பரமசுகம்' என்று கூறுவர். இவ்வாறு கூறுதலால் சமணர் செயல் வள்ளுவர்க்கு உடன்பாடன்று என்று முணரலாம். 'உலகம் என்றது உயர்ந்தோர் மாட்டே' ஆதலின் உலகம் என்பது உயர்ந்தோரைக் குறித்தது. உயர்ந்தோர் பழிப்புடையது என்று நீக்கியவற்றைத் தாமும் நீக்குதலே தவம் ஆகும்.

## அதிகாரம் 29 கள்ளாமை

பிறருக்கு உடைமையான யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை. கருதுதலும் செய்தலோடு ஒக்கும் ஆதலால் கள்ளாமை என்ருர். களவு மற்றப் பாவச்செயல்களையும் தூண்டிச் செய்யுமாறு செய்து விடும். துறவறத்தார் வஞ்சித்துப் பிறர்பொருளைத் கொள்ளக் கருதுதல் மிகப் பெரியதொரு பாவமாகும்.

18. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.

பதவுரை: அருள் கருதி - அருளினது உயர்ச்சியை அறிந்து; அன்பு உடையர் ஆதல் - அந்த அருள் மீது அன்புடையராய் ஒழுகுதல்; பொருள் கருதி - பிறர் பொருளை வஞ்சித்துக் கொள்ளக் கருதி; பொச்சாப்

புப் பார்ப்பார் கண் - அவர்களது சோர்வு பார்ப்பவர்களிடத்தில்; இல் - இல்லையாகும்.

பொழிப்புரை: அருளினது மேன்மையை நினைத்து அந்த அருள்மீது அன்பு உடையராய் ஒழுகுதல் பிறர் பொருளை வஞ்சித்துக் கொள்ளக் கருதி அவர்கள் மறந்திருக்குஞ் சமயத்தைப் பார்ப்பவர்களிடத்தில் இல்லையாகும்.

விளக்கம்: களவு எண்ணம் உடையவரிடம் துறவொழுக்கம் நிலைபெறாது. அவர்களுக்கு அருளின் மேன்மையும் அந்த அருளின்மீது அன்பும் உண்டாகா. தமக்குரிய பொருளையும் அதனது குற்றம் நோக்கித் துறந்தவர் என்பார் துறவுமேற் கொண்டவர். அவ்வாறு துறந்தவர் பின் பிறர்க்குரிய பொருளை நன்கு மதித்து அதனை வஞ்சித்துக் கொள்வதற்கு அவர்களது சோர்வு (மறந்திருக்கும் சமயத்தை) பார்ப்பாரானால் அந்த மருட்சியால், அவர்களிடம் உயிர்களிடத்து அருள் செய்தல் என்ற குணம் இல்லையாகும். பிறர் பொருளின்மேல் வைத்த அறிவு மயக்கமாகிய மருட்சியால் உயிர்களிடத்து அருளைப் புரியும் அருள் நிலை வழுவா தொழுகல் என்ற தெளிந்த அறிவாகிய தெருட்சி கூடாது ஆகும். பொச்சாப்பு - மறதி (பொச்சா + பு ) பொச்சாப்பு: தொழிற்பெயர்.

## அதிகாரம் 30 வாய்மை

'வாய்மை, மெய்ம்மை, உண்மை என்பன மூன்று சொற்கள் 'மெய்'யினது தன்மை என்ற பொருளைத்தரும். வாய்மை - சத்தியம். சொல்லில் உண்மை, செயலில் உண்மை, உள்ளத்தில் உண்மை என்று மனம் மொழி, மெய் என்ற திரிகரணங்களாலும் உண்மை எதிர்பார்க்கப்படுதலின் மனத்தில் நிகழ்வது உண்மை; சொல்லில் நிகழ்வது வாய்மை; செயலில் நிகழ்வது மெய்ம்மை என்னும் நுணுகிய பாகுபாடும் உண்டு. பொதுவாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியம் என்பதற்கு வாய்மை, மெய்ம்மை, உண்மை என்ற மூன்று சொற்களும் கூறப்படும்.

19. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

பதவுரை: புறம் தூய்மை-ஒருவனுக்கு உடம்பு தூயதாகும் தன்மை; நீரான் அமையும்-நீராலே உண்டாவதாம்; அகம் தூய்மை - அவனுடைய உள்ளம் (மனம்) தூயதாகும் தன்மை; வாய்மையால் காணப்படும்; வாய்மை (சத்தியத்தினுல்) யால் உண்டாகும்.

பொழிப்புரை: ஒருவனுக்கு உடம்பு தூயதாகும் தன்மை நீராலே உண்டாவதாம். அவனுடைய உள்ளம் தூயதாகும் தன்மை வாய்மையாலே உண்டாவதாம்.

விளக்கம்: காணப்படுவது உள்ளதாதலின் உண்டாம் என்று கூறப்பட்டது. தூய்மை உடம்பிற்கும் உள்ளத்திற்கும் வேண்டும். உடம்பு தூய்மையாவது அழுக்கு நீங்குதல் (வாலாமை நீங்குதல்). உள்ளம் தூய்மையாவது மெய்யுணர்வுபெறல். அதாவது தத்துவ ஞானம் பெறல். உடம்பு தூய்மையாதல் புறத்தூய்மை யாதல். மனம் தூய்மையாதல் அகத்தூய்மை. புறத் தூய்மை நீரினுல் அல்லாமல் இயலாது. அகத்தூய்மை வாய்மையினுல் அல்லாமல் இயலாது. துறவறத்தார்க்கு அகத்தூய்மை, புறத்தூய்மை இரண்டும் வேண்டும் புறத்தூய்மை நீரானமையயும். அகத்தூய்மை வாய்மை யாற் காணப்படும் இந்த இரண்டு வாக்கியங்களுக் கும் இடையில் 'போல' என்ற உவம உருபு வராமை யால் எடுத்துக் காட்டுவமையணி.

## அதிகாரம் 31 வெகுளாமை

சினம் உண்டாவதற்குக் காரணம் ஒருவனிடம் உள தாயினும் வெகுளா திருத்தல். வெகுளி - கோபம்; சினம் வெகுளாமை என்பதற்குக்கோபங் கொள்ளக் கருதாமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பொருள் கொளலுமாம். மேலதிகாரங்களைப் போல் கோபங் கொள்ளக் கருதுதலும் குற்றம் ஆகும்.

20. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்ப னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்.

பதவுரை:- சினம்-தன்னுடைய கோபம்; செல்லிடத்து-பலிக்கக்கூடிய இடத்தில்; காப்பான் – அதனை எழவிடாது காப்பவன்; காப்பான்-அருளினால் சினத்தை எழாது தடுத்தவன் ஆவான்; அல் இடத்து-சினம்பலிக்காத இடத்து; காக்கின் என்-சினத்தை எழாது தடுத்துக்கொண்டால் என்ன?; காவாக்கால் என்-தடுக்காமல் இருந்தால் என்ன?

பொழிப்புரை:- தன்னுடைய கோபம் பலிக்கக்கூடிய இடத்தில் கோபத்தை எழவிடாது அருளினால் தடுத்துக் கொள்பவனே சினத்தை காத்தவன் ஆவன். தன்னுடைய சினம் பலிக்காதவிடத்தில் எழும் சினத்தைத் தடுத்துக் கொள்ளாவிட்டால் என்ன? (பயன் ஒன்றுமில்லை.)

விளக்கம்;- தன்சினம் பலிக்கும் இடம் மெலியாரிடம் பலிக்காத இடம் வலியாரிடம். தவம், பலம் என்னும் இரண்டும் கொள்க. வலியார்மேற் காவாத வழியும் அவர்க்கு ஒரு தீங்குமில்லை; காத்த வழியும் அறன் இல்லை.

## பயிற்சி

1. 'ஒப்புரவறிதல்' - என்றால் என்ன?
2. உலகில் தீயன நல்லன எவை என்பது வள்ளுவர் கருத்து?
3. உயிர்க்கு ஊதியம் யாது?
4. அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு யாது இல்லை?
5. எல்லா உயிரும் தொழும் தகுதியுடையோன் யாவன்?
6. தவத்திற்கு உருவம் யாது?
7. பொருள் தருக:
பொச்சாப்பு; நோன்றல்; இன்றுவுலகம்; ஒப்புர வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதிரி வினாப்பத்திரம்

நேரம் : 2 மணி.

குறிப்பு: எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

### பகுதி - அ

1. "ஆலந்தானுகந்து" - என்ற தேவாரம் யாரால் எவ்விடத்துப் பாடப்பட்டது?
2. உமாபதி சிவாசாரியர் இயற்றிய இரு நூல்களின் பெயர் தருக.
3. 'கொற்றங் குடியடிகள்' என்ற பெயரால் சுட்டப்படுபவர் யார்?
4. மறைஞான சப்பந்த சுவாமிகளின் இயற்பெயர் யாது?
5. 'வாடி நீவாளா வருந்தல்' என்று சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட நாயனார் யார்?
6. தாயுமானவர் யாரிடம் உபதேசம் பெற்றார்?
7. கோயிற் பூந்தோட்டத் தொண்டு புரிந்து உய்தி பெற்ற இரு சிவனடியார்கள் பெயர் தருக.
8. பஞ்ச பூததலங்களுள் ஆகாசத்தலம் எது?
9. 'காலகாலன்' எனப்படுவோன் யார்?
10. நமிநந்தியடிகள் மேற்கொண்ட இறை தொண்டு யாது?
11. பயன் கருதாது செய்யப்படும் வினைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
12. சிவபுராணம் - ஏழாம் திருமுறை இந்நூல்களின் ஆசிரியர்கள் யாவர்?
13. மங்கையர்க்கரசியாரைக் குறிக்கும் வேறு இரு பெயர்கள் தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. எவ்வாறு பிரதட்சணம் செய்தல் வேண்டும்?

15. கடவுளின் இருநிலைகள் எவை?

16. தாயுமானவரின் குரு பூசைத் தினம் யாது?

17. இன்னு உலகம் புகல் யாருக்கு இல்லை?

18. தவத்திற்கு உருவம் யாது?

19. அகச்சுத்தம் எதனுல் ஏற்படும்?

20. சிவஞான முனிவர் இயற்றிய நூல்களுள் இரண்டின் பெயர் தருக.

(20 × 1½ = 30 புள்ளிகள்)

## பகுதி - ஆ

21. பின்வருவோரிடம் விளங்கிய அற்புதங்களில் ஒவ்வொன்று தருக.

(அ) உமாபதி சிவாசாரியர்

(ஆ) சுந்தரமூர்த்திநாயனுர்

(இ) தாயுமான சுவாமிகள்

22. வீரட்டத் தலங்களையும் அங்கு நிகழ்ந்த வீரச் செயல்களையும் தருக.

23. மூவகை ஆன்மாக்களையும் பகுத்துக் காட்டுக.

24. "கடவுள் ஆன்மாக்களுக்குச் சரீரத்தைக் கொடுக்கின்ருர்" ஏன்?

25. பூந்தோட்டத்தில் நடைபெறும் தொழில்கள் ஐந்தினுக்குக் குறையாது தருக.

26. "உற்ற நோய் நோன்றல் ..." என்ற தொடக்கக் குறளைச் சீர்பிரித்து எழுத்துப் பிழையின்றி எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. 'கொழுவுஞ் சுடர் பையவே சென்று பாண்டியற்காகவே' இது யாரால் கூறப்பட்டது? ஏன் அவ்வாறு கூறப் பட்டது?

28. சரியை வழிபாட்டில் நிற்போர் ஆற்றக் கூடிய கருமங்கள் ஐந்தினுக்குக் குறையாது தருக.

($8 \times 5 = 40$ புள்ளிகள்)

## பகுதி - இ

29. பின்வரும் திருவருட் பாக்களுள் இரண்டு எழுதி அவற்றின் பதிக வரலாற்றினையுந் தருக.

(அ) ஆலந்தா னுகந்து ..................................

(ஆ) முதுவா யோரிகதற ..................................

(இ) பொடியார் மேனியனே ..................................

($2 \times 7\frac{1}{2} = 15$ புள்ளிகள்)

30. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி பத்து வரிகளுக்குக் குறையாத ஒரு கட்டுரை வரைக.

(i) திருவிளக்கேற்றுதல்

(ii) உயிர் (ஆன்மா)

(iii) மங்கையர்க்கரசியார் சைவம் காத்தமை.

(15 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் பருவம்

556—12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. பதி [கடவுள்]

மக்கள் விரும்புவது இன்பம்; விரும்பாமை துன்பம். இன்பம் அடைதலே மக்கட் பிறவியின் நோக்கமாகும். நிலையில்லாத உலக இன்பங்கள் யாவும் முடிவில் துன்பமாவதைக் கண்ட மக்கள், நிலையான இன்பத்தை அடைவதற்கு நாடினர். அந்நிலையில் கண்ட வழிகளே சமயங்கள் எனப்படும். சமயங்கள் பலவாயினும் எக்காலத்தும் எந்நாட்டவராலும் ஏற்றுக் கொள்ளத் தக்க சமயம் சைவசமயமென்பது சிந்தனையாளரின் கருத்தாகும். சைவசமயம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களைப் பற்றிக் கூறுகின்றது. அவற்றுள் முதற் பொருள் பதியாகும்.

பதி, தலைவன், இறைவன் என்பன ஒருபொருட் சொற்கள். கடவுள்—இறைவன் என்னும் பெயர்கள் போலவே "பதி" என்பதும் எச்சமயத்தவரும் கடவுளைக்குறிக்க வழங்கும் பொதுப் பெயராகும். சிவம், சிவன், பரமசிவம் என்னும் பெயர்கள் சைவசமயத்தவர் பதியினைக் குறிக்க வழங்கும் சிறப்புப் பெயர்களாகும்.

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களில் மேலானபதி: அருவம்-உருவம்; குணம்-குறியாது மின்றி ஒன்றேயாய், அழிவில்லாததாய், அளவற்றதாய், உயிர்களுக்கு அறிவாகிப் போக்குவரவு அற்றதாய் மிளிரும் தன்மையினை உடையது. அஃது மன்றி அளவிற்கு உட்படாததாய், அடைதற்கு அரியதாய், அடைதற்கு உரியதாய், சிறியதிற் சிறியதாய், பெரியதிற் பெரியதாய் விளங்குவதும் ஆகும். இப்பதியினையே "சிவம்" என்று மெஞ்ஞானிகள் கூறினர். இங்ஙனம் விளங்கும் பதியாகிய முழுமுதற் சிவத்தின் தன்மையைச் சிறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியல்பு (சொரூப இலட்சணம்) பொதுவியல்பு (தடத்த இலட்சணம்) என இரண்டு நிலைகளில் வைத்துச் சைவ சித்தாந்த நூல்கள் பேசுகின்றன.

### 1. சிறப்பியல்பு (சொரூப இலட்சணம்)

அநாதி முத்த சித்துருவாகிய இறைவன் ஒன்றிலும் தோய்வின்றித் தானே சுயம் பிரகாசமாய்ப் பெயர்-குணம்-குறி இல்லாது உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூன்று நிலைகளையும் கடந்து நிற்பன. இந்நிலையில் சிவன் எனவும் உயிர்களோடு ஒன்ருய், வேருய், உடனுய் நிற்குந் தன்மையில் சக்தி எனவும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களை ஆற்றுந் தன்மையில் பதியெனவும் பெயர் பெறுவான் என்க.

### 2. பொதுவியல்பு (தடத்த இலட்சணம்)

சிவம் ஆன்மாக்கள் மீது வைத்த கருணையினுல் தன் சொரூப நிலையினின்றும் பல படிகள் இறங்கிப் படைத்தல் முதலாய ஐந்தொழில்களையும் நிகழ்த்துகின்றது. இந்நிலையினையே தடத்த நிலையென்பர். இது பொதுவியல்பு என்றுஞ் சொல்லப்படும். 'சிவன்' என்னும் நாமமுடைய பெம்மான் உடலில் உயிர் போல் உயிருக்குள் உயிராய்க் கலந்து ஒன்ருயும், சூரியன் ஒளியும் கண்ணொளியும் கலப்பினுல் ஒன்ருயினும் இரு ஒளிகளும் வேருதல் போல உயிரின் வேருகவும், கண்ணொளியோடு உயிர் அறிவு கலத்தல் போல் உயிருக்குள் உயிராதல் தன்மையால் உடனுகவும் நிற்கின்ருர். இந்நிலையில் சிவமும் சத்தியும், நெருப்பும் சூடும் போலப் பிரிக்கமுடியாமல் இயைந்து அருள் சுரக்கின்றனர். நெருப்பின் சூடு அவித்தல், பொரித்தல், வறுத்தல் முதலிய வேறு வேறு தொழில்களைச் செய்வது போலவே சிவபிரானது சத்தியும் படைத்தல் முதலாய பஞ்ச கிருத்தியத்தைச் செய்கின்றது. இப்படிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து ஆன்மாக்களை நல்வழிப்படுத்துதல் சத்தியின் இயல்பு ஆகும். எனவே சிவத்தின் கருணைக் குணம் சத்தி எனப்படும். சிவசத்தித் தொடர்பினை உமாபதி சிவாசாரியர் பின்வருமாறு பகர்கின்றார்.

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்".

—திருவருட்பயன்

## மூவகைத் திருமேனிகள்

இறைவன் உயிர்கண்மேற் பெருங்கருணை உடையன். இதனால் சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்கு அருவத் திருமேனிகளையும் மகேசுரன், உருத்திரன், திருமால், பிரமன் என்னும் நான்கு உருவத் திருமேனிகளையும் சதாசிவம் என்னும் அருவுருவத் திருமேனி ஒன்றையும் உடையனாய் நின்று அருள் புரிகின்றான். இத்திருமேனிகள் ஒன்பதும் சிவம் கொள்ளும் நவபேதங்கள் என்பது சித்தாந்தச் செந்நெறியாளர் கருத்தாகும்.

அருவத்திருமேனி: சிவம், சத்தி, நாதம், விந்து என்ற நான்கும் வெளிப்படாமல் சிவத்தினிடம் நிகழ்வதால் அருவத்திருமேனிகள் எனக் கூறப்பட்டன. இத்திருமேனிகளின் தொடர்பினை ஓர் உதாரணமுகத்தால் விளக்குவாம். அரசனுக்கு ஒப்பானது சிவம். அரசன் நாட்டைப் பரிபாலிக்கும் முறைபற்றி எண்ணும் நிலை போன்றது சத்தி. தனக்குள் அடங்கியுள்ள அதிகாரிகளை ஆட்சித் தொழிலுக்குத் தெரிந்தெடுக்க அரசன் நினைப்பதைப் போல்வது நாதம், அதிகாரிகளை அரசன் தேர்ந்தெடுத்தல் போல்வது விந்து. இத்திருமேனிகள் நான்கும் யோகிகளுடைய வழிபாட்டிற்கு உரியனவாகும்.

அருவுருவத்திருமேனி: இது சதாசிவம் என்னும் சிவலிங்கவடிவம் ஆகும். சிவலிங்கம் கண்ணுக்குப் புலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்ற உருவமுடையதாயினும் கை, கால் முதலிய உருவம் இன்மையால் அருவுருவம் எனப்படும். இதில் சிவம் சத்தியோடு கூடிப் பிறபொருளோடு கலந்தும் கலவாமலும் நிற்பதால் சதாசிவம் எனப்பட்டது. இத் திருமேனி கிரியை நெறி நிற்பார் வழிபாட்டிற்குரிய தாகும்.

உருவத்திருமேனி: மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரமன் என்னும் நான்கும் சிவபெருமானின் உருவத்திருமேனிகள் எனப்படும். இத்திருமேனிகள் உருவமாகக் காணப்படும் தன்மையால் உருவத்திருமேனிகள் எனப்பட்டன. இவை சரியையாளரின் வழிபாட்டிற்கு உரியனவாகும்.

## ஐந்தொழில்கள்

இறைவன் ஆன்மாக்கள் மீது பெருங்கருணை உடையன். அதனுல் அவன் அவைகட்குப் பேரின்பப் பெருவாழ்வு அளிக்கும் பொருட்டுப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களை இடையருது புரிகின்ருன். இவ்வுண்மையினை உணர்த்தும் தன்மையில் இறைவன் தில்லைத் திருநடனத்தினை மேற்கொண்டு நடராசமூர்த்தியாக இன்றும் காட்சியளித்துக்கொண்டிருக்கின்ருர்.

படைத்தல்: ஆன்மாக்கள் ஆணவ மலத்தினின்றும் நீங்குதற்கு வினைகள் செய்து வினைப்பயன்களை அனுபவித்தல் வேண்டும். வினைகள் செய்வதற்காகவே வினையுடம்பு ஆன்மாக்களுக்கு அளிக்கப்படுகிறது. இது படைத்தல் எனப்படும். படைத்தலாவது: ஆன்மாக்களுக்குத் தனுகரண புவன போகங்களை முதற் காரணத்தில் (மாயையில்) நின்றும் தோற்றுவித்தல் என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது கருத்தாகும். படைத்தலாகிய தொழிலைச் சிவபெருமானே பிரமாவை அதிட்டித்து நின்று ஆற்றுகின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காத்தல்:** உயிர்கள் தாமாற்றிய கன்ம பலன்களை அனுபவிக்கும் வரை உடலுடன் அவற்றை நிலைத்து வாழச் செய்தல் காத்தல் எனப்படும். அரசன் முறை பிறழ்ந்தாரைத் தெருட்டி ஆதரித்தல் போல இறைவன் விட்டுணுவை நிலைக்களனாகக் கொண்டு காத்தற் றொழிலைப் புரிகின்றார். "தோற்றுவிக்கப்பட்ட தனுகரண புவன போகங்களை நிறுத்துதல்" காத்தலாகும் என்பது நாவலர் ஐயா அவர்களது கருத்தாதல் காண்க.

**அழித்தல்:** வேலை செய்து களைத்தவன் பின்னர் ஆறியிருப்பது போல இருவினைகளைச் செய்து இளைத்த ஆன்மாக்கள் சில காலம் ஆறியிருப்பதற்காகவே அழித்தற் றொழில் நடைபெறுகின்றது. அழிப்பு இளைப் பாற்றல்" என்கின்றது ஞானசாத்திரம். இத்தொழிலைச் சிவபெருமான் வேறொன்றினையும் அதிட்டித்து நிற்ற லின்றித் தானே புரிதலின் உருத்திரன் எனப்படுகின் றார்.

**மறைத்தல்:** ஆன்மாக்கள் கன்மபலன்களை அனுப விக்க வேண்டியுள்ளன. அவர்களுடைய கன்ம பலன் களை அனுபவிக்கச் செய்யும்போது அப்பொழுது அனுபவிக்க வேண்டாத கன்மங்களை மறைக்க வேண் டிய நிலை ஏற்படுகின்றது. அத்துடன் அனுபவிக்கும் கன்மங்களில் உள்ள குணம் குற்றங்களையும் மறைத் தல் செய்ய வேண்டியுள்ளது. அங்ஙனம் செய்யா விடத்து உயிர்களுக்கு இருவினை யொப்பு விளையாமற் போம். எனவே மறைத்தலாவது: "மலத்தின் வலிமை யைத் தடுத்து ஆன்மாக்களைத் தூயனவாக்குதற்காகச் செய்யப்படுந் தொழில்" என்பது பொருளாகும். இத் தொழிலை ஆற்றுகின்ற நிலையில் சிவபெருமான் மகே சுரன் என அழைக்கப்படுகின்றார்.

**அருளல்:** ஆன்மாக்களுக்குப் பாசத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதல் அருளல் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தல் முதலிய நான்கினாலும் வலியழித்த ஆணவ மலத்தோடு ஏனைய கன்ம, மாயா மலங்களையும் நீக்கிப் பேரின்பத்திற் சேர்த்தலாகிய செயலைச் சிவபெருமான் சதாசிவம் என்னும் பெயரோடு அருளுகின்றார். சதா சிவம் என்றால் சத்தியோடு கூடிய சிவம் என்பது பொருளாகும். இவ்வடிவம் ஆலயங்களில் மகாலிங்கம் என்னும் பெயரோடு திகழ்கின்றது.

## கடவுள் ஒருவரே

அறிவியலுக்கு முதன்மையளிக்கும் இவ்விஞ்ஞான காலத்தும் மெய்ஞ்ஞானத்தை உணர்த்த வல்ல சமயம் சைவ சமயமாகும். இச்சமயத்திற் பல கடவுளர் வழி பாடு இடம் பெற்றிருக்கின்றது. பாசஞானம் பசு ஞானம் வழிப்பட்ட புறச்சமய வாதிகள் இவ்வழி பாட்டின் உண்மை புலனாகாவகையில் சைவசமயத்தில் ஏகதெய்வக் கொள்கை இல்லையெனவும் உருவழிபாடு இருத்தலினால் உயர்ந்த சமயம் ஆகாதெனவும் கூறு கின்றனர். இவர்கள் கூற்றுத் தவறானதென்பதற்குச் சைவசமயத்தில் அகப்புறச்சான்றுகள் அநேகம் உள. அவற்றுள் ஒரு சிலவற்றினை ஈண்டுத் தருவாம்.

I. கடவுள் ஒருவரே: அவர் நாமரூப மற்றவர். ஆன் மாக்களின் (உயிர்களின்) வழிபாட்டிற்காகப் பல உருவங்களையும் பல பெயர்களையும் ஏற்றருளுவர்.

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம்
திருநாமம் சூட்டிநாம் தெள்ளேணங் கொட்டாமோ".
—திருவாசகம்

II. கடவுள் விருப்பு - வெறுப்பு அற்றவர் மாற்றம் அற்றவர் – (நிர்விகாரி). ஆயினும், ஆன்மாக்கள் மலத்தினின்றும் விடுபட்டு முத்தியடைதற்காகத் தமது திருவருட் சத்தியினால் ஐந்தொழில் நிகழ்த் துவர். எவ்வாறு எனில்: வானத்தில் சூரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகாரமற்றிருக்கவும் அவன் சந்நிதியில் தாமரை மலர்வதும், ஆம்பல் கூம்புவதும், நெய் உருகுவதும், சேறு இறுகுவதும் எவ்வாறு நிகழ்கின்றதோ அவ்வாறேயாம் என்க. சூரியனுக்குக் கிரணம் போலவும், நெருப்பினுக்குச் சூடுபோலவும் இறைவனுக்கு (சிவத்துக்கு)ச் சத்தி இணைந்திருக்கிறது. நெருப்பின் சூடு அவித்தல், பொரித்தல், வறுத்தல் முதலாய செயல்களைச் செய்தல் போலத் திருவருட்சத்தியே படைத்தல் முதலாய பஞ்ச கிருத்தியங்களைச் செய்து பல பெயர்களைப் பெறுகின்றது.

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்".

—திருவருட்பயன்

III. சிவபெருமானுக்கு மனைவியென்றும் மக்களென்றும் கூறப்படுவதெல்லாம் உண்மையில் சத்தியின் பல்வேறு வடிவங்களே. இவற்றில் எவ்வெவ் வடிவங்களில் எம்மனம் ஈடுபாடு கொள்ளுகிறதோ அவற்றை நாம் விரும்பி வழிபடுகின்றோம். சமய உண்மை உணர்ந்தவர்கள் பரம்பொருளின் ஒரு திருக்கோலமே இது என்ற உண்மை உணர்ச்சியில் வழிபடுவார்கள். உண்மை உணராநிலையில் வழிபடினும் அது தவறாக மாட்டாது. மழை நீர் பல வழியாகவுஞ் சென்று ஈற்றில் கடலையடைதல் போன்று பல தேவரை வணங்கிய வணக்கமும் பரம்பொருளையே சென்று சேரும்.

"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்......"

—சிவஞானசித்தியார்.

IV. ஒருவர் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நிலைகளிலிருந்து எடுத்துக்கொண்ட தம்முடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவப் படங்களை வீட்டில் தொங்க விட்டிருக்கின்ருர். அங்குவந்த புதியவர் ஒருவர் மணக்கோலத்தில் இருப்பவரும் தாடியுடன் இருப்பவரும் ஒருவர் தாம் என்பதனை எளிதில் அறியாவிட்டாலும் வீட்டில் உள்ளவர்கள் அவ்வுண்மையினை எளிதில் நன்கு அறிவர். அவர்களும் அவ்வடிவங்களில் ஒன்று இரண்டினையே விருப்பமானவை யெனக் குறிப்பிடக் கூடும். இதேபோன்று பரம்பொருள் பல மூர்த்திகளில் நின்று அருள் செய்யினும் வழிபடுவோர் தமது தகுதிக்கும் மனநிலைக்கும் ஏற்ற மூர்த்திகளையே வழிபடுகின்ருர்கள். அவர்கள் வழிபாட்டின் பயனை மூலமூர்த்தியாகிய பரம்பொருளே அருளுகின்ருர்,

## பயிற்சி

1. சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் யாவை?
2. கடவுளின் இரு நிலைகள் எவை?
3. சிவம்-சத்தித் தொடர்புக்கு இரு உதாரணங்கள் தருக.
4. ஆன்மாக்களின் பொருட்டு இறைவன் எடுக்கும் மூவகைத் திருமேனிகள் எவை?
5. அருவுருவத் திருமேனியை விளக்கும் வடிவம் யாது?
6. படைத்தலாவது யாது?
7. பின்வருவனவற்றிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக. மகேசுரன்; அழித்தல்; தடத்த இலட்சணம்; சைவ சித்தாந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. கோயிற்கிரியை

மனிதன், உள்ளம் உடல் வசிக்கும் இல்லம் என்பவற்றைத் தூய்மைப்படுத்தவும் தான் விரும்பும் பேறுகளை இறைவனிடம் பெற்றுக் கொள்ளவும் விரும்புகின்ருன். இதனுல் இல்லங்களிலும் கோயில்களிலும் மந்திரங்களோடு இணைந்து அவனுல் மேற்கொள்ளப்படும் நற்கிருத்தியங்கள் கிரியைகள் எனப்படும். தான் மாத்திரம் அன்றிப் பிற உயிர்களும் நல்வாழ்வு வாழவேண்டும் என்கின்ற கருத்திஞலும் அவன் அதனைச் செய்கின்ருன். அதனுல் கிரியைகள் ஆன்மார்த்த கிரியைகள், பரார்த்த கிரியைகள் என இருவகைப்படுகின்றன. கோயில்களில் நடைபெறும் கிரியைகள் பொதுவாகப் பரார்த்த கிரியைகளேயாகும்.

### நித்திய கிரியைகள்

திருக்கோயில்களில் நடைபெறும் கிரியைகள் நித்திய கிரியை, நைமித்திகக்கிரியை என இரு பிரிவில் அடங்கும். நாடோறும் நடைபெறும் கிரியைகள் நித்திய கிரியைகள் எனப்படும். விசேட புண்ணிய காலங்களிலும் திருவிழா நாட்களிலும் நடைபெறும் கிரியைகளை நைமித்திகக் கிரியைகள் என்பர். கோயில்களின் வசதிக்கும் மரபுக்கும் அமைய நடைபெறும் பூசைகளும் நித்தியோற்சவம் என்னுந் திருவிழாவும் நித்திய கிரியைகளில் அடங்கும். அநேக ஆலயங்களில் நித்தியமும் நிகழும் கிரியை பூசையே ஆகும்.

பூசை, திருக்கோயில்களின் வசதி-விதிமுறைகளை அனுசரித்துத் தினமும் பலமுறை நிகழும். திருச்செந்தூர் போன்ற சில தலங்களில் பன்னிரு காலமும் ஏனைய பெருங் கோயில்களில் ஆறுகாலமும் வசதி குறைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களில் மூன்று காலமும் பூசைகள் நடைபெறு கின்றன.

ஆறுகாலப்பூசை:- உஷக்காலப்பூசை, காலைசந்திப் பூசை, உச்சிக்காலப் பூசை, சாயங்காலப்பூசை, இரண் டாங்காலப்பூசை, அர்த்தயாமப்பூசை என்பன ஆறு காலப் பூசைகள் ஆகும். இவற்றில் உஷக்காலப்பூசை- சூரியன் உதிக்க மூன்றே முக்கால் நாழிகையின் முன்ன ரும், காலை சந்திப்பூசை - சூரியன் உதித்தபின் ஏழரை நாழிகைக்குள்ளும், உச்சிக்காலப் பூசை-நடுப்பகலிலும், சாயங்காலப்பூசை-சூரியன் மறைவதற்கு மூன்றே முக் கால் நாழிகைக்கு முன்னரும் நிகழ்த்தப்படும். சாயங் காலப் பூசை - சாயரட்சைப் பூசை எனவும் வழங்கப் படும். இரண்டாங் காலப்பூசை-சாயங்காலப் பூசையி லிருந்து மூன்றே முக்கால் நாழிகையில் நிகழும். அடுத்து ஆறுவதாகிய அர்த்தயாமப்பூசை-இரண்டாங் காலப்பூசையில் இருந்து மூன்றே முக்கால் நாழிகை வரை உள்ள காலப்பகுதியில் நிகழ்வு பெறும் என்பர்.

பூசையின் அங்கங்களாக அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், தீபாராதனை, அருச்சனை, தோத்திரம், வாழ்த்து என்பன அடங்கும். இவை நித்திய பூசை யின் முக்கிய அம்சங்களாக மேற்கொள்ளப்படுகின் றன. இவற்றில் தீபாராதனை, அருச்சனை, வாழ்த்து என்பன குறித்து ஒரு சிறிது அறிந்திருத்தல் நன்று.

தீபாராதனை:- பலவகைத் தீபங்களை இறைவன் திரு முன்னர் பிரணவ வடிவமாகச் சுற்றிக் காட்டுதலை அருச் சகர் இப்பூசையின் போது மேற்கொள்வார். தீபாரா தனை நடைபெறும்பொழுது அருச்சகரும் வழிபடு வோரும் மிகுந்த பயபக்தியோடு நடந்து கொள்ளல் வேண்டும். தீபாராதனை நடைபெறும்பொழுது சுவாமி தரிசனம் செய்வதைப் பெரும் பேருகப் பெரியோர் கருதுவர். இவ்வாராதனையின்போது அடுக்குத் தீபம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்ஷத்திரதீபம், பஞ்சதீபம், வில்வதீபம், நாகதீபம், ஈசானுதிதீபம், விருக்ஷதீபம், பிருஷாமிருகதீபம், ஒற்றைத்தீபம், கும்பதீபம், கற்பூரதீபம், பஞ்சாராத்தி என்கின்ற தீபங்கள் விசேடமாக இடம் பெறுகின்றன. தீபாராதனையை அடுத்து நிகழும் உபசார பூசையில் கண்ணாடி, குடை, சாமரை, விசிறி, கொடி, ஆலவட்டம் என்கின்ற உபகரணங்கள் உபயோகமாகின்றன. இவற்றினை நாம் ஆலய வழிபாட்டின்போது அவதானித்தல் நன்று.

அருச்சனை:- இறைவனுடைய குண இயல்புகளையும் திருவுருவச் சிறப்புக்களையும் அருட் செயல்களையும் சித்திரிக்கும் சிறப்புப் பெயர்களை ஒவ்வொன்ருக உச்சரித்துக் கொண்டே பத்திர-புஷ்பங்களை இறைவன் திருவடியில் சாத்துதல் அருச்சனை எனப்படும். நித்திய பூசையில் 16, 25, 50, 100 என்னும் தொகையுடைய நாமாவளி (பெயர் வரிசை) களில் ஒன்றை ஓதியும் நைமித்திககாமிக பூசைகளில் முந்நூறு, ஆயிரத்தெட்டு, இலட்சம், கோடி என்னுந் தொகையுடைய நாமங்களை ஓதியும் அருச்சனை செய்யப்படும். இந்த நாமங்களிற் பல புராணங்களிலிருந்து எடுக்கப்பட்டனவாகும். நாமங்கள் தேவர்களின் திருவுருவச்சிறப்பு, அவர்களுடைய குண நலன்கள், அவர்களாற்றிய அருஞ்செயல்கள் என்பன பற்றிக் கூறப்படும் சிறப்புப் பெயர்களாகும். இவற்றை ஓதும்பொழுது பெயர்களின் இறுதியில் நான்காம் வேற்றுமை உருபும் முதலில் 'ஓம்' என்னும் பிரணவமும் முடிவில் நம: என்னும் வணக்கச் சொல்லும் சேர்க்கப்பட்டு ஓதுதல் முறையாகும். அந்நிலையிலேயே அம்மந்திரங்கட்குச் சிவசக்தி உண்டென்பர்.

வாழ்த்து: பூசையில் எவையேனும் குறைகள் நேர்ந்திருந்தால் அவை எல்லாம் நிறைவுகள் ஆக வேண்டுமென்றும், திருக்கோயில் நிர்வாகிகளும் பணியாளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரவரும் உலகத்தவருமெல்லாம் இறைவனருளால் நல்வாழ்வு வாழவேண்டுமென்றும் வாழ்த்துதல். வானவரும் தாம் வாழ இறைவனை வாழ்த்துகின்றனர். "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்" என்ற திருவாசக அடிகள் இதனை மெய்ப்பித்தல் காண்க.

## நைமித்திகக் கிரியைகள்

நைமித்திகம் என்றால் காரணம் கொண்டு நிகழ்வது என்பது பொருளாகும். நித்திய கிரியைகளில் ஏற்படுகின்ற குற்றம்-குறைகளை நிறைவு செய்யும் காரணமாகச் செய்யப்படுவனவே நைமித்திகக் கிரியைகள் ஆகும். இவை விசேட தினங்களில் விசேட முறையில் நடைபெறுவதால் விசேட கிரியைகள் எனவும் வழங்கப்படும். இக்கிரியைகள் வாரத்திற்கொருமுறை நிகழ்வன, இருவாரத்திற்கொருமுறை நிகழ்வன, மாதம் ஒருமுறை நிகழ்வன, ஆண்டுக்கொருமுறை நிகழ்வன, பல ஆண்டுகளுக்கொருமுறை நிகழ்வன என மூன்று வகைப்படும். இவ்வைந்தனுள் அடங்கும் பூசை, உற்சவங்கள் பலவாயிருப்பினும் ஒரு சில சிறப்பானவையாகப் போற்றப்பட்டு வருகின்றன. அவை பற்றிய உண்மைகளை அறிந்திருத்தல் வழிபாட்டிற்கும் மனவொடுக்கத்திற்கும் நலம் விளைப்பதாகும்.

## பூசைகள் - உற்சவங்கள்

பிரதோஷபூசை: மாதம் இருமுறை பூரணை-அமாவாசைத் தினங்களுக்கு ஒருநாளின் முன் திரயோதசித்திதியில் சாயங்காலத்தில் இவ்விசேடபூசை நிகழும். உபாசகர்கள் சூரிய அத்தமயனத்திற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையும் பின் மூன்றேமுக்கால் நாழிகையும் கொண்ட காலத்தினைத் தரிசனத்திற்குரிய புண்ணிய காலமாகக் கொள்ளுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவராத்திரிபூசை:** புரட்டாதி மாதத்தில் வரும் பூர்வ பட்சத்துப் பிரதமை தொடங்கி நவமி முடிய ஒன்பது இரவுகளில் தேவியை-துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய திருக்கோலங்களில் விசேடமாக வழிபடும் பூசை இதுவாகும். ஒன்பதாம் நாள் மகாநவமி என்றும் பத்தாம் நாள்விஜய தசமி என்றும் பெயர்பெறும். மகா நவமி கலைமகள் வழிபாட்டிற்கும் விஜயதசமி வித்தியா ரம்பம் முதலிய புதிய காரியங்கள் தொடங்குதற்கும் உரிய நாள்களாகக் கொள்ளல் வேண்டும். விஜயதசமி யில் வெற்றியின் அறிகுறியாக "மானம்பு" விழா நடை பெறும். இந்நவராத்திரி பூசையினை வடநாட்டவர் தசராப் பண்டிகையாகக் கொண்டாடுகின்றனர்.

**சிவராத்திரிபூசை:** நித்திய சிவராத்திரி, மாசசிவராத் திரி, யோகசிவராத்திரி, பக்கசிவராத்திரி, மகாசிவராத் திரி எனச் சிவராத்திரி பூசை ஐந்து வகைப்படும். இவற் றுள் மகாசிவராத்திரியே அனைத்து இந்துக்களாலும் அனுட்டிக்கப்படுகின்றது. மாசி மாதத்தில் வரும் அபர பட்சச் சதுர்த்தசியில் (அமாவாசைக்கு முதனாள்) வரு வதே மகாசிவராத்திரி எனப்படும். இந்நாளில் நீர் தானும் பருகாது உபவாசம் இருந்து இரவு நான்கு யாமங்களிலும் நித்திரை விழித்துச் சிவசிந்தனையோ டிருந்து ஆலயங்களில் நடைபெறும் நான்குயாமப் பூசைகளையுங் கண்டு தரிசிப்பது மிகப் பெரும் புண் ணியமாகும். இயலாதோர் அவரவர் வல்லமைக் கேற்ற முறையில் அனுட்டிப்பாராயின் அதற்கேற்ற புண்ணி யத்தினைப் பெறுவார்களெனப் புராணம் கூறுகின்றது. இவ்விரதத்தினை அன்னை பராசத்தியே உலகம் உய்ய வேண்டிச் சிவபெருமானைக் குறித்து அநுட்டித்தாரென் றால் இந்நோன்பு மும்மையும் இன்பம் பயக்கவல்லதாம்.

**கந்தசஷ்டி உற்சவம்:** ஐப்பசி மாதப் பூர்வ பக்கப் பிரதமை தொடங்கி சஷ்டி முடியவுள்ள ஆறு நாள் களும் முருகப் பெருமானை வழிபடுதற்குச் சிறந்த கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதலால் இதனைக் கந்தசஷ்டி என வழங்குவர். கந்த சுவாமி கோயில்களில் இந்த ஆறுநாளும் விசேட பூசைகளும் திருவிழாக்களும் நிகழும். இதில் பங்குபற்றும் அடியார்களின் மனவொருமைப் பாட்டிற்கும் சிவசிந்தனைக்கும் ஆகக் கந்தபுராண படனம் நாவலர் காலம் முதற்கொண்டு இன்று வரை நடைபெற்று வருகின்றது. சூரசங்காரமென்னும் சூரன்போர்த் திருவிழாவும் கந்த சஷ்டி உற்சவத்தின் ஓர் அம்சமாகும்.

**கார்த்திகைத்தீபம்:** கார்த்திகை மாதத்துக் கார்த்திகைத் திதியில் முருகன் திருக்கோயில்களிலும் பூரணை நாளில் ஏனைய திருக்கோயில்களிலும் இவ்வுற்சவம் நிகழும். உற்சவத்தின்போது சுவாமியை வெளியே எழுந்தருளச் செய்து ஓமகுண்டத் தீயிலிருந்து ஏற்றி வந்த நெய்த்தீபத்தைக் கோயிலின் வெளியே நாட்டப்பட்ட தீபத்தம்பத்தில் வைத்து வழிபட்ட பின்னர் அதைச் சூழவமைத்த ஓலை முதலியவற்றைச் சுவாலித்து எரியச் செய்து அச்சோதிப் பிழம்பைத் தெய்வத் திருவுருவாகக் கண்டு போற்றுவது முறையாகும்.

**மார்கழித்திருவாதிரை:** மார்கழி மாத வைகறைப் பொழுது தேவபூசைக்கு மிகவிசேடமானது. அதிலும் திருவெம்பாவை எனப்படும் பத்து நாள்களும் மேலும் சிறப்பானவையெனச் சான்றோர் பகர்வர். திருவெம்பாவையின் இறுதிநாளே திருவாதிரைத் திருநாளாகும். இதற்கு முதனாளிரவு நடராச மூர்த்திக்கு விசேட அபிடேகமும் பூசையும் திருவுலாவும் நிகழும். இப்புண்ணிய காலத்தில் நடராச தரிசனம்-சிறப்பாகச் சிதம்பர தரிசனம் பெறுதற்கரிய பேருக மதிக்கப்படுகின்றது.

## மகோற்சவம்

உற்சவம் என்றால் உத்தமயாகம் என்று பொருள்படும். உற்சவமும் ஏனைய கிரியைகள் போலவே நித்தியம், நைமித்திகம், காமியம் என மூவகைப்படும். அவற்றுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தது ஆண்டுக்கொருமுறை நிகழ்வதாகிய நைமித்திக உற்சவம் ஆகும். இதுவே மகோற்சவம் என்றும் சொல்லப்படும். மகோற்சவத்தின் முக்கிய நிகழ்ச்சிகளாகக் கொடியேற்றுத் திருவிழா, வேட்டைத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா என்பன இடம் பெறும். மகோற்சவத்தின் இறுதி நிகழ்ச்சியாகக் கொடியிறக்கமும் உற்சவத்தினை நிகழ்த்தி முடித்த குருவை உபசரித்து வழிபட்டு அவர் அருளைப் பெறுதலாகிய ஆசாரிய உற்சவமும் இடம்பெறும்.

கொடியேற்றுத் திருவிழா முப்பொருள் இயல்பையும் அத்துவித முத்தியையும் உணர்த்துகிறது. பசுவை (ஆன்மாவை)க் குறிப்பதாகிய கொடிச்சீலை திருவருளைக் குறிப்பதாகிய கயிற்றின் உதவியால் மேற்சென்று தம்பத்தில் ஆறு ஆதாரங்களையும் இடமாகக் கொண்டு மேலிருக்கும் பரமசிவத்தை அடைகிறது. சுற்றப்படும் சீலையுள் மறைந்து விடும் தருப்பைக் கயிறனது பாசம் வலியற்று இருப்பதைக் காட்டுகின்றது. தம்பமும் சீலையும் பொருள் அளவில் இரண்டாயிருப்பினும் தம்பமே பருப்பொருளாக, அதிற்சீலை ஒடுங்கி விடுவதால் அங்கு அத்துவித முத்தி நிலை உணர்த்தப்படுகின்றமை காண்க.

## திருவிழாக் காலங்களில் நிகழும் குற்றங்கள்

கோயில்களில் பொதுவாகச் செய்யத்தகாத குற்றங்கள் அநேகம் உள. அவற்றினை நாம் இலகுவில் அறிந்து கொள்ளல் கூடும். ஆயின் திருவிழாக் காலங்களில் நடைபெறும் குற்றங்கள் பெரியனவாய் இருப்பினும் அவை நமக்குப் புலனாவதில்லை. ஆகவே அவற்றுட் சிலவற்றினை ஈண்டு தருவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. பூசை, உற்சவங்களைக் காலங்கடந்து செய்தல்.

ii. பயபக்தியோடு வழிபடுதற்குரிய உற்சவமூர்த்தியை விளையாட்டுப் பதுமைபோலக் கருதுதல். (பொய்க்கை, பொய்க்கால், கந்தைத் துணிகளையும் கட்டுதல்; மின்சாரக் குமிழ்கள், கடதாசி அட்டைகள் என்பவற்றையும் சுமத்துதல்). இது குறித்து நாவலர் பெருமான் கண்டித்துப் பிரசங்கங்கள் செய்தும் எழுதியும் போந்துள்ளார்கள்.

iii. உற்சவத்தைக் காரணமாக வைத்து விலைமாதரின் நடனம், வானவேடிக்கை, சிற்றின்பப் பாடல்கள், சிகர அலங்காரம், சிற்றுண்டி வியாபாரம் முதலியனவற்றால் திருக்கோயிலின் தூய்மையையும் வழிபடுவோரின் மனவடக்கத்தையும் கெடுத்தல்.

iv. ஆலய வழிபாட்டிற்குப் பொருத்தமற்ற ஆடை, ஆபரண அலங்காரங்களோடு மண்டபங்களிலும் வீதிகளிலும் நடமாடுதல்.

v. கோயில் மண்டபங்களையும் வீதிகளையும் சிறுவர் தமது விளையாட்டிடமாகவும் இளைஞரும் முதியவரும்பொழுது போக்கிடமாகவும் உபயோகித்தல்.

## பயிற்சி

1. கிரியைகள் என்றால் என்ன?
2. கோயில்களில் நடைபெறும் நித்திய கிரியைகள் இரண்டு தருக.
3. ஆறுகாலப் பூசைகளும் எவை?
4. அருச்சனை யாவது யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கோயில்களில் நடைபெறும் விசேட கிரியைகள் ஐந்து எவை?
6. ஆண்டுக்கொருமுறை நிகழும் கிரியைகளில் நான்கு தருக.
7. கொடியேற்றுத் திருவிழாவின் தத்துவ விளக்கம் யாது?
8. சிறுகுறிப்பு எழுதுக:
   (i) தசராபண்டிகை;
   (ii) தீபாராதனை;
   (iii) சாயரட்சைப் பூசை;
   (vi) திருவெம்பாவை;
   (v) நவராத்திரி பூசை.
9. திருவிழாக் காலங்களில் நிகழும் குற்றங்கள் சில கூறுக.
10. "மகோற்சவம்" பற்றி நீர் அறிந்தவற்றை எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. மாதவச் சிவஞான சுவாமிகள்

பாண்டிய நாட்டில் பொதியமலைச் சாரலில் பாவ நாசத்தைச் சேர்ந்ததாய் விக்கிரமசிங்கபுரம் என்ற ஊர் ஒன்று உண்டு. அவ்வூரின்கண் வேளாளர் குலத்தில் ஆனந்தக்கூத்தர் என்பார் ஒருவர் இருந்தார். அவர் கல்வி, செல்வம், சிவபக்தி, அடியார் பக்தி, ஒழுக்கம் முதலியன நிரம்பப் பெற்றவர். அவர் மனைவி மயிலம் மையார் என்பவர். அவ்விருவரும் இல்லற நெறி வழு வாது ஒழுகி வந்தனர். அவர்கள் செய்த அருந்தவப் பயனாய் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந் தைக்கு முக்களாலிங்கர் என்று பெயரிட்டு அன்போடு வளர்த்து வந்தனர்.

'விளையும் பயிரை முளையில் தெரியும்' என்பர் பெரியோர். அக்குழந்தை நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தது. குழந்தை வளர வளர அவனிடம் அன்பு, அருள், வாய்மை, தூய்மை, அதிமதி நுட்பம் என்பன தழைத்து வளர்ந்து வருதலைக் கண்ட பெற்றோர்கள் அளவிலா ஆனந்தம் அடைந்தனர். குழந்தை ஐந்தாவது வயதினை எய்தியதும் முறைப்படி கல்வி பயிலத்தக்க ஆசி ரியர்பால் விடுத்தனர் பெற்றோர்.

முக்களாலிங்கர் பாடசாலைக்குச் சென்று வந்தார். ஒரு நாள் அவர் கல்வி கற்கப் பாடசாலைக்குச் சென்று வருங்கால், திருவாவடுதுறையிலிருந்து சில முனிவர் கள் சிவத்தலங்கள் பலவற்றையும் தரிசித்துக்கொண்டு விக்கிரமசிங்கபுரத்து வீதிவழியே சென்றுகொண்டிருத் தலை முக்களாலிங்கர் பார்த்தார். உடனே முக்களாலிங் கர் அவர்களிடம் சென்று வணங்கித் தம் இல்லத்திற்கு அழைத்து வந்தார். சிறுவர் தாயாரிடம் சென்று அம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவஞான சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர்கட்குத் திருவமுது அளிக்குமாறு பணிவுடன் வேண்டிக் கொண்டார். தாயாரும் உள்ளம் மிக மகிழ்ந்து சிறுவர் விருப்பப்படி முனிவர்களுக்கு இன்னடிசில் சமைத்து அவர்களை உண்பித்தார். அதனைக் கண்டு பேரானந்தங்கொண்ட சிறுவர், ஆண்டில் இளையவராயினும் அறிவில் முதியராய்,

"அருந்ததியென் னம்மை யடியவர்கட் கென்றுந்
திருந்த வமுதளிக்கும் செல்வி—பொருந்தவே
ஆனந்தக் கூத்த ரகமகிழத் தொண்டுசெயு
மானந்த வாத மயில்"

என்னும் செய்யுளைக் கூறினர். முனிவர்கள் அமுதுண்டு மகிழ்ந்து சிறுவரின் அடியார் பக்தியும் அறிவின் திறனும் கண்டு போற்றித் தாம் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றனர். அவர்களோடு சிறுவரும் சென்று அவர்களை வழியனுப்பி வீடு வந்து சேர்ந்தார்.

வெளியே சென்றிருந்த ஆனந்தக் கூத்தர் வீட்டிற்கு வந்தார். திருவாவடுதுறையிலிருந்து முனிவர்கள் வந்ததும், முக்களாலிங்கர் வீட்டிற்கு அழைத்து வந்து உண்பித்ததும் கேட்டு ஆனந்தக்கூத்தர் அடங்கா மகிழ்ச்சி அடைந்து, புதல்வரை அன்போடு தழுவிக்கொண்டு, அமுது செய்து சென்ற முனிவர்களை "நானும் கண்டு வணங்க விரும்புகிறேன்" என்று கூறினர்.

தந்தையை அழைத்துக்கொண்டு சென்று முக்களாலிங்கர் முனிவர்களைக் காட்டினர். ஆனந்தக்கூத்தர் அன்பு பொங்க அம்முனிவர்களை முறைப்படி வணங்கி எழுந்து நின்றார். அப்பொழுது முனிவர்கள் ஆனந்தக் கூத்தரை நோக்கி, மெய்யன்புடையீர்! பெறற்கரும் புத்திரனைப் பெறும் பேறுடையீர்! உம் சிறுவர் மதி கூர்மை மிக்கவர்; கருவில் திருவுடையவர்; கடவுட் பக்தி, அடியார் பக்தியில் தலைசிறந்தவர். அவரால் தமிழுலகும், தமிழ் மொழியும், சைவ சமயமும் அடைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்குரிய செயல்கள் உள. ஆதலின் அவரை யாங்கள் அழைத்துச் செல்ல அனுமதித்து எம்மோடு விடுப்பீராக'' என விளம்பினர்.

ஆனந்தக் கூத்தருக்கு அம்முனிவர்கள் கூறியவை செவிக்கின்பந் தந்ததேனும் உள்ளத்திற்குத் துன்பத்தையே தந்தது. என்னையோ எனில்: அருமையாகப் பெற்ற புதல்வனை அவனுக்குச் செய்வன செய்து கண்டுகளிக்காது எவ்வாறு துறவிகளோடு அனுப்புவது; என்று அவர் மனங்கவன்றது. அவர் ஒருவாறு மனந்துணிந்து போகவிடுவாரேனும் பெற்ற தாயின் உள்ளம் பொறுக்குமோ? ஆயினும், தெளிந்த உள்ளமுடைய ஆனந்தக்கூத்தர், தம் சிறுவனை நோக்கினர். அதிதீவிர பக்குவமுடைய முக்களாலிங்கர் அறவாழி அந்தணன் தாள் சேர்ந்து பிறவாழி நீந்தப் பரிந்த உள்ள மோடிருக்கும் தன் மனநிலையைக் குறிப்பாகமுகப்பொலிவால் விளக்கினர். அந்நிலையில் ஆனந்தக் கூத்தர், மகனை விட்டுப்பிரித்தற்குச் சிறிதும் மனமிலராயினும், ''தம் மகற்கு அளவில் விஞ்சைகள் வந்தெய்து காலம் இயைந்தது'' என்பதை உணர்ந்து மனத்தில் உறுதி கொண்டு, அவ்வாறே முனிவர்கள் மகனை அழைத்துச் செல்ல ஒருப்பட்டு, ''தந்தை நீர் இனித் தாயும் நீர், எந்தையீர், இனி இயைந்து செய்க'' என்று கூறி மகனை விட்டுவிட்டுத், தனியாக வீடுவந்து சேர்ந்தார்.

முக்களாலிங்கர் முனிவர்களைப் பின்தொடர்ந்து சென்றார்; இடையிற் பற்பல சிவத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறையை முனிவர்களோடு வந்தடைந்தார். திருவாவடுதுறையில் மடாலயத்தினுட் புகுந்து, ஆதீன பரமாசாரியராகிய ஸ்ரீ குருநமச்சிவாய மூர்த்திகளை வணங்கி, ஒடுக்கத்தில் எழுந்தருளியிருந்த ஞானசாரியராகிய ஸ்ரீ வேலப்ப தேசிகரைக் கண்டு வணங்கினர் முக்களாலிங்கர். சில காலத்திற்குப் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலப்ப தேசிகர் முக்களாலிங்கர்க்குச் சிவதீட்சையும் சைவசந்நியாசமும் அளித்துச் 'சிவஞான யோகிகள்' என்னும் தீட்சாநாமம் சூட்டினர். அதுமுதல் முக்களாலிங்கர் சிவஞான யோகிகள் என்னும் பெயரோடு மடத்தில் தங்கியிருந்து மெய்கண்ட சாத்திரங்களையும் பண்டார சாத்திரங்களையும் கற்றுத் தேர்ந்தார். அவர் அங்கு வடநூற் கடலையும் தென்னூற்கடலையும் கரைகண்டுணர்ந்தார். சிவஞானமுனிவர் தருக்கத்திலும் வல்லவராஞர். சொல்வன்மையிற் சிறந்து விளங்கிஞர்; கவிகள் சமைப்பதில் அருந்திறல் பெற்ருர். அவர் காலம் பதினெட்டாம் நூற்ருண்டின் இடைப்பகுதியாகும். சற்றேறக்குறைய நூற்றெண்பது வருடங்களுக்கு முன் என்க.

ஒரு சமயம் புலவர் சிலரும் செல்வர் சிலரும் கூடி நூறு பொன் கொண்ட கிழி ஒன்றினைத் திருப்பாதிரிப் புலியூர்ச் சிவாலயத்தின்கண் தொங்கவிட்டு "கரையேற விட்ட முதல்வா வுன்னையன்றியுமோர் கதியுண்டாமோ" என்னும் ஈற்றடியைத் தந்து, "பாட்டின் மற்றைய மூன்றடிகளை நிரப்புபவர்க்கு உரியது இப்பொற்கிழி" என்று கூறினர். அப்பொழுது அங்கு யாத்திரையாக வந்த சிவஞான முனிவர், அதனை அறிந்து ஓரந்தணனைக் கூவி, அவனைப் பொற்கிழி பெற்றுக்கொள்ளுமாறு செய்து, 'வரையேற விட்டமுதம்' என்று தொடங்கிச் சிவாலயத்தில் தொங்கவிட்ட அடி ஈற்றடியாய் அமையச் செய்யுளைப் பாடி முடித்தனர்.

ஒரு நாள் மடத்தில் அட்டில் தொழில் புரிவோன் வந்து "இன்று என்ன கறி சமைப்பது" என்று கேட்டான். உடனே சிவஞான சுவாமிகள்,

"சற்றே துவையலரை தம்பியொரு பச்சடிவை
வற்றலே தேனும் வறுத்துவை—குற்றமிலை
காயமிட்டுக் கீரைகடை கம்மெனவே மிளகுக்
காயரைத்து வைப்பாய் கறி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பேசுவது போலவே ஒரு வெண்பாவிற் கூறி முடித்தார். இச்செய்யுளால் சிவஞான முனிவர், எவ்வளவு எளிய உணவினைத் தம் நிலைக்கு ஏற்ப உண்டார் என்பதையுணரலாம் அன்றோ!

ஒரு சமயம் காஞ்சிபுரத்தில் வைணவர்களிற் சிலர் கம்பரையும் அவர்தம் கவித்திறத்தையும் பாராட்டி, தமிழில் கம்பராமாயணம்போல் பிறிதொரு நூல் இல்லை என்று கூறித் தருக்கித் திரிந்தனர். அதனை அறிந்த சிவஞான யோகிகள், "நாடிய பொருள் கை கூடும்" என்ற செய்யுளை எடுத்துக்கொண்டு, அதன் கண் காணப்பட்ட பல குற்றங்களைக் கூற, அக்குற்றங்கள் ஒன்றற்கேனும் விடை கூறவியலாத வைணவர்கள் வாயடங்கினர். அப்பொழுது தாமே அவற்றிற்கு விடை கூறியருளினார். அத்தடை விடைகள் அடங்கிய நூல் 'கம்பராமாயண முதற் செய்யுட் சங்கோத்திர விருத்தி' என்னும் பெயரோடு விளங்குகிறது.

சிவஞான யோகிகள் காஞ்சிப் புராணத்தை இயற்றினார். அந்நூலின் முதலில் விநாயகர் வணக்கம் கூறி அதனை அடுத்துச் சபாநாதர் துதியை அமைத்தார். அதன்பின்னரே ஏகாம்பர நாதர் துதியை அமைத்தார். ஒருசமயம் காஞ்சியில் வாழ்ந்த புலவர்கள் சிலர் கூடிக் காஞ்சிப் புராணத்தில் ஏகாம்பர நாதர் துதியை முதலில் அமைக்காது, சபாநாதர் துதியை முதலில் அமைத்தது தவறு என்று வாதிட்டனர். அதனை அறிந்த சிவஞான சுவாமிகள் அவர்களுக்குத் தக்கவாறு தம் மாணாக்கரைக் கொண்டு பாடம் கற்பிக்க வேண்டும் என்று எண்ணங் கொண்டு, அக்காலையில் சென்னையில் தங்கியிருந்த கச்சியப்ப முனிவரைக் காஞ்சிபுரத்திற்கு வரவழைத்தார். கச்சியப்பமுனிவர் காஞ்சிபுரத்தையடைந்து ஆசிரியப்பெருந்தகையை அடிதொழுது அவரது உள்ளக் கருத்தினை அறிந்தார். ஏகாம்பர நாதர் ஆலயத்தில் பெருங் கூட்டம் கூட்டப்பட்டது. கச்சியப்ப முனிவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசங்கம் தொடங்குமுன்பு, அங்கிருந்த ஓதுவாமூர்த்திகளில் ஒருவரை நோக்கி அத்தலத்துத் தேவாரப்பதிகம் ஒன்றினை ஓதுமாறு பணித்தார். அந்த ஓதுவார், ''திருச்சிற்றம்பலம்'' என்று கூறித்தொடங்கினர். அப்பொழுது கச்சியப்ப முனிவர் அவரை நிறுத்தி ''ஐயா, யான் உம்மை இத்தலத்திற்குரிய தேவாரப்பதிகம் ஒன்றினை ஓத வேண்டிக் கொண்டனன். தாங்கள் 'திருச்சிற்றம்பலம்' என்று தொடங்குகின்றீர். 'பிருதுவியம்பலம்' என்றன்றே தொடங்குதல் வேண்டும்? இது முறையோ என்று வினவினர். யாவரும் வாயடங்கினர். திருச்சிற்றம்பலம்' என்று கூறலே சைவ சமய மரபு. நடராசப்பெருமான் எங்கும் எழுந்தருளியுள்ளார். அவர் நடனம் புரிந்திலரேல் யாவும் ஒடுங்கிவிடும். அவர் விசேடமாகச் சிதம்பரத்தில்–பொன்னம்பலத்தில்-சிற்றம்பலத்தில் எழுந்தருளி ஆனந்தத் தாண்டவ நடனம் புரிந்தருளுகின்ருர். அத்தலமே 'கோயில்' என்று சிறப்பாகச் சைவர்களால் கூறப்படுகிறது. ஆதலின் எதனைத் தொடங்கினும் 'திருச்சிற்றம்பலம்' என்று கூறித் தொடங்குதலே சைவ சமயமரபு. ஆதலின் சபாநாதர் துதி முதலில் கூறப்பட்டது எனக் காரணங் காட்டிப் புலவர்களின் செருக்கையடக்கினர்.

சிவஞான முனிவர் இலக்கணம், இலக்கியம், தருக்கம், தத்துவம், சமயம், சம்பிரதாயம் என்னும் பல துறைகளில் பல நூல்களை இயற்றியுள்ளார்.

## இலக்கணம்

1. தொல்காப்பியச் சூத்திரவிருத்தி
2. இலக்கண விளக்கச் சூருவளி
3. சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் உரையைத் திருத்தியும் புதுக்கியும் வெளியிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியம்

1. காஞ்சிபுராணம் (முதற் காண்டம்)
2. சோமேசர் முதுமொழி வெண்பா
3. திருவேகம்பரந்தாதி
4. திருமுல்லைவாயிலந்தாதி
5. கலைசைப்பதிற்றுப்பத்தந்தாதி
6. இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி
7. கச்சியானந்தருத்ரேசர் பதிகம்
8. திருவேகம்பரானந்தக் களிப்பு
9. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்
10. அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்
11. செப்பறைப்பதி அகிலாண்டேசுவரி பதிகம்
12. திருத்தொண்டர் திருநாமக்கோவை
13. நமச்சிவாய மூர்த்திகள் மாலை

## தருக்கம்

தருக்க சங்கிரகம் அன்னப் பட்டீயம்

## தத்துவம்

1. சிவஞான போத மகாபாடியம்
2. சிவஞான போதச் சிற்றுரை
3. சிவஞான சித்தியார் (சுபக்கம்) உரை
4. சித்தாந்தப் பிரகாசிகை
5. 'எடுத்து' என்னும் சொல்லுக் கிட்ட வயிரக்குபாயம்.
6. சிவசம வாதவுரை மறுப்பு

## சமயம்

1. சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பு
2. சிவதத்துவ விவேகம்

## சம்பிரதாயம்

திருவாவடுதுறை மரபட்டவணை மறுப்பின் மறுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞான சுவாமிகள் இவ்வாறு பல நூல்களையும் பல உரைகளையும் இயற்றியருளினுர். பல மாணவர் கட்குத் தமிழிலக்கண இலக்கியக் கல்வியும் சமயக் கல்வியும் போதித்தார். இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை, கவிராட்சச-கச்சியப்ப முனிவர், மதுரகவி தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர், இலக்கணம் சிதம்பரநாத முனிவர், காஞ்சிபுரம் சிதம்பர முனிவர் முதலானோர் சிவஞான முனிவரிடம் பயின்ற மாண வர்களுட் சிறந்தோராவர். சிவஞான போதம் என் னும் அரிய நூலுக்குச் சிறந்த பேருரையான மகா பாடியம் செய்தருளியதினுல் திராவிட மாபாடிய கர்த்தர் என்று யாவராலுஞ் சிறப்பித்துக் கூறப்பட்டார். இத் தகைய பெரியார் (கி. பி. 1785-ல்) விசுவாவசு வரு டம் சித்திரை மாதம் ஆயிலிய நட்சத்திரங் கூடிய தினத்தில் சிவபெருமானோடு இரண்டறக் கலத்தல் என்னும் பேரின்ப முத்தி பெற்றுர்.

## பயிற்சி

1. சிவஞான சுவாமிகளின் பிள்ளைத் திருநாமம் யாது? அவர் இளமையிலேயே கவிபாடும் திறன் பெற்றிருந் தார் என்பதை எதனுல் அறியலாம்?
2. சிவஞானசுவாமிகள் பொருளில் பற்றுடையவரல்லர் என்பதையும் எளியரிடத்தில் இரக்கமுடையவர் என் பதையும் எச்செயலால் அறியலாம்?
3. பேசுவது போலவே கவிபாட வல்லவர் சிவஞான சுவாமிகள் என்பதை விளக்குக.
4. திராவிட மாபாடிய கர்த்தர் என்ற பெயர் எதனுல் ஏற்பட்டது?
5. சிவஞான முனிவரின் மாணவர்கள் சிலரையும் அவர் இயற்றிய நூல்கள் சிலவற்றையும் கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. திருவிசைப்பா

சைவத்திருமுறைகள் பன்னிரண்டு. அவற்றுள் ஒன்பதாம் திருமுறையாகத் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இரண்டும் இடம் பெற்றுள்ளன. திருவிசைப்பா என்றால் திரு + இசை + பா - எனப்பிரிந்து அழகிய இசை பொருந்திய பாடல் எனப் பொருள்படும். இன்னேர் விதமாகக் கூறின் இறைவனது பெருமையை இசை பொருந்தக் கூறுவது என்றும் கொள்ளலாம். திருவிசைப்பா அருளினேர் திருமாளிகைத் தேவர் முதல் ஒன்பதின்மர் ஆவர். அவருள் சேந்தனுரும் ஒருவர். இவரே திருப்பல்லாண்டினையும் பாடியருளினுர்.

சேந்தனுர் காவிரிப்பூம் பட்டினத்திலே பட்டினத்தடிகளது அரண்மனையிற் பொக்கிஷாதிபதியாய் இருந்தார். அடிகள் துறவுபூண்ட காலத்தில் அவர் கட்டளைப்படி அவரது பொருள்களைப் பிறர் சூறையாடவிட்டார். அதனை அரசனறிந்து அப்பொருள்களைப் பொக்கிஷத்திற் சேர்ப்பிக்குமாறு தண்டித்துச் சிறையிலிட்டான். சேந்தனுர். தமது ஆசாரியரின் உதவியாற் சிறை நீங்கி, மனைவி மக்களுடன் சிதம்பரம் அடைந்தார். அங்கு விறகு விற்று அதனுல் வரும் இலாபங் கொண்டு சிவனடியார் ஒருவருக்கு நாடோறும் உணவளித்து உபசரித்து வந்தார். ஒருநாள், சிவபெருமான் அடியார் வேடந்தாங்கி நள்ளிரவில் இவரிடஞ் சென்று கூழுண்டு மறுநாள் தமது (சிவலிங்கத்) திருமேனியில் அக்கூழ்காட்டி, அது சேந்தனுர் வீட்டிலுண்ட கூழ் என்று அனைவருக்கும் அறிவித் தருளினுர். இவ்வற்புதம் சேந்தனுரால் நிகழ்ந்ததா வென்று சிலர் ஐயங் கொண்டனர். அவர்களது ஐயத்தை நீக்கியருளத் திருவுளங்கொண்ட சிவபெருமான், தேர்த்திருவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்று தேரை அழுந்தச் செய்தார். அவ்வமையம் சேந்தனர் திருப்பல்லாண்டு பாடி அதனை ஓடச் செய்தார்கள். இவர் திருவீழிமிழலை, திருவாவடுதுறை திருவிடைக்கழி என்னும் தலங்களுக்குத் திருவிசைப் பாக்களும் தில்லை மீது திருப்பல்லாண்டும் பாடியுள்ளார். இவரின் காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டு ஆகும்.

## திருவீழிமிழலை

திருச்சிற்றம்பலம்

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை(ச்)
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

திருச்சிற்றம்பலம்

பொழிப்புரை: நூல்களைக் கற்றவர்கள் (கடித்து மென்று உண்ணாது) முழுவதாக விழுங்குவதான கற்பகக்கனி போன்றவனை, எல்லையில்லாத கருணையாகிய கடல் போன்றவனை, கல்லாதவர் அறியமுடியாத மாணிக்க மலை போன்றவனை, தன்னை நினைப்பவர்கள் மனத்தில் ஒளிவீசுகின்ற இரத்தின தீபம் போன்றவனை, கோபத்தால் பகைத்தவர்களான மூவரது பறக்கும் திரிபுரங்களையும் பொடியாகும்படி அழித்த கொடுமையான இயல்புடைய சிவபெருமானை, திருவீழிமிழலை என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கிற இறைவனைப் பார்த்துப் பார்த்து மனம் மகிழ்ச்சியாற் குளிர என் கண்களும் குளிர்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பதவிளக்கம்: கரை - எல்லை; மா - நிறைந்த மதிப்பவர் - நினைப்பவர்; மணிவிளக்கு - அறிவொளி தரும் விளக்குப் போன்றவன்; செற்றவர் - பகைத்த வர்; புரங்கள் - முப்புரங்கள்; செற்ற - அழித்த.

குறிப்புரை: வீழி என்பது ஒருவகைச் செடி. அச் செடிகள் நிறைந்த இடமாதலின் திருவீழிமிழலை எனப்பட்டது. இங்கு இறைவன் சம்பந்தருக்கும் அப் பருக்கும் பஞ்சகாலத்தில் படிக்காசு தந்தருளினுர். திருமால் தம் கண்ணைப் பறித்து மலராகச் சாத்திச் சிவபெருமானுல் சக்கரம் பெற்ற சிறப்புடைய தலம்.

''கற்றவர்'' என்னும் சொல் இங்கு இறைவன் நூல்களைக் கற்றவர்களையே குறிக்கின்றது. மற்றைய உலகசம்பந்தமான நூல்களைக் கற்றவர்களை அறிஞர் என்று கூறலாமேயன்றிக் கற்றவர் என்று கூறவிய லாது. மெய்மையான நூல்கள் இறைவனை அறிதற் குத் துணை செய்யும். மற்றவை உலக வாழ்க்கையில் பொருளீட்டும் துறைக்கே உதவும். மெய்மையான நூல்கள் உயிர்க்குத்துணை. உலக சம்பந்தமான நூல் கள் உடலுக்குத்துணை. முந்தியது அழியாப் பொரு ளைத் தருவது; பிந்தியது அழியும் பொருளைத்தருவது.

மெய் நூல்களைக் கற்றுத் தெளிந்த அறிவினுல் புல னடங்கி மனம் ஒடுங்கி ஒன்றி இறைவனைக் கண்டு நிற் பவர் மனம் ஆனது அமைதி, சாந்தம், இன்பம் என் பவற்றை எய்திக்குளிரும். அவர்கள் கண்களோ ஓய் விலாது அவனுடைய அருளொளிததும்பும் திருவுரு வினைப் பார்த்துப் பார்த்துக் குளிர்ச்சி பெறும். அவர் கள் இறைவனை அகக்கண்ணுலும் புறக்கண்ணுலும் கண்டு களித்து அந்த ஆனந்தானுபவத்தில் திளைத் திருப்பார்கள். அத்தகையார்க்கே இறைவன் காட்சி யருளுவான். அவர்களுக்கு அவன் கற்பகக்கனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைமாகடல், மாணிக்க மலை, மனமணி விளக்கு என்பனவாகத் தோன்றுவான்.

"செற்றவர் புரங்கள் செற்றமை;" தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி என்பார் தவஞ் செய்து பொன், வெள்ளி, இரும்புகளினாலான பறக்குங் கோட்டைகளைக் கொண்டு கீழிறங்கி முனிவர்களுக்கும் மக்களுக்கும் பேரிடையூறு விளைத்து வந்தனர். இந்நிலையில் அவர்கள் இறைவனிடம் முறையிட இறைவன், பூமியைத் தேராகவும் சந்திர சூரியர்களைச் சக்கரங்களாகவும், வேதங்கள் நான்கினையும் நான்கு குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும் கொண்டு, மேரு மலையை வில்லாகவளைத்து, வாசுகியை நாணுகப்பூட்டித் திருமாலை அம்பாகக் கொண்டு அம்மூன்று கோட்டைகளையும் அம்மூவசுரர்களையும் கொல்லாது நகைத்து எரித்தார். இது அவர்களுடைய செருக்கினை அடக்கி அவர்களை நல்வழிப்படுத்த இறைவன் மேற் கொண்ட மறக்கருணையாகும்.

## பயிற்சி

1. இறைவன் இயல்புகள் எவ்வாறு கூறப்பட்டுள்ளன?
2. கற்பகக்கனி, மாணிக்க மலை, மனமணி விளக்கு — இவற்றை விளக்குக.
3. செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவன் - கதைக் குறிப்புத்தருக.
4. உள்ளங்குளிரக் கண்குளிர்த்தன என்று கூறியுள்ள நயத்தைப் புலப்படுத்துக.
5. இப்பாடலின் பொருளை உமது நடையில் எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. திருப்பல்லாண்டு

சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் திருப் பல்லாண்டு ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற் றுள்ளது. இதனை அருளிச் செய்தவர் சேந்தனார். இவர் சிதம்பரத்தில் எழுந்தருளிய நடராசப் பெருமான் மீது பல்லாண்டு பாடினார். பாடலின் மொத்தம் பதின்மூன்று ஆகும்.

இறைவன் நம்மைப்போல் இறத்தல் — பிறத்தல் இல்லாதவர்; என்றும் நிலையாய் உள்ளவர். நாம்' வாழ்த்தி அவர் வாழவேண்டியதில்லை. ஆயினும் அடி யார்கள் பேரன்பு காரணமாக ''பல்லாண்டு வாழ்க' என அவரை வாழ்த்துவர். தேவர்களும் இறைவனை வாழ்த்துவர். காரணம் தாம் வாழ்தற் பொருட்டேயாம் என்க. 'வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ் வான்...'' என்ற திருவாசகக் கூற்று இங்கு நினைவு கூர்தற் பாலதாகும். பெருமானைப் பல்லாண்டு வாழ்க வென்று வாழ்த்துதல் காரணமாகத் "திரு'' என்னும் அடைகொண்டு திருப்பல்லாண்டு என்ற பெயர் பாட லுக்கு அமைவதாயிற்று.

திருச்சிற்றம்பலம்

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு
　　மண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
　　போனகமு மருளிச்
சோதி மணிமுடித் தாமமு நாமமுந்
　　தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
　　பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்புரை: தந்தையாகிய எச்சதத்தனை - அவனது கால் அறும்படி வெட்டிய (விசாரசருமர் ஆகிய) சண்டேசுரநாயனருக்கும் விண்ணுலகத்தாருடனே கூட மண்ணுலகத்தாரும் வணங்கும்படி, அழகிய கோயிலையும் (தமக்கு அடியாரளிக்கும்) நிவேதனத்தையும் கொடுத்தருளி, மேலும் ஒளியையுடைய மணிமுடி மாலையையும் பேரையும் அடியார்க்குத் தலைமை வகிக்கும் பதவியையும் அவர் செய்த பாவத்துக்கும் பரிசிலாகக் கொடுத்தருளிய சிவபெருமானுக்கே நாம் பல்லாண்டு கூறுவோமாக.

அரும்பதவிளக்கம்: தாதை-தந்தை (எச்சதத்தன்); தாள்-கால்; வீசிய-வெட்டிய; சண்டி-சண்டேசுரநாயனர்; அண்டம்-விண்ணுலகம்; பொன்-அழகு; போனகம்-அமுது (பிரசாதம்); தாமம்-மாலை(கொன்றைமாலை); நாயகம்-தலைமை; பரிசு-பரிசில்.

குறிப்புரை: உலகில் மெய்யடியார்கள் மேற்கொள்ளும் வினைகள் (செயல்கள்) மெல்வினை, வல்வினை என இருவகைப்படும். மெல்வினை சீவபோதநிலையில் நின்று இறைவன் மாட்டுக் கொண்ட தலையன்பு காரணமாகச் செய்யப் படுவதாகும். இது சிவதர்மம் எனப்படும். இதனுல் பலகண்டம் அகன்று முத்திப்பேறெய்தலாம். பெரிய புராணத்திற் கூறப்படும் இயற்பகைநாயனர், இளையான் குடிமாறநாயனர், குங்கிலியக்கலய நாயனர் போன்றவர்கள் இதற்கு உதாரண புருடராவர்.

வல்வினை இறைவன் மாட்டுக் கொண்ட தலையன்பின் முதிர்வினுல் சிவபோதம் தலைப்பட்ட நிலையில் நின்று செய்யப்படுவதாகும். சிவபோதம் தலைப்பட்டார் தம்மறிவும் தம் செயலுமின்றி இறைவன் செயலாகவே நின்று செய்வாராதலின் அவர் தண்டனை பெறுதற்கு உரியரல்லர். இதனுலேயே தாதையைத் தாளற வெட்டிய பாதகச் செயல் சிவதர்மமாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரசருமருக்குச் சண்டேசுர பதத்தை யளித்தது. இதுபோல் அரிவாட்டாயர், ஏறிபத்தர், ஏயர்கோன் கலிக்காமர், கணம்புல்லர், கண்ணப்பர், கபிலர், கழற்சிங்கர், கோட்புலி, சாக்கியர், சிலந்தி சிறுத் தொண்டர், செருத்துணையார், திருக்குறிப்புத் தொண் டர், புகழ்ச்சொழர், மானக்கஞ்சாறர், மூர்த்தி நாய ஞர் முதலாஞேர் வல்வினையிற் புரிந்த பாதகத்துக் குத் தண்டனை பெருது பரிசுகள் பெற்ருர்கள்.

(குறிப்பு) சண்டேசுர நாயஞர், சிறுத்தொண்ட நாயஞர், கண்ணப்பர் வரலாறுகளை ஆசிரியரிடம் கேட் டுத் தெரிந்து கொள்க.

## பயிற்சி

1. திருப்பல்லாண்டு யாரால் எவ்விடத்துப் பாடப்பட் டது?
2. இறைவனுக்குப் பல்லாண்டு பாடவேண்டுமா? ஏன்?
3. (அ) சண்டி-என்று சுட்டியது யாரை?
   (ஆ) அவர் செய்த செயல் யாது?
4. சண்டீசர் செய்த பாதகத்துக்கு இறைவன் கொடுத்த பரிசு யாது?
5. இப்பாடலின் பொருளை உமது நடையில் எழுதுக.
6. பாடலிற் கூறப்படும் புராண வரலாற்றினைச் சுருக்கி வரைக.
7. பாதகச் செயலுக்கும் பரிசு பெற்ற சில பெரியார்க ளின் பெயர்கள் தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31. கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள்

தொண்டை மண்டலத்தில் சிறந்து விளங்கும் நகரங்கள் பலவற்றுள் பல்லாற்ருனுஞ் சிறப்புற்று விளங்குவது காஞ்சிபுரம். இந்நகர் காசி, காஞ்சி, அவந்தி, அயோத்தி, மதுரா, மாயை, துவாரகை என்னும் முத்தி நகரங்கள் ஏழில் ஒன்று. சைவர், வைணவர், சமணர் என்பார் இத்தலத்தினைத் தத்தமக்குரிய புண்ணியத் தலம் என்று போற்றிக் கூறுவர். அத்தகைய சிறப்பினைக்கொண்ட காஞ்சிபுரத்தில் ஆதி சைவர் குலத்தில் காளத்தியப்ப சிவாசாரியர் என்பார் ஒருவர் இருந்தார். அவர் கல்வி, அறிவு ஒழுக்கங்களிற் சிறந்து விளங்கினர். அவர் சிவபக்தியிற் சிறந்தவர்; சிவஞான நூல்களை நன்கு கற்றறிந்து அவற்றிற் கூறியுள்ளவாறு வாழ்க்கையை நடத்தும் இயல்பினர். அவர் காஞ்சிபுரத்திலுள்ள குமரக்கோட்டத்து அர்ச்சகர்களில் ஒருவர் ஆவர்.

காளத்தியப்ப சிவாசாரியருக்குப் பல்வகைச்செல்வங்கள் நிரம்பியிருந்தும் புத்திரச் செல்வம் இல்லாதது ஒரு பெருங்குறையாகவே இருந்தது. அதனல் அவர் குமரக்கோட்டத்தில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானை உள்ளன்போடு முறைப்படி உபாசித்துப் பூசை புரிந்து வந்தார். முருகப்பெருமான் திருவருளால் நீண்ட காலத்திற்குப்பின் காளத்தியப்ப சிவாசாரியர் ஓர் ஆண்மகப் பேற்றினைப் பெறும் பேறு பெற்ருர்.

குழந்தை முருகனருளால் பிறந்தது. அப்புதல்வர்க்குக் காளத்தியப்பசிவாசாரியர் 'கச்சியப்பர்' என்று பெயரிட்டு விதிப்படி அவ்வக்காலங்களில் செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய சடங்குகளைச் செய்து அன்போடு வளர்த்து வந்தார். குழந்தை கச்சியப்பர் ஐந்தாம் ஆண்டினை எய்தியதும் கல்வி கற்பதற்கு வேண்டுவன செய்யப் பட்டது. கச்சியப்பர் தமிழ், வடமொழி இரண்டினையும் கற்பாராயினர். ஏழாம் வயதில் அவருக்கு உபநயனமும் செய்விக்கப் பட்டது. குழந்தையான கச்சியப்பர் ஆண்டுகள் செல்லச் செல்ல வளர்ந்து வந்ததுபோலவே கல்வியிலும், அறிவிலும், உருவிலும், அன்பு, அருள், அடக்கம், பக்தி என்னும் பண்புகளிலுஞ் சிறக்க வளர்ந்து வந்தார். வேதத் தியானத்தைச் செம்மையாகச் செய்து, வடமொழியில் வேத வேதாகமங்களையும் இலக்கண, இலக்கிய, தர்க்க, நாடக நூல்களையும் கற்றுச் சிறந்த அறிவாளரானர். அதேபோலத் தமிழிலும் இலக்கண, இலக்கியங்களை நன்கு கற்றுக் கவிபாடும் ஆற்றலுடையவராய்ச் சிறந்து விளங்கினர் கச்சியப்பர். அவர் சமயதீட்சை, விசேடதீட்சை, நிருவாணதீட்சை, ஆசாரியாபிடேகம் முதலியன பெற்று, தேவார-திருவாசகங்களையும் சைவாகமங்களையும் அவற்றிற்கூறியுள்ள கிரியா காண்டம், ஞான காண்டம் என்பவற்றையும் செம்மையாகக் கற்றறிந்தார். தேவார திருவாசகப் பொருள் வேதத்தின் ஞான காண்டங்களாகிய உபநிடதப் பொருளோடு ஒத்திருத்தலைக் கண்டு சிந்தித்துத் தெளிந்துகொண்டார்.

கச்சியப்பர், தம் குல ஒழுக்கப்படி குமரகோட்டத்தில் எழுந்தருளியுள்ள சுப்பிரமணியக் கடவுளை உள்ளன்போடு பூசை செய்துகொண்டு வந்தார். முருகப் பெருமானிடம் ஆரா அன்புடைய கச்சியப்பர் கனவில் ஒருநாள் முருகப்பெருமான் காட்சியளித்து, அன்பனே, கந்தபுராணத்திலுள்ள ஆறு சங்கிதைகளுள் சங்கர சங்கிதையின் முதற்காண்டமாகிய சிவரகசிய காண்டத்திலுள்ள நம் சரிதையை, நீ "கந்தபுராணம்" என்று பெயரிட்டுத் தமிழில் பெருங்காப்பியமாகப் பாடுவாயாக"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறியருளி, "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளினர்.

கனவு நிலை நீங்கியெழுந்த கச்சியப்பர் அனலிடைப் பட்ட மெழுகெனவுள்ளங் கரைந்துருகக் கரங்கள் சிரமேற் குவிய முருகப்பெருமான் திருவருளை நினைந்து நினைந்து மெய்மறந்தார். பின் நித்திரை கொள்ளாராய் முருகப்பெருமானைத் தியானித்த வண்ணமாக விருந்து பொழுது புலர்ந்ததும் கச்சியப்பர் முறைப்படி நீராடிக் கடமைகளை ஆற்றித் தம் பூசையை முடித்த பின்பு புராணத்தைப்பாடத் தொடங்கினர். கச்சியப்பர் நாள்தோறும் நூறு பாட்டுக்கள் வீதம் பாடிவந்தார். ஒவ்வொரு நாளும் தாம் பாடவேண்டியதைப் பாடி முடித்தபின் அந்த ஏட்டையும் எழுத்தாணியையும் குமரகோட்டத்துப் பெருமான் திருவடிக்கீழ் வைத்து விட்டுக் கதவினைப் பூட்டிக்கொண்டு தன் வீட்டிற்குச் செல்வார். ஒவ்வொருநாளும் கச்சியப்பர் காலையில் நீராடி நித்திய கடன்களைச் செவ்வனே செய்துமுடித்து, முருகப்பெருமானை மெய்யன்போடு பூசித்துவிட்டுக் கந்தபுராண ஏடுகளையும் எழுத்தாணியையும் எடுத்துப் புராணம் பாடத் தொடங்குவார். அப்பொழுது ஆங்காங்குச் சிலவிடங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கும். அத்திருத்தங்களைக் கண்டு 'முருகப்பெருமானே அத்திருத்தங்களைச் செய்தருளினர்' என்பதை உணர்ந்து, ஆனந்த பரவசமாய் முருகப்பெருமானை அகங்கரைந்துருகத் துதிப்பார்.

இவ்வாறு நாடோறும் புராணத்தைத் தொடர்ந்து பாடி முடித்தார். பின்னர் புராணத்தைக் குமரகோட்டத்தில் அரங்கேற்றுவதென்று நன்னுள் ஏற்படுத்தி யாவர்க்கும் தெரிவிக்கப்பட்டது. அந்த நன்னுளில் திருக்கோயிலையும் திருவீதிகளையும் மக்கள் அலங்கரித்

தனர். அந்நாளில் புலவர்களும், செல்வர்களும், பக்தர்களும், யாவரும் வந்து கூடினர். கச்சியப்பர் முறைப்படி குமரகோட்டத்துப் பெருமானைப் பூசித்துத் துதித்து வணங்கினர். அங்கு இறைவன் திருமுன் பீடமிட்டுப் பட்டு விரித்து மலர்கள் தூவி அதன்மீது கந்த புராணச் சுவடியும் வைக்கப்பட்டிருந்தது. அதனையும் தூபம் எடுத்து அருச்சித்து வணங்கினர். பின், கச்சியப்பர் தமக்குரிய ஆசனத்தில் அமர்ந்து பயபக்தியோடு சுவடியை எடுத்துக் கட்டவிழ்த்து விரித்து இனிய குரலில், "திகடசக்கரச் செம்முக மைந்துளான்" என்ற முதற் செய்யுளான கணபதி துதியைப் பாடினர். பின், 'திகழ் தசக் கரச் செம்முகம் ஐந்து உளான்' என்று பதம் பிரித்து, "விளங்குகின்ற பத்துத் திருக் கைகளும் செவ்விய ஐந்து திருமுகங்களும் உள்ள சிவபெருமானுடைய" என்று பொருளையும் கூறினர். அப்பொழுது அங்கிருந்த தமிழ்ப் புலவர் ஒருவர் எழுந்து "சுவாமி, திகழ் + தசம் = திகடசம் என்றுபுணர்வதற்கு விதி தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களிற் காணப் பட்டிலதே." என்றார். அதனைக் கேட்ட கச்சியப்பர், "ஐயா, ஆம். தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களில் இதற்கு விதியில்லை என்பது மெய்யே. ஆயினும் "திகடசக்கரச் செம்முக மைந்துளான்" என்னும் அடி என்னுடைய வாக்கு அன்று அவ்வடி குமரகோட்டத்துக் கந்தப்பெருமான் வாக்காகும்" என்று அமைதியோடு கூறினர். அதனைக் கேட்ட புலவர், "ஐய, முருகன் தோன்றி இவ்வடி யாம் எடுத்துத் கொடுத்ததே' என்று கூறின் ஏற்றுக்கொள்வோம்; அல்லையேல் யாதாயினும் ஓரிலக்கண நூலில் இதற்குரிய விதியைக் காட்டினும் ஏற்றுக்கொள்வோம். அதுவரை அரங்கேற்றம் நடைபெறலாகாது." என்று கூறித் தடுத்தார்.

அன்று அத்துடன் நிறுத்த வேண்டியதால் கச்சியப்பர் அவற்றுள் ஒன்றினை மறுநாள் செய்வதாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி யாவரையும் மறுநாள் வந்து கூடுமாறு வேண்டிக் கொண்டு யாவர்க்கும் விடை கொடுத்தனுப்பினர். அன்று இரவு உணவு கொள்ளாது கச்சியப்பர், இராக் காலப் பூசை முடிந்தபின்னர் திருக்கதவை யடைத்துக் காப்பிட்டுச் சந்நிதியிலே தரைமீது படுத்துக்கொண் டார். முருகப்பெருமான் கனவில் தோன்றி, "அன்ப, வருந்த வேண்டா. நாளை ஒரு புலவன் சோழ நாட்டி லிருந்து வருவான். வீரசோழியம் என்ற இலக் கணநூல் ஒன்றினைக் கொண்டு வருவான். அதன் கண் சந்திப்படலத்தில் பதினெட்டாம் செய்யுளாக, திகழ் + தசம் = திகடசம் என்பதற்கு விதியிருப்பதைக் கூறி விளக்குவான்," என்று கூறி மறைந்தருளினர்

மறுநாள் சபை கூடிற்று. கச்சியப்பர் தமக்கு முரு கப்பெருமான் கூறியருளியதைக் கூறினர். அச்சமயம் புலவர் ஒருவர் கையில் புத்தகமேந்தியவராய் அங்கு வந்து சேர்ந்தார். அவர் புதியவராகவும் கம்பீரமாக வும், மிக்க அறவாளி போன்றும் விளங்கியதால் அங் குள்ளோர் அவரை நோக்கி. "ஐயா, தாங்கள் யார்? கையில் தாம் கொண்டிருக்கும் புத்தகம் யாது?" என்று வினவினர். அதற்கு அப்புலவர், ஐயன்மீர், யான் சோழ நாட்டில் வாழ்கின்றவன்; கையிலுள்ளது வீர சோழியம்,'' என்று பதில் கூறினர். அப்பொழுது முதல் நாள் கச்சியப்பர் கனவில் முருகப்பெருமான் கூறியனவாகச் சொன்ன சந்திப்படலம் பதினெட்டாம் செய்யுளைப்படித்தார். அதில் திகழ் தசம் திகடசம் என்று மாறுதற்குரிய விதியிருத்தலைக்கண்டு மகிழ்ந்தார். மற்றையோரும் அதனைப் பார்த்து மனம் மிக மகிழ்ந் தனர். சோழநாட்டுப் புலவர் அப்புத்தகத்தைக் கச்சி யப்பரிடங் கொடுத்து, "தடைப்படுத்தியதற்கு விடை கிடைத்ததன்றோ" எனக் கேட்டுவிட்டு மறைந்தருளி னர். கச்சியப்பர் முருகப்பெருமானுர் தமக்காகப் புல வர் வேடந்தாங்கி வந்து ஆதாரம் காட்டி மறைந்ததை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி எண்ணி உள்ளம் உருகி முருகப் பெருமானின் பெருங்கருணைத்திறத்தைப் போற்றிப்புகழ்ந்துபரவசப் பட்டு நின்றார். கச்சியப்பர் அரங்கேற்றத்தைத் தடைப் படுத்திய புலவர் தம் குற்றத்தை உணர்ந்து, தன்னை மன்னிக்குமாறு கச்சியப்பரை வேண்டிக்கொண்டார். கச்சியப்பர், ஐய, வருந்தற்க. திருவருளினுண்மை இச்சபையோர்க்கு வெளிப்படத் தாமே காரணம் அன்றோ! இதற்கு 'என்ன கைமாறு செய்ய வல்லேன் யான்,' என்று கச்சியப்பர் கூறி அவரை மகிழ்வித்தார். பின்னர் கந்தபுராண அரங்கேற்றம் ஓராண்டு நடந் தது. கச்சியப்பர் கந்தபுராணம் முழுமையையும் படித் துப் பொருள் கூறி விளக்கினார். யாவரும் கேட்டு மகிழ்ந்தனர்.

பெருஞ்சிறப்புடன் கச்சியப்ப சிவாசாரியரையும் கந்தபுராணத்தையும் சிவிகையில் ஏற்றிப் பல்லியம் முழங்க, ஊர்வலம் செய்வித்து யாவரும் கண்டு இன் புற்றனர். கச்சியப்ப சிவாசாரியர் குமரக்கோட்டத்தில் எழுந்தருளியுள்ள கந்தவேளை முறைப்படி முன்னிலும் பன்மடங்கு அன்பு பொங்கியெழப் பூசித்தும், ஞான நிட்டை செய்துகொண்டுமிருந்து, இறுதியில் சிவத் தோடு இரண்டறக் கலந்தருளினார்.

கந்தபுராணம் 'புராண நாயகம்' என்று கூறப்படும், இதனைக் கச்சியப்பரே, ''அறுமுக முடையவோ ரமலன் மாக்கதை'' என்று, ''எடுக்கு மாக்கதை'' என்று சேக்கி ழார் பெரியபுராணத்தைக் கூறியதுபோல் கூறுகிறார். கந்தபுராணம் பதினாயிரம் பாடல்களைக் கொண்டது. கச்சியப்பர் காலம் கி. பி. பதினோராம் நூற்றாண்டின் இறுதியும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும்.

தமிழிலுள்ள புராணங்கள் பல. அவற்றுள் நடை யழகு, பொருள் ஆழம், கருத்து நுணுக்கம்,: சொற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு, செறிவு, யாப்புறுதி, அணிவிசேடம் முதலியன பெற்று விளங்கும் புராணங்கள் ஒன்பதாகும். அவை யாவன: (1) பெரிய புராணம், (2) கந்த புராணம். (3) திருவிளையாடற் புராணம், (4) கோயிற் புராணம், (5) சேது புராணம், (6) காளத்திப் புராணம், (7) காஞ்சிப் புராணம், (8) தணிகைப் புராணம்; (9) திருக்குற்றாலப் புராணம் என்பன. இவைகளைப் புராண நவமணிகள் என்பர் பெரியோர். ஆதலின் சைவ நன் மக்களும் தமிழ்மொழி கற்பாரும் தமிழ் மொழியின் பெருமை இனிமை என்பவற்றை அறிந்து இன்புற விரும்புவாரும் மேலே காட்டிய ஒன்பது மணிகளான புராணங்களையுங் கற்றறிதல் வேண்டும். இவைபோல்வன இன்னும் பல உள. அவை விரிவஞ்சி விடுத்து, இவ்வொன்பதுஞ் சிறந்தன என்று கூறப்பட்டதென்க.

## பயிற்சி

1. முத்தி நகரங்கள் ஏழும் எவை?
2. கச்சியப்ப சிவாசாரியரின் இளமைப் பருவம் குறித்துச் சுருக்கமாகத் தருக.
3. கச்சியப்பர் முருகப்பெருமானின் கருணைக்குப் பாத்திரரானார் என்பதற்கு ஆதாரங்கள் எவை?
4. புராண நவமணிகள் எவை?
5. கந்தபுராண அரங்கேற்றம் பற்றி பத்து வரிக்குக் குறையாத கட்டுரை ஒன்று வரைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32. திருப்புராணம்

இறைவன் ஆன்மாக்களுக்காக அருளிச் செய்த நூல்கள் வேதம், ஆகமம் என்னும் இரண்டுமாம். இவற்றில் வேதபோதனை அரச கட்டளைக்கும் ஆகமத்தின் போதனை மந்திரி கட்டளைக்கும் ஒப்பானதென்பது ஆன்ரோர் கருத்து. இந்நிலையில் சாதாரண மக்களும் வேத - ஆகமங்களின் உண்மைகளை விளங்கி, வேதப் பொருளாய் உள்ள இறைவன் மாட்டு அன்பு கொள்ளும் பொருட்டு மெய்யடியார்களால் தோற்றுவிக்கப்பட்டன புராணங்களாகும். இவை பொதுவாகக் கதாரூபமாகவே உண்மைகளை எடுத்துரைத்தலினுல் பக்தியைக் கூட்டுகின்றன. இதனுல் புராணபோதனையினை மனைவியின் வேண்டுதலுக்கு ஒப்பானதெனக் கூறலாம். புராணங்கள் பழமையை எடுத்தியம்புவதால் புராணம் என்பதற்குப் பழையவரலாறு என்று பொருள் கண்டனர் முன்னேர்.

புராணங்கள் மூன்றுகால நிகழ்ச்சிகளையும் கூறும் இயல்புடையன. சிவபுராணம் முதல் பிரமகைவர்த்த புராணம் இறுதியாகக் கொண்ட பதினெட்டும் சிவபுராணங்கள் எனப்படும். தமிழ்மொழியில் உள்ள புராணங்களில் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் மூன்றும் சிவபெருமானின் மூன்று கண்களுக்கு ஒப்பானவை என்பது ஆன்ரோர் கருத்தாகும். பெரியபுராணத்தினைச் சிவபெருமான் "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுப்பச் சேக்கிழார் சுவாமிகள் தில்லையிலிருந்து பாடியருளினர். அவ்வாறே கந்தபுராணத்தினை முருகப்பெருமான் "திகடசக்கர," என்று அடியெடுத்துக் கொடுப்பக் கச்சியப்ப சுவாமிகள் குமரகோட்டத்திலிருந்து அதிமதுரச் சுத்தச் செந்தமிழில் அருளிச்செய்தார்கள். திருவிளையாடற் புராணம் பரஞ்சோதிமாமுனிவரால் அருளப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்த புராணம்

(1)

### வைரவக் கடவுள்துதி

திருச்சிற்றம்பலம்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

திருச்சிற்றம்பலம்

பொழிப்புரை: சிவபெருமானைப் பரம்பொருளென்று மதியாத பிரமாவின் (ஐந்து தலைகளுள்) ஒரு தலையைக் கிள்ளி, ஆணவ மயக்க முற்றிருந்த ஏனைய தேவர்களது இரத்தத்தையும் செருக்கையும் பலியாகக் கொண்டு அவர்க்குத் தண்டனை செய்து அருளியவராகிய வைரவக்கடவுளை யாம் வாழ்த்தி வணங்குவோமாக.

**அரும்பதவிளக்கம்:** பரமன்-சிவபெருமான்; பங்க ஆசனன்-பிரமன்; குருதி-இரத்தம்; கொண்டு-அகற்றுதலாகிய செயலைத் கொண்டு; தண்டம்-தண்டனை; வடுகன்-வைரவக்கடவுள்.

குறிப்புரை: தாய், தந்தையர் புதல்வர் மேல் அன்புடையர். அதே போன்று சிவபெருமானும் உயிர்கண் மேல் கருணையுடையர். பெற்றோர், தம் சொல்வராத புதல்வருக்குப் பலவகையிலும் தண்டனை கொடுத்து நெறிப்படுத்துவர். அதே போன்று சிவபெருமானும் நெறிப்படா உயிர்களை வருத்தி ஆட்கொள்வர். இது மறக்கருணை எனப்படும். இச்செயல்களைப் புரியும்போது சிவபெருமான் பல மூர்த்தங்களை எடுப்பார். அவற்றுள் ஒன்றே வைரவக் கடவுளாகிய திருக்குமார மூர்த்தமாகும். எனவே வைரவக்கடவுள் சிவபெருமானே ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவமூர்த்தத்தில் நீல நிறம் பொருந்திய திருமேனியும், சிலம்பொலிக்குந் திருவடியும், பாம்பு பொருந்திய திருவரையும், சிரமாலைகள் அசையுந் திருமார்பும், சூலமும் மழுவும் பாசமும் உடுக்கும் ஏந்திய திருக்கரங்களும், வக்கிரதந்தங்களும், செவ்வானம் போலும் திருச்சடையும், கோபக்குறியோடு கூடிய திருநகையும் உடைய உக்கிர திருவடிவில் விளங்குவர்.

வைரவக்கடவுள் வரலாறு: விட்டுணுவும் பிரமாவும் மேருமலைக் கொடுமுடி யொன்றில் இருந்தபோது தேவர் முதலானோர் அவர்களைத் தொழுது முழுமுதற் கடவுள் யாரென்பதை உணர்த்தியருளுமாறு வேண்டினர். அதுபொழுது இருவரும் "நானே முதல் நானே, முதல்" என்று அகங்கரித்துத் தம்முள் முரணி யுத்தஞ் செய்வாராயினர். சிவபெருமான் அவர்களின் மயக்கத்தினைத் தீர்த்தற் பொருட்டுச் சோதிவடிவாய்க்காட்சி கொடுத்தருளினார்.

அதுகண்டு விட்டுணு ஆணவ மயக்கம் நீங்கப் பெற்றவராய் சிவபெருமானை முழுமுதலென்று உணர்ந்து வணங்கினார். பிரமா ஆணவ மயக்கம் சிறிதும் நீங்கப் பெறுமையால் சிவபெருமானை வணங்காமல் தமது ஐந்து சிரசுகளுள் ஒன்றான உச்சிச் சிரசிலுள்ள வாயினாலே அவரை இகழ்ந்தார்.

சிவபெருமான் பிரமாவின் பாவத்தைத் தொலைத்தருளவும் மற்றைத் தேவர்கள் முனிவர்கள் முதலானோரது அகந்தையைக் கெடுத்தருளவும் திருவுளங்கொண்டு வைரவக்கடவுளைத் தோற்றுவித்தருளினார். வைரவக்கடவுள் சிவபெருமானது ஆணைப்படி பிரமாவினது உச்சிச் சிரசைக் கிள்ளித் திருக்கையில் ஏந்தி மீண்டும் அவருக்கு உயிர் கொடுத்து தற்புகழ்ச்சியுடையராய்ச் செருக்குற்றிருந்த ஏனைய தேவர் முதலானோரது இரத்தத்தைப் பிச்சையாக ஏற்றுச் செருக்ககற்றி மீட்டும் அவர்களுக்கு உயிர் கொடுத்தருளினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2)

## வீரபத்திரக் கடவுள் துதி

திருச்சிற்றம்பலம்

அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.

திருச்சிற்றம்பலம்

பொழிப்புரை: தக்கனது வேள்விச்சாலையையடைந்து ஒன்றுகூடி, அவனளித்த அவிப்பாகத்தை உண்டவர்களாகிய தேவர்கள் யாவரும் இறந்து படவும், அவ்வேள்விக்கு உடன்பாடாயிருந்த முனிவர்களும் வேதியர்களும் அஞ்சிவருந்தவும், தக்கனியற்றிய பெரிய யாகத்தினை இடையிலே அழிவுறச் செய்து அத் தக்கனின் சிரத்தை அறுத்து(பின் ஆட்டுத்தலை பொருத்தி) அருள் புரிந்த வீரபத்திரக் கடவுளது திருவடியை வாழ்த்தி வணங்குவாம்.

அரும்பதவிளக்கம்: அவிசு-அவிப்பாகம்; அமரர்-தேவர்; முடிந்திட-இறந்துபட; வெருவி-பயந்து; உடைந்திட-அஞ்சிவருந்த; மாமகம்-பெரியயாகம்; ஒடிய-அழிவுற; இடும்-அருள்புரியும்; சேவகன்-வீரபத்திரக்கடவுள்.

குறிப்புரை: சிவபெருமானின் திருக்குமார மூர்த்தங்களில் ஒன்று வீரபத்திரவடிவம். வீரபத்திரக் கடவுளின் சக்தி வீரமாகாளி எனப்படும்.

வீரபத்திரர் வரலாறு: தக்கன் உமாதேவியாரை மகளாகப் பெறவிரும்பித் தவஞ் செய்தான். இறைவனருளால் உமாதேவியார் தாக்ஷாயினி என்னுந் திருப்பெயரோடு தக்கனுக்கு மகளானார். பின்னர் சிவபெருமான் தாக்ஷாயினியைத் திருமணஞ் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமுதற் கடவுளான சிவபெருமான் தனக்கு மருமகனுனமையினுல், தானே அவரிலும் மேலானவனென்று தக்கன் தருக்குற்ருன். தன்னை மாமனென்று சிவபெருமான் மதியாதிருப்பதுகண்ட அத் தக்கன் அவரை இகழ்ந்து அவருக்குரிய அவிப்பாகத்தை மாற்றக் கருதி ஒரு வேள்வி செய்யத் தொடங்கினுன். அவன்மேற்கொண்டது அபிசார வேள்வியாதலின் சிவபெருமான் அவ்வேள்வியை அழித்துத் தக்கனது செருக்கை ஒழித்தருளத் திருவுளங்கொண்டார். அதனுல் வீரபத்திரரைத் தோற்றுவித்தருளினுர்.

## சேக்கிழார் புராணம்

திருத்தொண்டர் புராணமென்னும் பெரியபுராணத்தைச் செய்தருளியவர் சேக்கிழார் பெருமான். அவரது வரலாற்றை உமாபதிசிவாசாரியர் புராணமாகப் பாடியருளினுர். அப்புராணம் சேக்கிழார் புராணம் எனப்படும். அதில் சிவகாமி அம்மைக்கும் வணக்கப் பாடல் கூறப்பட்டுள்ளது.

## சிவகாமியம்மை துதி

திருச்சிற்றம்பலம்

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னெளிவிளங்க
வரந்தைகெடப் புகலியர்கோ னமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி.

திருச்சிற்றம்பலம்

பொழிப்புரை: தேசமெங்கும் வியாபித்துத் தலையெடுத்து வளர்ந்து நின்ற சமணம் முதலிய புறச்சமயங்களாகிய இருள் நீங்கவும், எவ்வகைச் சமயங்களுக்கும் தலைமையாயுள்ள சைவசமயநெறியிற் பேசப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசின்னமாகிய) திருநீற்றின் ஒளி உலகெங்கும் பெருகவும், உயிர்களது பிறவித்துன்பம் ஒழியவும், (சீகாழிப்பதியில் அவதரித்தருளிய) திருஞானசம்பந்தப் பிள்ளையார் உண்ணும் பொருட்டுச் சிவஞானமாகிய திருமுலைப்பாலைத் தமது பெருங்கருணையினாற் சுரந்து கொடுத்தருளிய சிவகாமி அம்மையின் அழகுள்ள திருவடிகளைத் துதித்து வணங்குவாம்.

அரும்பதவிளக்கம்: பரந்து-வியாபித்து; பரசமயம்-புறச்சமயங்கள்; இருள்-அறியாமை; சிரம்-தலைமை; அரந்தை-பிறவித்துன்பம்; புகழியர்கோன் - திருஞானசம்பந்தர்; திருமுலைப்பால்-சிவஞானமாகிய முலைப்பால்; சிவகாம சுந்தரி - சிவகாமி அம்மை; பூம்-அழகிய; போற்றி – வணக்கம்.

குறிப்புரை: சிவபாத விருதயரின் தவப்புதல்வர் "அம்மே அப்பா" என்று அழுதபோது அவரது பக்குவ நிலையைத் திருவுளத்துட் கொண்டு, அவர் சிவனை அறிந்தடைந்து பேரின்பமாகிய சிவானுபவம் பெறுதற்கு வாயிலாயமைந்த சிவஞானமாகிய திருமுலைப்பாலை உண்ணும்படி அளித்தருளினார். அங்ஙனம் அவர் அளித்தருளியமையால் அப்புதல்வர் திருஞானசம்பந்தர் ஆயினார். அந்த ஞானமே பற்றுக்கோடாகப் பாண்டியன் சுரந்தீர்த்துத் திருநீற்றின் மகிமையை விளங்கச் செய்தும், சமணரை வாதில் வென்றும், புத்தநந்தியின் தலையில் இடியிடிக்கச் செய்தும், புறச்சமய இருள்கடிந்து யாவரும் சைவ சமயத்தையே தழுவிப் பிறவித்துன்பம் நீங்க அருளினார். இந்நன்மைகள் எல்லாம் சிவகாமியம்மையார் சிவஞானமாகிய திருமுலைப்பாலைச் சுரந்தளித்தமையால் வந்தனவாதலின் "......பரசமய இருள்நீங்க,...... திருநீற்றின் ஒளிவிளங்க, ........ அரந்தைகெட(த்தக்க தாய்) புகழியர் கோன் அமுது செயத் திருமுலைப்பால் சுரந்தளித்த சிவகாம சுந்தரி......" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி

1. புராணங்கள் எவை பற்றிக் கூறுகின்றன?
2. வைரவக் கடவுள் ஏன் தோன்றினர்?
3. அவரது தோற்றம் பற்றி விரிவாகக் கூறுக.
4. வீரபத்திரக்கடவுளால் தண்டிக்கப்பட்டோர் யாவர்?
5. புகலியர்கோன் என்ற பெயர் யாரைக் குறிக்கின்றது?
6. சிவகாமியம்மை ஊட்டிய பாலை உண்டவர் யார்?
7. கந்தபுராணம் அல்லது பெரிய புராணம் பற்றி-பத்துவரிக்குக் குறையாது எழுதுக.
8. நீர்படித்த புராணச் செய்யுள்களில் ஒன்று எழுதி அதன் பொருளையுந் தருக.
9. பொருள் தருக:
   பங்கயாசனன்; வடுகன்; அவிசு; அரந்தைகெட; பரசமயம்.
10. பின்வரும் கதைக் குறிப்புகளில் ஒன்றன் வரலாற்றினைத் தெளிவாகத் தருக.
    (i) பங்கயாசனன் ஒருதலைகிள்ளல்
    (ii) தக்கனைத் தடிதல்
    (iii) திருமுலைப்பால் சுரந்தளித்த சிவகாமசுந்தரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33. கந்தரலங்காரம்

கந்தப்பெருமானின் கருணையில் திளைத்தவர் அருணகிரிநாதர். இவர் இளமையில் போற்றுவொழுக்கம் உடையராய் வாழ்ந்தார். செல்வங்கள் அனைத்தையும் அழித்து வறுமையுற்றபோதும் தம் தவறினை உணர்ந்திலர். இறுதியில் சகோதரியின் ஒருவார்த்தை அவர் மனக்கண்ணைத் திறக்கச் செய்தது. தம் தவறினுக்குக் கழுவாய் தேடும்பொருட்டுத் திருப்பரங்குன்றக் கோபுரத்தினின்றும் குதித்து உயிர்விடத்துணிந்தார். அவ்வமையம் கந்தப்பெருமான் முதியவர் வேடத்தில் காட்சி கொடுத்து ஆட்கொண்டார். பின்னர் பெருமானே ''முத்தைத் தரு'' என்று அடியெடுத்துக் கொடுப்ப அதனை முதலாக வைத்துத் திருப்புகழ் என்னும் சந்தப்பாமாலையினை அருணகிரியார் அருளினர். கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரனுபூதி, வேல்விருத்தம், திருவகுப்பு என்னும் நூல்களும் இவரால் பாடப்பட்டனவாகும். கந்தரலங்காரம் என்னும் நூல் கந்தசுவாமியாரின் திருவருட் சிறப்புக்களையும் பெருமைகளையும் அழகுபட எடுத்துரைக்கின்றது. இதில் நூறு பாடல்கள் உள. இவற்றினை நாம் பாராயணஞ் செய்து வருவோமாயின் வினையகன்று இறைவன் அருளுக்குப் பாத்திரராவோம் என்க.

திருச்சிற்றம்பலம்

**சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு**
**வெற்பனைச் செஞ்சுடர்வேல்**
**வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்**
**தோனை விளங்குவள்ளி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே.

திருச்சிற்றம்பலம்

பொழிப்புரை: செந்நிறமுடையவனை, கந்தன் என்ற பெயருடையவனை, திருச்செங்கோடு, என்னும் மலையில் எழுந்தருளியிருப்பவனை, சிவந்த ஒளி வீசுகின்ற வேலையுடைய அரசனை, செந்தமிழ் மொழியைப் பரவச் செய்தவனை, விளங்கும் வள்ளியம்பிராட்டிக்குக் கணவனை, மணம் பொருந்திய கடப்ப மலர் மாலையை அணிந்தவனை, கரிய மயிலை வாகனமாக உடையவனை இறக்கும் நேரத்திலும் மறவாதவர்களுக்கு யாதொரு குறைவும் இல்லை.

அரும்பதவுரை: சேந்தன்-செந்நிறமுடையவன்; காந்தன்-கணவன்; போது-பொழுது.

விளக்கம்: முருகப்பெருமான் செந்நிறமேனி கொண்டு திகழ்பவன். ஆதலின் அப்பெருமானுக்குச் செவ்வேள் என்ற பெயரும் உண்டு. 'பவளத்தன்னமேனி' என்று அவன் திருமேனி செந்நிறமுடையது என உவமைமுகத்தால் பாரதம் பாடிய பெருந்தேவனார் கூறுகிறார். 'செவ்வானுருவிற் றிகழ் வேலவன்' என்பர் கந்தரனுபூதியிலும்.

சரவணப்பொய்கையில் கார்த்திகை மாதர் அறுவர் வளர்க்க ஆறு குழந்தைகளாயிருந்தவற்றைக் காண வந்த பார்வதி தேவியார் ஆறு குழந்தைகளையும் ஒன்றாய்ச் சேர்த்தணைத்தெடுக்க, ஆறு குழந்தைகளும் சேர்ந்து ஒருடலும் ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளும் உடைய முருகனாக விளங்கினான். அதனால் (ஸ்கந்தன்) கந்தன் என்று கூறப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த மில்லதோர் மூவிரு வடிவுமொன் ருகிக் கந்தனென்றுபேர் பெற்றவன் கௌரிதன் குமரன் என்பது கந்தபுராணம்.

திருச்செங்கோடு சேலம் ஜில்லாவிலுள்ளதோர் தலம். முருகன் கையில் தாங்கிநிற்கும் வேல், சூரபன் மன் முதலான பகைவர் உரங்களைப் பிளந்து உதிரம் தோய்ந்து செந்நிறம் பொருந்தி ஒளிவிடுகின்ற வேலா கும். மற்றும் அது செம்மையான, ஒழுங்கான, கோண லற்ற அழகிய ஒளி பொருந்திய வேலுமாகும். பாரதம் பாடிய பெருந்தேவனுர் "குன்றின் நெஞ்சுபக வெந்த அம்சுடர் நெடு வேல்" என்ருர்.

முருகன் தமிழ்க் கடவுள். முருகன் என்ற பெயரே அதனை விளக்கும். முருகு என்பதற்கு இளமை, மணம், அழகு, தெய்வத்தன்மை, ஆனந்தம் முதலான பொருள்களைப் பிங்கலந்தை என்ற நிகண்டு கூறும். அவற்றையெல்லாம் உடையோன் முருகன். ஆதலின் அப்பெயர் அருமையான பெயர்; பெறுதற்கரிய பெயர். ஆதலினன்ரே நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் "அரும்பெறல் மரபிற் பெரும் பெயர் முருக" என்று உளங் கனிந்து கூறுகிருர். தமிழ்க் கடவுள் என்ற பற்றே அவ்வாறு கூறச்செய்தது. அகத்திய முனி வர்க்கு இலக்கணம் முதலியன அருளிச்செய்தவன் முருகனே ஆதலின் அவன் செந்தமிழ்நூல் விரித்தோன். முருகன் தமிழ் மொழியில் விருப்புடையவன் என்பது அவன் உக்கிரகுமாரனுகவும், உருத்திரசன்மனுகவும் அவதரித்துத் தமிழ் கேட்டான் என்று தமிழ் நூல்கள் கூறும்.

வள்ளிநாயகியினிடத்துத் தாமே சென்று ஏசல் கேட்டு மரமாகி நின்று, கிழவனுகிக் குமரனுகி மணந்து கொண்டு அருள்செய்தான் முருகன். உள்ளங் கனிந்து தன்னை நினைந்துருகும் அடியார்களிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே சென்று அருள்புரிபவன் முருகன் என்பது அதனுல் விளங்கும்.

முருகனுக்கு விருப்பமானது கடப்பமலர். அது மணம் பொருந்திய மலர், கார் மயில்வாகனன் முருகன். வாகனம் - ஊர்தி.

"கார் மயில்" என்றது கரிய மயில் என்றும், கார் என்பது மேகத்தைக் குறிக்கும் ஆதலால் கருமேகத்தை ஒத்த நிறமுடைய மயில் என்றும், மேகத்தைக் கண்டால் மயில் தோகைவிரித்து மகிழ்ந்தாடும் ஆதலின் கார் மயில் என்றும் கூறினர். சூரபன்மனை மறக்கருணையாற் கொன்று அவனை மயிலாகவும் கோழியாகவும் மாற்றி வாகனமாகவும் கொடியாகவும் முருகன் தன் இயல்பான கருணை தோன்றச் செய்து அமைத்துக் கொண்ட தன்மையையும் விளக்கும்.

2

திருச்சிற்றம்பலம்

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மைகுன்ரு
மொழிக்குத் துணைமுரு காவெனு
நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே.

திருச்சிற்றம்பலம்

பொழிப்புரை: கண்களுக்குத் துணை முருகனுடைய அழகிய மெல்லிய பாதங்கள், உண்மையான சொல்லிற்குத் துணை முருகா என்பன முதலாகிய அவன் பெயர்கள், முற்பிறவியில் செய்த பாவங்கள் தாக்காதபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையாயிருப்பன அவனுடைய பன்னிரண்டு தோள்கள், அஞ்சிய தனிவழியான இறப்பிற்குத் துணையாயிருப்பன திருச்செங்கோடு என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பிரானின் கையிலுள்ள வடிக்கப்பட்ட கூர்மையான வேலாயுதமும் அவர் ஊர்தியான மயிலுமே ஆகும்.

விளக்கம்: இறைவன் உயிர்களுக்குக் கண்களைப் படைத்துள்ளான். அக்கண்கள் பொருள்களைப் பார்ப்பதற்குத் துணை செய்கின்றன. உயிர் வர்க்கங்களுள் தலைசிறந்தது மனிதப்பிறவி. மனிதன் பிற உயிர்கள் காண்பன போலக் கண்களைக் கொண்டு பொருள்களை மட்டும் கண்டால், கண்களைப் பெற்ற பயனைப் பெற்றவனாகான். மனிதனுக்குப் பகுத்தறிவு என்பது ஒன்று உள்ளது. அது அவனுக்கு அகக் கண்ணையும் திறந்து காட்டுகின்றது. எனவே, மனிதன் அகக் கண்ணாலும் புறக் கண்ணாலும் பார்க்குந் திறனுடையவன். மெய்யறிவின் துணை கொண்டு அகக் கண்ணாற் காணும் இறைவனைப் புறக் கண்ணாலும் அவனைக் காணமுடியும். அவ்வாறு காண முயல்வதே மனிதப்பிறவி யெடுத்ததின் நோக்கமாகும். இறைவனைக் கண்ணாற் காண இயலுமோ என்று கேட்கலாம். காணலாம் என்பதே பதில்.

''கண்ணா லியானுங் கண்டேன் காண்க'' என்பது மாணிக்க வாசகரின் மெய்ம்மை குன்றா மொழி எனின் இதனை விட வேறு என்ன சான்று வேண்டும்?

''கண்காள் காண்மின்களோ,
கடல் நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்
பிரான்றன்னைக் கண்காள் காண்மின்களோ''

என்பது அப்பர் திருவாக்கு. அவன் திருவடிகளே கண்களுக்குத் துணை. அந்தத் திருவடி அழகு பொருந்தியது; மென்மையானது; தாமரை மலர் போன்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிற்கு அழகு பொய் சொல்லாமை. சொல் என்பது வாய்மை குன்றுச் சொல்லேயே குறிக்கும். உண்மையே சொல்லிற்கு உயர்வு தரும். 'செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்' என்பதின் இலக்கணத்தைக் கூற வந்த திருவள்ளுவர் அவர்கள் சொல் அன்பு கலந்ததாய், இனிய சொல்லாய், வஞ்சகம் முதலான குற்றங்கள் அற்றதாய் இருக்கும் என்றுர். அன்னுர் வாயில் தீய சொற்கள் பயிலா தென்பதை விளக்கவே வள்ளுவர் 'வாய்ச் சொல்' என்று வாய் என்பது வேண்டாதிருக்கவும் கூறிஞர். எனவே. செம்பொருள் கண்டார் செம் பொருளேயே பேசுவர். செம்பொருள் இறைவன். இறைவன் திருநாமங்களைக் கூறலே மொழிக்குத் துணை.

மொழியை மொழிதற்கு வாய் கருவி, மொழியடங்க வாய்பேசாது; மௌனம் ஓங்கும். மௌனம் என்பது ஞான வரம்பு. மௌனமே ஞானத்தைப் பெருக்கிக் கொள்ளத் தக்க சாதனம் எனவே, மௌனத்தை மேற்கொள்பவன் மொழிதலைக் குறைக்க வேண்டும். மொழிதலைக் குறைக்க ஒப்பற்றவழி இறைவன் திருநாமங்களைக் கூறலேயன்றிப் பிற சொற்களைக் கூறுமை, எனவே, மொழியை யடக்கவும் ஞானத்தைப் பெருக்கவும் வீண் சொற்களைப் பேசாதிருக்கவும் இறைவன் திருநாமங்களை மட்டும் கூறுதலாகிய விரதம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

முற்பிறவியிற் செய்த தீவினைகள், பழி பாவங்கள் இப்பிறவியில் வந்து துன்பம் தருவனவாகும். அவற்றை அகற்ற வேண்டின் இறைவனை இடையருது வழிபடல் வேண்டும். முன் செய்த தீவினையை அகற்றுபவன் இறைவனே திருநாவுக்கரசர். ஐந்தாம் திருமுறையில்

"முன்னை நான் செய்த பாவம் முதலறப்
பின்னை நான்பெரி தும்அருள் பெற்றதும்"

என்று கூறுவதும் அறிதற்பாலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பழைய தம்மடி யார்செய்த பாவமும்
பிழையுந் தீர்ப்பர் பெருமா னடிகளே"

என்று அவர் வற்புறுத்தலும் அறிதற்பாலது.

'பாவந் தீர்க்கும் பரமன்' இணையடிகளை மறவாது வழுத்துதலே முன்வினையைக் கடிந்தெறிய வழியாகும் என்பது தெளிவு.

மக்களுக்கு மிக்க அச்சம் தருவது இறப்பு, பிறப்பு உண்டேல் இறப்பு உண்டு. அதனை எவரும் தவிர்த் தற்கு இயலாது. அதற்கு அஞ்சுவதனுல் பயன் ஒன்று மில்லை. இறப்பிற்கு அஞ்சுவது பேதமையே. ஞானி கள் இறப்பிற்கு அஞ்சார். இறப்பென்னும் தனிவழிக் குத் துணையிருப்பன திருச்செங்கோடு என்னும் தலத் தில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானுடைய வேலும் மயிலும் ஆகும். முருகப் பெருமானுடைய அடியானெனில் நமன்தமர் நெருங்க அஞ்சுவர். முரு கனடியார்கள், பட்டிக் கடாமீது வரும் அந்தகனைப் புறங் காண்பார். 'அந்தகா வந்து பார்' என்று அஞ் சாது கூறி நிற்பார்.

### பயிற்சி

1. கந்தரலங்காரம் என்னும் நூலைப் பாடியவர் யார்?
2. இந்நூலாசிரியர் பாடிய வேறு நூல்கள் எவை?
3. முருகனை எவ்வாறெல்லாம் ஆசிரியர் சுட்டுகிருர்?
4. செந்தமிழ் நூல்விரித்தோன் - விளக்குக.
5. யாருக்குத் தாழ்வு இல்லை?
6. செங்கோடன் என்று கூறியது யாரை? அப்பெயர் வரக் காரணம் என்ன?
7. விழி, மொழி, பழி, வழி இவற்றிற்குத் துணையாவன யாவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34. திருப்புகழ்

திருப்புகழ் என்னும் நூல் முருகப்பெருமான் மீது அருணகிரிநாதரால் பாடப்பட்டதாகும். திரு என்பது மேன்மையை உணர்த்தும். புகழ் என்ற பண்புப்பெயர் புகழைக் கூறும் பாடலுக்கு ஆகி வந்தது. அதுவே நூலுக்கும் பெயராயிற்று. சிவபிரானின் புகழைக் கூறுவன தேவார திருவாசகங்கள். முருகப்பெருமானின் மீது பாடிய திருப்புகழ்ப் பாடல்கள் பதினாறாயிரம் என்று கூறுவர். ஆனால் இன்று நமக்குக் கிடைத்துள்ளன ஆயிரத்து முந்நூறு பாடல்களே. திருப்புகழ்ப் பாடல்கள் யாவும் சந்தப்பாக்களால் ஆனவை.

ஆசிரியர் வரலாறு

அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் அவதரித்தார். இவர் காலத்தில் இருந்த அரசர் பிரபுடதேவ மகாராஜா என்பவராவர். இவர்காலம் சற்றேறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன் எனலாம். அருணகிரிநாதர் இளமையில் துன்பமுற்று வருந்திய பின், முருகப்பெருமான் அருளினால் மெய்ஞ்ஞான உபதேசம் பெற்று, அற்புதமான இத்திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியருளினார். தேவாரம் பாடிய குரவர்களைப் போல அருணகிரிநாதரும் தலங்கள் தோறும் சென்று ஆங்காங்கு எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைப் பாடிப் பரவிப் பணிந்தார். அப்பாடல்களின் தொகுப்பே 'திருப்புகழ் என்னும் நூலாகும். அப்பாடல்களும் பதினாறாயிரம் ஆகும். இதனை வரகவி மார்க்கசகாயதேவர் என்னும் புலவர் திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழில் "எம் அருணகிரிநாதர் ஓது பதினாறாயிரந் திருப்புகழ் முழுதுமே" என்று கூறியிருத்தலால் அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாக்கிற் கருணகிரி" "கருணைக் கருணகிரி" "சந்தப் புகழ்ப் பாவிற் கருணகிரி" என்று ஆன்ருேர் கூறும் தொடர்புகள் இவர் புலமையை நன்கு புலப் படுத்தும். அருணகிரிநாதர் திருப்புகழே அன்றித் திரு வகுப்பு, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி என்ற நூல்களையும் பாடியுள்ளார்.

தமிழில் பாரதத்தைப் பாடிய வில்லிபுத்தூர் ஆழ் வார் இவர் காலத்தவர் என்றும், அருணகிரியால் வாதில் வெல்லப்பட்டார் என்றும் கூறுவாரும் உண்டு.

பக்தர்கள் திருப்புகழ்ப் பாடல்களை இசையில் அமைத்துப்பாடி இன்புறுகிருர்கள். ஆறுமுகன் அருளைப் பெறுகிருர்கள்.

(1)

[பொது]

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரும் இளமையும் வளமேவும்
விரிந்த நாடும் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினர் மருகோனே
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே.

பதவுரை: குருந்தில் ஏறும்-குருந்தமரத்தில் ஏறிய; கொண்டலின் வடிவினர்-கருமுகில் வண்ணனுன திரு மாலுக்கு; மருகோனே-மருகரே; குரங்கு உலாவும்-குரங்குகள் உலாவித்திரியும்; குன்றுறை குறமகள்-மலை யில் வாழும் சாதியாராகிய குறவர் குலத்து மகளாயி ருந்து வளர்ந்த வள்ளிநாயகியாருக்கு; மணவாளா-நாயகரே; வேதம் தண்டமிழ்-வேதப்பொருளையும் இனிய தமிழையும்; திருந்த-திருத்தமுற; தெரிதருபுலவோனே-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபதேசித்தருளிய புலவரே; சிவந்தகாலும்-சிவந்த திருவடியிணையும்; தண்டையும் - அத்திருவடியில் அணிந்த தண்டையென்னும் ஆபரணத்திணையும் கொண்ட;அழகிய பெருமாளே-அழகிய பெருமையை ஆள்பவனே; இருந்த வீடும்- (அடியேன்) வசிக்கும் வீடும்; கொஞ்சிய சிறுவரும்-கொஞ்சிக்குலாவும் மக்களும்; உறுகேளும்-உற்ற உறவினரும்; இசைத்த ஊரும்-வாழப்பொருந்திய ஊரும்; பெண்டிரும்-மனைவியரும்; இளமையும்-இளமைப்பருவமும்; வளம்மேவும் விரிந்த நாடும் - வளங்கள் பொருந்திய விசாலமான நாடும்; குன்றமும்-நாட்டுக்கு வளமும் அழகும் தரும் மலைகளும்; நிலையென- (ஆகிய இவைகளெல்லாம் அழியாத) நிலையான பொருள்கள் என்று; மகிழாதே-அவற்றில் பற்றுவைத்து அவற்றால் வரும் சிற்றின்பங்களை பேரின்பமென்று மகிழாமல்; விளங்கு தீபம் கொண்டு-ஒளி விளங்கும் தீபம் முதலிய பூசனைப் பொருள்களைக் கொண்டு; உனைவழிபட-தேவரீரைப் பூசித்து வழிபட்டு வாழும்படி; அருள்வாயே- (மெய்யுணர்வைத் தந்து) அருள் செய்வீராக.

பொழிப்புரை: குருந்த மரத்திலேறிய முகில்வண்ணனான திருமாலுக்கு மருகரே, குரங்குகள் உலாவித் திரியும் மலையில்வாழும் சாதியாராகிய குறவர் குலத்து மகளாயிருந்து வளர்ந்த வள்ளிநாயகியாருக்கு நாயரே, திருத்தமுற வேதப்பொருளையும் இனிய தமிழையும் தெருவித்தருளிய புலவரே, சிவந்த திருவடியும் திருவடியில் அணிந்த தண்டையும் பொருந்திய அழகிய பெருமாளே, (அடியேன்) வசிக்கும் வீடும், கொஞ்சிக் குலாவும் மக்களும், உறவினரும், வாழப்பொருந்திய ஊரும், மனைவியரும், இளமைப் பருவமும், வளங்கள் பொருந்திய விசாலமான நாடும், (நாட்டுக்கு வளமும் அழகுந் தரும்) மலைகளும் ஆகிய இவைகள் எல்லாம் அழியாத-நிலையான பொருள்களென்று பற்று வைத்து அவற்றால் வரும் சிற்றின்பங்களை அநுபவித்திருப்பதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரின்ப மென்று மகிழாமல், ஒளிவிளங்கும் தீபம் (முதலிய பூசனைப் பொருள்களைக்) கொண்டு தேவரீரைப் பூசித்து வழிபட்டு வாழும்படி (மெய்யுணர்வைத் தந்து) அருள் செய்வீராக.

**விளக்கம்** வீடு, மக்கள், மனை, சுற்றம், நாடு முதலாயின தோன்றிப் பலமாற்றங்களடைந்து பின் மறைந்தே போகும் தன்மையுடையனவாதலின் இவை நிலையற்றன வென்ற பொருளில் நிலையென மகிழாதே என்றார்.

**திருமால் குருந்தேறிய வரலாறு:** திருமாலின் அவதாரமான கண்ணனைக் கொல்ல எண்ணி மாமனாகிய கம்சன் ஓர் அசுரனை அனுப்பினான். அவன் ஒரு குருந்த மரத்தை ஆவேசித்திருந்தானாக, அதனைக் குறிப்பால் அறிந்த கண்ணபிரான் அம்மரத்திலேறி அதனை முறித்தழித்ததோடு அசுரனையும் கொன்றொழித்தார்.

**கந்தசுவாமியார் திருமாலுக்கு மருகரானமை:** கந்தசுவாமியாரின் சக்திகளாகிய தெய்வானை அம்மையாரும் வள்ளியம்மையாரும் முன்பு திருமாலின் இரு கண்ணினின்றும் அமுதவல்லி, சுந்தரவல்லி என்ற பெயருடன் தோன்றியவராதலாலும் திருமால் உமாதேவியாருக்கு உடன் பிறந்தவராகக் கூறப்படுவதாலும் திருமாலுக்கு மருகர் எனப்பட்டார்.

**குறமகள் மணவாளனுய வரலாறு:** அமுதவல்லி, சுந்தரவல்லியாகிய இருவரும் பலகாலமாகச் சரவணப் பொய்கையில் நின்று தவஞ் செய்தபோது, கந்தசுவாமியார் அவர் முன் தோன்றி வேண்டும் வரம் யாதென வினவினர். அதுபொழுது அவரிருவரும் பெருமான் தம்மை மணஞ்செய்ய வேண்டுமென இரந்தனர். வேண்வார் வேண்டுவதை ஈயும் பெருமான் அமுதவல்லியை இந்திரன் மகளாக வளரும் படியும் சுந்தரவல்லியை வேடுவர் மகளாக வளரும் படியுங் கட்டளையிட்டரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளினர். அவர்கள் அவ்வாறே வளருங் காலத்தில் அவர்களை மணந்தருளினர்.

சிவபெருமானுக்குக் குருநாதனாய் அமர்ந்து வேத மந்திரோபதேசஞ் செய்தருளிய சிறப்பினாலும், அகத்தியர், நக்கீரர் முதலானோர்க்குத் தண்டமிழ் அறிவுறுத்திய திறத்தினாலும் முருகப் பெருமான் "வேதம் தண்டமிழ் (திருந்தத்) தெரிதரு புலவோன்[2]" எனப் பெற்றார்.

(2)

## சுவாமிமலை (திருவேரகம்)

சரணகம லால யத்தை அரைநிமிட நேர மட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத;
சடகசட மூட மட்டி பவவினையி லேச னித்த
தமியன்மிடி யால்ம யக்க முறுவேனோ;
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே;
கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலை செச்சை
கமழுமண மார்க டப்ப மணிவோனே;
தருணமிதை யாமி குத்த கனமதுற நீள்ச வுக்ய
சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வு;
தகைமை சிவ ஞானமுத்தி பரகதியுநீ கொடுத்து
தவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா;
அருணதள பாத பத்ம மதுநிதமு மேது திக்க
அரியதமிழ் தான ளித்த மயில்வீரா;
அதிசயம நேக முற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே;

பதவுரை: கயிலைமலை நாதர் பெற்ற-கயிலை மலைக்குத் தலைவரான சிவபெருமான் பெற்ற; குமரோனே-குமரன் என்னும் பெயருடையவனே; கடகபுயமீது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகுவலயம் அணிந்த தோளின்மீது; ரத்நமணி அணி-இரத்தினக் கற்களால் ஆன மாலையும்; பொன்மாலை-பொன்னாலான மாலையும்; செச்சை-வெட்சிமலர் மாலையும்; கமழும் மணம் ஆர்கடப்பம்-பரந்து வீசும் மணம் நிறைந்த கடப்பமலர் மாலையும்; அணிவோனே-அணிந்திருப்பவனே; நெய்த்த வடிவேலா-நெய் பூசப்பட்ட கூர்மையான வேலையுடையவனே; அருணதள-செந்நிறம் பொருந்திய இதழ்களையுடைய; பாதபத்ம மது-உனது பாதங்களாகிய தாமரை மலர்களை: நிதமுமே துதிக்க - நான் தினந்தோறும் துதித்துப்பாட; அரிய தமிழ்தான் அளித்த - அரிய தமிழ்மொழியை எனக்குக் கொடுத்தருளிய; மயில்வீரா-மயிலை வாகனமாகவுடைய வீரனே; அதிசயம் அநேகம் உற்ற - அற்புதங்கள் மிகப் பலவும் பொருந்திய; பழநிமலை மீது உதித்த-பழநிமலைமீது தோன்றியுள்ள; அழக-அழகே வடிவமாகவுடையவனே (அழகனே); திருவேரகத்தின் முருகோனே-திருவேரகம் என்னும் சுவாமி மலையில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானே; சரண கமல ஆலயத்தை - உன்னுடைய பாதங்களாகிய தாமரைக் கோயிலை; அரை நிமிட நேர மட்டில்-அரை நிமிடம் எனும் குறைந்ததான நேரத்தளவாவது; தவமுறை தியானம் வைக்க அறியாத - ஐம்புலன்களையும் ஒடுக்கி மனத்தை ஒருநிலைப்படுத்தி ஒரு முகமாகச் சிந்தையில் நினைத்திருக்கத் தெரியாத; சட - தூல சரீரத்தையுடைய; கசட குற்றமுடைய; மூட - அஞ்ஞானம் மிகுந்த; மட்டி - அறிவில்லாத; பவவினையிலே சனித்த-பிறப்பிற்கே காரணமான தீவினையினுற் பிறந்த; தமியன் - தனிப்பட்டவனுகிய நான்; மிடியால் மயக்கம் உறுவேனே - தரித்திரத்தினுல் மனக்கலக்கத்தை அடைந்து வருந்துவது தகுமோ?; கருணை புரியாது இருப்பது - என்னிடத்தில் உனது இயற்கையான அருளிரக்கங் கொண்டு கருணையைச் செய்யாமல் நீ இருப்பதற்கு; என குறை - என்னிடமுள்ள குறைபாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன; இ வேளை செப்பு-இந்தச் சமயத்தில் சொல்லுவாயாக; ஐயா-ஐயனே (தலைவனே); இது தருணம்-இதுதான் நீ கருணைகொண்டு அருளினைப்புரியத் தகுந்த சமயம்; மிகுந்த கனம் அது உறு-மிகுந்த பெருமை பொருந்திய; நீள் சவுக்ய-நீண்ட சுகத்தைத் தருவதான; சகல செல்வ யோகம் மிக்க-எல்லாவிதமான செல்வங்களும் வாய்க்கக்கூடிய யோகம் மிகுந்த; பெரு வாழ்வு-சிறந்த பெரிய வாழ்க்கையையும்; தகைமை-மிக்க மேன்மையுமான; சிவஞான முக்தி பரகதியும்-சிவஞானத்தையும், அதனால் பெறக்கூடிய முத்தி என்னும் மேலான நிலையையும் (வீடு பேற்றையும்); நீ கொடுத்து உதவி புரியவேணும்-நீ எனக்குக் கொடுத்து உதவியைச் செய்தருளவேண்டும்.

பொழிப்புரை: கயிலை மலைக்குத்தலைவரான சிவபெருமான் பெற்ற குமரன் என்ற பெயருடையவனே! வாகுவலயம் அணிந்த தோளின்மீது இரத்தினமாலையும், பொன்மாலையும், வெட்சிமாலையும், மணம் வீசும் கடப்பமாலையும் அணிந்திருப்பவனே! நெய் தடவப்பெற்ற கூர்மையான வேலையுடையவனே! செந்நிறம் பொருந்திய இதழ்களையுடைய உனது பாதங்களாகிய தாமரை மலர்களை நான் தினந்தோறும் துதித்துப்பாட அருமையான தமிழ் மொழியை அளித்தருளிய மயிலை வாகனமாகவுடைய வீரனே! அற்புதங்கள் பலவும் நிறைந்த பழநிமலை மீது தோன்றியுள்ள அழகனே! திருவேரகம் என்னும் சுவாமி மலையில் எழுந்தருளியுள்ள முருகனே! உன்னுடைய பாதங்களாகிய தாமரைக் கோயிலை, மிகக் குறைந்த அளவான அரைநிமிட நேரங்கூடத் தவம் செய்யும் முறையில் புலன்களை யொடுக்கி, மனத்தை ஒரு நிலைப்படுத்தி ஒரு முகமாகச் சிந்தையில் நினைத்திருக்கத் தெரியாத தூல சரீரத்தையுடைய, குற்றமுடைய, அஞ்ஞானம் மிகுந்த, அறிவில்லாத பிறப்பிற்கே காரணமான தீவினையினுற் பிறந்த, தனிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவனுகிய நான், தரித்திரத்தினுல் மனக்கலக்கத்தை யடைந்து வருந்துவது தகுமோ? என்னிடத்தில் உனது இயற்கையான அருளிரக்கங்கொண்டு கருணையை நீ செய்யாமலிருப்பதற்கு என்னிடமுள்ள குறைபாடுகள் என்ன? இந்தச் சமயத்தில் சொல்லுவாயாக. ஐயனே! இதுதான் நீ கருணை கொண்டு எனக்கு அருளினைப் புரியத் தகுந்த சமயம். மிகவும் பெருமை பொருந்திய, நீண்ட சுகத்தைத் தருவதான எல்லாவிதமான செல்வங்களும் வாய்க்கக்கூடிய யோகம் மிகுந்த சிறந்த பெரிய வாழ்க்கையையும், மிக்க மேன்மையான சிவஞானத்தையும், அதனுற் பெறக்கூடிய முத்தி என்னும் மேலான நிலையையும் நீ எனக்குக் கொடுத்து உதவியைச் செய்தருள வேண்டும்.

விளக்கம்: இத்திருப்புகழில் அருணகிரிநாதர் தன் இயல்பு, தன்னிடமுள்ள குறைபாடு, தான் படுந்துயர், தான் அடைய விரும்புவது, முருகன் தனக்கு அளித்துள்ளது, முருகனை விளக்கும் முறை என்பவற்றைத் தெளிவாக விரித்துக் கூறியுள்ளார். அருணகிரிநாதர் மக்களிடத்தில் காணும் குறைபாடுகளைத் தன்மேலேற்றிக் கூறிக்கொண்டு முருகனிடம் அருளைப்பெற விழைந்து வேண்டுகின்றுர்.

இறைவன் பாதங்களைத் தாமரைக் கோயில் என்று கூறி மனத்தில் இறைவன் திருவடியினிடத்தில் பற்றினையூட்டுகின்றுர். சரணகமலாலயம் என்பது சரணம் + கமலம் + ஆலயும் = அடிகளாகிய தாமரைக் கோயில் என்றும் அடிகளாகிய தாமரையில் பசுக்களாகிய ஆன்மாக்கள் ஒன்றுபட்டிருக்குமிடம் (சரணம் + கமலம் + ஆ + லயம் என்றும்) பொருள் கொள்ளலாம். அரை நிமிடம் என்பது மிகச்சிறு பொழுதைக் குறிக்க வந்தது. 'தவமுறை தியானம்'– தூயதோரிடத்தில் தக்க ஆசனத்தில் அமர்ந்து ஐம்பொறி புலன்களை ஒடுக்கி மனத்தை ஒருவழிப்படுத்திச் சித்தத்தில் இறைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணடியை அன்றிப் பிறிதொன்றினையுங் கருதாமல் அசை வற்றிருத்தல். தம் உடல் பயனற்றது என்பதைக் குறிக்கவும் தானாக உணரும் தன்மையில்லாதது என்பதும் தோன்றவும் சடம் என்றார். குற்றம் தன்பாலுண்டு என்பதைக் 'கசடன்' என்ற சொல்லாற் குறித்தார். விவேகமில்லாமையை 'மூடன்' என்று கூறி விளக்கினார். தானாக அறியும் சக்தியற்றவன், சொன்னாலும் கேளாதவன் என்பவற்றை விளக்க 'மூடமட்டி' என்ற தொடர்கள் விளக்கின. வினைப்பயனால் மனிதப் பிறப்பை யெடுத்தானே அன்றி அப்பிறவியினால் அடையத் தக்கவற்றை அடையும் நுண்ணறிவும் செயலும் அவனிடம் இல்லை என்பார் 'சரண கமலத்தைத் தியானம் வைக்க அறியாத சடகசட மூட மட்டி பவ வினையிலே சனித்த தமியன்' என்று கூறி விளக்கினார். இத்தகையானுக்கு வறுமையே விடாப்பிடியாகத் தொடர்ந்து நிற்கும். அவ்வாறாயினும் இறைவன் தன்னிடமுள்ள இயல்பான கருணையினால் அவனை ஆட்கொண்டு அவன் குறைவுகளைப் போக்கி நிறைவுண்டாக்க வேண்டும் என்பதைச் சுட்டுவதாக, 'கருணை புரியாதிருப்பது என குறை' என்று கூறிக் கேட்கிறார். மக்கள் பெருமை, நீண்ட சவுக்கியம், சகல விதமான செல்வங்கள், சிவஞானம், முத்தி என்பவற்றை முறையே அடைய விரும்புவர். அதுவே மக்களின் இயல்பு ஆதலின் அவற்றை அளித்து அவர்களைத் தன்பால் ஈர்த்துக்கொள்ள வேண்டும். இதுவே இறைவன் அவர்களுக்குச் செய்யுமுதவி. அவர்களுடைய அறியாமையைப் போக்க இறைவன் கையில் ஞான சக்தியாகிய வேலைக்கொண்டுள்ளான். இறைவன் திருவடிகளை நாளும் பாடித் துதிக்கத் தமிழ் மொழியையும் தந்துள்ளான். முருகன் தமிழ்க் கடவுள். தமிழுக்குத் தந்தையான அகத்திய முனிவர்க்குத் தமிழை உபதேசித்தவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் என்பவற்றை யெல்லாமுட்கொண்டு 'அரிய தமிழ் தானளித்த மயில்வீரா' என்ருர். இறைவன் திருவருளிலே தோய்ந்து அவன் திருவடிகளை இன்பத் தமிழிற் பாடிப்பாடி மகிழ்தல் மக்கள் கடமை என்பதையும் அருணகிரிநாதர் குறிப்பால் விளக்குகிருர். அதுவே மொழியைப் பெற்றதின் பயன் எனவும் சுட்டுகிருர்.

பழநிமலை என்பது தமிழகத்தில் சிறந்து விளங்கும் முருகன் தலம். மலைமீது பழநியாண்டவர் எழுந்தருளியுள்ளார்; கீழிருப்பது திருவாவினன்குடி. உலகத்தைச் சுற்றிவர மயில்மீதேறி முருகன் செல்ல, கணபதி தாய் தந்தையான பார்வதி பரமசிவனை ஒருமுறை சுற்றி வந்து மாம்பழத்தைப் பெற்றுக்கொண்டான். உலகத்தைச் சுற்றிவந்து கணபதி பழம் பெற்றதைக் கண்டு முருகன் நிற்க, சிவபெருமான், "பழம் நீ அன்ருே! உனக்கு வேறு பழம் வேண்டுமோ?" என்று வினவியதால் "பழநி" என்று அத்தலத்திற்குப் பெயருண்டாயிற்று என்பர். அப்பழநியில் பற்பல அதிசயங்கள் அன்றும் இன்றும் நடந்தன. நடக்கின்றன. விபூதியபிடேகம் செய்து பழநியாண்டவரைக் கண்ட கண்கள் பிறிதொன்றைக் காணவிரும்பா ஆதலின் 'பழநி மலை மீதுதித்த அழகன்' என்ருர்.

திருவேரகம் என்பது சுவாமிமலை. தந்தையாகிய பரமசிவனுக்குப் பிரணவப் பொருளை முருகன் உபதேசித்த தலம்.

திருவேரகம், திருவாவினன் குடியாகிய பழநி இவை இரண்டும் முருகனுக்குரிய படைவீடுகளைச் சேர்ந்தவை.

திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், திருப்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை, குன்றுதோருடல் என்பன ஆறும் முருகப்பெருமானின் ஆறு படைவீடுகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செய்யுளில், முருகன் திருவருளால் அவனுடைய திருவடிகளை அரை நிமிட நேரம் தியானம் நாள்தோறும் செய்தால், தமிழினால் அவன் பாதங்களைப் பாடிப் பரவினால், மிடியகன்று பெருமையும் சகல செல்வமும் பெறும்; யோகமும், சிவஞானமும், முத்தியாகிய பரகதியும் கிடைக்கும் என்று விளக்கினார். பிறவியெடுத்தல் வினைப்பயனாலாயது. அதில் நல்வினையின் பயனால் மானிடப்பிறவி கிட்டியது. "எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான் யாதினும் அரிது அரிது காண். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ எது வருமோ அறிகிலேன்" என்று தாயுமானவர் கூறுவதை உணர்ந்து கசட்டை நீக்கி, மூடத்தைப் போக்கி, மடத்தை அழித்து சிவஞானத்தைப் பெருக்கி, முருகன், திருவடிகளான கோயிலைத் தினந்தோறும் தியானம் செய்து, தமிழிற் பாடியுருகிப் பரவவேண்டுவது மானிடப்பிறவி பெற்றாரின் கடமையாகும். அதுவே பிறவிப் பயனாகிய முத்தியைத் தரும் என்று அருணகிரிநாதர் விளக்கினார்.

## பயிற்சி

1. முருகனுக்குப் புகழ் பாடிக் கதி பெற்ற அடியார் யார்?
2. நிலையற்ற பொருள்கள் எவையென அருணகிரியார் கூறுகின்றார்.
3. இருந்த வீடும் - என்னும் பாடலில் முருகன் பெருமைக்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன யாவை?
4. அருணகிரிநாதர் தம்மை எத்தகையவன் என்று கூறிக் கொள்கிறார்?
5. ஆசிரியர் முருகனை வேண்டுவது என்ன?
6. முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகள் எவை?
7. பின்வரும் அடிகளால் விளக்கப்படும் கதைப் பகுதிகளைச் சுருக்கமாக வரைக.
   (அ) "குருந்திலேறுங் கொண்டல்"
   (ஆ) "குறமகள் மணவாளன்"
   (இ) "தமிழ் அளித்த மயில்வீரன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. திருக்குறள்

(தொடர்ச்சி)

### அதிகாரம்: 32 இன்னுசெய்யாமை

தனக்கு ஒரு பயன் நோக்கியாதல், பகைமை பற்றியாதல், சோர்விஞலாதல் ஓர் உயிர்க்குத் தீயவற்றைச் செய்யாமை - இன்னுசெய்யாமை எனப்படும்.

நினைத்தலும் செய்தலோடு ஒக்குமாதலின் "தீயவற்றைச் செய்ய நினையாமை" என்றுரைப்பினும் அமையும்.

21. **நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்**
**நோயின்மை வேண்டு பவர்.**

பதவுரை: நோய் எல்லாம் - துன்பந்தருமவையெல்லாம்; நோய் செய்தார் மேலவாம் - (ஒன்றனுயிர்க்குத்) துன்பந்தருமவைகளைச் செய்தவர் மேலனவாம்; (அதனுல்) நோயின்மை வேண்டுபவர் - (தம் உயிர்க்குத்) துன்பந்தருமவை இல்லாமையை வேண்டுவோர்; நோய் செய்யார் - (ஒன்றனுயிர்க்குத்) துன்பந்தரும் அவைகளைச் செய்யார்.

பொழிப்புரை: தீமைகள் எல்லாம் ஓர் உயிர்க்குத் தீமை செய்தவர்களுக்கே உண்டாகும். ஆதலால் தம்முயிர்க்குத் தீமை வேண்டாதார் பிற உயிர்க்குத் தீமை செய்யார்.

விளக்கம்: பிற உயிர்க்குச் செய்யும் தீமையெல்லாம் செய்பவர்க்கே விளையும். உவர் நிலத்தில் விளையும் வித்திட்டவர்க்கு விளைவும் அதுவே அன்றோ! தம்முயிர்க்குத் தீமையை எவ்வாறு விரும்பாரோ, அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறே பிறவுயிர்களும் தீமையை விரும்பா என்பதை உணர்ந்து தீமைசெய்யாதிருக்க வேண்டும். விரை ஒன்று நட்டால் சுரை ஒன்று காய்க் காதல்லவா? பிறவுயிர்க்கு இன்னுதன செய்தல், யானை தன் தலை யில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளுதல் போலத் தமக்கே தீங்கு விளைவதாகும். ஆதலால் தீமை யைத் தம்முயிர்க்கு விரும்பாதவர் தாமும் பிறவுயிக் குத் தீமைசெய்யார். "நோய்" என்னுஞ்சொல் பின் னும் பின்னும் பலதரம் ஒரே பொருளில் வருவதால் இக் குறளிற் சொற்பொருட்பின் வருநிலையணி அமைந் துள்ளமை காண்க.

## அதிகாரம். 33 கொல்லாமை

ஐயறிவு உடையன முதல் ஓரறிவுடையன ஈறுய உயிர்களைச் சேர்ந்தும் கொல்லுதலைச் செய்யாமை என்பது இதன் பொருளாகும். இது அறங்கள் எல்லா வற்றிலும் சிறப்பான அறமாகும்.

22. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று.

பதவுரை: உயிர் உண்ணும் கூற்று - உயிரைக் கொண்டுபோம் யமனானவன்; கொல்லாமை - கொலை செய்யாமையாகிய விரதத்தை; மேற்கொண்டு; ஒழுகு வான் - நடப்பவனது; வாழ் நாள்மேல் - ஆயுளின்மேல்; செல்லாது - செல்லான்.

பொழிப்புரை: பிற உயிர்களைக் கொல்லாமையை விரதமாகக் கொண்டு ஒழுகுகின்றவனுடைய வாழ் நாள் மேல் காலம் வந்தால் தப்பாது உயிரைக்கவர்ந்து செல்லும் கூற்றும் நெருங்கிச் செல்லாது.

உயிர்க்கொலை புரியாதிருத்தலினுல் உண்டாகும் நலம் கூறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கம்:** மிகப் பெரிய அறம் செய்தாரும் மிகப் பெரிய பாவம் செய்தாரும் மேலுலகத்தில் அவற்றின் பயனை அனுபவிப்பர் என்பது மட்டுமன்றி இவ்வுலகி லும் அவற்றின் பயனை அனுபவிப்பர் என்பது அற நூல் துணிபு.

"அல்லல் அருளாள் வார்க்கில்லை" என்பது வள்ளு வர் வாக்கு. எனவே, கொல்லாமையாகிய பேரறத்தைச் செய்தவனும் கொல்லப்படான். அதனால் அவன் வாழ் நாள் இடை யூறில்லாமல் கழியும். வாழ் நாள் மேல் கூற்றுச் செல்லாது என்பதனால் அவனுடைய ஆயுள் நீடிக்கும். ஆயுள் வளர்தலால் ஞானம் பிறந்து வீடு பெறுவான். எனவே, கொல்லாமை பல குணக்கேட்டை நீக்குவதோடு ஆயுளை வளர்த்து இறுதியில் உயிர்க்கு வீட்டையும் அளிக்க வல்லது.

## அதிகாரம். 34 நிலையாமை

தோற்ற முடையன யாவும் நிலையில்லாத தன்மை யன; அதாவது அழிவன. வெயில் வேளையில் பெரு மணல் வெளியில் நீண்ட தூரம் நோக்கினால், கண்ணிற் குத் தூரத்தில் நீர் ஓடுதல் போல் காணப்படும். ஆனால், நெருங்கினால் நீரில்லை; அது பொய்த்தோற்றம். ஒளியலையின் வேகமான ஓட்டம் அவ்வாறு நீர்போலக் காணப்படுகிறது. அதனைப்பேய்த்தேர் என்றும், கானல் நீர் என்றும் கூறுவர். உலகமும் அதன்கண் தோற்ற முடைப் பொருள்களும் நிலைத்துள்ளன போலக் காணப் படுகின்றன; ஆனால் அழிவன. இராப்பொழு தில் இருளில் அரவெனத் தோன்றி வெளிச்சத்தில் கயிறாகக்காணப்படுதல் போல, மெய்யுணர்ந்த வழி உலகமும் அதன்கண் உள்ள பொருள்களும் நிலை யாமையுடையன எனத் தெளியலாம். இந்த மெய்யு ணர்வு தோன்றினாலன்றிப் பொருள்களின் மேலுள்ள பற்று விடாது. ஆதலால் ஞானம் எய்துவதற்கு முதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் மெய்மையை உணர்ந்து பொருள்களில் பற்றை அகற்றுதல் வேண்டும்.

23. நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

பதவுரை: நில்லாதவற்றை—நிலையில்லாதவைகளை; நிலையின என்று — நிலையுடையவை என்று; உணரும் - நினைக்கின்ற; புல் அறிவு ஆண்மை - அற்பபுத்தியை உடையராயிருக்கை; கடை - (துறந்தார்க்கு) இழிவு.

பொழிப்புரை: நிலைபெறுதலில்லாத பொருள்களை நிலைத்திருப்பன என்று கருதுகிற அற்ப அறிவினை ஆளுந்தன்மை துறவிகளுக்குத் தாழ்வாகும்.

விளக்கம்: முதலில் இந்த அதிகாரத்தில் செல்வத்தின் நிலையாமையைக் கூறிப் பின் யாக்கையின் நிலையாமையைக் கூறுவர். செல்வம் நிலையாமைக்குக் கால அளவு இல்லை. யாக்கைக்குக் கால அளவு உண்டு. தோற்ற முடையன வெல்லாம் கெடும் என்ற மெய்யறிவினைப் பெருமல் தோற்றமுடையன வெல்லாம் கேடில வென்று கருதுகிற புல்லிய (அற்பமான) அறிவினுல் அந்நிலையில்லாப் பொருள்களின் மீது பற்றுதல் உண்டாக, அப்பற்றுப் பிறவித்துன்பத்திற்குக் காரணமாகின்றது. ஆதலின் முத்தியை விரும்பும் துறவிகளுக்கு அவ்வற்ப அறிவு இழுக்கு. சிற்றின்பத்திற்குக் காரணமான செல்வத்தின் மீதும் அதனை அனுபவிக்கும் உடலின் மீதும் பற்று வைப்போர் புல்லறிவாளரே, மெய்யறிவாளரோ,

"இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா"

என்பதை நன்குணர்ந்து அவற்றின் மீது பற்றுவையாது பற்றை விடுத்து நின்று ஒழுகுவர். நில்லாதவற்றை நிலையின வென்றுணர்தல் திரிபுணர்ச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம். 35 துறவு

புறமாகிய செல்வத்தையும் அகமாகிய உடலையும் அவற்றின் நிலையாமையை உணர்ந்து அவற்றின் மீதுள்ள பற்றினை விடுதல். அகப்பற்று, புறப்பற்று என்னும் இரண்டையும் அறவே விடுதல். அதாவது யான் என்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் ஆகிய இரண்டினையும் முற்றிலும் துறந்து விடுதல். பற்று வைத்தல் துன்பத்துக்குக் காரணமாதலின் அதனை நீக்குதல் துறவிகளுக்கு முதற் கடமையாகும்.

24. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு

பதவுரை: பற்றினை - (இருவகைப்) பற்றுக்களையும்; பற்றி - இறுகப்பற்றி; விடாதவர்க்கு - விடாதவரை; இடும்பைகள் - துன்பங்கள்; பற்றி - இறுகப்பற்றி; விடா - விட்டு நீங்காவாம்.

பொழிப்புரை: இருவகைப் பற்றினையும் பற்றிப் பிடித்துக் கொண்டு விடாது இருப்பவர்களை துன்பங்கள் பற்றிப் பிடித்துக் கொண்டு விட்டு நீங்காவாம்.

விளக்கம்: நிலையற்றவற்றை நிலையானவை யெனக் கருதி ஆசை வைத்து, அவற்றை வளர்ப்பதிலும் காத்தலிலுமே கருத்தாய் இருத்தல் கொண்டு பற்றிவிடா திருத்தல் என்றார். ''பற்றினைப் பற்றி விடாத வரை இடும்பைகள் பற்றி விடா'' என்பதை ''விடாதவர்க்கு இடும்பைகள் பற்றி விடா'' எனக்கூறினர்.

பொருள்: உடம்பு பற்றி எழும் ஆசையை விட்டொழித்தால் துன்பங்கள் வருவதற்கு வழியே இல்லை. பற்றறுதற்கு ஒரேவழி துறவு கொள்ளுதலே ஆகும். ''ஆசை படப்பட ஆய்வருந்துன்பங்கள் - ஆசை விட விட ஆனந்தமாமே'' என்ற திருமூலர் வாக்கு இங்கு நினைவு கூர்தற் பாலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம். 36 மெய்யுணர்தல்

மெய்யுணர்தல் - உண்மையை அறிதல். அதாவது தத்துவ ஞானம் மெய்யுணர்வுப் பற்று அற்றவனுன இறைவன் பற்றினைப் பற்றிய விடத்துத் தோன்றுவது. பிறப்பு வீடுகளைப் பற்றியும் அவற்றின் காரணங்களைப் பற்றியும் சந்தேகமும் விபரீதமும் இல்லாமல் உண்மையாக உணர்தலே மெய்யுணர்வு. விபரீதம்-திரிபுணர்ச்சி. அதாவது ஒன்றை மற்ருென்ருகக் கருதல். சந்தேகம் - இதுவோ அதுவோ என்று துணிவு பெருதிருத்தல். பிறப்பு இறப்புக் காரணம் அவிச்சை அல்லது மருள். வீட்டிற்குக் காரணம் ஞானம் அல்லது மெய்யுணர்வு.

25. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணுப் பிறப்பு.

பதவுரை: பொருள் அல்லவற்றை - மெய்ப் பொருள்கள் அல்லாதவைகளை; பொருள் என்று - மெய்ப்பொருள் என்று, உணர்கின்ற அறிகின்ற; மருளான் - விபரீதஞானத்திஞல்; மாணுப்பிறப்பு - மாட்சிமைப்படாத பிறவி (இன்பமில்லாதபிறவி என்றபடி); ஆம் - உண்டாகும்.

பொழிப்புரை: உண்மைப்பொருள் அல்லாத பொய்ப்பொருளை மெய்ப்பொருள் என்று அறிகிற விபரீத உணர்ச்சியால் இன்பம் இல்லாத பிறப்பு உள்ளதாகும்.

விளக்கம்: இல்லாததை உண்டு என உணர்தல் மயக்கம், அல்லது மருள், அல்லது அவிச்சை, அல்லது விபரீத உணர்வு, இதுவே திரிபு. மறுபிறப்பும் இருவினைகளும் கடவுளும் இல்லை என்றும், இவ்வாறு கூறும் பொய்நூல்களை மெய்நூல்கள் என்று கருதுதலும் விபரீத உணர்ச்சி ஆகும். மரக்கட்டையை மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், கிளிஞ்சலே (இப்பியை) வெள்ளி என்றும் ஒன்றினைப் பற்றிப் பிறிதொன்றாகத் துணிதல் விபரீத உணர்வு.

பொருள்களின் மீது வைத்த பற்றால் வரும் பிறப்பு மாணுப்பிறப்பு என்றார். தேவர், மக்கள் நரகர், விலங்கு என்னும் நால்வகைப் பிறப்பினும் உள்ளது துன்பமே. ஆதலால் மாணுப்பிறப்பு துன்பந் தருவதால் இன்பம் இல்லாததாக மாட்சிமையற்ற பிறப்பிற்குக் காரணம் விபரீத உணர்ச்சியே (அவிச்சையே) என்பதும், பிறப்பு - துன்பம் தருவது என்பதும், துன்பத்தினின்றும் விடுபட வேண்டின் பிறப்பற வேண்டும் என்பதும், அதற்கு மெய்நூல் அறிவு வேண்டும் என்பதும் கூறினாராயிற்று. மறுபிறப்பு, இருவினை, கடவுள் இவை உண்டு என்பது உலகத்தில் மெய்யுணர்வுடையார் கூற்று. அத்தகையாரை வள்ளுவர் எவ்வாறு கருதுகிறார்? பேய் என்று கருதுகிறார்.

## அதிகாரம். 37 அவா அறுத்தல்

அவா - ஆசை; அவை மண், பெண், பொன் என்பவற்றின்மீது வைக்கும் ஆசை, அந்த மூவகை ஆசைகளையும் அறவே விட்டுவிடுதல் அவா வறுத்தல்.

26. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

பதவுரை: வேண்டுங்கால் - பிறப்பு துன்பமாதல் அறிந்தவன் ஒன்றை வேண்டுவானாகில்; பிறவாமை வேண்டும் - பிறவி எடுக்காமலிருத்தலையே வேண்டுவான்; அது-பிறவி எடுக்காமலிருக்கும் அது (பிறவாமை); வேண்டாமை - ஒரு பொருளையும் அடைய ஆசைப்படாமையை (அவாவாமையை); வேண்ட - வேண்டிப் பெற; வரும் - (பிறவாமை) தானாகவே உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்புரை: பிறவித் துன்பத்தை அறிந்தவன் ஒன்றினை அடைய விரும்புங்கால், பிறவாமையை வேண்டுவான். அந்தப் பிறவாமை ஒருபொருளை அவாவாமையை வேண்டத் தானே வரும்.

விளக்கம்: பிறவித் துன்பத்திற்குத் காரணம். பிறவி வேண்டாமையையே ஒருவன் அடைய விரும்புவான். ஆசை (அவா) தான் பிறவிக்குக் காரணம். அவாவை அறுத்தால் பிறவி அற்றதாகும். பிறப்பு அநாதியாக வருவது. அதனால் உண்டாகும் துன்பங்கள் பல. பிணி, மூப்பு முதலியன. அதனை உணர்ந்தால் ஆசை இன்பத்தின்கண் நிகழும். இன்பம் எய்தவேண்டுமாயின் பிறவாமை வேண்டும். இவ்வுலகில் சிற்றின்பம் கருதி ஒரு பொருளை அவாவின், அந்த அவா பேரின்பம் எய்துதலைத் தடுத்துப் பிறப்பினை அளிக்கும் வித்தாய் விடும். அதனால் விளைவது முடிவில்லாத் துன்பமே ஆதலின் பிறவாமை வேண்டின் அவாவறுத்தல் வேண்டும்.

''வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால்
வேண்டினஃ தொன்றுமே வேண்டுவது - வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால்.''

என்ற திருக்களிற்றுப்படியாரில் இக்குறள் ஆளப்பட்டுள்ளது அறிக. ''பிறவாமை வேண்டும்'' என்று காரைக்காலம்மை வேண்டுகிறார். இச்செய்யுள் சொற்பொருட் பின் வரு நிலையணி. மற்று - வினைமாற்றின் கண் வந்தது.

## அதிகாரம். 38 ஊழ்

இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றையும் பயப்பது அறம். இம்மைப்பேற்றிற்குக் காரணமாகிய பொருளும் இன்பமும் ஊழினை முதற் காரணமாக உடையன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வினை தீவினை எனும் இரண்டும் சென்றடையும் ஊழ். பால்முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒரு பொருட்சொற்கள். பொருள் இன்பங்களுக்குக் காரணமாயும் அறத்தோடு இயைபுடையதாயும் ஊழ் உள்ளதால் அறத்துப்பாலில் ஈற்றதிகாரமாக வள்ளுவர் அமைத்தார்.

27. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

பதவுரை: மற்றொன்று சூழினும் - தன்னை விலக்குதற்கு மாறுபட்ட பிறிதொரு உபாயத்தைச் செய்தாலும்; தான் முந்துறும் - தான் அவ்வுபாயத்தின் வழியானும் பிறிதொன்றின் வழியானும் வந்து அந்தச் சூழ்ச்சியின் முன்நிற்கும்; ஊழில் பெருவலி - ஊழை(க் காட்டிலும்)ப் போல் மிக்க வலிமை படைத்தவை; யா உள - யாவை உள்ளன? (ஒன்றுமில்லை).

பொழிப்புரை: தன்னை விளக்கும் பொருட்டுத் தனக்கு மறுதலையாவதோர் சூழ்ச்சியை (அறிஞர்களோடு) ஆராய்ந்து செய்தாலும், தான் அந்த உபாயத்தின் வாயிலாகவேனும் பிறிதொரு வகையாலேனும் அந்த விலக்கும் உபாயத்திற்கு முன் வந்து நிற்கும் ஊழைப்போல மிக்க வலிமை படைத்தவை எவை உள்ளன? (ஒன்றுமில்லை.)

விளக்கம்: ஊழை வெல்ல முடியாது. ஊழ் பிராரப்த வினையாகும். ஊழினை விலக்குவதற்கு அதற்கு எதிரான சூழ்ச்சியைச் செய்யினும் ஊழ் அந்தச் சூழ்ச்சியின் வாயிலாகவோ பிறிதொன்றின் வாயிலாகவோ சூழ்ச்சிக்கு முன் வந்து நிற்கும். பல்லோருடன் பழுதற எண்ணுதற்கும் ஊழ் இடந்தராது. ஊழே வலிமையுடையது. அதனினும் வலியது பிறிதொன்றில்லை.

''சூழ்வினை நான்முகத் தொருவற் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம். 40 கல்வி

இவ்வதிகாரம் அரசியலில் அமைந்ததாயினும் யாவர்க்கும் பொதுவானதாகும். அரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன: அறநூலும், நீதிநூலும், யானை-குதிரை-தேர்-படைக்கலம் என்பவற்றின் நூல்களும் முதலாயின. அரசன் அறிவுடையனாயக்கால் தன்னுயிர்க்கே அன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் நோக்கி இஃது அரசியலுள் வைக்கப்பட்டதாயினும் யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமையில் பொதுப்படக் கூறுகின்றார்.

28. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.

பதவுரை: கற்பவை - ஒருவன் கற்கவேண்டிய நூல்களை; கசடுஅற - ஐயம், திரிபு, அறியாமை என்னும் முக்குற்றமும் இல்லாமல்; கற்க - கற்பானாக; கற்றபின் - அவ்வாறு கற்றபின்பு: அதற்குத்தக - அந்த நூல்களில் கூறப்பட்ட நெறிக்குத் தக்கவாறு; நிற்க-நின்று ஒழுகுவானாக.

பொழிப்புரை: ஒருவன் கற்கவேண்டிய நூல்களைப் பழுதறக் கற்கவேண்டும். அவ்வாறு கற்றபின், கற்ற நூல்களில் கூறியுள்ளபடி நின்றொழுக வேண்டும்.

விளக்கம்: கல்வியைக் குற்றமறக் கற்றலும் கற்ற நெறியில் நின்றொழுகலும் ஒருவன் தன் கடமையாகக் கொண்டொழுகின் கல்விகற்றதனால் பயன் உண்டாம். கற்று, கற்ற நெறியில் நின்றொழுகானாயின் அவன் கற்ற கல்வி பயனிலதாம்.

கற்பவை என்றார் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருளைப் பயக்கும் நூல்களை ஆராய்ந்து கற்க வேண்டும். உலகில் நூல்கள் பல; பல திறத்தன. யாவும் மக்கள் வாழ்க்கைக்கும் மக்கட் பண்பினைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்கி வளர்த்தற்கும் பயன்படுவன அல்ல. மற்றும் மக்களோ சிலவாழ்நாள், பல்பிணி, சிற்றறிவினர் ஆதலின் வீணான நூல்களை ஓதிக் காலத்தை வீணாக்கக் கூடாது. 'இறைவன் நூல் ஓதாது உலகநூல் ஓதுவ தெல்லாம் வீண்' என்ற பெரியார் வாக்கையும் சிந்தித் துணர்தல் வேண்டும். பாலும் நீரும் கலந்து வைத்தால் நீரைவிட்டுப் பாலை மட்டும் உண்ணும் அன்னத்தைப் போல, மக்கள் தம் இயற்கையறிவின் திறனால் நல்ல நூல்களை ஆராய்ந்தெடுத்துக்கொண்டு பிற வற்றை நீக்கிவிடுதல் வேண்டும்.

கசடு அற என்றார் கற்றவற்றில் சந்தேகமோ, விபரீதமோ, அறியாமையோ இருத்தலாகாது. அதற்கு நல்லோர் பலருடன் பழகிப் பலகாலும் பயில வேண்டும்.

நிற்றலாவது, இல்லறத்திலிருக்கும் காலையில் இல்லற நெறியினின்றும் விலகாமலும், துறவு பூண்ட வழித் தவத்தை மேற்கொண்டு, அவாவறுத்து மெய் யுணர்வு பெறுதலும் வேண்டும். ஆதலின் அந்நெறியில் கூறியுள்ளவாறு நின்றொழுகுதல் வேண்டும். இச்செய் யுளில் முதலடி முற்று மோனைத்தொடர்.

## அதிகாரம். 42 கேள்வி

கேட்கப்படுவனவாய நூற்பொருள்களைக் கற்றறிந் தார் கூறக்கேட்டல். கற்றதனால் உண்டாகிய அறிவினை வலிமைப்படுத்துவது கேள்வி. தான் வருந்திக் கற்றறி தலினும் கேள்வியினால் பலப்பல பொருள்களை எளிதில் அதிமாக அறியலாம். கல்லாதவனும் கேள்வியினால் நல்லறிவு பெறலாம். கேள்வியைச் 'செவிச்செல்வம்' என்பர் வள்ளுவர். 'கற்றலிற் கேட்டலே நன்று', கேள்வி முதல்', 'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்' என்பன வாய முன்னோர் மொழிகளை நன்குணர்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

பதவுரை: கற்றிலன் ஆயினும் - ஒருவன் அறம் பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை உண்டாக்கும் நூல்களைக் கற்காமல் போயினும்; கேட்க- அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்பானாக; அஃது - அவ்வாறு கேட்கப்படும் அக்கேள்வியறிவு; ஒற்கத்தில்-மனந் தளர்ச்சியுற்ற காலத்தில்; ஊற்று ஆம் துணை - ஊன்றுகோல் போன்று பற்றுக்கோடாகும்; துணையாகும்.

பொழிப்புரை: ஒருவன் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிபயக்கும் நூல்களைக் கற்காவிட்டாலும், அவற்றின் பொருள்களைக் கற்றவர் சொல்லக் கேட்பானாக. அவ்வாறு கேட்கும் அறிவானது மனம் தளர்ச்சியடையும் காலத்தில் ஊன்றுகோல் போன்று பற்றுக்கோடாகும்; துணையாகும்.

விளக்கம்: 'கற்றிலனாயினுங் கேட்க' என்றதனால் கற்கவேண்டுவதில்லை; கேட்டால் போதும் என்பது பொருள் அன்று. ஒவ்வொருவனும் உறுதிப்பொருள்களை அளிக்கும் நூல்களைக் கற்கவேண்டும் என்பதே கருத்து ஊழ்வலியால் கற்கும் வாய்ப்புக் கிட்டாவிடில் கேட்க என்பதே கருத்து. கற்றவனாயிருப்பினும் கேட்டால் நல்லதே என்பதும் குறிப்பாலுணர வைத்தார்.

மனந்தளர்தற்கு வறுமையாலும், அறியாமையாலும் ஏற்படும் துன்பங்கள் காரணங்கள் ஆகும். அத்துன்பங்களைக் கேள்வியறிவு போக்கி மனதிற்கு வலிமையும் எழுச்சியும் தரும். ஆதலின் அதனைப் பற்றுக்கோடான ஊன்றுகோல் போன்றதென்றார். 'இழுக்கலுடையுழி ஊற்றுக்கோல்' என்பர் பின்னும். ஊன்று- ஊற்று எனத் திரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம். 43 அறிவுடைமை

கல்வி கேள்விகளினாலாய அறிவோடு உண்மையறிவுடையன் ஆதல். உண்மை அறிவு - நிச்சய ஞானம் ஐயம், திரிபு இல்லாதது.

30. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

பதவுரை: எப்பொருள் - யாதொரு பொருளை; யார் யார் வாய்-யாவர் யாவர் சொல்ல; கேட்பினும் - கேட்டாலும்; அப்பொருளின் - அந்தப் பொருளின்; மெய்ப் பொருள் - உண்மையான பயனை; காண்பது-காணவல்லது; அறிவு - அறிவாகும்.

பொழிப்புரை: எந்தப் பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்டாலும் அந்தப் பொருளின் உண்மைப் பயனை ஆராய்ந்தறிய வல்லது அறிவாகும்.

விளக்கம்: காண்பது - ஆராய்ந்தறிவது. சத்துவம், இராசசம், தமம் என்பன மூன்று குணங்கள். சத்துவம் - ஞானம்; தமம் - அஞ்ஞானம்; இராசசம் - இரண்டும் கலந்தது. மக்கள் முக்குண வயப்பட்டவர் ஆதலின் குணங்கள் மாறிமாறி வரும். உயர்ந்த பொருள் இழிந்தவர் வாயிலும்; இழிந்த பொருள் உயர்ந்தார் வாயிலும்; உறுதிப் பொருள் பகைவர் வாயிலும்; அழிவைத் தரும் கெடுபொருள் நண்பர் வாயிலும் ஒவ்வோர் சமையத்தில் வருதலும் கூடும். ஆதலால் எவர் பொருளையும் ஆராய்ந்தறிந்து அதன் பயன்காணவல்லதே அறிவு என்றார். சொல்வாரது இயல்பை நோக்காமல் சொல்லப்பட்ட பொருளின் பயனை நோக்கி அதனைக் கொள்ளுதலோ தள்ளுதலோ செய்வதுதான் அறிவு.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்று 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரத்தில் கூறியுள்ள குறள் இங்கு ஒப்பிட்டுக் காணத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி

1. "இன்னாசெய்யாமை"-இதற்கு வரைவிலக்கணம் கூறுக.
2. உயிர்க்கொலை புரியா திருத்தலினால் உண்டாகும் நன்மை யாது?
3. எவர்களை இடும்பைகள் பற்றி விடாவாம்?
4. சந்தேகம், விபரீதம்-இவற்றினை விளக்குக.
5. ஊழ்வலியது - என்பதற்கு வள்ளுவர் காட்டும் உண்மை யாது?
6. எத்தகைய கல்வி பயனற்றது?
7. "கற்றலில் கேட்டலே நன்று" ஏன்?
8. அறிவுடைமை யாவது யாது?
9. பிறவி நீங்குதற்கு வழி யாது?
10. பின்வருவன வற்றை விளக்குக:
    கானல்நீர்; ஆகாமியம்; பற்று; மாணாப்பிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிரி வினப்பத்திரம்

நேரம்: 2 மணித்தியாலம்

(குறிப்பு) எல்லா வினக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1. சிவபெருமானின் மூவகைத் திருமேனிகள் எவை?
2. சிவபெருமான் ஆன்மாக்களுக்காகச் செய்யும் தொழில்கள் ஐந்தும் எவை?
3. அருளலாவது யாது?
4. கோயிலில் நாடோறும் நடைபெறும் கிரியைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
5. திருப்பல்லாண்டு யாரால் பாடப்பட்டது?
6. சிவத்துக்கும் சக்திக்குமுள்ள தொடர்புக்கு ஓர் உதாரணம் தருக.
7. நவராத்திரிபூசை கொண்டாடப்படும் காலம் எது?
8. வைரவக் கடவுள் ஏன் தோன்றினர்?
9. தாதையைத் தாளறவீசிய நாயனர் யார்?
10. புராணநாயகம் என்று கூறப்படும் நூல் யாது?
11. தக்கன் வேள்வி தடிந்த கடவுள் யாவர்?
12. புகழியர்கோன் - என்னும் பெயரால் சுட்டப்படுபவர் யார்?
13. முருகக் கடவுளைக் குறிக்கும் நாமங்களுள் நான்கு தருக.
14. சுவாமிமலையெனப் போற்றப்படும் தலம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. யாரினை இடும்பைகள் விட்டு நீங்கா?
16. பிறப்பு நீங்க வழி யாது?
17. ஊழ்வலியது—என்பதற்கு வள்ளுவர் காட்டும் உண்மை யாது?
18. கற்றவன் கடமை என்ன?
19. மகாசிவராத்திரி தினம் எது?
20. வல்வினையால் இறைவனையடைந்த நாயன்மார்களுள் மூவர் பெயர் தருக.

($20 \times 1\frac{1}{2} = 30$ புள்ளிகள்)

## பகுதி II

21. பின்வரும் ஆசிரியர்கள் இயற்றிய ஒவ்வொரு நூலின் பெயர் தருக:
    (அ) உமாபதி சிவாசாரியர்.
    (ஆ) அருணகிரிநாதர்.
    (இ) சிவஞான சுவாமிகள்.
    (ஈ) கச்சியப்ப சிவாசாரியர்.
    (உ) சேந்தனுர்.
22. இறைவனது ஐந்தொழில்களும் எவை?
23. கிரியைகள் என்ருல் என்ன?
24. கந்தசஷ்டி உற்சவம் பற்றி-ஐந்து வாக்கியங்கள் எழுதுக.
25. பின்வரும் அருட்செயல்களைப் புரிந்தோர் யாவர்?
    (அ) கயமுகன் ஆற்றலை அழித்தல்
    (ஆ) சூரசங்காரம்
    (இ) சிவனுக்குப் பிரணவப்பொருள் உரைத்தல்
    (ஈ) தக்கன் வேள்வி தடிதல்
    (உ) பிரமன் அகத்தை அடக்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. பின்வரும் சொற்றொடர்களை விளக்குக;

(i) மதிப்பவர் மன மணிவிளக்கை
(ii) பாதகத்துக்குப் பரிசு
(iii) செந்தமிழ் நூல் விரித்தோன்
(iv) சடகசட மூடமட்டி
(v) மருளாரும் மாணுப் பிறப்பு

27. ஆறுகாலப் பூசைகள் எவை?

28. பழநித்தலம் பற்றி நீர் படித்தவற்றைச் சுருக்கமாக எழுதுக.

(8×5=40 புள்ளிகள்)

## பகுதி III

29. பின்வரும் தொடக்கத்தினையுடைய பாடல்களுள் எவையேனும் மூன்றினைப் பிழையின்றி அடிதவருது எழுதுக.

(அ) சேந்தனைக் கந்தனை ..............
(ஆ) கற்றவர் விழுங்குங்..................
(இ) பரத்தெழுந்த சமண்முதலாம்..............
(ஈ) பற்றிவிடா அ..............
(உ) இருந்த வீடுங்..................

(3×5=15 புள்ளிகள்)

30. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 15 வரிக்குக் குறையாத கட்டுரை வரைக.

(அ) கடவுள்
(ஆ) மாதவச் சிவஞான சுவாமிகள்
(இ) கோயிற் கிரியைகள்

(15 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வித்தியாதிபதி அவர்களால் 25-6-57 இல் சைவ சமய பாட புத்தகமாக அங்கீகரிக்கப்பட்டது.

## சைவ சமய பாடம்

சைவ சமய மாணவர்களின் சமய விருத்திக்குப் பெரிதும் உதவுவது. அரசினரின் புதிய சைவ சமய பாடத் திட்டத்தின்படி எழுதப்பட்டது. அநேக விளக்கப் படங்களுடன் அழகாக அச்சிடப்பட்டுள்ளது.

| | ரூ. சதம் | |
|---|---|---|
| 2 ஆம் வகுப்பு | 1.70 | 1.20 |
| 3 ,, | 1.80 | 1.20 |
| 4 ,, | 1.60 | 1.60 |
| 5 ,, | 1.60 | 1.60 |
| 6 ,, | 2.00 | 3.00 |
| 7 ,, | 3.50 | |
| 8 ,, | 3.50 | |
| G. C. E. இந்து சமயம் | 3.50 | |

# SAIVA SAMAYA PADAM

STANDARD VIII

KALAIVANI BOOK CENTRE

JAFFNA — KANDY

(COPYRIGHT)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org